Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சேக்கிழாரின் இலக்கியத்திறன்

DONATION



டாக்டர் சொ.பரமசிவம்
எம்.ஏ; எம்.லிட்; பி.எச்.டி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

D-7487

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சேக்கிழாரின் இலக்கியத்திறன்

DONATION

Forwarded free of Cost, and with the Compliments of the Department of Education, Government of India. New Delhi.

007487

पुस्तकालय
पुस्तकालय
गुरुकुल कांगड़ी विश्वविद्यालय

ஆசிரியர்

டாக்டர் சொ. பரமசிவம், எம், ஏ; எம், லிட்; பி. எச்டி,
தமிழ்ப் பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி,
சென்னை-600030.

பட்டுப் பதிப்பகம்
1269, அண்ணா நகர், சென்னை - 600 040.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முதற்பதிப்பு : செப்டம்பர் 1987

உரிமை ஆசிரியருக்கு

© தமிழக அரசு நிதியுதவியுடன்
இந்நூல் வெளியிடப்படுகின்றது.

விலை : ரூ. 30-00

ஆசிரியரின் பிற நூல்கள் :

கல்லூரித் தமிழ் இலக்கணம்.
மனோன்மணீயம்—பதிப்பு
மனோன்மணீயக் கட்டுரைகள்.

விற்பனை உரிமை:

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் லிமிடெட்
154, டி. டி. கே. சாலை,
சென்னை -18.

அப்பர் அச்சகம், சென்னை-600 108.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அணிந்துரை

அ. மு. பரமசிவானந்தம்
சென்னைப் பச்சையப்பர் கல்லூரி முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர்,
துணை முதல்வர்,
நிறுவனர், வள்ளியம்மாள் கல்வி அறம். சென்னை-600102.

பெரிய புராணம் 'மாக்கதை'யாக நின்று சைவ அடியவர்தம் பெருமையை உலகுக்கு உணர்த்திக்கொண்டிருக்கும் சிறந்த இலக்கிய நூலாகும். சைவர் மட்டுமன்றித் தமிழறிந்தார் அனைவருமே அந்நூலைப் போற்றுகின்றனர். அந்நூலுக்கு, என்றும் உலகை இயக்கி ஆட்கொள்ளும் இறைவனாகிய 'பரமசிவன்' தில்லைப் பெருவெளியில் 'உலகெலாம்' என அடி எடுத்துக் கொடுத்தார். அந்த நூலைத் திறனாய்ந்து - அதன் இலக்கியப் பண்புகளை எடுத்தறிந்து இன்று பச்சையப்பரில் பணிபுரியும் திரு. டாக்டர் சொ. பரமசிவம் அவர்கள் 'சேக்கிழாரின் இலக்கியத்திறன்' என்ற இந்த நூலை வெளியிடுகிறார். இவர்தம் முயற்சி சிறக்க என வாழ்த்துகிறேன்.

டாக்டர் சொ. பரமசிவம் அவர்கள் பச்சையப்பரிலேயே தமிழ் பயின்றவர்; இங்கேயே ஆசிரியத் தொழிலையும் மேற்கொண்டவர். இவர்தம் ஆசிரியப்பணியோடு ஆய்வுப்பணியையும் தொடர்ந்தார்; தம் 'எம், லிட்' என்ற ஆய்வுப்பணிக்கு, பெரியபுராணத்தைக் கருவியாகக் கொண்டார்.

பெரியபுராணத்தின் இயல்பினைப் பல கோணங்களில் இவர் ஆய்வு செய்கின்றார். முன்னுரையும் முடிவுரையும் தவிர்த்து, எட்டுப்பகுதிகளாகத் தம் ஆய்வை அமைத்து, எண்குணத்தீசனின் அடியவர் திறன் போற்றும் சேக்கிழார் திறனையும் பண்பினையும் பிறவற்றையும் நம்முன் வைக்கிறார். இலக்கியப் பண்புகள்-ஒரு கண்ணோட்டம் அமைப்பு, கற்பனை, அணிநலன், சுவைகள், நயங்கள், அறக் கருத்துக்கள், யாப்பு என ஆய்ந்து பின் தமிழ்வாணர்கள் பார்வையில் சேக்கிழார் என்ற தலைப்போடு தம் நூலை முடிக்கிறார். அனைத்திலும் எடுத்த பொருளை நன்கு விளக்க முயன்று பெருமளவு வெற்றியும் பெற்றுள்ளார் எனலாம். எனவே சென்னைப் பல்கலைக் கழகம் இவருக்கு ஆய்வுப்பட்டத்தினையும் தந்துள்ளது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பக்கம் 45ல் 'உலகெலாம்' என்ற முதல் பாடலில் எழுத்துக்களைப் பதம் பிரிக்காது எண்ணின் அறுபத்து மூன்றாக அமைய, அவை தனியடியார் எண்ணிக்கையினைக் குறிப்பதெனவும் பதம்பிரிப்பின் எழுபத்திரண்டாக அமைய - தனியடியார், தொகையடியார் சேர்ந்த எண்ணிக்கையினைக்குறிப்பதையும் காட்டுவது சிறந்ததாகும். பெருங்காப்பியமாயின் காவியத் தலைவன் வேண்டுமன்றோ! எனவே பல அடியவர்கள் இதில் பாடப் பெற்றும் சுந்தரரே காவியத் தலைவர் ஆவர் என்பதைப் பக்கங்கள் 58 - 61 ல் விளக்கியமை எண்ணத்தக்கது. இவ்வாறே சுவைகளைக் காட்டுமிடத்தும் (பக் 139, 141), சொற்சுவை அமைப்பினை விளக்குமிடத்தும் (161, 169) பிறவகைகளில் சொற்களை அமைக்கும் திறன் காட்டும் பொழுதும் (182, 183) தம் ஆய்வுத் திறனைக் காட்டியுள்ளார் ஆசிரியர்.

இவர்தம் ஆய்வு என் மேற்பார்வையில் நடைபெற்றமையின் நான் அவ்வப்போது குறிப்பிட்ட சில கருத்துக்களையும் அப்படியே எடுத்துக்காட்டியிருக்கிறார். 216ம் பக்கத்தில் திருவெண்பாக்கம் மறைவுற்றதைக் காட்டுவது ஓர் எடுத்துக் காட்டு. ''மங்கை'ஒருபால்'' என்ற பாடலின் விளக்கம் (192) மற்றொன்று. இன்னும் சில உள்ளன. நூலின் யாப்பு அமைதியினைத் தனியாகப் (பகுதி-7) பிரித்து ஆய்ந்துள்ளமையும் சிறந்துள்ளது.

இடத்துக்கு ஏற்ற சொல்லாட்சி, செயல், சூழலுக்கும் செயலுக்கும் ஏற்ற சந்தம் ஆகியவற்றிற்கு இன்னும் தக்க சிறந்த இடங்களை எடுத்துக்காட்டி அமைத்திருப்பின் மிக்க சிறப்புடையதாக இருந்திருக்கும்.

இறைவன்பால் சேக்கிழார் போன்று, அவர் காட்டிய அடியவர் போன்று, இந்தப் பரமசிவமும் இறைவன்பால் அன்புடையவர் என்பதை இந்நூலைப் பயில்வோர் அறிந்து கொள்ள முடியும். எனவே இந்நூல் பல்கலைக்கழக ஆய்வுப் பட்டத்துக்கு அமைந்த நூலாக மட்டும் அமையாது சமயத் தொடர்பான - பத்திச்சுவை ஊட்டத்தக்க ஒருநூலாகவும் அமைகின்றது. இதைத் திறம்பெற எழுதி இன்று வெளியிடும் அன்பர் பரமசிவம் அவர்களின் பணி சிறக்க என வாழ்த்துவதோடு, மக்கள் இந்நூலை ஏற்றுப் பயனடைய வேண்டும் எனவும் கேட்டு அமைகின்றேன்.

சென்னை-600102.
4-8-1987.

அ. மு. பரமசிவானந்தம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முன்னுரை

பெரியபுராணம் ஓர் இலக்கியப் பெருங்கடல். இதனுள் மூழ்கி நன் முத்துக்களாகிய இலக்கியக் கருத்துக்களை வாரிக் கொணர்வோர் பற்பலர்; படிப்பதன் மூலம் நீந்தி மகிழ்வோர் எண்ணிலர். பெருங்கடல் எண்ணிலாப் பல்வகைப் பொருட்களை நல்குவது போன்று பெரிய புராணப் பெருங்கடலும் எண்ணிலாப் பல்வகை இலக்கியச்செல்வங்களை வாரி வழங்குகின்றது. கடலை ஆராய ஆராயப் புதுப் புதுப்பொருட்கள் கிடைப்பன போன்று இவ்விலக்கியக் கடலையும் துருவித் துருவி ஆராய்ந்து பார்க்குமிடத்துப் புதிய புதிய செய்திகள் கிடைக்கின்றன.

தென்னாட்டில் பத்தி இயக்க காலத்தில் தோன்றிய இப் பத்திக் காவியம் கி. பி. நான்காம் நூற்றாண்டிலிருந்து கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டு வரை வாழ்ந்த சைவ நாயன்மார் அறுபத்து மூவரின் அருஞ்செயல்கள் குறித்த வாழ்க்கை வரலாறுகளைப் பேசுகின்றது. பெயர்களில்லாத ஒன்பது வகையான தொகையடியார்களின் திருத்தொண்டுகளை இயம்புகின்றது. தெற்கே கன்னியாகுமரியிலிருந்து வடக்கே காம்பீலி என்னும் திருத்தலம் வரை உள்ள நாட்டில் நாயன்மார் பிறந்து பத்திமணம் கமழச் செய்கின்றனர். இவர்களால் இந்நாடு பெருமைப்படுத்தப்படுகின்றது. தெற்கே பொருனை, பொதிய மலை, வடக்கே துங்கபத்திரை, திருக்காளத்திமலை ஆகிய ஆறுகள், மலைகள் ஆகியவற்றையும், கிழக்கும் மேற்கும் உள்ள இரு கடல்களையும், சேர, சோழ, பாண்டி, தொண்டை ஆகிய நான்குநாடுகளையும் இணைத்துப் பத்தியால் தென்னாட்டை ஒன்றுபடுத்தும் சைவப்பெருங் காவியம் இஃது ஒன்றே. இன்னும் கங்கையையும், கயிலையையும் இணைத்து இந்திய நன்னாட்டினையே ஒன்றுபடுத்தி ஓர் ஒருமைப்பாட்டினை உருவாக்குகின்றது எனலாம்.

இதனுள் அறுபத்து மூவரின் வரலாறு மட்டும் பேசப் பட்டிருப்பின், அஃது ஒன்றே கூறுகின்ற வரலாற்று நூலாக வடிவெடுத்திருக்கும். ஆனால் கற்கின்ற எல்லாருடைய உள்ளங்களும் விரும்பும் வண்ணம் பல செய்திகள் இதனுள் கூறப்பட்டுள. ஒவ்வொருவரும் விரும்புகின்ற ஒவ்வொரு பொருளும், எல்லாரும் விரும்புகின்ற எல்லாப் பொருட்களும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இதன்பால் உள. எனவே இப்புராணம் எந்நாளும் சிறந்து விளங்குகின்றது.

இந்நூல் அறுபத்து மூன்று நாயன்மார்களின் வாழ்க்கை வரலாறுகளைக் கூறுவதோடு அவர்கள் காலத்து விளங்கிய தென்னாட்டு வரலாற்றினையும் ஒரு சேரக் கூறுகின்றது. அக்காலத்து வாழ்ந்த மன்னர்கள், படைத் தலைவர்கள், போர்கள், அக்காலத்து நிகழ்ச்சிகள் ஆகிய சரித்திரக் குறிப்புக்களையும் இது குறிப்பிடுகின்றது. கி. பி. நான்காம் நூற்றாண்டிலிருந்து கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டுவரை தென்னாட்டைக் கவ்விப் பிணித்திருந்த மதங்கள், மதப்போராட்டங்கள், அவற்றின் நிலைகள் ஆகியவற்றைச் சீராக விளக்குகின்றது. மேலும் அக்காலத்துச் சமுதாய நிலையினைப்படம் பிடித்துக் காட்டுகின்றது.

இன்னும் இதனுள் கட்டிடக் கலை, ஓவியக்கலை, இசைக்கலை, சிற்பக்கலை, ஆடற்கலை, போர்க்கலை, மருத்துவக்கலை, உடனூற்கலை, இலக்கியக்கலை ஆகியவை விரிவாகப் புகலப்பட்டுள்ளன. இவற்றோடு வினை, மலம், பிறப்பு, வீடு ஆகியன போன்ற சைவ சித்தாந்த கருத்துக்களும் திருமுறைக் கருத்துக்களும் இதனுள் கூறப்பெற்றுள. இதனுள் நாட்டியலைப் பற்றிய (Geography) கருத்துக்களும் நன்முறையில் நவிலப்பட்டுள்ளன.

சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு தொண்டை நாடு, ஆகிய நான்கு நாடுகளையும் வருணிப்பதன் மூலமாக ஆசிரியர் நம் கண்முன் அவற்றைக் கொண்டுவந்து நிறுத்துகின்றார். கயிலைவரை வடநாடுகளைப் பற்றியும் அவர் விரித்துரைக்கின்றார். பெரிய நாடுகளைப்பற்றி மட்டும் கூறாமல் அவற்றுள் காணப்பெறும் ஐந்நிலங்களைப் பற்றியும் ஆசிரியர் கூறுகின்றார். இத்தகைய நாடுகள், நிலங்களுக்கொத்து அங்கு நிலவும் தட்ப வெப்பத்தினையும் நுட்பமாகக் கூறும் திறன் வியக்கத் தக்கது. ஒரு சிறு ஊரைக் கூட ஆசிரியர் விட்டுவைக்கவில்லை. அந்த ஊரின் அமைப்பு, அந்த ஊருக்குச் செல்லுகின்ற வழி, ஊரைச் சுற்றிலும் இருக்கின்ற நிலங்கள், வளங்கள், மக்கள், அவர்தம் பண்பாடுகள் ஆகியவற்றைப் பற்றியெல்லாம் விரிவாகக்கூறி, கற்கின்றவரை வியப்படையச் செய்கின்றார். இன்றைக்கும் அவ்வூர்கள் சேக்கிழார் கூறிய வண்ணம் இயல்பில் குன்றாதவாறு இருப்பதைக் காணலாம். ஓர் ஊரின் சிறப்பைக் காண வேண்டுமெனின் பெரிய புராணத்துள் காணலாம். இங்ஙனம் பல்வேறு திறங்களைக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொண்டு அமைந்து விளங்குவது திருத்தொண்டர் புராண மெனும் பெரிய புராணமாகும்.

இஃது ஓர் இலக்கியமாகவும் திகழ்கின்றது. இதைச் சிறந்த இலக்கியமாக அமைக்க வேண்டும் என்ற எண்ணத்தி லேயே சேக்கிழார் இதைப் படைத்துள்ளார். இலக்கியத்தின் வழி மற்றவற்றைக் கூறுகின்றார். இவ்விலக்கியத்துள் பார்க்கும் இடமெல்லாம் பத்திச்சுவை மிளிர்வதைப் போன்று, நோக்கும் இடமெல்லாம் இலக்கியச் சுவை இலங்குவதைக் காணலாம். எனவே இதனுள் இலக்கியச்சுவை, பத்திச் சுவை போன்று இருப்பதன் காரணமாக மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் பாராட்டியதைப் போன்று "இலக்கியச் சுவையும் நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ'' என்று கூடச் சேக்கிழாரைப் பாராட்டிப் பேசலாம் போலும்.

தமிழில் இலக்கிய ஆய்வு முறை (Literary Criticism) அண்மைக் காலத்தில் தோன்றிய ஒன்று. மேனாட்டில் இலக்கியத்தைப் பற்றித் திறனாய்வாளர்கள் பலர் ஆய்ந்து நூல் பல எழுதியுள்ளனர். அத்திறனாய்வாளர்கள் இலக்கியம் என்றால் இப்படி இருக்க வேண்டும் என்று கூறுவதற்கு முன்பே நம்முடைய சேக்கிழார் பெருமான் இத்தகைய சிறந்ததோர் இலக்கியத்தைப் படைத்துச் சென்றனர்.

சிறந்த இலக்கியத்திற்குத் தலையாய-வேண்டப்படுகின்ற இலக்கியக் கூறுகள், பண்புகள் ஆகியவை செறிந்து விளங்கிக் காப்பிய இலக்கணங்களெல்லாம் பொருத்தமுற அமைந்து சிறந்ததொரு பெருங்காப்பியமாக இது திகழ்கின்றது.

பல்வகையான அணிகளும் பல்வேறு வருணனைகளும் கொண்டு ஒன்பான் சுவைகளையுடைத்தாய்ச் சிறந்ததோர் இலக்கியமாக இது விளங்குகின்றது. மற்ற சிறந்த இலக்கியங்களுள் இருப்பதைப் போன்று இப்புராணத்துள்ளும் பல்வேறு வகையான இலக்கியச் சுவைகள் பொலிந்து புராணத்தை அழகு செய்கின்றன.

இவற்றினூடே அறக்கருத்துக்கள் மலர்களினிடையே நூலிழைபோன்று அமைந்து வாழ்க்கை நெறியைச் செப்பு கின்றன. பல்வேறு வகைப்பாக்கள் அமைந்த சிறந்த யாப்பு முறை கொண்டு புராணத்தை அமைத்த சேக்கிழாரின் இலக்கியத்திறனைப் பைந்தமிழ் வாணர்கள் பாராட்டி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யுள்ளனர். இங்ஙனம் இவரைப் பாராட்டிப் பலரைப் பேச வைத்தது இவர்தம் இலக்கியத்திறன்தான்.

இத்தகைய சேக்கிழாரின் இலக்கியத்திறனை இனிப் பல்வேறு பகுதிகளில் விரிவாகக் கூறுவாம்.

சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு எம். லிட் பட்டத்திற்காக அளிக்கப்பெற்ற ஆய்வுக் கட்டுரைகளைச் சைவப் பெருமக்கள் பெரிய புராணத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்னும் எண்ணத்தில் நூல் வடிவில் கொண்டுவர விரும்பினேன். அவ்விருப்பம் இப்போது நிறைவேறுகின்றது.

இந்நூல் வெளி வருவதற்கு நிதியுதவி அளித்த தமிழ் நாடு அரசுக்கும், சிறந்த அணிந்துரை நல்கிய என்னுடைய பேராசிரியப் பெருந்தகை திரு. அ. மு. பரமசிவானந்தம் அவர்களுக்கும், பல்வேறு வகையான் உதவி புரிந்த சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் ஆட்சியாளர் திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்களுக்கும், குறுகிய காலத்தில் செம்மையான முறையில் அச்சிட்டுக் கொடுத்த அரசன் அச்சகத்தினர்க்கும் யான் பெரிதும் நன்றி உடையேன். இந்நூல் வெளிவருவதற்குத் துணைபுரிந்த என் மகன் ப. மணிகண்ட பாண்டியன், மகள் ப. இரேவதி ஆகியோருக்கும் என்னுடைய நன்றி. அவர்களுடைய எதிர்காலம் நன்முறையில் அமைய அவர்களை வாழ்த்துகின்றேன்.

சைவப் பெருமக்களும், இலக்கியச் சுவைஞர்களும், மாணவர்களும் இந்நூலினை ஏற்றுப் போற்றி ஆதரிக்க வேண்டுகின்றேன்.

சென்னை-600040.
5-8-1987

இங்ஙனம்
சொ. பரமசிவம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உள்ளுறை

முன்னுரை

பகுதி 1. இலக்கியப்பண்புகள் — ஒரு கண்ணோட்டம் 1-27

இலக்கியம் - எஃது இலக்கியம்? இலக்கியம் தோன்றக் காரணங்கள் - இலக்கிய வகைகள் - (1) இன்ப இலக்கியம் (pure Art) (2) பயன் இலக்கியம் (Applied Art) தலையாய வேண்டப்படுவன- (1) பொருள் (Content (2) கற்பனை (Imagination) (3) உணர்ச்சி (Emotion) (4) வடிவம் (Form)-நடை (Style)-கவிதையில் சொல்லாட்சி-யாப்பு-அணிகள் - குறிப்புப் பொருள் - காவியம்.

பகுதி 2. பெரியபுராண அமைப்பு. 29-70

புராணத்திற்குரிய மூலங்கள் - உட்பிரிவுகள் - சருக்கம் - காண்டம் - சுந்தரர்துதி-சுந்தரர் வரலாறு-புராணம்கூறும் முறை - உலகெலாம் - நூற்பெயர் - நூலாசிரியர் - காலம் - பெரியபுராணம்-ஒருபெருங்காவியம்-வாழ்த்து - வணக்கம்-வருபொருள் - நான்கு உறுதிப்பொருள்: அறம், பொருள், இன்பம், வீடு-காவியத்தலைவன்-மலை-கடல்-நாடு - நகர்-பருவம்-பெரும்பொழுது - (1) கார்காலம் (2) பனிக்காலம் (3) வேனிற்காலம்-சிறுபொழுது - (1) மாலை (2) யாமம் (3) வைகறை (4) காலை (5) நண்பகல் (6) எற்பாடு-இரு சுடர்த்தோற்றம்-கதிரவன் தோற்றம் - நிலாத்தோற்றம் - நன்மணம் புணர்தல் - பொன்முடி கவித்தல் - பூம்பொழில் நுகர்தல் - புனல்விளையாடல் - உண்டாட்டு - சிறுவரைப் பெறுதல்-புலவியிற்புலத்தல் - கலவியிற் களித்தல்-அரசியற் செய்திகள்-முடிகவித்தல்-மந்திரம் - தூது - செலவு, இகல், வென்றி-மறுப்புரை.

பகுதி-3. கற்பனையும் அணிநலனும், 71-111

இயைபுக்கற்பனை-கருத்துவிளக்கக் கற்பனை - படைப்புக் கற்பனை - தன்மை நவிற்சி அணி - உவமையணி - பத்தி உவமை-நுண்பொருள் உவமை-பருப்பொருள் உவமை - உணர்ச்சி உவமை-தத்துவ உவமை-உருவகவணி-உயர்வு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நவிற்சி அணி - தற்குறிப் பேற்றவணி - சிலேடை அணி- சொல்பின்வருநிலையணி - பொருட்பின்வருநிலையணி - சொற்பொருட் பின்வருநிலை யணி - உள்ளுறை - வருணனை - நாடு - சோழநாடு - நகர் - ஆதனூர்ப்புலைப் பாடி - திணைமயக்கம்.

பகுதி-4, சுவைகள் 113-149

1) நகை 2) அழுகை 3) இளிவரல் 4) மருட்கை 5) அச்சம் 6) பெருமிதம் 7) வெகுளி 8) உவகை 9) பத்தி - அடியார் வாழ்க்கையில் பத்தி - அடியார்களுக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பில் பத்தி.

பகுதி-5. இலக்கிய நயங்கள். 150-194

சொற்சுவை-பொருட்சுவை-கவிதைச் சுவை-சொல்லாட்சி-சொற்றொடர் அமைப்பு-சொற்றிறன்-இடத்திற்குத் தக்க சொற்கள் அமைப்பு - பருவத்திற்குத் தக்க சொற்கள் அமைப்பு - முறைப்படக் கூறுதல் - பண்பாட்டோடு மொழிதல்-பின்னர் பெயரிடுவதை முற்கூறல்-அடியார்க்கு நேர்ந்த தீங்கினை அச்சொற்களால் கூறாமை - உரையாடல் அமைக்கும் திறன் - சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்.

பகுதி-6. அறக்கருத்துக்கள் 195-227

அரசியல்-பொதுமக்கள்-இல்லற வாழ்க்கை-நம்பினோர்க்கு ஊறு ஏற்படின் இறத்தல் - அறம் மீறினால் தண்டனை - பிறருக்கு இழைத்த துன்பம் தமக்கேவரும் - நன்மை செய்தால் நன்மை வந்தடையும்-தாழ்வு இகழா நெறி-நிலையற்ற பொருட்கள் - அரசு, வாழ்வு-ஊழ்வினை-அறம் வெல்லும்.

பகுதி- 7. யாப்பு முறை. 229-269

யாப்பு வளர்ச்சி - சேக்கிழார் கையாண்ட யாப்பு முறை - பெரியபுராணத்துள் வந்துள்ள பாடல்களின் வகைதொகை விவரங்கள்-ஆசிரிய விருத்தம் (1) அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தங்கள் - (2) எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தங்கள் - (3) எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தங்கள் (4) தரவு கொச்சகக் கலிப்பா- (5) கலித்துறை - (6) கலிவிருத்தம் (7) வஞ்சிவிருத்தம்-சேக்கிழார் பல்வேறுவகை யாப்பினைக்கையாண்ட காரணம் - ஒரே வகையான யாப்பு முறை வரும் இடங்கள் - அறுசீர்க்கழி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நெடிலடி யாசிரியவிருத்த யாப்புமுறை வரும் இடங்கள் - எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்த யாப்பு முறை வரும் இடங்கள் - எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தயாப்பு முறை வரும் இடங்கள் - தரவு கொச்சகக் கலிப்பா யாப்பு முறை வரும் இடங்கள் - கலித்துறை யாப்பு முறையைக் கொண்ட நாயன்மார் வரலாறுகள் - கலிவிருத்தம் யாப்பு முறையைக்கொண்ட நாயன்மார் வரலாறுகள்-சுந்தரர் துதி பாடப் பெற்ற யாப்பு முறை - தொடை நயங்கள் - தொடையின் வகைகள் - அடி மோனை-அடி எதுகை-அடிமுரண்-அடி யியைபு - அடி அளபெடை — தொடை விகற்பங்கள் - சந்தப்பாடல்கள் - ஈரசைச்சீர் பாடல்கள் - மூவசைச்சீர் பாடல்கள் - ஓரடியில் பதினொரு எழுத்துக்கள் கொண்ட பாடல்கள் - பன்னிரண்டு எழுத்துக்களைக் கொண்ட பாடல்கள்.

பகுதி-8. தமிழ் வாணர்களின் பார்வையில் சேக்கிழார் 271-283

உமாபதி சிவாச்சாரியார்-சேக்கிழாரின் இலக்கியத்திறன்-புராணத்தின் சிறப்பு-சேக்கிழார் செய்த பெருந்தவம் - சபாபதி நாவலர்-சிவஞானமுனிவர்-திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை - சேக்கிழாரின் கவிச்சுவை - பத்திச்சுவை - சொற்றிறன் - கவியின்பச்சுவை - பெரியபுராணத்தின்சிறப்பு - டாக்டர் ஜி. யு. போப்பு அவர்களின் கருத்துக்கள்

முடிவுரை 285-288

ஆய்விற்குப் பயன்பட்ட நூல்கள் 289-297

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சேக்கிழாரின் திருவுருவம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



சேக்கிழார் திருக்கோயில்—குன்றத்தூர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பகுதி 1

இலக்கியப் பண்புகள் - ஒரு கண்ணோட்டம்

''உண்மையில் மனிதனுடைய எண்ணங்கள், அவனுடைய முழு வாழ்க்கை ஆகியவற்றின் தொகுப்பே இலக்கியமாகும்''.

— Principles of Literary Criticism. P. 25, — C.T. Winchester.

✲

''புவியினுக் கணியாய் ஆன்ற பொருள்தந்து புலத்திற் றாகி
அவியகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறிய ளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமுந் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா விரி''

— கம்பராமாயணம், ஆரணிய காண்டம்,
சூர்ப்பனகைப் படலம், பாடல்-1.

✲

''கவிதை என்பது ஒலிநயம் அமைந்த சொற்களின் கட்டுக்கோப்பு; அஃது இன்பத்தை உண்மையுடன் இணைப்பது; அறிவுக்குத் துணையாகக் கற்பனையைக் கொண்டிருப்பது''.

— ஜான்சன்,
'கவிதையனுபவம்' பக். 134,
— ந. சுப்பு ரெட்டியார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இலக்கியப் பண்புகள் - ஒரு கண்ணோட்டம்

இலக்கியம்

இன்பம், துன்பம் இவற்றோடு உணர்ச்சி மோதல்கள், சிந்தனைக் குழப்பங்கள், பல்வேறு போராட்டங்கள் ஆகிய இவையும், இவைபோன்றனவும் கலந்த கலவையே வாழ்க்கை ஆகும். இவ்வாழ்க்கையை இலக்கியமாக ஆசிரியர்கள் படைக்கின்றனர்.

இலக்கியத்தின் தன்மையைக் கூறிய மேனாட்டுத் திறனாய்வாளர் வில்லியம் ஹட்சன், ''வாழ்க்கையைச் சுவைபட அமையுமாறு விழுமிய மொழியின் வாயிலாக எடுத்துக் கூறுவது இலக்கியம்'' என்றார்.[1] ''பொதுவாக இலக்கியம் என்பது வாழ்க்கையின் ஆய்வாகும். மேற்சென்று விளக்கின், வாழ்க்கையைப் பற்றிக் கூறுவதும், விளக்குவதுமே இலக்கியம் ஆகும்'' என்றார் பிறிதோர் ஆய்வாளர்.[2] ''அறிவுப் புலமை மிக்க மாந்தரால் எழுதப்பெற்ற எண்ணங்களும், உணர்ச்சிகளும் கோவையாக நன்முறையில் அமைந்து கற்கின்றவர்க்கு இன்பத்தை நல்குமெனின் அஃதே இலக்கியமாகும்'' எனப் புகன்றார் அறிஞர் ஒருவர்.[3]

---

1. An Introduction to the Study of Literature. P.10 William Hudson.
2. Principles of Literary Criticism P. 48.
3. Stopford Brooke, Principles of Literary Criticism. P. 36 C.T. Winchester.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள், ''இலக்கியம் உண்மையும் அழகும் நிரம்பிய சொற்களால் வாழ்க்கையைப் புலப்படுத்துகின்றது; அது மனிதனது ஆன்மாவையும், அவன் கருத்துக்கள், உணர்ச்சிகள், தலைநோக்கங்கள் முதலியவற்றையும் சொற்கள் வடிவிலே காட்டும் குறிப்பாகும்'' என்று இதன் தன்மையை இயம்பினார்.[1]

''இலக்கியம் உயர்ந்த சிந்தனைகளின் அனுபவப் பிழிவாகும்'' என மொழிந்தார் டாக்டர் மு. வரதராசனார்.[2]

''வாழ்ந்து காட்டும் வாழ்க்கையைச் சொற்களாற் கூறுவதே இலக்கியம்'' என்றார் அ. ச. ஞானசம்பந்தன் அவர்கள்.[3]

இங்ஙனம் இலக்கியத்தின் தன்மையை மேனாட்டுத் திறனாய்வாளர்களும் நம் நாட்டு இலக்கிய ஆசிரியர்களும் கூறிச் சென்றனர். இன்னும் ஒவ்வொருவரும் தம் அனுபவம், கருத்துக்குத் தக்கவாறு விளக்கம் கொடுப்பர்.

இலக்கியத்தைப் படைக்கின்றவனுக்கும் அதைப் படிக்கின்றவனுக்கும் இடையில் அஃது ஓர் இன்பப் பொருளாகத் திகழ்கின்றது. இலக்கியத்தை இன்பப் பொருளாக ஆக்குவது அதனுடைய மொழிதான் என்பது வெளிப்படை. இலக்கியத்தின் இரு முனைகள் எழுத்தாளனும் படிக்கின்றவனுமே. இடையில் பாலமாக அமையும் மொழியே இவ்விருவரையும் இணைக்கின்றது.[4] நடந்து வருகின்ற சமுதாயம் இவ்விலக்கிய மொழியின் வழியாகவே கடந்து போன சமுதாயத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளுகின்றது; முற்றிலும் அறிந்து கொள்ளுகின்றது.

எஃது இலக்கியம்?

எழுத்துக்களும், எழுத்துக்களால் ஆன சொற்களின் கூட்டுச் சேர்க்கையும் இலக்கியமாகி விடா. அங்ஙனமாயின் எழுத்துக்கள்,

---

1. இலக்கியச் சிந்தனைகள் - பக். 17; எஸ். வையாபுரிப் பிள்ளை.
2. இலக்கிய ஆராய்ச்சி - பக். 47; டாக்டர் மு.வரதராசனார்.
3. இலக்கியக் கலை - பக். 13; அ. ச. ஞானசம்பந்தன்.
4. Principles of Literary Criticism, P. 24, Abercrombie.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சொற்கள் உள்ள யாவுமே இலக்கியமாகிவிடும். உயர்ந்த கருத்துக்கள், ஓசை இன்பம், ஆழ்ந்து அகன்ற நோக்கு, உணர்ச்சி, கற்பனை, சிறந்த வடிவம், உயிர்த் துடிப்பு, உண்மை இவற்றைப் பெற்று வாழ்க்கையை ஆய்கின்றது எதுவோ அதுவே இலக்கியம் ஆகும். சுருங்கக் கூறின் எச்சொற்களின் கூட்டுத் தொகுப்பு உயிர் பெற்றுப் படிக்கின்றவரின் உயிரோடு, உள்ளத்தோடு கலந்து விடுகின்றதோ அதுவே இலக்கியம் எனப் பெயர் பெறுந் தகுதி உடையது. திருவாதவூரரின் திருவாசகம் அருட்பிரகாச வள்ளலாரின் ஊனோடும் உயிரோடும் கலந்துவிட்டது[1] என்பதை அனைவரும் அறிவர்.

இலக்கியத்தின் இலக்கணத்தை அதன் தன்மையை வரையறுத்துக் கூறவியலாது. கருவியால் அளக்கப்படுகின்றவற்றை அளப்பது போன்று இலக்கியத்தை அளக்க முடியாது. இலக்கியத்தைப் படித்து, கேட்டு, அனுபவித்து, உணர்ந்து ''இப்படி இருந்தது'' என்று கூறலாமேயொழிய ''இப்படித்தான் இருக்கும்'' என்று முடிவு கட்டிவிட முடியாது. இலக்கியத்தை அளந்து காட்ட கருவி இல்லை.

ஒன்றைப் படிக்கும்பொழுது செவிப்புலனுக்கு இன்பம் நல்கி, உள்ளத்திற்கு மகிழ்ச்சியூட்டி, உணர்ச்சியைக் கிளர்ந்தெழச் செய்து, நாடி நரம்புகளை அசைய வைத்து மொத்தத்தில் இன்பப் போதையை நல்குகின்றதோ அதுவே இலக்கியம். ''இலக்கிய ஏடுகள் இன்பத்தை உண்டாக்கவேயன்றி வேறு எதற்கும் அல்ல'' என்றார் எமர்சன்.[2] இலக்கியத்தைப் படித்து முடித்த பின்பு ஏதோ ஒன்றனைப் பறிகொடுத்துவிட்டதைப் போன்றும் அல்லது நம்மோடு அதிலுள்ள நிகழ்ச்சி சேர்ந்து கொண்டதைப் போன்றும் தோற்ற மளிக்கின்ற ஓர் உணர்வு நம்முள் எழ வேண்டும். அந்த உணர்வைத் தோற்றுவிப்பது இலக்கியமாகும்.

இலக்கியம், புற்றீசல்களைப் போன்று அளவிறந்து தோன்றி உடனே குறைந்த காலத்திற்குள் அழிவதாக அமையக்கூடாது.

---

1. திருவருட்பா - ஐந்தாவது திருமுறை, பிரிவு 12; பாடல்-7; வள்ளல் இராமலிங்க அடிகள்.
2. Emerson, Principle of Literary Criticism, P. 86, C. T. Winchester.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒரு காலத்தில் தோன்றுகின்ற இலக்கியம் அக்காலத்திற்கு மட்டும் பயன்படாமல் எல்லாக் காலத்திற்கும் பொருந்துவது என்பர். ''இதனால் இலக்கியம் நிலையான - நீடித்த - தன்மையைப் பெற்றிருக்க வேண்டும்''[1] என்பது உறுதியாகிறது. இலக்கியத்தைப் படைக்கின்றவன் தன் இலக்கியத்துள் பாத்திரங்களையும் காட்சி களையும் படைக்கும்போது அவை அந்தக் காலத்திற்கு மட்டும் பொருந்துமாறு படைத்துவிடக் கூடாது. அங்ஙனம் படைத்து விட்டால் அந்தக் காலம் இருக்கின்ற வரையில் அவ்விலக்கியம் வாழும். காலப்போக்கில் அவ்விலக்கியமும் தானாகவே மறைந்து விடும். ஒரு காலத்தில் தோன்றிய இலக்கியத்தை வருங்காலத்தினர் படிக்கும்பொழுது தம்காலத்தைதைச் சார்ந்ததாகவே அஃது அமைந்து இருக்கின்றது என்று எண்ண வேண்டும். தம் உருவத்தை, தம்முடைய வாழ்க்கையை அவ்விலக்கியத்தினூடே கண்டு வியப் படைய வேண்டும். அவ்வாறு அமையும்பொழுதுதான் இலக்கியம் வாழ்க்கையை ஒளிரச் செய்யும் கண்ணாடியாக விளங்கும். ''எந்த ஒரு கலையும் தான் தோன்றும் காலத்து வாழும் மக்களினத்தின் மனப்பான்மைக்கு இரை போடுவதாயின் அக்கலை நீண்ட நாட்கள் வாழ முடியாது'' என நவின்றார் அ. ச. ஞானசம்பந்தன் அவர்கள்.[2] இலக்கியக் கலையும் அப்படிப்பட்டதே.

இலக்கியம் தோன்றக் காரணங்கள்

இலக்கியம் தோன்றுவதற்குச் சில காரணங்களும் சூழ்நிலை களும் தேவைப்படுகின்றன. நம் உள்ளத்தின்கண் தோன்றுகின்ற சில உந்துதல்களே இலக்கியத்தைப் படைக்கத் துணைசெய் கின்றன. அவை பற்றி ஹட்சன் அவர்கள், (1) தன் கருத்தை வெளியிட வேண்டும் என்று தோன்றும் அவா, (2) பிற மக்களிடத்தும் அவர்தம் செயல்களிடத்தும் நாம் கொண்டுள்ள ஈடு பாடு, (3) நாம் வாழ்கின்ற உண்மையான உலகினிடத்தும், கற்பனையால் மட்டும் உண்டாகி மகிழும் கற்பனை உலகினிடத்தும் ஏற்படும் ஆர்வம், (4) எதற்கும் வடிவு கொடுக்கத் தோன்றும் நம்முடைய விருப்பம் ஆகியவையே இலக்கியம் தோன்றக் காரணங்

---

1. Principles of Literary Criticism, P. 38, C. T. Winchester.
2. இலக்கியக் கலை - பக். 21; அ. ச. ஞானசம்பந்தன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கள் என்றார்.[1] இந்த நான்கில் ஒன்று எவனுடைய உள்ளத்தில் அதிகமாக நின்று ஆட்சி புரிகின்றதோ அவனுடைய உள்ளத்திலிருந்து ஓர் இலக்கியம் தோன்றிவிடுகிறது எனலாம். இந்த உணர்வை அடிப்படையாக வைத்துக் கொண்டு தன்னுடைய வாழ்க்கையையோ, பிறருடைய வாழ்க்கையையோ கூர்ந்து படைப்பாளன் கவனிக்கின்றான்.

இதனால் இவனுக்கு நிறைந்த அனுபவம் ஏற்படுகின்றது. மற்றவர் வாழ்க்கையில் தன் கவனத்தைச் செலுத்தித் தன்னை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொள்ளுகின்றான். இலக்கியம் பிறக்க ஆரம்பிக்கின்றது. ''நிகழ்ச்சி, அதில் தோயும் அவன் அறிவு, அதனைப் பெருக்கும் அவனது கற்பனை என்ற மூன்றுந்தாம் இலக்கியம் தோன்ற வழிவகுக்கின்றன''. என்றார் அ.ச. ஞான சம்பந்தன்.[2]

இலக்கிய வகைகள்

இங்ஙனம் பிறந்த இலக்கியத்தை இரண்டு வகைகளாகப்பிரிப்பர் மேனாட்டு ஆய்வாளர்[3], அவை இன்ப இலக்கியம், பயன் இலக்கியம் என்பன.

(1) இன்ப இலக்கியம் (Pure Art)

இன்பம் ஒன்றே இவ்விலக்கியத்தின் முழுப்பயன்: வேறு பயன் எதுவும் இல்லை; இதனுள் மற்றவை எவையும் வருதல் கூடாது. இத்தகைய இலக்கியமே எந்நாளும் வாழ வல்லது. வாழ்க்கையும் அதைப் படம்பிடித்துக் காட்டத் தனி அனுபவமுமே[4] இத்தகைய இலக்கியத்திற்குத் தேவை.

---

1. An introduction to the study of Literature, P. 11, William Hudson.
2. இலக்கியக் கலை - பக். 17; அ.ச. ஞானசம்பந்தன்.
3. Principles of Literary Criticism. P. 25, 26, Abercrombie.
4. Principles of Literary Criticism p. 31, Abercrombie.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

(2) பயன் இலக்கியம் (Applied Art)

குறிப்பிட்ட ஒரு பயனுக்காக ஆசிரியன் ஒரு மையப் பொருளைத் தன் உள்ளத்தில் வைத்துக்கொண்டு இவ்விலக்கியம் படைப்பான். மையப் பொருளைச் சுற்றி அமைபவை கலைத்தன்மை உடையவையாயினும், இன்பத்தை உண்டாக்குபவையாயினும் பயன் இலக்கியமே. மதம் போற்றுதல், தனிமனிதன் புகழ் பாடுதல், நாட்டுரிமையைக் கூறல் இன்ன பிற இவ்விலக்கியத்தின் பயன். அப்பயன் இருக்கின்றவரை இவ்விலக்கியம் வாழும்.

இங்ஙனம் கூறப்பெற்ற இலக்கியத்திற்குத் தலையாய வேண்டப்படுவன நான்கு கூறுகளாம். அவை (1) பொருள் (Content), (2) கற்பனை (Imagination), (3) உணர்ச்சி (Emotion), (4) வடிவம் (Form) ஆகியவை.

(1) பொருள் (Content)

எந்தப் பொருளையும் கலைத்தன்மையுடையதாக ஆக்க விரும்பின், முதன் முதலில் பொருளே தேவைப்படுகின்றது. திறமை மிக்க சிற்பி ஒருவன் கலைத்தன்மையோடு கண்ணைக் கவருகின்ற விதத்தில் அழகான சிலை ஒன்றை வடிக்க எண்ணுகின்றான். சிலை வடிப்பதற்கேற்ற கல் அவனுக்குத் தேவைப்படுகின்றது. இங்குக் கல்லும் மற்றப் பொருட்களும் அழகான சிற்பத்திற்குத் துணைப் பொருட்களாக அமைகின்றன. இந்தக் கல்லைக் கொண்டு எப்படி வடிக்க வேண்டும் என்று அவன் எண்ணுகின்ற எண்ணம்தான் (Thought) இங்குப் பொருளாக (Content) அமைகின்றது. ஓவியமும் இப்படியே.

''இசையைத் தவிர்த்து மற்ற எல்லாக் கலை வடிவங்களிலும் பொருண்மை மிக அடிப்படையானது. அற இலக்கிய ஏடுகள், மற்ற வகையான இலக்கிய ஏடுகள் ஆகியவற்றில் இப்பொருண்மை மிக முக்கியமான ஒன்றாக அமைய வேண்டும். சிறந்த, உயர்ந்த பொருண்மை இருந்தால்தான், எந்த நோக்கத்திற்காக இலக்கியத்தைப் படைக்கின்றோமோ அந்த நோக்கம் வெற்றி பெறும்''[1] என்று பொருண்மையைப் பற்றிக் கூறினர்.

---

1. Principles of Literary Criticism P. 61, C.T. Winchester.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இலக்கியமும் ஒருவகைக் கலையின்பாற்பட்டதே. இலக்கியத் திற்குப் பொருள் தேவை. இலக்கியத்திற்குப் பொருளாக அமைவது எது? ஒவ்வொரு வகையான இலக்கிய வடிவமும் அனுபவத்தைப் பொருளாக வைத்தே பிறக்கின்றது. எத்தகைய அனுபவமாக இருப்பினும் சரியே, ''அஃது ஆசிரியனுடைய சொந்த வாழ்க்கையில் ஏற்பட்டதாகவும் இருக்கலாம்: அவர் எங்காகினும் கேட்ட, படித்த கதையாகவும் இருக்கலாம். அவருடைய உள்ளத்திலே மின்னல் போல் தோன்றி அனுபவத்தை உண்டாக்கியிருக்கலாம். இன்பத் தைப் பற்றியதாகவோ, துன்பத்தைப் பற்றியதாகவோ அமையலாம். அனுபவம் எங்ஙனம் இருந்தபோதிலும் மற்ற அனுபவங்களிலிருந்து மாறுபட்டுச் சிறந்த தன்மையுடையதாக உயர்ந்து காணப்பட வேண்டும். அத்தகைய அனுபவமே இலக்கியத்திற்குப் பொருளாக அமைவதற்கு ஏற்ற ஒன்றாகும்''.[1]

பொருள் சிறந்து இருந்தால்தான் படைக்கப் பெறுகின்ற இலக்கியமும் சிறந்து காணப்படும். பொருள் சிறப்புடையதாக அமையாமல், இலக்கியத்திற்குத் தேவையான கற்பனை, உணர்ச்சி, வடிவம் ஆகிய மற்றவை சிறந்து காணப்பெற்றாலும் அவ்விலக்கியம் சிறந்ததாக அமையாது. பொருளைச் சுற்றி வருபவையே மற்றவை. எனவே, பொருள் இலக்கியத்தின் வித்து ஆகும். ''அனுபவமாகிய பொருள் அதிலே சிறந்து காணப்பெறாவிட்டால், அவ்விலக்கியத்தின் நிலைபேற்றுடைமை (Existence) வெற்றி பெறுவதில்லை''.[2]

இலக்கியத்தில் எத்தகைய பொருள் இடம்பெற வேண்டும்? நம் வாழ்க்கையில் நடைபெறுகின்ற எல்லா நிகழ்ச்சிகளையும், அனுபவங் களையும் இலக்கியத்தில் பொருளாக அமைக்கக்கூடாது. ''பொது வான நிகழ்ச்சிகளிலிருந்து, சிறப்பானவற்றை மட்டும் பிரித்து எடுத்துச் செம்மையாக்கி இலக்கியத்தில் தரவேண்டும். அன்பு, அழகு, உண்மை இவை போன்ற மதிப்புள்ளவற்றைத்தாம் பொரு

1. Principles of Literary Criticism, P. 46, Abercrombie.
2. Principles of Literary Criticism, P. 53, Abercrombie.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ளாக அமைக்க வேண்டும். தாழ்ந்ததும், மட்டமானதும், பொது வானதும் ஆகியவற்றை நீக்கி விட வேண்டும்'''[1] வித்து நன்றாக இருந்தால்தான் விளைவும் நன்றாக இருக்கும்.

(2) கற்பனை (Imagination)

நாம் ஓர் அரிய காட்சியைக் காணுகின்றோம். இதுவரையிலும் நாம் பார்த்த காட்சியிலிருந்து அது வேறுபட்டுத் திகழ்கின்றது. நம் உள்ளத்தை அஃது ஈர்த்து விடுகின்றது; எனவே நம் உள்ளத்தில் அது பதிந்து விடுகின்றது. பின்னர் அக்காட்சியை நம் உள்ளத்தி லேயே வைத்துக் கொண்டிருக்க முடிவதில்லை; ஓர் உருவம் கொடுத்து அதனை வெளியிட முனைகின்றோம். உயர்ந்த செஞ் சொற்களைக் கொண்டு உணர்ச்சியைச் சேர்த்து அதற்கொரு வடிவம் கொடுக்கின்றோம். அது கவிதை வழியாகவும் வெளிப்படலாம். உரைநடை வழியாகவும் வெளிப்படலாம். இது ஒருவகை.

அந்தக் காட்சியைக் கண்களால் நேருக்கு நேர் பார்க்காமல் கண்டதாகவே கற்பித்துக் கொண்டு, பொய்யான ஒரு காட்சியை மெய்போலக் காட்டி, உயர்ந்த சொற்களை உணர்ச்சியோடு குழைத்து அதற்கொரு வடிவம் கொடுத்து வெளியிடுவது மற்றொரு வகை. ''முதல் வகையில் காட்சியைப் பார்த்து அனுபவத்தைப் பெறுகின்றான். இரண்டாம் வகையில் ஒன்றைப் பாராமலேயே பார்த்து அனுபவித்ததைப் போன்று கூறுகின்றான். இங்ஙனம் தனக்குள் படைத்துக் கற்பித்துக் கூறுவதே கற்பனையாகும்''.[2]

''ஒரு சிற்பி சலவைக் கல்லைக்கொண்டு ஓர் உருவத்தைச் செதுக்க முற்படுகிறான். அந்த உருவத்தைச் செதுக்குவதற்கு முன் தன் உள்ளத்தில் பார்க்காத ஓர் உருவத்தை முன்னதாகவே செதுக்கி வைத்துக் கொள்ளுகின்றான். இது கற்பனை''.[3]

---

1. An introduction to Poetry, P. 122, Raymond Mec-donald Alden.
2. Principles of Literary Criticism, P. 120, C. T. Winchester.
3. Principles of Literary Criticism. P. 120, C. T. Winchester.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''கற்பனை என்பது நினைவுத் திறனைவிட உயர்ந்த தாகும்''.[1]

இதுவரை கூறப்பெற்ற கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு கற்பனையின் விளக்கத்தைக் காண்போம். ''கற்பனை என்பது புலன்கள் நேரே ஒரு பொருளை அனுபவியாத காலத்திலும் அந்தப் பொருளை நினைவிற்குக் கொண்டுவந்து அப்பொருளி னிடத்து மீண்டும் அனுபவத்தை ஏற்றவல்ல ஒருவகையாற்றல்''[2] என்றார் ந. சுப்பு ரெட்டியார் அவர்கள்.

''கற்பனை என்பது சிந்தனையும் காட்சியும் கலந்த ஒருவகை யான கூட்டுத் திறன். இலக்கணத்தின் மூலம் விளக்கிக் காட்டு வதை விட உதாரணத்தின் மூலம் அதனைச் சுட்டிக் காட்டி விட லாம்''[3] என்றும் கூறினர்.

கவிஞன் ஒரு காட்சியைக் காணுகின்றான். உள்ளதை உள்ள வாறு கூறாமல் உள்ளம் விழையுமாறு உயர்வாகக் கூறுகின்றான். கோபுரத்தின் உயரத்தைக் கூற விழையும் கவிஞன் அதைத் துல்லிய மாக இருநூறு அடியென அறிவியல் கண் கொண்டு கூறாமல்,

''விண்தடவு கோபுரத்தைப் பணிந்து''[4]

எனக் கலையியல் கண் கொண்டு கூறுகின்றான். இதுதான் கற்பனை. கற்பனைக்கு இங்ஙனம் பல விளக்கங்களைக் கொடுத்தபோதிலும், இன்ன விளக்கம்தான் அதற்குப் பொருந்துவது என்று உறுதியாகக் கூற முடியவில்லை. ''சொற்களைக் கொண்ட சொற்றொடர் களால், கற்பனையின் இலக்கணத்தை வரையறுக்க இயலாது. படித்து, பார்த்து, கேட்டு, அனுபவித்து மகிழ்வதன் மூலம்தான் கற்பனையின் தன்மையை - ஆற்றலை - உணர முடியும். அத்தகைய நுண்மையது, புலத்திற்கு அப்பாற்பட்டது. கற்பனையின் தத்துவம் அறிவுக்கு எட்டாதது; சொற்களால் உணர்த்த

1. An introduction to Poetry, P. 95, Alden.
2. கவிதையனுபவம் - பக். 149; ந. சுப்பு ரெட்டியார்.
3. கவிதையும் வாழ்க்கையும் - பக். 139; ஆ. முத்துசிவம்.
4. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 144. (பெரிய புராணம்)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முடியாதது ; அதன் பலன்களைக் கொண்டே அஃது அறியப் பெறுவதொன்றாகும்''[1] என்கிறார் ஒரு அறிஞர். எது கற்கின்ற வரை ஈர்த்து அவர்களை மகிழச் செய்து திடீரென்று அவர்தம் உள்ளங்களில் ஓரசைவை ஏற்படுத்துகின்றதோ அது கற்பனை யாகும். இக்கற்பனையைப் படைப்புக் கற்பனை (The Creative Imagination), இயைபுக் கற்பனை (The Associative Imagination), கருத்து விளக்கக் கற்பனை (The Interpretative Imagination) என்று[2] மூன்று வகையாகப் பாகுபடுத்திப் பேசுவர். இவற்றைப் பின்னர் ''கற்பனையும் அணிநலனும்'' எனுந் தலைப்பில் கூறுவாம்.

கலைக்கும் கற்பனைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. கற்பனையின்றிக் கலை சிறப்படைவதில்லை. இலக்கியக் கலையும் கற்பனையை உயிர்நாடியாகக் கொண்டதே. எந்த அளவிற்கு இலக்கியம் உயர்ந்த தன்மையுடையதாக விளங்க வேண்டுமோ அந்த அளவிற்குக் கற்பனையும் அதிலே இடம் பெறுதல் இன்றி யமையாதது ஆகின்றது.

''இக்கற்பனையே பல அணிகளுக்குத் தாய் ஆகும். கலைகளின் சிறப்பிற்கு இன்றியமையாத அடித்தளமாக இருப்பது கற்பனை; கவிதைக்குப் பொலிவூட்டுவது கற்பனை'' என்பது தெளிவு.[3] ''கற்பனையின்றி இலக்கியத்தின் மூலம் உணர்ச்சியை உண்டாக்க வியலாது. உணர்ச்சிக்கு அடிப்படை கற்பனையே''.[4] கற்பனை இல்லையெனின் உணர்ச்சியில்லை.

(3) உணர்ச்சி (Emotion)

நம்முடைய உள்ளம் எப்பொழுதும் சம நிலையில் இருப்பது இல்லை. ஞானிகளுக்கும், முற்றுந் துறந்த துறவிகளுக்குந்தாம்

---

1. Ruskin, Modern Painters, Quoted in Principles of Literary Criticism, P. 119, C. T. Winchester.
2. Principles of Literary Criticism, P.123, 124, 127, 130, C. T. Winchester.
3. திருக்குறளில் கற்பனைத் திறனும் நாடக நலனும்-பக்.28; - க. த. திருநாவுக்கரசு.
4. Principles of Literary Criticism, P. 61, C.T.Winchester.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உள்ளம் எப்பொழுதும் சமநிலையில் இருக்கும். அதைத்தான் ''சம நிலை'' என்பர். பொதுவாக உள்ளம் செயல்களுக்குத் தக்க வாறு மாறுபடும். இன்னும் காணுகின்ற காட்சிகளுக்குத் தக்க வாறும். உணர்கின்ற உணர்வுகளுக்குத் தக்கவாறும் அது வேறு படும். இங்ஙனம் சமநிலையில் இருக்கும் உள்ளம் வேறு பட்ட நிலைக்குச் சென்று தொழில் புரிவதைத்தான் ''உணர்ச்சி'' என்று குறிப்பிடுகின்றோம்.

''உள்ளத்தில் ஏற்படும் ஒரு நெகிழ்ச்சி அல்லது எழுச்சியே உணர்ச்சி என வழங்கப்படுவது''.[1] ''நனவு நிலையில் நம்முடைய செயல்கள் யாவற்றையும் பாதித்து நிற்கும் பொது உளநிலைமையை உளவியலார் உணர்ச்சி என்ற குறிப்பிடுவர். உணர்ச்சி என்பது முற்றிலும் உள்ளத்தில் உண்டாகும் நிகழ்ச்சி ஆகும்''.[2]

காலத்திற்குக் காலம் மக்களுடைய நடையுடை பாவனைகள் மாறிக்கொண்டேயிருக்கலாம். ஆனால் அவர்களுடைய உணர்ச்சிகள் பெரும்பாலும் மாற்றம் அடைவது இல்லை. என்றைக்கும் ஒரே தன்மையனவாகவே உணர்ச்சிகள் இருக்கின்றன. காதல், வீரம், வியப்பு, பசி, துன்பம். வெறுப்பு, பகை, இழிவு இன்னோரன்ன உணர்ச்சிகள் என்றும் பெருமளவிற்கு மாறுபட்டு விடுவதில்லை. பழங்காலத்து மக்களும் இத்தகைய உணர்ச்சிகளைப் பெற்றிருந் தனர்; இந்தக் காலத்து மக்களும் இத்தகைய உணர்ச்சிகளையே பெற்றிருக்கின்றனர்.

இத்தகைய உணர்ச்சிகளே இலக்கியத்திற்குப் பெரிதும் அடிப் படையான உணர்ச்சிகளாக விளங்குகின்றன. உணர்ச்சிகள் ஓர் உருவம் பெற்ற நிலையிலேதான் வெளிப்படுத்தப்படுகின்றன. அப்பொழுதே இலக்கியமும் பிறக்கின்றது. மனிதனுக்கு ஏற்படுகின்ற அத்தனை உணர்ச்சிகளையும் இலக்கியத்தில் படைத்துவிடக் கூடாது. ''மனிதனுடைய உணர்ச்சிகளையெல்லாம் நெறிப்படுத்தி - வகைப்படுத்தி - அழகுபடுத்தி சில உணர்ச்சிகளாகவே அடக்கிக் காட்டுகின்றனர் புலவர்கள். அவற்றை உயர்ந்த உணர்ச்சிகள்

1. இலக்கியமும் விமரிசனமும் - பக். 100; பி. கோதண்ட ராமன், எம்.ஏ., பி.எல்.
2. கவிதையனுபவம் - பக். 66; ந. சுப்பு ரெட்டியார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

(Noble Emotions) என்று கூறுவர். அவை காதல், புகழ், வியப்பு, மகிழ்ச்சி என்பவற்றின் எதிரிடையாக இருக்கின்ற வெறுப்பு, வெகுளி கொடுமை, துன்பம் ஆகியன''.[1] இவை யாவும் இலக்கியம் சிறப் படைவதற்குத் தேவைப்படும் விழுமிய உணர்ச்சிகளாகும். ''கொலை களும், கொள்ளைகளும், பொருந்தாச் செயல்களும், பயங்கரமான வேதனைகளும்' அளவுக்கு மீறிய துயரங்களும் உயர்ந்த இலக்கியத் திற்கு உரிய உணர்ச்சிகளாக அமைய மாட்டா'' என்றார், பி. கோதண்டராமன் அவர்கள்.[2]

உணர்ச்சிகள் வெளித்தோன்றும்பொழுது அவற்றை ''அழகு'' எனக் கூறி மெய்ப்பாட்டுள் அடக்குவர் தொல்காப்பியர்.[3]

இங்ஙனம் பலவகையான உணர்ச்சிகளைப் பற்றிக் கூறிய போதிலும், சிறந்த ஐந்து வகையான உணர்ச்சிகளைப் பெற்றுத் திகழும் இலக்கியம் நீண்ட நாட்கள் வாழும் என விஞ்செஸ்டர் கருது கின்றார்.[4] அவை (1) நியாயமான, பொருத்தமான தக்க உணர்ச்சி, (2) ஆற்றல் மிக்க உணர்ச்சி, (3) தொடர்ந்து அமைகின்ற நிலைபேறுள்ள உணர்ச்சி, (4) குறிப்பிட்ட வட்டத் திற்குள் அமைவதும் அல்லது பல்வேறு வகையான உணர்ச்சிகள் கூடி அமைவதும் ஆகிய உணர்ச்சி, (5) முதல் தரமானதும், உயர்ந்த தன்மை கொண்டதும் ஆகிய உணர்ச்சிகள் என்பனவாம்.

இலக்கியத்தில் இடம்பெறும் இத்தகைய உணர்ச்சிகளின் விளைவுகளைக் கொண்டே ஒரு நல்ல இலக்கியத்தின் நீடித்த தன்மை எடை போடப் பெறுகின்றது. உணர்ச்சிகள் சிறப்புடை யவைகளாக இருக்குமெனின் இலக்கியமும் சிறப்புடையதாக இருக்கும். ஒரு கலையின் வேலைப்பாடு ஏற்கெனவே இருக்கின்ற அழகைப் பொறுத்து அமைவது அன்று; உணர்ச்சியை வெளிக் காட்டுவதில்தான் அக்கலையின் வண்ணம் அமைகின்றது.

---

1. Principles of Literary Criticism, P.-68, C.T.Winchester
2. இலக்கியமும் விமரிசனமும்-பக். 101; பி.கோதண்டராமன்.
3. தொல்காப்பியம் (மெய்ப்பாட்டியல்) - சூத்திரம்: 251.
4. Principles of Literary Criticism, P. 82, C. T. Winchester.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கவிஞன் ஒரு காட்சியைக் காணுகின்றான்; அல்லது கண்ட தனைப் பற்றி எண்ணுகின்றான். அந்த எண்ணத்தில் தன்னை மறந்து விடுகின்றான். அதனையே கலைப் பொருளாக ஆக்க விரும்புகின்றான். கவிஞன் எந்தப் பொருளைக்கலைப் பொருளாக ஆக்க விரும்புகின்றானோ அந்தப் பொருளாகவே அவன் மாறிவிடுகின்றான். அவன் வேறு; அப்பொருள் வேறு என்றில்லை. அந்த நிலையில் அவன் அவனுடைய ஆட்சியில் (கட்டுப்பாட்டில்) இல்லை. எந்தப் பொருளைப் படைக்க விரும்புகின்றானோ அப்பொருளின் வழித்தோன்றும் உணர்ச்சியிலே அவன் திளைக்கிறான். அதனால் தன்னையே மறக்கிறான். கவிஞன் உணர்ச்சியைப் படைத்தபோதிலும், அவ்வுணர்ச்சிதான் அவனை இழுத்துக்கொண்டு போகின்றது; அவன் அதன் வயமாகி விடுகின்றான்.

''ஓவியம் எழுதுகிற கலைஞன் ஒருவன், அந்த ஓவியத்தோடு ஒன்றி விடுவதால்தான் அந்த ஓவியத்தைச் சிறப்பாக வரைய முடிகின்றது'',[1] அந்த ஓவியத்தின் இயல்பு, தன்மை ஆகிய அத்தனையும் அவனுடைய உள்ளத்திலே படிந்து அங்கேயே உருப் பெற்றுப் பின்னர் அழகான ஓவியமாக வெளிவருகின்றது.

கவிஞர்கள் தம்மையொத்த உயர்திணைப் பொருள்களிடத்திலே மட்டும் அல்லாமல் மற்ற அஃறிணைப் பொருள்களிடத்திலும் ஈடுபாடு கொண்டவர்களே. அவர்கள் எந்த எந்தப் பொருளைப் பற்றி ஆழ்ந்து எண்ணுகிறார்களோ அந்தந்தப் பொருள்களாகவே மாறி விடுகின்றனர் என்பதைக் காணலாம்.

''குருவி ஒன்று என் சன்னலின் எதிரே வருமானால், அதன் வாழ்வில் நான் ஒன்றி விடுகின்றேன். அதைப்போலவே தானியங்களைக் கொத்தித் தின்னவும் தொடங்கி விடுகின்றேன்'' என்கின்றார் கவிஞர் கீட்ஸ்.[2]

ஓர் ஆட்டை ரூஸ் என்பவர் ஓவியமாக வரைந்தார். அது கோதே என்பவரின் உள்ளத்தில் ஓர் உணர்ச்சியை உண்டாக்கி

1. 'தாந்தே' மேற்கோள் :- இலக்கியத்திறன்-பக். 80 டாக்டர் மு. வரதராசனார்.
2. A study of Poetry, P. 70, Bliss Perry.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவரையும் ஓர் ஆடாக உணரும்படி மாற்றி விட்டதாம்.[1] குன்றின் மேல் மேய்ந்து கொண்டிருந்த பசுக் கூட்டத்தைப் பார்த்த லேரி என்ற ஆறு வயதுச் சிறுவன் அக்கூட்டத்தோடு தன்னை இணைத்துக்கொண்டு தானே பசுவாக மாறி விட்டதாக உணர்ந்தானாம்.[2] பாரதியார் கூட, அஃறிணைப் பொருட்களைக் கண்டவிடத்து உணர்ச்சிப் பிழம்பாக மாறி,

''காக்கை குருவி எங்கள் ஜாதி—நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்''

எனப் பாடினார்[3].

(4) வடிவம் (Form)

''கலையின் வடிவம் என்பது ஒருமுகமாக இயையும் ஒன்றினுடைய முழுமை நிலை எனலாம். இத்தகைய முழுமை பெறாத கலை கலையாகாது. தேவையான எல்லாம் ஒருமுகமாய் இயங்கி முழுமை நிலை பெறுதலே வடிவம் என்று கூறப்படுவதாகும்'' என்று வடிவத்திற்கு விளக்கந் தந்தார் டாக்டர் மு. வரதராசனார் அவர்கள்.[4]

கட்டடம் கட்டுவதற்குரிய பொருள்கள் தனித்தனியாகக் கொட்டிக் கிடப்பதைக் காணும்பொழுது நம் உள்ளத்தில் முழு நிறைவு ஏற்படுவதில்லை; ஏனென்றால் அவை முழு வடிவம் பெறவில்லை. கலைஞனின் கைவண்ணத்தால் ஒரு கட்டடமாக முழுமை பெற்ற பின்பு அது நம்முடைய உள்ளத்தை ஈர்க்கின்றது; அக்கட்டிடத்தின் அழகிலிருந்து நம்முடைய உள்ளம் விடுபடாமல் ஈர்க்கப்பட்டு விடுகின்றது. காரணம் கட்டடம் பெற்றுள்ள ஒரு முழு வடிவமேயாகும். ஷாஜகானால் கட்டப்பெற்ற தாஜ்மகால் எண்ணற்ற ஆண்டுகளாக எண்ணிலா மக்களைத் தன்பால் ஈர்த்துக் கொண்டு வருகிறது என்றால், பார்க்கின்ற மக்களின் உள்ளங்கள் நிறைவு பெறும்வண்ணம் அது பெற்றுள்ள முழு அழகு வடிவமே

---

1. A study of Poetry, P. 70, Bliss Perry.
2. A study of Poetry, P. 70, 71 Bliss Perry.
3. பாரதியார் கவிதைகள் - பக். 181; ஞானப்பாடல்கள்-2.
4. இலக்கியத்திறன்-பக். 177; டாக்டர் மு. வரதராசனார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யாகும். ஒன்று தேவையான உறுப்புக்களனைத்தும் பெற்றிருந்த போதிலும் வடிவமாகாது. ஒருவரின் உள்ளத்தைக் கவர்ந்திழுக்கின்ற தன்மை பெற்றிருக்குமெனின் அதுதான் அதன் முழு வடிவமாகும். இலக்கியமும் இதைப் போன்றதே.

இலக்கியத்திற்குத் தேவையான அனுபவம், கற்பனை, விழுமிய உணர்ச்சி, சொல்லாட்சி, பலவகை யாப்பு ஆகியவை பரந்து காணப் படலாம். பாடுகின்ற புலவனின் உள்ளத்தில் ஒன்று தோன்றி இன்னொன்று தோன்றாமல் மறைந்து நிற்கலாம், இலக்கியத்திற்குத் தேவையான அவை யாவும் எந்தெந்த இடங்களில் எவை எவை எந்த அளவிற்குத் தோன்ற வேண்டுமோ, எந்த அளவிற்கு அமைய வேண்டுமோ அந்த அளவிற்கு அமைந்து எல்லாவற்றையும் பொருத்தமுற இணைத்து முழுமை பெற்று கற்கின்றவரின் உள்ளம் நிறைவு பெறும்படி கவிஞன் அமைத்துக் காட்டுகிற உருவமே இலக்கிய வடிவமாகும். அவ்வடிவத்தில் குறை இல்லாமல், நிறையே அமையுமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். ''புலவரின் அனுபவத்தைச் சொற்களின் அமைப்பு விளக்கி விடலாம். ஆயின் அந்த அனுபவத்தை ஒருமுகப்படுத்தி இயைத்து முழுமையாக்கிக் காட்டுவதுதான் இலக்கியத்திற்கு அவர் தரும் வடிவம் ஆகும்''.[1]

''வடிவம் என்பது முழுமை பெற்றுவிட்ட முடிவு நிலையைக் குறிப்பது அன்று. எண்ணங்களும், உணர்ச்சிகளும் வடிவத்தின்வழி விளக்கம் பெறுகின்றன. எனவே மற்றவற்றை விட அது தனி ஆய்வுக்குரியதாகும்''.[2] ''வடிவத்தைக் கொண்டே கலைஞனின் பண்பாடுகளையும், அவனுடைய உணர்வுகளையும், ஆளுமைத் தன்மை (Personality) யையும் காலத்தின் இயல்பையும் நன்கு அறிந்து கொள்ளலாம். கலைஞனின் தன்மைகளுக்கேற்பவே, கலையின் ஆற்றலால் அவன் தருகின்ற வடிவங்களை ஏற்றுக் கொள்ளுகின்றவர்களின் தன்மைகளும் அமையும். கலையின் வடிவமே, கலைஞரின் உள்ளத்தையும் கற்பவரின் உள்ளத்தையும் தொடர்பு படுத்துவதாகும்''[3] என்றார் டாக்டர் மு. வரதராசனார் அவர்கள்.

1. Principles of Literary Criticism P. 50, Abercrombie
2. Principles of Literary Criticism P. 61, C. T. Winchester
3. இலக்கியத் திறன் - பக். 178 ; டாக்டர் மு. வரதராசனார்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நடை (Style)

''ஒரு காவியத்தையோ கதையையோ படிக்கும்போது. யாரோ ஒருவர் நமக்கு எடுத்துச் சொல்வதுபோல் உணர்கிறோம். காவியத்திலும் கதையிலும் வரும் மாந்தர் சொல்வன அல்லாமல், அவர்களுக்குப் பின்னே இருந்தவாறு, அவர்களின் வாயிலாக ஒருவர் பேசுவதுபோல் உணர்கிறோம். அவ்வாறு பேசும் குரல் நூல் ஆசிரியரின் குரலானால், அந்தக் குரலின் சிறப்பியல்புதான் அவருடைய நடை என்று கூறப்படும்''[1],

சொற்களை இடத்திற்குக் தக்கவாறு தேர்ந்தெடுத்து அமைத்தல், சொற்றொடரைக் கையாளும் விதம், எதுகை, மோனை கொண்ட சொற்களை நிரல்பட அமைத்தல், பொருளுக்குத் தக்கவாறு சொற்களைப் பயன்படுத்தல், ஒலி அமைப்பு, உணர்ச்சி வெளிப்பாடு ஆகியவை ஓர் எழுத்தாளனின் தனித் தன்மைகள் ஆகும். எழுத்தாளன் அவற்றை எண்ணி எழுத மாட்டான். எழுத்தாளன் எழுதிக் கொண்டே போகும் பொழுது அவை யாவும் தாமாக எழுத்தில் அமைந்து விடும். அதைத்தான் நடை என்கின்றோம், எல்லா எழுத்தாளர்களும் ஒரே விதமாக எழுத மாட்டார்கள். நடையும் நடைநலமும் அவ்வாறு அமையாது. ஒவ்வொருவரிடமும் நடைநலமும் அமைப்பு முறையும் மாறுபட்டே காணப்படும். அவர்கள் எழுதும் போது இருந்த உள்ளப் பண்பு; உணர்ச்சி; அகவாழ்க்கை, புற வாழ்க்கையில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் ஆகிய இவற்றிற்குத் தகுந்தவாறு எழுத்தில் ஒலியும் உணர்ச்சியும் கொண்ட சொற்கள் எழுத்தாளர் மனத்திலே இடம் பெறுகின்றன. இவற்றின் அமைப்பு முறைகள் எழுத்தாளர்களுக்குள் வேறுபடுவதால் அவர்களுடைய நடைநலங்களும் வேறுபட்டு விடுகின்றன.

நடையை வைத்துக் கொண்டே இன்ன ஆசிரியர் அதற்குரியவர் என்று எளிதில் கூறிவிடலாம். எனவே எழுத்தாளன் வேறு; அவன் பயன்படுத்துகின்ற நடை வேறு என்று கூற முடியாது. ''எழுத்

---

1. Anatomy of Criticism P. 268, N. Fyre
'மேற்கோள்' - இலக்கியத் திறன் - பக். 237 ; டாக்டர் மு. வரதராசனார்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தாளனே நடையாகவும் நடையே எழுத்தாளனாகவும் அமைந்து விடுகின்றன.''[1] ''நடை என்பது எழுத்திலிருந்து தனியாகப் பிரிக்கப்படுகின்ற ஒரு கூறு அன்று; நடையேதான் எழுத்தாக அமைகின்றது.''[2]

நடை எழுத்திலிருந்து பிரிக்க முடியாத ஓர் உறுப்பு; மனிதன் அணிகின்ற உடையைப் போன்று அன்று. அவனுடைய உடம்பிலே இருக்கின்ற சதையும், எலும்பும், குருதியும் போன்றது ஆகும். ''சுருங்கக் கூறின் நடை என்பது ஓர் ஆசிரியரின் மேற்சட்டை போன்றது அன்று; உடம்பின் தோல் போன்றது''[3] எனலாம். இதனால் ஆசிரியரை வேறாகவும், அவருடைய எழுத்து நடையை வேறாகவும் பிரித்தறிய முடியாது.

ஆசிரியரின் நடை அவர்மனத்தையும், சிந்தனையையும் பொறுத்திருக்கும். சிந்தனையில் தெளிவு இருந்தால் நடையிலும் தெளிவு இருக்கும்; தெளிவு இல்லையாயின் நடையிலும் தெளிவு இருக்காது; குழப்பந்தான் மிஞ்சும். ''நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பங்கு, தெளிவில்லாத நடை தெளிவில்லாத சிந்தனையிலிருந்தே பிறக்கின்றது''[4] என்றார் திறனாய்வாளர் ஒருவர். இதைத்தான் பாரதியார்,

> *''உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே*
> *ஒளி உண்டாகும்''*[5]

என்று கூறினார். எழுத்து நடைக்கும் இது பொருந்தும். ''கருத்தில் உறுதி, அசையாத நம்பிக்கை, சக்தி மிக்க பண்பாடு ஆகியவை எங்கு இருக்கின்றனவோ அங்கு இலட்சியத்திற்கான வழி அமைந்து விடுகிறது, என்பதே பொருள் ஆகும். அத்தகையோரது நடையும் தூய்மையாகவும், தெளிவாகவும், உறுதியாகவும் இருக்கும்''[6] என்றனர். இன்னும் நடையைப் பற்றிக் கூறுங்கால்,

---

1. The Problem of style P.76, J. Middleton Murray.
2. The Problem of style P 77, J. Middleton Murray.
3. Carlyle. An introduction to the study of Literature. P-27. William Hudson.
4. Principles of Literary Criticism, P. 191, C. T. Winchester.
5. பாரதியார் கவிதைகள், தமிழ் - பாடல்-4.
6. Elementary Guide to Literary Criticism, P. 91-92, F. V. N. Painter.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''நடை என்பது மொழியின் தன்மை ஆகும். அஃது உணர்ச்சி களையும் எண்ணங்களையும் வெளியிடுகின்றது. ஆசிரியர்க்கே உரித்தான உணர்ச்சி, எண்ண அமைப்புகளைப் புலப்படுத்து கின்றது. ஆசிரியருடைய உரைப்பகுதியில் எண்ணங்கள் செல் வாக்குப் பெற்றிருக்குமானால் அஃது உரைநடையாக இருக்கும்; உணர்ச்சிகள் செல்வாக்கு உடையனவாக இருக்குமானால் அவை திரண்ட நிலையில் ஒருவித உரைநடைப் பகுதியாகவோ அல்லது கவிதையாகவோ அமையும். உடனே தோன்றுகின்ற அளவுகடந்த உணர்ச்சிகளாக விளங்குமெனின் அது கவிதையாகவே இருக்கும்''[1] என்று கூறினர்.

எனவே நடை என்பது கையினால் புனைந்த கவின் எழுத்து அலங்காரமன்று; அதற்கும் அடிப்படையான, ஆழமான எண்ணப் போக்கே நடையாகும்.

கவிதையில் சொல்லாட்சி:

சொல்லைச் சாதாரணமாகக் கருதுதல் கூடாது; மதிப்புள்ள இரத்தினக் கல்லைப் போன்று அதனை எடை போட வேண்டும். இரத்தினக் கல் தனித்து இருக்கும்பொழுது அதனுடைய மதிப்பிலேயே இருக்கின்றது. ஆனால் மாலையில் இன்ன இடத்தில் வைத்தால் அழகாக இருக்கும் என்று தேர்ந்து வைக்கப் பெறும் பொழுது அதனுடைய மதிப்பு இன்னும் கூடுகின்றது. சொல்லும் இதைப் போன்றதே ஆகும்.

தனித்து இருக்கும்பொழுது அதற்குரிய பொருளைச் சுட்டு கின்றது. ஆனால் புலவன் கவிதையின் இடையிலே எங்கேனும் சேர்த்து விடாமல், இன்ன இடத்தில் சேர்த்தால் அந்தச் சொல்லும் சிறந்த பொருளைப் பெற்று அவ்விடமும் கருத்தோடு அமைந்து விளங்கும் எனக் கருத்தோடு வைத்தால் ஒன்றினுடைய வரலாறு முழுவதுமே வெளிப்படும் வண்ணம் சிறந்து நிற்கிறது. இங்ஙனம் பொருத்தமான சொற்களைப் பொருத்தமான இடங்களில் தக்கவாறு ஆளுவதுதான் சொல்லாட்சியாகும்.[2]

1. The Problem of Style, P. 71, J. Middleton Murray.
2. The Pocket book of Quotations, P. 382. Swift.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

007487

''உரைநடையில் ஆளப்பெறும் சொற்களுக்கும் கவிதையில் கையாளப் பெறும் சொற்களுக்கும் வேற்றுமை இல்லை. கவிஞன் அந்தச் சொற்களைக் கையாளும் முறையில்தான் வேறுபாடு இருக்கின்றது''.[1] உரைநடையில் கையாளப் பெறும்பொழுது அச் சொற்கள் அவ்வளவாகச் சிறப்புறுவதில்லை. ஆனால் கவிதையில் அமைக்கப்படும்பொழுது அவை தாமாகவே தனிச்சிறப்பைப் பெற்று விடுகின்றன. கவிதைக்கும், உரைநடைக்கும் உள்ள அடிப்படை வேறுபாடு இதுதான். ''சொற்களை அவற்றிற்குரிய முறைப்படி அமைப்பது உரைநடையாகும்; சிறந்த சொற்களைச் சிறந்த இடங்களில் அவற்றிற்குரிய முறைப்படி அமைப்பது கவிதையாகும்''[2] என்று வேறுபாடு காட்டினர்.

சொற்களை அதிகமான அளவில் பயன்படுத்த வேண்டும் என்பதில்லை. சொற்கள் சுருக்கம், கருத்துப் பெருக்கம், என்பது தேவை. ''சுருங்கச் சொல்லல்; விளங்க வைத்தல்'' என்றார் பவணந்தியார்.[3] அவர் கூறுகின்ற பத்து அழகுகளும் நூலின் வடிவத்திற்குத் தேவையான கூறுகளாகும்.

இலக்கியத்தில் சேர்க்கப் பெறுகின்ற சொற்கள் உயர்வுடைய செஞ்சொற்களாகத் திகழ வேண்டும். குறிப்பிடப்படும் சில சொற்களை விட உயர்வுடைய சொற்கள் இல்லை என்னும் அளவிற்குச் சொற்கள் படைக்கப் பெறுதல் வேண்டும். ''மிகச் சாதாரணமான சொல்லும், தான் தோன்றும் இடம் காரணமாக, ஓர் அரிய கற்பனைக்குப் பிறப்பிடமாக விளங்குவதும் உண்டு''[4] என்றார் அ. ச. ஞானசம்பந்தன் அவர்கள்.

பாட்டில் சொற்களை அமைக்கும்பொழுது, வன்மையான உணர்ச்சிக்கு வேண்டிய இடத்தில் வன்மையான சொற்களையும், மென்மையான உணர்ச்சிக்கு உரிய இடத்தில் மென்மையான சொற்களையும், கடுமையான உணர்ச்சிக்கு உரிய இடங்களில் கடுமையான சொற்களையும், இனிமையும் குழைவும் மிக்க இடங்களில் ஈர

---

1. கவிதையனுபவம் - பக். 162; ந. சுப்பு ரெட்டியார்.
2. A study of Poetry, P. 98, Bliss Perry.
3. நன்னூல் - சூத். 13.
4. இலக்கியக் கலை - பக். 96; அ. ச. ஞானசம்பந்தன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முள்ள மென்மையான சொற்களையும் பயன்படுத்த வேண்டும். சுருங்கக்கூறின் பேசும் பாத்திரத்தின் தேவை, ஆற்றல் ஆகிய வற்றிற்குத் தக்கவாறு சொற்கள் அமைய வேண்டும். ''இத்தகைய சொற்கள் கொண்ட கவிதை பேசுஞ்சித்திரமாகவும், வரையப்பெற்ற வண்ணச் சித்திரம் ஊமைக் கவிதையாகவும் அமைந்து விடுகின்றன''[1].

யாப்பு

''ஒலிகள் பண்படுத்தப்பெற்றும், கட்டுப்படுத்தப் பெற்றும் செம்மைப் படுத்தப் பெற்றும் விளங்குதல் வேண்டும். இனிய விழுமிய ஓசையாக ஒழுங்காக அமைந்து அளவாலும், தன்மை யாலும் முயற்சியாலும் வேறுபட்டு ஒழுங்காக வந்தமைந்து, திரும்பத் திரும்ப வந்த அமைப்பே மீண்டும் வந்து அமைவது ஒலி நயம் ஆகும். இயற்கையான இத்தகைய ஒலிநயத்தை வளர்த்து விதிகளுள் உட்படுத்திக் கட்டுப்படுத்தினர். அதற்கு யாப்பு எனப் பெயரிட்டனர்.''[2] யாப்பின் அமைப்பு மொழிக்கு மொழி மாறு படும். அந்தந்த மொழியின் தன்மை, அமைப்புக்கு ஏற்றவாறு வேறுபடும்.

அணிகள்

எந்த ஒரு பொருளும் இயற்கையாக - உள்ளது உள்ளவாறே - இருந்தால் பார்க்கின்றவரின் உள்ளத்தை அது ஈர்ப்பதில்லை. உள்ளது உள்ளவாறு, இருக்கின்ற பொருளோடு பார்க்கின்றவரின் உள்ளம் விரும்புமாறு அழகு சேர்ந்து கலைத்தன்மையோடு மிளிர்ந் தால்தான் அப்பொருளில் சுவையை மிகுதியாகக் காண முடிகின்றது. கொடியொன்று நேராக இருப்பதை விட, வளைந்து காணப் பட்டால் பார்க்க அழகாக இருக்கின்றது. மங்கை ஒருத்தி நன்கு உடை உடுத்திப் பலவகையான அணிகலன்களால் தன்னை ஒப்பனை செய்து கொண்டிருந்தால் அவளுடைய தோற்றப் பொலிவு சிறப்பாக அமைந்து விடுகிறது.

அழகான கவிதைகளும் இவற்றைப் போன்றவையே. பாடு கின்ற கவிஞர்கள் உள்ளதை உள்ளவாறு பாடாமல் படிக்கின்றவர்

---

1. Old Greek Saying. The Principles of Literary Criticism, P. 151 Abercrombie.
2. The Discovery of Poetry, P. 147, P. H. P. Lyon.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உள்ளம் விழையுமாறு, சிலவற்றைச் சேர்த்து அழகுபடுத்திக் கற்பனை நயத்தோடு பாடுவர்; சுவையை உண்டாக்குவர். மங்கைக்கு அணிகலன்களால் அழகை உண்டாக்குவதைப் போன்று, கவிதைகள் என்னும் கன்னிகளுக்குச் சில அலங்காரங்களைச் சேர்த்து விடுவர். அவற்றிற்குத்தான் அணிகள் என்று பெயர். ''கவிஞர்கள் தம் கருத்துக்களைத் தெளிவாகவும், விளக்கமாகவும் உரைத்தற்குத் துணையாக இருப்பவை அணிகள்''[1] எனவுரைத்தார் ந. சுப்பு ரெட்டியார்.

''கவிதைகளை அழகுபடுத்துவதற்காக மட்டும் அணிகளை அமைக்கக் கூடாது. அத்தகைய அணிகள் இரண்டாம் தரமானவை களாக அமைந்து விடும். கவிஞர்கள் சில பொருள்களைப் பற்றிப் பாடும்பொழுது விளக்கத்திற்காக அவை தாமாகவே வந்து அவற்றில் இடம்பெற வேண்டும். அத்தகைய அணிகளே சிறந்தன வாக விளங்க முடியும்.

பொருள்களை விளக்கம் செய்வதற்காகவே உவமை, உருவகங்கள் ஆகியவை பயன்படுத்தப் பெற வேண்டும். வாக்கியங்களை அழகு படுத்துவதற்காக மட்டும் அவற்றைப் பயன்படுத்தக்கூடாது. முயன்று தேடாமல் தாமாகவே கவிதைகளில் வந்து அமையும் அணிகளே தக்கவை எனக் கூறத்தகுவன''[2] என்றார் டாக்டர் மு. வரதராசனார்.

இவ்வணிகள் திறங்கள், காரணங்கள் ஆகியவற்றை ஒட்டிப் பெயர் பெறுவனவாகும். உவமை, உருவகம், தன்மை நவிற்சி, உயர்வு நவிற்சி, தற்குறிப்பேற்றம், சிலேடை, பிறிதுமொழிதல், மடக்கு, ஏகதேச உருவகம், புணர் நிலை, நிரனிறை, வேற்றுப் பொருள்வைப்பு, வேற்றுமை, விபாவனை ஆகியவை இலக்கியத்துள் அதிகம் பயின்று வருவனவாம். இவ்வணிகளுள்ளும் சொல்லணி, பொருளணி எனப் பொதுவகையால் இரண்டாக வகுக்கப் பெறும். ''சொல்லணிகள் பொருளணிகளைப் போல் அத்துணைச் சிறப்புடையனவல்ல''[3] என்றார் சி. கே. சுப்பிரமணிய முதலியார்.

---

1. கவிதையனுபவம் - பக். 209; ந. சுப்பு ரெட்டியார்.
2. இலக்கிய ஆராய்ச்சி - பக். 139;
டாக்டர் மு. வரதராசனார்.
3. சேக்கிழார் - பக். 121; சி. கே. சுப்பிரமணிய முதலியார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குறிப்புப் பொருள்

வெளிப்படையாகக் கூறத்தக்க பொருள்களை வெளிப்படையாகக் கூறுவர். சிலவற்றைப் புலவர்கள் வெளிப்படையாகக் கூறாமல் மறைபொருளாகவும் குறிப்பாகவும் கூறுவர். புலவர்களால் கருதப்படுபவை வெளிப்படையாகக் கூறத்தக்க பொருள்களாக இருந்தால் அவற்றை உவமை, உருவகம் ஆகிய உத்தி வகைகளால் பிறர்க்கு உணர்த்தி விடுவார்கள். பல்வேறு காரணங்களால் வெளிப்படையாக உணர்த்தத் தகாதனவற்றை வேறு சில உத்திகளைக் கொண்டு கவிஞர்கள் விளக்குவார்கள். இங்ஙனம் புலவர்களால் கையாளப்பெறும் உத்திக்குக் குறிப்புப் பொருள் அல்லது பொருள் குறிப்பு (Suggestion) என்பது பெயர். குறிப்புப் பொருள் என்பது செய்யுளுக்கு உள்ளே உறைந்து மறைவாக இருந்து சொற்பொருளுக்குப் புறத்தே தோன்றுவது. இத்தகைய குறிப்புப் பொருள் பொதுவாக உள்ளுறை என்று கூறப்படும். புலவனின் வெளிப்பாடாற்றலுக்கு உரைகல்லாக இவ்வுத்தி பயன்படுகின்றது. இதைத் தொல்காப்பியர் உள்ளுறை உவமம், இறைச்சி என்பர்.[1] இப்பொருட் குறிப்பை உள்ளுறை உவமம், இறைச்சி என இரு வகைப்படுத்தி உரையாசிரியர்களும் விளக்கிச் சென்றுள்ளனர்.

இத்தகு நுட்பம் உள்ளுறையினும் மிக்கதாகவே இறைச்சியில் அமைகின்றது. இவ்விறைச்சி உரிப்பொருளின் புறத்ததாகித் தோன்றும் என்பது கருத்து. இதுவும் உள்ளுறை போன்றே உட்பொருளாகப் பிறிதொன்று பயக்கும் தன்மையது. ''இறைச்சி தானே பொருட்புறத் ததுவே''[2] என்பர் தொல்காப்பியர்.

''மனம், எண்ணம் உணர்ச்சியோடு சம்பந்தப்படாத (Objective) ஓர் உண்மையை விளக்குவது ''உள்ளுறை''; உட்படுத்தப்பட்ட விருப்பத்தைக் (Subjective) கூறுவது ''இறைச்சி''. இதைவிட வெளிப்படையாகப் பாடப்படும் கருப்பொருளால் பெறப்படுகின்ற உட்பொருளாகிய உரிப்பொருளை, ''உள்ளுறை'' எனவும்,

---

1. தொல்காப்பியம் . பொருள் - அகத்திணையியல் : நூற்பா. 48.
2. தொல்காப்பியம் - பொருளியல் - நூற்பா. 35.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உரிப்பொருளுக்கும் அப்பாற்பட்டதாகக் குறிப்பால் உணர்த்தப் படுவதே ''இறைச்சி'' எனவும் கொள்வது பொருந்தும்'' என விளக்கங் கூறினர்.[1]

''கவிதைகளில் ஈடுபடுபவர்களுக்கு அச்சுவையை மிகுவிப்பது அவற்றில் அமைந்து கிடக்கும் இத்தகு குறிப்புப் பொருள்களாகும். ஆழ்ந்த புலமை இல்லாதவர்கள் குறிப்புப் பொருள்களை அறிதல் அருமை''.[2]

காவியம்

பல்வேறு காலத்தில் நடைபெற்ற சுவை மிகுந்த நிகழ்ச்சிகளை எல்லாம் ஒன்று சேர்த்துக் கோவையாக்கி வடிவம் தந்தனர். பின்னர் உணர்ச்சியோடு கூடிய எழுத்து வடிவம் தந்து ஓர் அமைப்பை உரு வாக்கினர். அதுவே காவியம் எனப்பட்டது. காவியம் ஒரு காலத் தோடு நின்று விடுவதன்று. காலத்திற்குக் காலம் நிகழ்ச்சிகள், ஏற்கெனவே உருவான அதனோடு சேர்ந்து வளர்ந்து கொண்டே போகும் தன்மையன. காவியத்திற்கான பொருள் எங்கோ ஓரிடத்தில் இருக்கின்றது; அஃது ஒருவருடைய உள்ளத்தை ஈர்க்கின்றது; அவர் அதிலே தோய்கின்றார்; உணர்ச்சி, கற்பனை ஆகிய இவற்றைக் குழைத்து அதனோடு சேர்த்துச் சிறந்த வடிவத்தைக் கொடுக்கிறார். அப்போது காவியம் பிறந்து விடுகிறது.

பழங்காலத்தில் காவியத்திற்குரிய இலக்கணம் இல்லை; வரையறை இல்லை. பாடுகின்றவர் உள்ள நிறைவு, விருப்பம், படிக்கின்றவரின் மகிழ்ச்சி ஆகியவற்றிற்குத் தக்கவாறு நூல் அமைந்தது. பின்னரே அவற்றைக் காவியம் என்றனர். பண்டை நாளில் காவியம் என்ற பெயர் இல்லையாயினும் தொடர்நிலைச் செய்யுள் என்ற பெயரில் காவிய அமைப்பு இடம்பெற்று இருந்தது. மேலும் கி. வா. ஜகன்னாதன் அவர்கள், ''மெல்லென்ற சொல்லால் அறம், பொருள், இன்பம், வீடென்னும் விழுமிய பொருள் பயப்பப் பழையதொரு கதைமேற் கொச்சகத்தான் கூறின் அது தோல் என்று சீவகசிந்தாமணி உரையில் நச்சினார்க்கினியர் கூறுவர்.

---

1. தினமணி சுடர், பக். 7. டாக்டர் கோ. சுந்தரமூர்த்தி,
2. கவிதையனுபவம் - பக். 238; ந. சுப்பு ரெட்டியார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தோல் என்பது பல பாட்டுக்களாலேனும், தொடர்ந்து வரும் ஆசிரியப் பாவினாலேனும் இயற்றப்பெறும் காப்பியம் என்பது பெறப் படும்'' என விளக்கங் கூறினர்.[1]

மேலும், காப்பியமாவது எஃது என்பதைப் பற்றி வடமொழியில் அலங்கார நூலாரனைவரும் ஆராய்ந்து கூறியுள்ளனர். இம் முறையில் நம் தமிழ் மொழியில் யாருமே ஆராய்ச்சி செய்திலர். ஆசிரியர் தொல்காப்பியனார் செய்யுளுறுப்புக்கள் இவையென்று கூறினாரேயன்றிச் செய்யுளின் இலக்கணம் இன்னது எனக் கூறிற்றிலர். அலங்கார நூலாருள் முதலாமவராகக் கருதப்படும் ',பாமஹன்'' என்பவர் சொற்பொருள் இரண்டும் அழகாகக் கூடியது காவியம்; அது செய்யுள், வசனம் என்று இரண்டு வகைப்படும் என்று கூறியுள்ளனர்'' என்றனர் பன்மொழிப் புலவர் திரு. வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்கள்.[2]

''இத்தகைய இலக்கணங்கள் அமைந்த காப்பியங்களை எழுது வதற்குத் தக்க சூழ்நிலைகளும் மனநிலைகளும் இன்றியமையாதவை ஆகின்றன. பல இனத்தவர்கள் ஒன்று சேர்ந்து கலங்கிக் கலந்து அமைதியடையும்போது இத்தகைய காப்பியங்கள் எழக் காண் கின்றோம்''.[3]

''காப்பியத்தின் இலக்கணம் தமிழில் தோன்றவில்லை. தண்டியலங்காரத்தில் கூறப்பெறும் பெருங்காப்பிய இலக்கண நூற்பா, வடமொழித் தண்டியாசிரியர் இயற்றிய காவ்யதர்சத்தின் முதல் பரிச்சேதத்தின் ஐந்து சுலோகங்களின் மொழிபெயர்ப்பு ஆகும்'' என்றனர்.[4] இந்நூற்பா தோன்றுவதற்கு முன்னரே தமிழில் காவியங்கள் தோன்றி விட்டன. காவிய அமைப்பில் பாட வேண்டும் என்று எவரும் பாடவில்லை. தாம் விரும்பிய,

1. தமிழ்க் காப்பியங்கள் . பக். 76; கி. வா. ஜகன்னாதன்.
2. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் கனகாபிசேக விழா மலர், பக். 125-126.
3. தமிழ்க் கலைக்களஞ்சியம் - தொகுதி - 3. பக். 505;
4. இலக்கிய மரபு - பக். 58; டாக்டர் மு. வரதராசனார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எல்லோரும் விரும்புகின்ற ஒரு வடிவத்தில் அவர்கள் பாடிச் சென்றனர். பின்னர் வரையறை செய்த இலக்கணங்களைப் பொருத்திப் பார்க்கும்பொழுது அவை ஒத்திருந்தன. இந்நூற்பா இலக்கணத்தை வைத்துக்கொண்டு படைப்பது காவியமாகாது; ஏற்கெனவே படைக்கப் பெற்றதை இவ்விலக்கணத்தே ஒப்பிடும் பொழுது பெரும்பாலும் ஒத்துவருவதே காப்பியமாகும்.

இனி, ''காப்பியத்தின் இலக்கணத்தைக் கூறுவது அரிது; எளிதன்று. வால்மீகி, கம்பன், இளங்கோவடிகள், ஹோமர், மில்ட்டன், வர்ஜில், தாசோ, காமியான் என்ற இவர்கள் எழுதி இருப்பனபோன்றவைகளே காப்பியங்கள் ஆகும், எனக் கூறுவதை விட என்ன கூற முடியும்? அரண்மனையிலிருந்து குடிசைக்கும், குடிசையிலிருந்து அரண்மனைக்குமாகப் புரண்டு புரண்டு வளர்ந்தோங்கியது காப்பியம். சுருங்கக் கூறின் காப்பியம் என்பது பொது மக்களுடைய உள்ளத் துடிப்பே ஆகும்'' என்றனர்.[1]

இங்ஙனம் இலக்கியத்திற்குத் தேவையான பண்புகள் இனிது அமைந்துள்ளன. இப்பண்புகள் படிக்கின்றவர்களின் விருப்பம், சுவைக்குத் தக்கவாறு காலத்திற்குக் காலம் வளர்ந்து பெருகிச் செல்லும்.

இத்தகைய இலக்கியப் பண்புகளின் அடிப்படையில் பெரிய புராணத்துள் சேக்கிழாரின் இலக்கியத் திறனைக் காண்போம்.

*

1. தமிழ்க் கலைக்களஞ்சியம் - தொகுதி-மூன்று; பக். 505.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பகுதி 2

பெரியபுராண அமைப்பு

''என்று மாமுனி வன்றொண்டர் செய்கையை
அன்று சொன்ன படியால் அடியவர்
தொன்று சீர்த்திருத் தொண்டத் தொகைவிரி
இன்றென் ஆதர வால்இங் கியம்புகேன்''

— திருமலைச் சிறப்பு-37.

✲

''அந்த மெய்ப்பதி கத்தடி யார்களை
நந்தம் நாதனாம் நம்பியான் டார்நம்பி
புந்தி ஆரப் புகன்ற வகையினால்
வந்த வாறு வழாமல் இயம்புவாம்.''

— திருமலைச் சிறப்பு-39.

✲

''காண்டம்இரண் டாவகுத்துக் கதைப்பரப்பைத் தொகுத்துக்
கருதரிய சருக்கங்கள் பதின்மூன்றா நிலையிட்(டு)
ஈண்டுரைத்த புராணத்தில் திருவிருத்தம் நாலாயிரத்
திருநூற் றைம்பத்து மூன்றாக அமைத்துச்
சேண்டகைய திருத்தொண்டர் புராணமெனப் புராணத்
திருமுறைக்குத் திருநாமஞ் சீர்மைபெற அமைத்திட்
டாண்டகைமை பெறஎழுதி மைக்காப்புச் சாத்தி
அழகுபெறக் கவளிகையும் அமைத்ததில்வைத் ததன்பின்''.

— சேக்கிழார் புராணம்-53.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெரியபுராண அமைப்பு

புராணத்திற்குரிய மூலங்கள்

சேக்கிழார், பெரியபுராணம் பாடுவதற்கு ஆதாரமாக அமைந்த முதனூல் சுந்தரமூர்த்தி நாயனாரால் பாடப்பெற்ற திருத்தொண்டத் தொகை என்பதாம். இந்நூலை ஒட்டி, இவர்க்கு அடுத்து வந்த நம்பியாண்டார் நம்பிகள் திருத்தொண்டர் திருவந்தாதி எனும் நூலினைச் சிறிது விளக்கமாக எழுதினார். இவ்விரண்டு நூல்களையும் சேக்கிழார் தம் புராணத்திற்கு அடிப்படை ஆதாரமாக வைத்துக் கொண்டார். பெரியபுராணமாகிய பெருமாளிகை அந்த அடிநிலையின் மேற்கட்டப்பட்டது எனக் கூறின் பொருந்தும்.

பெரியபுராணமெனும் பெருமாளிகையை விரிவுபடுத்துவதற்குத் தொடர்புடைய வேறு ஆதாரங்களையும் சேக்கிழார் தேடிக் கொண்டார். சிறப்புடைய மூவர் முதலிகளாகிய திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோரின் தேவாரப் பாடல்கள், திருமூலர் திருமந்திரம், காரைக்கால் அம்மையாரின் (1) திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் (2) திரு இரட்டை மணிமாலை (3) அற்புதத் திருவந்தாதி, கழறிற்றறிவார் நாயனாரின் (1) பொன்வண்ணத்தந்தாதி (2) திருவாரூர் மும்மணிக்கோவை (3) திருக்கயிலாய ஞானவுலா, ஐயடிகள் காடவர்கோன் பாடிய க்ஷேத்திரத் திருவெண்பா ஆகியன சேக்கிழார்க்குத் துணைபுரிந்த நூற்களாம். இக்கருத்தையே பாராட்டிப் பேசுவர் சேக்கிழார் புராணம் பாடிய உமாபதி சிவாச்சாரியார்.[1]

மேலும் ''உலகெலாம்'' என்ற தொடக்கத்தையுடைய திருத்தொண்டர் புராணம் நாலடியான் நடந்தது உலகெல்லாம் என்று அவரே விளம்பினார்.[2]

---

1. சேக்கிழார் புராணம் - 81.
2. ,, ,, - 81.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவற்றோடு பழங்காலத் தமிழ்க் கல்வெட்டுக்கள், செப்பேடுகள், நாயன்மார்களின் சமகால, பிற்கால இலக்கியங்கள், ஓவியங்கள், சிற்பங்கள், உலக வழக்கிற் கேட்ட சரித வரலாறுகள் ஆகியனவும், சேக்கிழார்க்குத் துணைபுரிந்தன. இஃது இறைவனால் ஆரம்பித்துக் கொடுக்கப்பெற்ற தெய்வ நூலாயினமையின், ''இவை எல்லாவற்றிற்கும் மேலாக ஆசிரியர் அம்பலவர் திருவருள் வெளியிலே அத்துவிதமாய் நின்று, அருண்மயமான ஞானக் கண்ணிலே எல்லா உண்மைகளையும் அவனே காட்டக் கண்டு, அறிந்தபடி பாடினர். இப்புராணம் முழுதும் அருள் வாக்காகிய வேதம் என்பது முக்காலும் சத்தியமேயாம்''[1] என்றார் சி. கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள். ஆசிரியர் அறிந்தவாறே கூறினர் என்பதற்கு ஆசிரியரே "யானறிந்தபடி பகர்ந்தேன்",[2] ''அறிந்தபடி துதி செய்தேன்''[3] என்று கூறினார். வானிழல் உணர்த்தியவாறு உரைத்ததாகத் துணிந்து சேக்கிழார் மொழிந்தார்.[4]

உட்பிரிவுகள்

புராணத்தை முதற்காண்டமென்றும், இரண்டாங் காண்டம் என்றும் ஆக இரண்டு காண்டங்களாக ஆசிரியர் பிரித்துள்ளார். பதின்மூன்று சருக்கங்களாக வகுத்துள்ளார். நாலாயிரத்து இருநூற்று என்பத்தாறு (4286) திருவிருத்தப் பாடல்களால் முடித்து உள்ளார்.

ஆனால் சேக்கிழார் புராணத்தில் உமாபதி சிவாச்சாரியார், ''ஈண்டுரைத்த புராணத்தில் திருவிருத்தம் நாலாயிரத்து இருநூற்று ஐம்பத்து மூன்றாக அமைத்து''[5] என்றே கூறியுள்ளார். ஆறுமுக நாவலர் பதிப்பு (1951), திரு.வி.க. பதிப்பு (1934), சமாஜப் பதிப்பு (1950), ஸ்ரீ வைகுண்டம், ஸ்ரீ குமரகுருபரன் சங்கத்தாரால் வெளியிடப்பெற்ற காசிமடத்துப் பதிப்பு (1970) ஆகியவற்றுள்

---

1. திருத்தொண்டர் புராண உரை-முதற்பகுதி-பக். 79; சி. கே. சுப்பிரமணிய முதலியார்.
2. திருநாவுக்கரசு நாயனார் புராணம்-429.
3. திருஞானசம்பந்தர் புராணம்-1256.
4. பாயிரம்-೨.
5. சேக்கிழார் புராணம்-53.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

4286 பாடல்களே உள. 4286 பாடல்கள் எனக் கொண்டால் 33 பாடல்கள் இடைச்செருகல் என்பது தெரிகின்றது. ஒருவரே யன்றிப் பலர் இச்செயலைப்புரிந்திருக்கலாம். பிற்காலத்திலிருந்த, தருமபுர ஆதீன முனிவர்களில் ஒருவரான வெள்ளியம்பலத் தம்பிரான் என்பவர் மீதே இடைச்செருகலாகப் புரிந்த குற்றம் பொதுவகையாகச் சுமத்தப்பெற்றது. எனவே இவற்றை வெள்ளிப் பாடல் என்றனர்.[1]

சருக்கம்

சேக்கிழார், தாம் பிரித்துக் கொண்ட ஒவ்வொரு பிரிவுக்கும் (சருக்கத்திற்கும்) திருத்தொண்டத்தொகையின் ஒவ்வொரு பாடலின் ஆரம்பத்தினையே பெயராகக் கொண்டார்.

	பாடலின் தொடக்கம்	சருக்கத்தின் பெயர்
1.	தில்லைவாழ் அந்தணர்தம்	''தில்லைவாழ் அந்தணர் சருக்கம்''
2.	இலைமலிந்த வேல்நம்பி	''இலைமலிந்த சருக்கம்''
3.	மும்மையால் உலகாண்ட	''மும்மையால் உலகாண்ட சருக்கம்''
4.	திருநின்ற செம்மையே	''திருநின்ற சருக்கம்''
5.	வம்பறா வரிவண்டு	''வம்பறா வரிவண்டுச் சருக்கம்''
6.	வார்கொண்ட வனமுலை யாள்	''வார்கொண்ட வனமுலையாள் சருக்கம்''
7.	பொய்யடிமை இல்லாத புலவர்க்கும்	''பொய்யடிமை இல்லாத புலவர் சருக்கம்''
8.	கறைக்கண்டன் கழலடியே	''கறைக்கண்டன் சருக்கம்''
9.	கடல் சூழ்ந்த உலகெலாம்	''கடல் சூழ்ந்த சருக்கம்''
10.	பத்தராய்ப் பணிவார்கள்	''பத்தராய்ப் பணிவார் சருக்கம்''
11.	மன்னியசீர் மறைநாவன்	''மன்னியசீர்ச் சருக்கம்''

இத்தகைய அமைப்பு முறையினையே சேக்கிழார் கொண்டார்.

---

1. சேக்கிழார் பக். 223-சி.கே. சுப்பிரமணிய முதலியார்;

3

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருத்தொண்டத் தொகையுள் சுந்தரர் பதினொரு பாடல்களைப் பாடியுள்ளார். அவற்றிற்கேற்ப சேக்கிழார் தம் புராணத்துள் பதினொரு சருக்கங்களை இடையிலே அமைத்து, சுந்தரருடைய முன் பிறப்பு, மண்ணுலகில் வந்த பிறப்பு ஆகிய வரலாற்றினைத் திருமலைச் சருக்கமாக முதலிலும், மீண்டும் அவர் கயிலைக்குச் சென்றதனை வெள்ளானைச் சருக்கமாக இறுதியிலும் அமைத்துப் பதின்மூன்று சருக்கங்களாகக் கூறி நிறைவு செய்துள்ளார். திருத்தொண்டத் தொகையுள் பாடப்பெற்ற பதினொன்றாவது பாடலுக்கேற்ப பெரியபுராணத்துள் அமைத்துக் கொண்ட பன்னிரண்டாவது மன்னிய சீர்ச் சருக்கத்தில் மட்டும் சேக்கிழார் மாறுபட்டார். காரணம் திருத்தொண்டத்தொகையினை ஒட்டி நம்பியாண்டார் நம்பியால் பாடப்பெற்ற திருத்தொண்டர் திருவந்தாதியினைச் சேக்கிழார் பின்பற்றியமையேயாகும். நம்பியாண்டார் நம்பி புதிதாகச் சில அடியாரை நாயன்மாராகச் சேர்த்துள்ளார்.

''சுந்தரர் பாடிய நாயனார் தொகை அறுபது. நம்பியாண்டார் நம்பி சுந்தரரையும், சடையன் இசைஞானி காதலன் திருநாவலூர்க் கோன் ஆரூரன் என்றவிடத்துக் குறிப்பிடப்பட்டுள்ள அவர்தம் தந்தை, தாயாராகிய சடைய நாயனாரையும், இசைஞானியாரையும் சேர்த்து அறுபத்து மூவர் ஆக்கினார். இதுவே நாயனார் அறுபத்து மூவர் என்ற எண் அமைந்ததற்குக் காரணம்''.[1]

மேற்கண்ட இரண்டு நூல்களை ஒட்டியே சேக்கிழாரும், தனியடியார் அறுபத்து மூவரையும் தொகையடியார் ஒன்பதின்மரையும் தம் புராணத்துள் பாடியுள்ளார். கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார் தம் ''திருத்தொண்டர் புராண சார''த்துள் சேக்கிழாரைப் பின்பற்றி எழுபத்திரண்டு பேர்களின் வரலாறுகளைச் சுருக்கமாகக் கூறியுள்ளார்.

நாயன்மார்களின் வரலாற்றைப் பாடப் புகுங்கால்,

''தம்பிரான் தோழரவர் தாம்மொழிந்த தமிழ்முறையே
எம்பிரான் தமர்கள்திருத் தொண்டேத்தல் உறுகின்றேன்''[2]

---

1. தமிழ் இலக்கிய வரலாறு, 12 ஆம் நூற்றாண்டு-பக். 155-156;- மு. அருணாசலம்.
2. தடுத்தாட்கொண்ட புராணம் - 203.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என நாயன்மார்களின் திருத்தொண்டினை ஏத்திக் கூறப் போவதாகக் கூறினார் சேக்கிழார். ஆனால் முதலாவது திருமலைச் சருக்கத்தையும் இறுதி பதின்மூன்றாவது வெள்ளானைச் சருக்கத்தையும் தாமே அமைத்தார். அச்சருக்கங்களில் வந்துள்ள நிகழ்ச்சிகளுக்கேற்பப் பெயர்களை அமைத்துள்ளார். பெயர்களுக்கும் நிகழ்ச்சிகளுக்கும் பொருத்தம் இருக்கின்றது. ஆலாலசுந்தரர் திருமலையிலிருந்து மண்ணுலகில் நம்பியாரூரராகப் பிறந்ததைக் கூறுகின்றமையின் திருமலைச் சருக்கம் என்றும், நம்பியாரூரர் மண்ணுலகில் சிறப்புடன் வாழ்ந்து மீண்டும் வெள்ளானையில் திருமலை சென்று ஆலால சுந்தரராக ஆகின்றமையின் வெள்ளானைச் சருக்கம் என்றும் சேக்கிழார் பெயர் கொடுத்தார். சுந்தரர் கூறாததைச் சேக்கிழார் கூறினமையின் இங்ஙனம் பொருத்தத்தை அமைத்தார். ஆனால் நாயன்மார் வைப்புமுறையில் பொருத்தம் அமையவில்லை. சேக்கிழார் திருத்தொண்டத் தொகையையும் திருத்தொண்டர் திருவந்தாதியையும் ஒட்டிப் பாடினமையின் நாயன்மார் வைப்புமுறையில் தொடர்பின்றி இருக்கின்றனர். சான்றுக்குச் சிலரைக் காண்போம். திருநாவுக்கரசர், சம்பந்தர் சம காலத்தவர்; நெருங்கிய தொடர்புடையவர். திருநாவுக்கரசரை அறியா முன்னம் அப்பூதியடிகள் அவர்பால் அன்பு கொண்டவர். தம் இல்லத்திற்கு அவர் வந்தபொழுது விருந்து வைத்துச் சிறப்புச் செய்தவர். திருஞானசம்பந்தர் சென்ற இடமெல்லாம் உடன் சென்று அவர் பாடியதைத் தம் யாழில் இசைத்தவர் திருநீலகண்ட யாழ்ப்பாணர். அமைச்சர் குலச்சிறையாரும் அரசி மங்கையர்க்கரசியாரும் ஒன்றுபட்டுச் சமணத்தின் பிடியில் சிக்கிய சைவத்தை மீட்டுப் பாண்டி நாட்டில் மீண்டும் சைவத்தை தழைக்கச் செய்தவர். இவர்களையெல்லாம் சேக்கிழார் தொடர்ச்சியாகத் தம் புராணத்துள் அடுத்தடுத்து வைக்காது வெவ்வேறிடங்களில் வைத்த காரணம் என்னையோவெனின் திருத்தொண்டத் தொகையில் தம்பிரான் தோழரவர் மொழிந்த தமிழ் முறையினை ஒட்டியே அவர் பாடியதாகும்.

சடைய நாயனாரையும், இசைஞானியாரையும் திருத்தொண்டர் திருவந்தாதியையொட்டித் தம் புராணத்துள் அடுத்தடுத்து வைத்தார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காண்டம்

புராணத்தை இரண்டு காண்டங்களாகப் பகுத்துக் கொண்டமைக்குப் பொருத்தம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. சருக்கங்களுக்குப் பெயர் கொடுத்ததைப் போன்று காண்டங்களுக்குப் பெயர் கொடுக்கவில்லை. மற்றக் காவியங்களில் பெயர்களையே காண்டங்களின் தலைப்புக்களாகக் கொடுத்தனர் அவ்வாசிரியர்கள். இப் புராணத்துள் முதற்காண்டமென்றும், இரண்டாங் காண்டமென்றும் எண்களையே பெயராகக் கொடுத்தார் இவ்வாசிரியர் சேக்கிழார். சருக்கங்களுக்குப் பெயர் கொடுப்பதற்குத் திருத்தொண்டத் தொகையுள் பாடலின் ஆரம்பமே குறிப்பாக இருந்ததைப் போன்று, காண்டங்களுக்குப் பெயர் கொடுப்பதற்குத் திருத்தொண்டத் தொகையுள் வேறு குறிப்புக்கள் சேக்கிழாருக்குக் கிடைக்கவில்லை. திருத்தொண்டத் தொகையை ஒட்டி, மாறாமல் சேக்கிழார் பாடிச் சென்றமையின் தொகையுள் இல்லாத வேறு பெயர்களைக் காண்டப் பெயர்களாக வழங்க சேக்கிழார் விரும்பவில்லை போலும்: எனவே தான் பொதுவாகப் புராணத்தைக் காண்டமாகப் பிரிக்க எண்ணிய சேக்கிழார் முதற்காண்டமென்றும், இரண்டாங் காண்டமென்றும் எண்களையே பெயராகக் கொடுத்திருக்கலாம்.

அமைப்பு முறையில் புராணத்தை இரண்டு காண்டங்களாகப் பிரித்துக் கொண்டதற்கு அகச்சான்று இல்லை. பின்னர் இரண்டு காண்டங்கள் எங்ஙனம் அமைந்தன? நம்பியாரூரர் பாடிய திருத்தொண்டத் தொகையுள் பாடப்பெற்ற நாயன்மார்களுள் தலையாயவர் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர். இவர் பாடியன ஆறு திருமுறைகள். முதலிலிருந்து திருநாவுக்கரசரைப் பற்றிப் பாடிய பதிகம் வரையிலும் உள்ள நாயன்மார் புராணத்தினை முதற் காண்டமாகவும், திருஞானசம்பந்தரைப் பற்றிப் பாடிய பதிகத்திலிருந்து இறுதி வரை உள்ள நாயன்மார் புராணத்தினை இரண்டாங் காண்டமாகவும் சேக்கிழார் அமைத்திருக்க வேண்டும். இரண்டு ஓலைச்சுவடிகளாக இவற்றைப் பிரித்துக் கட்டியிருக்க வேண்டும். புராணத்தின் முற்பகுதியைக் கொண்ட முதல் கட்டுக்கு முதற்காண்டமென்றும், பிற்பகுதியைக் கொண்ட இரண்டாங் கட்டுக்கு இரண்டாங் காண்டமென்றும் பெயர்கள் வழங்கியிருக்க வேண்டும். பெரியபுராணத்துள் ஒரு நாயன்மாரைப் பார்க்கப் புரட்டுங்கால் திருநாவுக்கரசருக்கு முன்பா? திருஞானசம்பந்தருக்குப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பின்பா ? என்றுதான் பார்க்கின்றோம். நாயன்மார்களுடைய காலத்தைக் கணிக்குங்கால் இவ்விருவர்க்கும் முற்பட்டவர், சம காலத்தவர், பிற்பட்டவர் என்றுதான் கணித்தனர்.[1] சைவம் வாழ, தழைக்க அரிய பெரிய பல தொண்டுகளை ஆற்றியவர் இவர்களே யாம். எனவேதான் சேக்கிழார் இவ்விருவரையும் காண்டத்திற்கு எல்லையாக வைத்துக் கொண்டிருக்க வேண்டும். இதற்கு சி. கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள், ''உலகெலாம்'' என்றிறைவர் எடுத்துக் கொடுத்தருளிய முதலை இப்புராணத்தினுள் முதலிடை கடை என்னும் மூன்றிடங்களில் வைத்துப் போற்றும் வகையினுள் நடுவின்கண் வைத்துப் பதிக்கும் இடம் அதுவாதலானும், வேத நெறி சைவ நெறி தழைக்க வந்தாரது புராணமாதலாலும், பிறவாற்றானும் ஆளுடைய பிள்ளையார் புராணந் தொடங்கி இரண்டாங் காண்டமென வகுக்கப் பட்டதாமென்க''[2]. என்று வேறு காரணமும் மொழிந்தார்.

திருத்தொண்டத் தொகையுள் முதல் நான்கு பாடல்களில் சொல்லப் பெற்ற நாயன்மார்களின் வரலாறுகளைச் சேக்கிழார் தம் புராணத்துள் முதற் காண்டமாக அமைத்துள்ளார். இவற்றோடு திருமலைச் சருக்கத்து நிகழ்ச்சிகளையும் சேர்த்துக் கொண்டார். திருமலைச் சருக்கத்திலிருந்து திருநின்ற சருக்கம் வரையிலும் உள்ள ஐந்து சருக்கங்கள் முதற் காண்டம். இதனுள் தில்லை வாழந்தணர் புராணத்திலிருந்து நமிநந்தியடிகள் நாயனார் புராணம் வரை இருபத்தேழு திருத்தொண்டர்களின் வரலாறுகள் மொழியப்பட்டு உள்ளன.

திருத்தொண்டத்தொகையுள் ஏனைய ஏழு பாடல்களில் கூறப் பெற்ற தனியடியார், தொகையடியார் வரலாறுகள் இரண்டாம் காண்டம். இவற்றோடு வெள்ளானைச் சருக்கத்து நிகழ்ச்சிகளையும் சேர்த்தார். வம்பறாவரிவண்டுச் சருக்கத்திலிருந்து வெள்ளானைச் சருக்கம் ஈறாக எட்டுச் சருக்கங்கள் இரண்டாங் காண்டம். திருஞான சம்பந்த சுவாமிகள் புராணத்திலிருந்து திருநீலகண்ட யாழ்ப்பாண

---

1. திருத்தொண்டர் புராணம் (உரைநடை) - பக். 17 - 18- வித்துவான் தி. பட்டுச்சாமி ஓதுவார்.
2. திருத்தொண்டர் புராண உரை—முதற்பகுதி - பக். 2. சி. கே. சுப்பிரமணிய முதலியார்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாயனார் புராணம் வரை நாற்பத்திரண்டு திருத்தொண்டர்களின் வரலாறுகள் திருத்தொண்டத் தொகையை ஒட்டி இயம்பப் பெற்றுள. இவற்றோடு நம்பியாண்டார் நம்பியால் நாயன்மார்களாகக் கருதப் பெற்று, நாயன்மார் வரலாற்று வரிசையில் இணைக்கப் பெற்ற சடைய நாயனார் புராணத்தையும், இசைஞானியார் புராணத்தையும் இரண்டாம் காண்டத்துள் சேர்த்துள்ளார். இவ்விரு நூலுள்ளும் கூறப்பெற்ற இரு நாயன்மார்களையும் சேர்த்து நாற்பத்து நான்கு நாயன்மார் ஆவர்.

திருத்தொண்டத் தொகை, அறுபத்தொன்பது அடியார்களையும் திருத்தொண்டர் திருவந்தாதி எழுபத்திரண்டு பேர்களையும் குறித் துள்ளன. திருத்தொண்டத் தொகையும், திருத்தொண்டர் திருவந் தாதியும் ஒன்பது தொகையடியார்களையும் கூறி மேலும் முறையே அறுபது தனியடியார்களையும், அறுபத்து மூன்று தனியடியார்களை யும் கூறின. சேக்கிழார் தம்புராணத்துள் இந்நாயன்மார் அத்துணை பேரையும் தனித்தனி வரலாறாகக் கூறிப் பதினொரு சருக்கங்களில் அமைத்துள்ளார். தில்லைவாழந்தணர் சருக்கத்திலிருந்து மன்னிய சீர் சருக்கம் வரை எழுபத்தொன்று நாயன்மார். திருமலைச்சருக்கம், வெள்ளானைச் சருக்கம் ஆகிய இரண்டு சருக்கங்களில் கூறப் படுகின்றவர் ஒருவர்; அவரே சுந்தரர். பெரியபுராணத்துள் காண்டம் இரண்டு, சருக்கம் பதின்மூன்றனுள் கூறப்பெற்ற தனியடியார், தொகையடியார் சேர்ந்து எழுபத்திரண்டு பேர்களாவர்.

சுந்தரர் துதி

சுந்தரர் திருத்தொண்டத் தொகைப் பாடல் ஒவ்வொன்றன் இறுதியிலும் மகுடமாக ''ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே'' என்று பாடியுள்ளார். அடியார்க்கு அடியானாகிய தான், ஆரூரில் எழுந்தருளியிருக்கும் அம்மானாகிய இறைவனுக்கும் அடிமைஎன்பது பொருளாகும். இத்துதியைத் தழுவியே சேக்கிழாரும் ஒவ்வொரு சருக்கத்தின் இறுதியிலும் சுந்தர மூர்த்தி சுவாமிகள் துதி ஒன்று அமைத்துள்ளார். நம்பியாண்டார் நம்பியும் தொகையை ஒட்டியே ஒவ்வொரு பாடலின் இறுதி நாயன்மாரை அடுத்துச் சுந்தரமூர்த்தி நாயனாரை வைத்துள்ளார்.[1] எல்லாச் சருக்கத்தின் இறுதியிலும்

1. திருத்தொண்டர் திருவந்தாதி - 8, 16, 23, 32, 40, 48, 57, 63, 69, 78, 86.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சுந்தரர் துதியை வைத்த சேக்கிழார் திருமலைச் சருக்கம், மன்னிய சீர்ச் சருக்கம் ஆகியவற்றின் இறுதியில் சுந்தர மூர்த்தி நாயனார் துதியை வைக்கவில்லை. திருமலைச் சருக்கத்துள் சுந்தரர் வரலாறு கூறப்பட்டமையின் இறுதியில் சுந்தரர் துதி இல்லை. வெள்ளானைச் சருக்கத்தில் சுந்தரர் திருக்கயிலை சென்றது பேசப்பட்டமையின் இதற்கு முன் சருக்கத்தின் இறுதியில் சுந்தரர் துதி இல்லை. மேலும் மன்னியசீர்ச் சருக்கத்தின் இறுதியில் சடைய நாயனார், இசை ஞானியார் ஆகியோர் புராணத்தினுள் நம்பியாரூரரைப் பற்றிய செய்தி கூறப்பட்டுளது. மன்னியசீர்ச் சருக்கத்திற்கு அடுத்தது வெள்ளானைச் சருக்கம். இடையில் மீண்டும் சுந்தரரைப் பாடுவது கூறியது கூறலாகும் எனச் சேக்கிழார் விட்டிருக்கலாம். மற்ற இடங்களில் சருக்கங்களின் முன்னோ பின்னோ மேற்குறித்த இரண்டிடங்களைப் போன்று சுந்தரர் வரலாறு இல்லை.

சுந்தரர் துதிப்பாடல்கள் அனைத்திலும் அவருடைய வாழ்க்கையில் நிகழ்ந்த முக்கிய நிகழ்ச்சிகள் இடம்பெற்றுள்ளன. ''சுந்தரருடைய வாழ்க்கை சுருக்கமாகவும் தொடர்ச்சியாகவும் சொல்லப் பட்டுள்ளது. இது தனிச்சிறப்புடையது'' என்பர் மு. அருணாசலம் அவர்கள்.[1]

''ஒவ்வொரு சருக்க முடிவிலும் சுந்தரரைப் பற்றிப் பாடிச் சென்றது பெரியபுராணம் ஒரு தொடர்நிலைச் செய்யுள் என்பதை வற்புறுத்துதற்கே என்பது தெளிவாகும்'' என்றனர் சி. கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள்.[2]

சுந்தரர் வரலாறு

சுந்தரர் வரலாறு முதலில் திருமலைச் சருக்கத்திலும் இடையில் ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம், கழறிற்றறிவார் நாயனார் புராணம் ஆகியவற்றிலும் கடையில் வெள்ளானைச் சருக்கத்திலும் விரிவாக இயம்பப் பெற்றுள்ளது. இடையிடையே வேறு வேறு நாயன்மார் வரலாறுகள் பேசப்பட்டுள்ளன. ஒவ்வொரு சருக்கத்தின்

---

1. தமிழ் இலக்கிய வரலாறு - 12ஆம் நூற்றாண்டு - பக். 162; மு. அருணாசலம்.
2. சேக்கிழார் - பக். 151 - 172 ; சி. கே. சிப்பிரமணிய முதலியார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இறுதியிலும் சுந்தரர் துதி வைக்கப் பெற்றுள்ளதால் பெரியபுராணம் முழுவதும் நம்பியாரூரர் சரிதமே விரவி நின்று ஆட்சி செய்துள்ளது.

''ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே'' என்று பாட்டுதோறும் விரவித் திருத்தொண்டத் தொகை முழுதும் நம்பிகளது சரிதம் பரந்தமையால் அதன் வழித்தாய் வந்த விரிநூலாகிய இப்புராணத்திலும் அவ்வாறே புராணம் முற்றும் அவர் சரிதம் விரவி நிறை வெய்துவதும் காண்க'' என்பார் சி. கே. சுப்பிரமணிய முதலியார்.[1]

சுந்தரரின் முன்பிறப்பு, மண்ணுலகில் பிறந்து இறைவனால் தடுத்தாட்கொள்ளப் பெற்றுப் பண்டை ஊழ்வினையால் பரவை யாரை மணத்தல், திருத்தொண்டத் தொகை பாடுதல் ஆகிய முன் நிகழ்ச்சிகளைச் சேக்கிழார் திருமலைச் சருக்கத்தில் அமைத்துள்ளார். இதோடு சுந்தரர் வரலாறு முடிவுறவில்லை. பல திருத்தலங்களுக்குச் சென்று இறைவனை வணங்கி உலகம் உய்யப் பதிகம் பாடி, திருவொற்றியூரிலே பண்டை விதியால் சங்கிலியாரை மணந்து ஏயர் கோன் கலிக்காம நாயனாரின் நட்பினைப் பெற்று வாழ்ந்து கொண்டிருத்தல் ஆகிய நிகழ்ச்சிகள் வரை ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணத்திலும், கழறிற்றறிவார் நாயனாரின் நட்புப் பெறுதலை அவருடைய புராணத்திலும் சேக்கிழார் கூறியுள்ளார். முதலை வாயினின்று பிள்ளை தருவித்துத் தந்து, இறைவன் ஆணையின்படி வெள்ளானையில் ஏறிக் கழறிற்றறிவாருடன் மீளத் திருக்கயிலை சேருதலை வெள்ளானைச் சருக்கத்தில் அமைத்து உள்ளார்.

இங்ஙனம் சுந்தரர் பிறப்பினை முதலில் திருமலைச் சருக்கத்திலும், வாழ்ந்த வாழ்க்கையினை இடையில் மற்ற நாயன்மார் புராணத்திலும், அவர் திருக்கயிலை சென்றதனை இறுதியில் வெள்ளானைச் சருக்கத்திலும் சேக்கிழார் சங்கிலித் தொடர் போன்று புராணத்தை அமைத்துள்ள முறை பாராட்டற்குரியது. முதலும் முடிவும் பொருத்தமுற அமைந்துள்ளது.

புராணம் கூறும் முறை

தொடர்புடைய இரண்டு நாயன்மார்களின் வரலாற்றினைக் கூறுங்கால், இருவரும் சேர்ந்து புரிந்த அற்புத நிகழ்ச்சிகளாக

1. திருந்தொண்டர் புராண உரை - முதற்பகுதி - பக். 427; சி. கே. சிப்பிரமணிய முதலியார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இருந்தபோதிலும் இவருடைய புராணத்திலும் அவற்றை விரிவாகக் கூறாது ஒருவருடைய புராணத்தில் சுருக்கியும் இன்னொருவருடைய புராணத்தில் பெருக்கியும் சேக்கிழார் கூறிச் சென்றுள்ளார்.

திருநாவுக்கரசு சுவாமிகள் புராணத்தில், அந்தணரின் மேம்பட்ட அப்பூதி அடிகளாரின் வரலாற்றினைச் சுருக்கமாக ஒன்பது விருத்தப் பாக்களில் பாடியுள்ளார்.[1] பின்னர் அப்பூதியடிகள் நாயனாரின் வரலாற்றை விரிவாகக் கூற இருப்பதால் இங்குச் சுருங்கக் கூறி உள்ளார், அங்கு நாற்பத்தைந்து விருத்தப் பாக்களால் அப்பூதி அடிகளாரின் சரிதத்தைப் பாடி நிறைவு செய்துள்ளார்.

மண்ணின்மிசை வான்பொய்த்து நதிகள் தப்பி மன்னுயிர்கள் பசியினால் வாடின, திருவீழிமிழலை என்னுந் திருப்பதியில் நாவுக்கரசரும் சம்பந்தரும் இறைவன் அளித்த படிக்காசு பெற்றுச் சிவநெறி சார்ந்தோர்க்கெல்லாம் உணவு படைத்து வாட்டம் போக்கினர். திருநாவுக்கரசர் புராணத்தில் இந்நிகழ்ச்சியினை எட்டுப் பாடல்களாலும்[2] திருஞானசம்பந்தர் புராணத்தில் பதினொரு பாடல்களாலும்[3] சேக்கிழார் பாடினார். விண்ணின்றிழிந்த விமானத்திற்குக் கிழக்கும் மேற்குமாக உள்ள பீடங்களில் கண்ணுதல் இறைவன் படிக்காசு நித்தம் வைத்தார். கிழக்கு உள்ளது சம்பந்தர்க்கும், மேற்கு உள்ளது நாவுக்கரசருக்கும் ஆகும். ''திருநாவுக்கரசர் மேற்குப் பீடத்தில் கண்டு எடுத்து அடியாரை ஊட்டிய வரலாறு அவர்தம் புராணத்தில் கூறினார். திருஞானசம்பந்தர் கிழக்குப் பீடத்தில் கண்டதும் கொண்டதும் சிவத்தொண்டர்க்கு ஊட்டியதும் இவர்தம் புராணத்தில் சேக்கிழார் கூறினார்'' என்று விளக்கக் கூறினார் சி. கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள்.[4]

---

1. திருத்தொண்டர் புராணம் - திருநாவுக்கரசு நாயனார் - 201 முதல் 209 வரை.
2. திருத்தொண்டர் புராணம் - திருநாவுக்கரசு நாயனார் - 255 முதல் 262 வரை.
3. திருத்தொண்டர் புராணம் - திருஞானசம்பந்த நாயனார் - 562 முதல் 572 வரை.
4. திருத்தொண்டர் புராண உரை-நான்காம் பகுதி - பக். 684; சி.கே.சுப்பிரமணிய முதலியார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருமறைக்காட்டில் திருக்கோயிலின் திருக்கதவு மூடியே கிடந்தது. திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும் இறைவனைப் பாடிக் கதவு திறக்குமாறும் பின் மூடிக் கொள்ளுமாறும் செய்தனர்; திருநாவுக்கரசர் பாடக் கதவு திறந்தது; சம்பந்தர் பாடக் கதவு மூடியது. திருக்கோயிலின் திருக்கதவு திறக்க, அடைக்க ஆகிய நிகழ்ச்சிகளைத் திருநாவுக்கரசர் புராணத்தும் திருஞானசம்பந்தர் புராணத்தும் பத்துப் பத்துப் பாடலாகச் சேக்கிழார் பாடியுள்ளார்.[1] கதவு திறத்தல் நிகழ்ச்சியினை மட்டும் நாவுக்கரசர் புராணத்தில் சிறப்புக் கருதி நான்கு பாடல்களாலும், சம்பந்தர் புராணத்தில் மூன்று பாடல்களாலும் ஆசிரியர் பாடினர்.[2] கதவு அடைத்தல் நிகழச்சியினைத் திருநாவுக்கரசர் புராணத்தில் திருஞானசம்பந்தர்க்குக் குறைத்தும், திருஞானசம்பந்தர் புராணத்தில் அவர்க்குரிய இடம் கருதி விரித்தும் கூறினர். இதேபோன்று கதவு திறத்தல் நிகழ்ச்சியினைத் திருஞானசம்பந்தர் புராணத்தில் திருநாவுக்கரசர்க்குக் குறைத்தும், திருநாவுக்கரசர் புராணத்தில் விரித்தும் சொல்லினர்.

''கதவு திறத்தலை விளக்கத் திருஞானசம்பந்தர் புராணத்தில் பாடப்பெற்ற மூன்று பாட்டுக்களின் வரலாறு, அரசுகளின் புராணத் தில் அத்தொடர்புக்கேற்ற பெற்றியாக நான்கு திருப்பாட்டுக்களிற் கூறப்பட்டது. ஆண்டு அரசுகளைப் பற்றிய மட்டில் அவரது நிகழ்ச்சியும் தேவாரமும் விரித்தும், பிள்ளையாரது நிகழ்ச்சிகளைச் சுருக்கியும் கூறியருளிய ஆசிரியர், ஈண்டுப் பிள்ளையாரது புராண மாதலின் இம்மூன்று பாட்டுக்களில் அவரது நிகழ்ச்சிகளை விரித்தும் அரசுகளைப் பற்றிய மட்டில் உள்ளதைச் சுருக்கியும் கூறும் கவிநயம் போற்றற்குரித்து'' எனச் சேக்கிழாரைப் பாராட்டினர்.[3]

---

1. திருநாவுக்கரசு நாயனார் புராணம் - 266 முதல் 275 வரை.

   திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 580 முதல் 589 வரை.

2. திருநாவுக்கரசு நாயனார் புராணம் - 266 முதல் 269 வரை.

   திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 580, 581, 582.

3. திருத்தொண்டர் புராண உரை - நான்காம் பகுதி - பக். 717; சி. கே. சுப்பிரமணிய முதலியார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தரைக் காண திருப்பூந்துருத்திக்கு எழுந்தருளினார். திருப்பூந்துருத்திக்கு அணித்தே திருஞானசம்பந்தரின் சிவிகையினைத் திருநாவுக்கரசர் விருப்பொடு சுமந்தார். இந் நிகழ்ச்சியினை இருவர் வரலாற்றிலும் இருவர்க்கும் ஒருவர் ஒருவர் மீது வைத்த அன்பு சமனாயினமையின் மூன்று, மூன்று பாடல்களால் சேக்கிழார் கூறினார்.[1]

திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் பாண்டிநாட்டுத் தல யாத்திரையைத் தனித்தனியாக மேற்கொண்டனர். திருநாவுக்கரசரின் தலயாத்திரையை அவர்தம் புராணத்தில் மதுரைக்குச் சென்றதை விரிவாகக் கூறவில்லை; திருஞானசம்பந்தரின் வரலாற்றில் விரிவாகக் கூறினமையின் அங்கு விட்டு விட்டார். இத்தோடு, இங்ஙனம் விரிவாகப் பேசப்பெறும் இத்தகு பெருமை மிகுந்த நாட்டில் சைவம் குன்றிச் சமணம் தழைக்கின்றதே என்பதைக் காட்டுவான் வேண்டிச் சம்பந்தர் வரலாற்றில் விரித்துக் கூறினர்.[2] இதே போன்று திருநாவுக்கரசர் புராணத்தில் கடலினின்றும் கரையேறிய பின் பாடலிபுத்திரத்திலிருந்து தில்லை வரை அவருடைய தல யாத்திரையை விரிவாகக் கூறினர்.[3] திருத்தலங்கள் பலவற்றைத் திருஞானசம்பந்தர் வணங்கிச் சென்றமையும், பாலை, நெய்தல், மருதம், முல்லை, குறிஞ்சி ஆகிய ஐந்து நிலங்களின் வழியாகச் சம்பந்தர் சென்றதை முறைப்படி வருணித்தும் சொல்லினார். திருப்பூந்துருத்தியிலிருந்து மதுரைக்கு நாவுக்கரசர் சென்றதை ஒரே பாடலில் சேக்கிழார் பாடி முடித்தார்.[4] அவர் சென்ற நிலத்தை வருணிக்கவில்லை!

உலகெலாம்

சுந்தரர் திருத்தொண்டத்தொகை பாடுவதற்கு இறைவனை வேண்ட, அவரும் பதிகத்தின் முதல் அடியாக ''தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்'' என்று எடுத்துக்

1. திருநாவுக்கரசு நாயனார் புராணம் - 395. 396, 397: சம்பந்தர் - 934, 935, 936.
2. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 619 - 630.
3. திருநாவுக்கரசு நாயனார் புராணர் - 134 - 161.
4. திருநாவுக்கரசு நாயனார் புராணம் - 402.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொடுத்தார்.[1] அடியார் பெருமையினைப் பாட முனைந்த சேக்கிழாரும் அவ்விறைவனை வேண்ட, அவரும் அசரீரி வாக்காக ''உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்'' என முதலடியெடுத்துக் கொடுத்தார்.[2].

''இவ் 'உலகெலாம்' என்பது சிறப்பாக நூலின் முதலிடை கடையிலும் பொதுவாக வேறு பலவிடங்களிலும் ஒளிர ஆசிரியர் அருளியிருத்தலை ஆராய்க. 'உலகெலாம்' 'உலகெலாம்' என்று அடிக்கடி ஓதி ஓதிப் பின்னே இடையறாது ஓத ஓத 'உலகெலாம்' என்பது 'உம்' என்று சுருங்க முழங்கும். உம், உம் என்று உள்ளே ஓதி, ஓதி ஒலிக்க உம், ஓம் என ஒலிக்கத் தொடங்கும். ஆகவே 'உலகெலாம்' என்பது 'ஓம்' என்னும் மூல ஒலியின் விரிவென்க''[3] என்பர் திரு.வி.க.

ஒரு நூல் மங்கலச் சொல்லோடு தொடங்கல் வேண்டும் என்பது ஆசிரியர்கள் பின்பற்றிவரும் மரபு. உலகு என்பது மங்கல மொழிகளுள் சிறந்தது. உலகில் எல்லாம் அடங்கலான் அது சிறந்ததாகிறது. இம்மொழியையே சேக்கிழார் தம் புராணத்தின் முதலாக, இறைவன் அடியெடுத்துக் கொடுக்க அமைத்தார்.[4]

இதோடு நிற்காது மேலும் சிறப்பித்து, ''திருஞானசம்பந்தர், முதல் திருமுறையைத் 'தோடுடைய செவியன்' என்று துவங்கினார். சேக்கிழார் பன்னிரண்டாந் திருமுறையை 'நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்' என்று முடித்தார். ''தோ'' என்பது தகர வித்தையோடு கூடிய ஓங்காரம். தகர வித்தையுடன் ''ஓ'' என்று திருஞானசம்பந்தர் துவங்கியதைச் சேக்கிழார் ''ம்'' என்று முடித்தது கருதற்பாலது. இந்நுட்பங்கண்ட ஆன்றோர், ''பன்னிரு திருமுறையும் ஓங்காரத்தின் பரிணாமம்'' என்று உலகுக்கு உணர்த்தினர் போலும்''[5] என்று விளக்கஞ் செய்தார். ''ஓம்''

1. திருத்தொண்டர் புராணம் - தடுத்தாட்கொண்ட புராணம்- - 199.
2. சேக்கிழார் புராணம் - 30, 31, 50.
3. திருத்தொண்டர் புராணம் - பாயிரம் - பக்: 15: திரு.வி.க. உரை.
4. சேக்கிழார் புராணம் - 31.
5. திருத்தொண்டர் புராணம்-திரு.வி.க. உரை; முன்னுரை- பக். V.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்ற பிரணவம் பன்னிரு திருமுறைகளிலும் விரவியிருக்கின்றது என எடுத்துக் காட்டும் அமைப்பு உன்னுந்தொறும் உவகை தருகின்றது.

இக்கருத்துக்கணிகலனாக, ''கடவுள் வாழ்த்துப் பாடலின் முதலடி, இரண்டாமடி, நான்காமடி இவற்றின் முதற்கண் முறையே உகரம், அகரம், மகரம் ஆகிய ''ஓம்'' எழுத்துறுப்புக் களை அமைத்திருத்தலறிக. ஓம் என்பது குருமுகத்தறிதற்குரிய பெருமறையாமாகலின் அதன் உறுப்புக்களை முறைபிறழ வைத்தா ரென்க. ஈற்றடியில் ''சிலம்பு'' ''வணங்குவாம்'' இவற்றின் முதற்கண் சிகர வகரங்கள் நிற்றலால் ஐந்தெழுத்து மாமறையும் அடங்கியிருத்தலுணர்க: நாயன்மார்கள் நானெறி நிற்றார் என்பதற்கு நாற்சீரடியானமையும் கலிவிருத்தம் எடுத்தாரெனவும், அவர்களில் தனியடியார் அறுபான் மூவரும் தொகையடியார் ஒன்பதின்மருமாக எழுபான் இருவர் உளரென்பது குறித்தற்குப் பதப்பிரிவு செய்து எண்ணிடின் எழுபானிரண்டு எழுத்துக்களா லாமாறு இயற்றினரெனவுங் கூறுவாருமுளர்''[1] என்றார் வா. மகாதேவமுதலியார்.

இனி ''உலகெலாம்'' எனத் துவங்கும் பாடலின் எழுத்து எண்ணிக்கையைக் காண்போம்.

''உலகு எலாம் உணர்ந்து ஓதற்கு அரிய(வ)ன் (19)
நிலவு உலாவிய நீர்மலி வேணியன் (15)
அலகுஇல் சோதியன் அம்பலத்து ஆடுவான் (19)
மலர்சி லம்புஅடி வாழ்த்தி வணங்குவாம்'' (19)

பதப்பிரிவு செய்த இப்பாடலில் நான்கு வரிகளிலும் ஒற்றுக்களுடன் சேர்ந்து எழுபத்து இரண்டு எழுத்துக்கள் அமைந்துள்ளன. இவை புராணத்துள் வந்துள்ள எழுபத்திரண்டு பேர்களைக் குறிப்பிட்டு உள்ளன. பாடலைப் பதப்பிரிவு செய்யாது, சொற்கள் புணர்ந்த நிலையில் வைத்துப் பார்க்கின் அறுபத்து மூன்று எழுத்துக்கள் அமைந்துள்ளதைக் காணலாம்.

---

1. பெரியபுராண ஆராய்ச்சி - பக். 22; வா. மகாதேவ முதலியார்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''உலகெ லாமுணர்ந் தோதற் கரியவ (15)
னிலவு லாவிய நீர்மலி வேணிய (13)
னலகில் சோதிய னம்பலத் தாடுவான் (16)
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்''[1] (18)

நான்கு வரிகளிலும் சேர்ந்து அறுபத்திரண்டு எழுத்துக்கள் அமைந்து உள்ளன. ''கரியவ'' ''வேணிய'' என்ற இரண்டனுள் ஒன்றனில் ''ன''கர ஒற்றைச் சேர்த்துக் கணக்கிடின் அறுபத்து மூன்று எழுத்துக்கள் வந்துள்ளன. இவை அறுபத்து மூன்று நாயன்மார் களைக் குறிப்பிட்டன. இன்னுஞ் சிலர் ''கரியவன்'' என்பதில் ஒற்றைச் சேர்த்து விட்டு ''வேணியன்'' ''சோதியன்'' என்பவற்றில் ஒற்றை நீக்கி விடுவதும் உண்டு.[2] இறைவன் எடுத்துக்கொடுத்த பாடல் என்பதற்கு இத்தகைய அமைப்பே சாலும்.

புராணத்துள் ''உலகெலாம்'' என்ற சொல் பதினேழு இடங் களில் வந்துள்ளது.[3] இத்தனை இடங்களில் வந்தபோதும் சிறப்புக்

1. திருத்தொண்டர் புராணம்-ஆறுமுக நாவலர் பதிப்பு (1951)
2. பெரியபுராணச் சொற்பொழிவுகள் - பக். 338 ந. ரா. முருகவேள்.
3. (1) பாயிரம்-1.
   (2) தில்லைவாழந்தணர் புராணம்-7.
   (3) இளையான்குடி மாற நாயனார் புராணம்-15.
   (4) மானக்கஞ்சாற நாயனார் புராணம்-36.
   (5) திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணம்-48.
   (6) திருநாவுக்கரசு நாயனார் புராணம்-371.
   (7) காரைக்காலம்மையார் புராணம்-51.
   (8) திருநீலநக்க நாயனார் புராணம்-1.
   (9) திருஞானசம்பந்த நாயனார் புராணம்-216.
   (10) ,, -643.
   (11) ,, -859.
   (12) ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்-88.
   (13) அதிபத்த நாயனார் புராணம்-16.
   (14) திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் புராணம்-7.
   (15) வெள்ளானைச் சருக்கம்-40.
   (16) வெள்ளானைச் சருக்கம்-53.
   (17) தடுத்தாட்கொண்ட புராணம்-74ல் மட்டும் 'உலகெல்லாம்'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கருதி முதலிடை கடை ஆகிய மூன்றிடங்களில் வந்துளது என்று கூறுவர்.

''இனி, சேக்கிழார் பாடிய பாடல் 4253 என்று உமாபதி செய்த புராணத்தில் எண்ணிச் சொல்லப்பட்டுள்ளது. அதன்படி நூலின் மத்தி என்று சொல்லத் தக்கது 2126ம் பாடல். 2119 ஆம் பாடலில் சேக்கிழார் அதே உலகெலாம் என்ற தொடரை வைத்துப் பாடியிருக்கிறார். இதை மத்தி எனக் கொள்ளலாம். இம்மத்தியைக் கொண்ட திருஞானசம்பந்தர் புராணத்தில்,

''சோதி முத்தின் சிவிகைசூழ் வந்துபார்
மீது தாழ்ந்துவெண் ணீற்றொளி போற்றிநின்(று)
ஆதி யார்அரு ளாதலின் அஞ்செழுத்
தோதி ஏறினார் உய்ய உலகெலாம்'' (216 ஆம் பாடல்)

என்ற பாடலில் உலகெலாம் என்ற தொடரை இறுதியில் அமைத்துள்ளார். இங்ஙனம் இறைவன் தந்த தொடரை நூலின் ஆதியும் நடுவும் அந்தமுமாக வைத்துப் பாடினார்'' என்று கூறினார் மு. அருணாசலம் அவர்கள்.[1]

நூற்பெயர் :

ஆசிரியர் இதற்கு இட்ட பெயர் திருத்தொண்டர் புராணம் என்பது.[2] உமாபதி சிவாச்சாரியாரும் இதற்குத் திருத்தொண்டர் புராணமெனப் பெயரிட்டனர் என்றே கூறியுள்ளார்.[3] இறைவனுக்கும், இறைவனுடைய அடியார்களுக்கும் மெய்யானும், உள்ளத்தானும் திருத்தொண்டு செய்கின்றவர் திருத்தொண்டர் ஆவர். திருமேனிமேல் வெண்ணீற்றுப் பூச்சினர். அதைப்போன்றே உள்ளப் புனிதர்[4]. அதைப்போன்றே தன்மையுடைய சிவத்தொண்டர்களின் பெருமையினையே சேக்கிழார் பாடினர்.

''புராணம் என்பது, பழமையுடையது என்பவாகலின், ஈண்டு அச்சொல் 'பழைய கதை' என்னும் பொருட்டாய் நூற்குப்

1. தமிழ் இலக்கிய வரலாறு - 12ஆம் நூற்றாண்டு - பக். 191; மு. அருணாசலம்.
2. திருத்தொண்டர் புராணம் - பாயிரம் 10.
3. சேக்கிழார் புராணம் - பாடல் 53.
4. திருக்கூட்டச் சிறப்பு - 6.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெயராயிற்றென்க''[1] என்றார் வா. மகாதேவ முதலியார். பழங் காலத்தில் வாழ்ந்து மறைந்த சிவனேசச் சீலர்கள் இறைவனுக்கும் அடியார்களாகிய சிவத்தொண்டர்களுக்கும் திருத்தொண்டு புரிந்த வரலாற்றினைக் கூறுகின்றமையின் திருத்தொண்டர் புராணம் எனப் பெயர் கொடுத்தார். திருத்தொண்டர்களின் பெருமையினைக் கூற வந்த திருத்தொண்டத்தொகை, திருத்தொண்டர் திருவந்தாதியை ஒட்டியே சேக்கிழாரும் பாடினமையின் அப்பெயர் களுக்கேற்ப தம் நூலுக்கும் திருத்தொண்டர் புராணம் எனப் பெயர் கொடுத்திருக்கலாம்.

இன்று வழக்காற்றில் மிகுதியாக வழங்கப் பெறும் பெயர் ''பெரிய புராணம்'' என்பதே. சேக்கிழார் இப்பெயர் வழங்கினார் என்பதற்கு அவருடைய நூலின்கண் சான்று இல்லை. ஆனால் உமாபதி சிவாச்சாரியார் தம் சேக்கிழார் புராணத்துள், ''பெரிய புராணங் கேட்ட வளவர்பிரான்'' என இப்பெயரையே வழங்கினார்.[2]. இதனால் அவர் காலத்திலேயே பெரியபுராணம் எனும் பெயர் வழக்கில் வந்துள்ளது என்பது தெரிகின்றது. ஆயின் பெரியபுராணத்துள் எங்கேனும் இப்பெயர் வழங்க குறிப்பு உண்டோ எனின் உண்டு. புராணத்தைத் தொடங்குங்கால் ஆசிரியர் ''எடுக்குமாக்கதை இன்றமிழ்ச் செய்யுளாய்'' என்றருளினரர்.[3] இத்தொடரை மா – பெரிய, கதை – புராணம் எனப் பின்னர் வந்தவர் பொருள் கொண்டு, ''பெரியபுராணம்'' எனப் பெயரை வைத்திருக்க வேண்டும். ''இப்பெயரைக் கொண்டு நூலை நோக்கினும் நூலின் சிறப்பு விளங்கும். 4286 பாடல் களைக் கொண்டு நூல் பெரிதாக விளங்குகின்றதெனின் பெரிய புராணம் எனப் பெயர் அமைந்தது எனக் கூறலும் ஒவ்வாது. இதைவிடப் பாடல்களின் எண்ணிக்கையில் அதிகமான நூல்கள் உள. பெரிய என்னும் அடைமொழி தன்மையை உணர்த்தும் என்றலே சிறப்பதன்றி அளவினை உணர்த்தும் என்றால் சிறவாது'' என்றார் திரு.வி.க. அவர்கள்.[4] மேலும் விளக்குவான்

1. பெரியபுராண ஆராய்ச்சி - பக். 11; வா. மகாதேவ முதலியார்.
2. சேக்கிழார் புராணம் - 84.
3. திருத்தொண்டர் புராணம் - பாயிரம் 3.
4. திருத்தொண்டர் புராணம் - பக். 36; திரு. வி. க. உரை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வேண்டி, ''பெரியபுராணம் – பெருமையையுடைய புராணம். எவர் பெருமையை திருத்தொண்டர் பெருமையை என்க. பெரியர் புராணம் எனக் கொள்வோருமுளர். பெரியர் - திருத்தொண்டர், பெரிய புராணமென்னுந் திருத்தொண்டர் புராணமென்றும், திருத் தொண்டர் புராணமென்னும் பெரியபுராணமென்றும் இக்காவியம் வழங்கப்படுகின்றது''[1] எனக் கூறினர் திரு. வி. க. அவர்கள்.

செயற்கரும் செயல்களைச் செய்தவரைப் பெரியர் என்று கூறுவர். பெரியபுராணத்துள் வந்துள்ள திருத்தொண்டர்கள் கற்பனையிலும், கனவிலும் காணவியலாத அரிய பெரிய செயல்களைப் புரிந்த ஆன்றவிந்தடங்கிய ஆன்மீகச் செம்மல்கள். இத்தகைய செந்நெறிச் செயல் வீரர்களை, ''செயற்கரிய செய்வார் பெரியர்''[2] என்றார் திருவள்ளுவர். ''பேச ஒண்ணாப் பெருமை பிறங்கினார்[3] என்றார் சேக்கிழார். எனவே பெரியார்களைப் பற்றிய வரலாறு கூறின புராணமாதலின் இதற்குப் பெரியபுராணம் எனப் பெயர் அமைந் திருக்கலாம்.

நூலாசிரியர்

நூலின் பெயருக்கு அகச்சான்று கிடைத்ததைப் போன்று நூலாசிரியரின் பெயருக்கு அகச்சான்று நமக்குக் கிடைக்கவில்லை. ''சேக்கிழார் புராணத்தில்'' தான் திருத்தொண்டர் புராணக் கதையை உலகறிய விரித்துரைத்தவர் ''செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழார்'' என்று அறிந்தோம்.[4] அவருடைய வரலாற்றையும் தெரிந்து கொண்டோம்.

''தொண்டை நாட்டு இருபத்து நான்கு கோட்டங்களுள் ஒன்றாகிய புலியூர்க் கோட்டத்தில் குன்றை வளநாட்டுக் குன்றத் தூரில் சேக்கிழார் திருமரபு சிறந்திருந்தது. இச்சேக்கிழார் குடியில் வேளாளர் மரபில் இந்தத் தேசம் உய்ய அருள்மொழித்தேவர் அவதாரம் செய்தார். அவருடைய தம்பி பாலறாவாயர் என்பது.

---

1. திருத்தொண்டர் புராணம் - பக். 36; திரு. வி. க. உரை.
2. திருக்குறள் - 26.
3. திருத்தொண்டர் புராணம் - திருக்கூட்டச் சிறப்பு : 6.
4. சேக்கிழார் புராணம் - 7.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அருள்மொழித்தேவர் தம் செயற்கருஞ் செயல்களால் தமது குடியை விளக்கஞ் செய்தமையால் அக்குடிப் பெயராகிய சேக்கிழார் என்னும் பெயராலேயே வழங்கப் பெற்றார்.

சேக்கிழாரின் பெரும்புலமையைக் கேள்வியுற்ற அநபாய சோழ மன்னன் அவரைச் செங்கோலோச்சும் தலைமை அமைச்சராகக் கொண்டு ''உத்தம சோழப் பல்லவன்'' எனும் பட்டத்தை அவருக்கு நல்கிச் சீர் செய்தான். தம் பதி குன்றத்தூரில், தாம் வழிபட்டு வந்த சோழநாட்டுத் திருநாகேச்சுரத்தில் உள்ள சிவன் கோவிலைப் போன்று ஒன்று அமைத்து அதற்குத் ''திருநாகேச்சரம்'' என்ற திருப்பேர் சாற்றி மகிழ்ந்தார்.

அவகதையாகிய சீவகசிந்தாமணியை மன்னன் படிக்கக் கேட்டு வாணாளை வீணாளாக்குகின்றான் என்பதற்காகச் சிவகதையாகிய திருத்தொண்டர் புராணத்தைச் சேக்கிழார் பாடினார் என்று சேக்கிழார் புராணம் கூறுகின்றது.[1] ''இக்கூற்றுக்குச் சேக்கிழார் மொழியாகிய பெரியபுராணத்தில் சான்றில்லை. இடைக்காலத்தில் சமணரென்று நடித்தவர்களின் புன்மைச் செயல்களைச் சேக்கிழார் கடிந்திருத்தலைக் கண்டு 'சீவகசிந்தாமணி மீது காழ்ப்புக் கொண்டு சேக்கிழார் பெரியபுராணம் பாடினார்'' என்ற கதை, பின்வந்தவரால் புனையப்பட்டிருக்கலாம். பெரியபுராணத்தையும், சீவகசிந்தாமணியையும் நடுநிலை நின்று ஆராய்வோர், சேக்கிழார் சீவகசிந்தாமணிச் செம்மொழியை ''முன்னோர் மொழி பொருளாகக்'' கொண்டவர் என்னும் முடிவுக்கு வருதல் ஒரு தலை. ஆகவே சேக்கிழார் சிந்தாமணிக்கு மாறாகப் பெரியபுராணம் பாடப் புகுந்த வரல்லர் என்று கொள்க. சேக்கிழாரின் தமிழ் அன்பும், திருமுறை நேயமும், அடியவர் பத்தியும், இன்ன பிறவும் அவரைப் பெரிய புராணம் பாடச் செய்தன என்று கொள்வது சிறப்பு''[2] என்பர் திரு.வி க.

நம்பியாரூரரின் திருத்தொண்டத்தொகை, நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதி ஆகியவற்றை விரிவாகக்

1. சேக்கிழார் புராணம் - 20-28.
2. திருத்தொண்டர் புராணம் - பக் VI-முன்னுரை : திரு வி.க. உரை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கேட்ட அநபாய சோழன் சேக்கிழாரை நோக்கி, ''பெருங்காவியமாய் விரித்துச் செய்து தருவீர்'' என வேண்டினன். அநபாயன் வேண்டு கோட்கிணங்கிச் சேக்கிழார் தில்லை சென்று சிவத்தொண்டர்களின் வரலாற்றை அம்பலத்தாடுவான் ''உலகெலாம்'' என்று அடி யெடுத்துக் கொடுக்கத் திருத்தொண்டர் புராணமாக அருளிச் செய்தார். சேக்கிழாருக்கு ''தொண்டர்சீர் பரவுவார்'' என்ற பட்டப் பெயரளித்துச் சோழன் வணங்கினான். திருத்தொண்டர் புராணத்தைப் பன்னிரண்டாந் திருமுறையாக வகுத்துச் செப்பேடு செய்து நடராசர் சந்நிதியில் ஏற்றினார். அவருடைய திருத்தம்பி பாலறாவாயரை அழைத்துத் ''தொண்டைமான்'' என்ற பட்டமும் அளித்து அமைச்சராக ஏற்றுக் கொண்டார். இதற்குப்பின் சேக்கிழார் பெருமான் தில்லைநகரிலே இருந்து அறுபத்து மூவர் வரலாறுகளை நினைத்து நினைத்து மகிழ்ந்து அம்பலவனின் நிழல் எய்தினார்.

காலம்

சேக்கிழார் காலத்தைப் பற்பலர் பற்பலவிதமாகக் கூறிச் சென்றனர். திரு.வி.கலியாணசுந்தரனார் அவர்கள், ''சிலர் பதி னொரோம் நூற்றாண்டின் இறுதி என்றும் வேறு சிலர் பன்னிரண்டாம் நூற்றாண்டின் தொடக்கம் என்றும், இன்னுஞ் சிலர் பன்னிரண்டாம் நூற்றாண்டின் நடு என்றும் கூறுப. இது காறும் வெளிப்போந்துள்ள ஆராய்ச்சிகளான், சேக்கிழார் காலத்தை அறுதியிட்டுக் கூறுதற்குரிய சான்றுகள் போதிய அளவு கிடைக்க வில்லை என்பது விளங்குகின்றது'' என்று குறித்துள்ளனர்.[1] அவரும் காலத்தைக் குறிக்காது போந்தார். வா. மகாதேவ முதலியார், ''ஆசிரியர் காலம் சற்றேறக் குறைய கி.பி. 1070 எனக் கொள்க'' என்றுர்.[2]

திருத்தொண்டர் புராணம் பாடுவதற்குக் காரணமாய் இருந்தவன் சோழமன்னன் என்று சேக்கிழார் புராணம் கூறி யுள்ளது. இம்மன்னனைச் சேக்கிழார், தம் புராணத்துள் பத்து

1. திருத்தொண்டர் புராண உரை - முன்னுரை : பக். VI&VII; திரு.வி.க.
2. பெரியபுராண ஆராய்ச்சி - பக். 18; வா. மகாதேவ முதலியார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இடங்களில் பாராட்டியுள்ளார்.[1] இப்பத்து இடங்களிலும் ''அநபாயன்'' என்றே விளித்தார். இது சிறப்புப் பெயர். எனவே தான் சேக்கிழார் இத்தனை இடங்களிலும் குறித்துள்ளார். எந்தச் சோழ மன்னனுக்குச் சிறப்புப் பெயர்? பெரியபுராண ஆசிரியரே ஐயத்திற்கு இடமின்றி இப்பெயர் குலோத்துங்கச் சோழனைக் குறிக்கும் என்பதாகப் பாடல் புனைந்துள்ளார்.[2] அநபாயரது அன்பின்றிறத்தை ஆசிரியர் புராணத்தினுள் வைத்துப் பாராட்டிய பத்து இடங்களுள் இது சிறந்த இடமாகும். இப்பாடலுள் அபயன், அநபாயன், குலோத்துங்கன் என்று சுட்டப்படுகின்றான். குலோத்துங்கன் என்று வழங்கப்பெறும் பலருள்ளும், தில்லைத் திரு வெல்லையைப் பொன்மயமாக்கின குலோத்துங்கன் என்ற செய்தியும் கிடைக்கின்றது.

அபயன் என்று இரண்டு இடங்களில் குறித்தார்[3]. அபயன் என்பது பல சோழரும் பூண்ட பெயர். குலோத்துங்க சோழன் என்பதும் பல சோழர்கள் பூண்ட பெயராகும். இவர்களுள் அநபாயன் என்ற சிறப்புப் பெயரைக் கொண்ட குலோத்துங்க சோழன் யார்?

பெரியபுராணம் பாடுவித்த சோழனைக் குறிக்கும்பொழுது அவன் புரிந்த திருப்பணியையும் சேக்கிழார் உடன் கூறியுள்ளார். தில்லைப் பேரம்பலத்திற்குப் பொன்வேய்ந்த செய்தியினை மூன்று

---

1. (1) பாயிரம் - 8.
   (2) திருமலைச் சிறப்பு - 12.
   (3) திருநாட்டுச் சிறப்பு - 35.
   (4) திருநகரச் சிறப்பு - 13.
   (5) இயற்பகை நாயனார் புராணம் - 1.
   (6) எறிபத்த நாயனார் - புராணம் - 2.
   (7) சண்டேசுர நாயனார் புராணம் - 8.
   (8) திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 847.
   (9) புகழ்ச்சோழ நாயனார் புராணம் - 8.
   (10) கோச்செங்கட்சோழ நாயனார் புராணம் - 14.
2. சண்டேசுர நாயனார் புராணம் - 8.
3. (1) திருமலைச் சிறப்பு - 12; (2) சண்டேசுர நாயனார் புராணம் - 8.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இடங்களில் மொழிந்துள்ளார்.[1] தில்லைப் பேரம்பலத்திற்குப் பொன் வேய்ந்த சோழன் இரண்டாம் குலோத்துங்கன் என்று டாக்டர் மா. இராசமாணிக்கனார் முடிவு கட்டினார்.[2] கல்வெட்டும் சான்று பகர்ந்துள்ளது.[3] இவனை ''அநபாயன்'' என்றே திருவாரூர் வடமொழிக் கல்வெட்டுக் கூறியுள்ளது.[4] எனவே இரண்டாங் குலோத்துங்கனுடைய காலமே (கி.பி. 1113-1150) சேக்கிழாரின் காலம் ஆகும். சி.கே. சுப்பிரமணிய முதலியாரும், எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்களும் இக்கருத்தையே கூறினர்.[5]

சதாசிவ பண்டாரத்தார், ''இரண்டாங் குலோத்துங்க சோழன் (கி.பி. 1113-1150) பேரம்பலத்தையும் உட்கோபுரத்தையும் திருச்சுற்று மாளிகையையும் மாமேரு போலப் பொன்மயமாக்கினான். தில்லைத் திருப்பணிகள் பல செய்தான்'' என்று குறிப்பிட்டுள்ளார்.[6] சேக்கிழாரும் இச்செய்திகளையே கூறினர். இருவர் குறிப்பிட்ட செயல்களைச் செய்தவன் ஒருவனாகத்தான் இருக்க வேண்டும். பண்டாரத்தார் கூறிய இரண்டாம் குலோத்துங்கனே சேக்கிழார் குறித்த இரண்டாம் குலோத்துங்க சோழனாவான்.

இரண்டாம் குலோத்துங்கன் பேரம்பலத்திற்குப் பொன்வேய்ந்ததோடு வெளியிடம், திருவீதி, திருவெல்லை ஆகியவற்றையும் பொன்னாலாகிய திருப்பணிகள் செய்தனன்,[7] என்பதைத் திருத்

---

1. திருத்தொண்டர் புராணம் - பாயிரம் - 8; சண்டேசுர நாயனார் புராணம் - 8; இடங்கழி நாயனார் புராணம்-3.
2. பெரியபுராண ஆராய்ச்சி - பக். 17-27; மா. இராசமாணிக்கனார்.
3. சேக்கிழார் - பக். 21; சி. கே. சுப்பிரமணிய முதலியார்.
4. பெரியபுராண ஆராய்ச்சி - பக். 27; மா. இராசமாணிக்கனார்.
5. (1) சேக்கிழார் - பக். 18; (2) காவியங்களின் வரலாறு. பக். 235. எஸ். வையாபுரிப்பிள்ளை.
6. பிற்காலச் சோழர் வரலாறு. பக். 343; சதாசிவ பண்டாரத்தார்.
7. திருத்தொண்டர் புராணம் - சண்டேசுர நாயனார் - 8 ; புகழ்ச்சோழ நாயனார் - 8.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தொண்டர் புராணம் குறிப்பிட்டுள்ளது. இருவர் குறித்த செய்திகளும் ஒத்துள்ளன. மேற்குறித்த காரணங்களால் சேக்கிழார் காலம் (கி.பி. 1113-1150) இரண்டாம் குலோத்துங்கன் வாழ்ந்த காலமே என்பது துணிபாம்.

பெரியபுராணம் - ஒரு பெருங்காவியம்

பெருங்காப்பிய இலக்கணத்தை வரையறை செய்து கூறியது தண்டியலங்காரம்.[1] அதற்கு முன்னர் வரையறை செய்யப்பெற்ற இலக்கணம் இல்லை. ஆனால் காவியம் என்றால் இவையெல்லாம் இருக்க வேண்டும் என்று உணர்ந்து அதன் கூறுபாடுகளைக் காவியத்தில் அமைத்தனர். காவியத்தைப் படிக்கும்பொழுதே இவையெல்லாம் இருக்கின்றன என்று தெரிந்து கொள்வர். அக்கூறுபாடுகளைத்தான், பின்னர் வந்தவர்கள் தொகுத்து வரையறை செய்து இலக்கணமாக ஆக்கி விட்டனர். பெரியபுராணத்தையும் பெருங்காவியமாக ஆக்க விரும்பிய சேக்கிழார் காவியத்திற்குரிய கூறுபாடுகள், பண்புகள் ஆகியவற்றை அமைத்துச் சென்றனர்.

ஒரு காவியம் அமைய வேண்டுமானால் முதன் முதலாக வேண்டப் பெறுவது பொருள் தொடர்நிலை. இதை ஆங்கிலத்தில் (Unity) என்பர். காவியத்திற்கு எடுத்துக்கொண்ட பொருள் தொடக்கத்திலிருந்து இறுதி வரையில் சங்கிலித் தொடர் போன்று பின்னிப் பிணைந்து முடிவுறல் வேண்டும். பெரியபுராணத்தில் பேசப் பெற்றோர் நாயன்மார்; அடியார் பலர். பல நாடுகளைச் சார்ந்தோர்; பல ஊர்களைச் சேர்ந்தோர்; பல இனங்களைக் கொண்டோர். இவர்களுடைய வரலாறு பெரியபுராணம். இவர்களுடைய வரலாற்றுள் பொருள்தொடர் நிலையை (Unity) எங்ஙனம் அமைப்பது? ஒருமைப்பாட்டினை எவ்வாறு உண்டாக்குதல் கூடும்? ''உலகெலாம்'' என்று அடியெடுத்துக் கொடுத்த இறைவனே தோன்றாத் துணையாக இருந்து காவியத்தின் ஆரம்பத்திலிருந்து இறுதி வரை இவ்வொருமைப்பாடு அமையத் துணைசெய்தார்.

புராணம் தொடங்குங்கால், ''பொன்னின் வெண்திருநீறு'' என்று திருநீற்றில் ஆரம்பித்து இறுதியில் ''தெய்வ வெண்திருநீறு

1. தண்டியலங்காரம் : நூற்பா : 8.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிறக்கவே'' என முடிந்தது. புராணம் முழுவதும் வெண்திருநீற்றின் சிறப்பினையே புகழ்ந்தது.[1]

காவியப் பண்பினைக் கீழ்க்கண்டவாறு, ''திருக்கயிலையில் நம்பியாரூராரோடு தொடங்கிய காவியம், அவர் கயிலையில் இறைவனொடு சேர்ந்ததோடு வெள்ளானைச் சருக்கத்தோடு முடிந்தது, நூல் அமைப்பிலேயே காவியப் பண்பு திகழுமாறு செய்த சேக்கிழாரின் காவியப் புலமையைக் காண்க. இப்பெருநூல் பொருள் தொடர்பு பெற்று அமைப்பிலே தப்பில் பெருங்காப்பியமாவதோடு ஒப்பில் பெருங்காப்பியமாகவே முடிந்தது''[2] என்று கூறினர் திரு. கு. கோதண்டபாணி பிள்ளை அவர்கள்.

வாழ்த்து - வணக்கம் வருபொருள் :

''உலகெலாம்'' என்று தில்லைக் கூத்தன் அடியெடுத்துக் கொடுத்த முதற்பாட்டிலேயே ''வணங்குவாம்'' என்றதால் தெய்வ வணக்கமும், ''வாழ்த்தி'' என்றதால் வாழ்த்தும் கூறப்பட்டன. ''மலர் சிலம்படி வாழ்த்தி'' என்றதனால் இறைவன் திருவடியையே பற்றுக்கோடாகக் கொண்டு வாழ்ந்து உய்ந்த அடியார்களைக் குறிப்பதாகக் கொண்டு ''வருபொருள்'' சுட்டியதாகவும் கொள்ளலாம்.[3]

நான்கு உறுதிப்பொருள் : அறம், பொருள், இன்பம், வீடு.

''அறம், பொருள், இன்பம், வீடடைதல் நூற்பயனே'' என்ப.[4] இந்நான்கு பொருள்களும் புராணத்துள் விரவி வந்துள்ளன. ''ஆனால் இப்பெரிய புராணமோ இந்நான்கு பெரும்பொருள் களையும் ஒருங்கே தருதற் பயனுடையதாய் உள்ளது. அதுவும் அல்லாமல் இந்நான்கிற்கு மேற்பட்டதாய், அப்புறப்பட்டதாய் ஒன்று உள்ளதாயின் அதனையும் குறிப்பதாய் நிற்கும்.[5]

---

1. திருத்தொண்டர் புராணம் - 1. திருமலைச் சிறப்பு - 3.
   2. வாழ்த்துச் செய்யுள்.
2. பெரியபுராணச் சொற்பொழிவுகள் - பெரியபுராணம்-சைவப் பெருங்காவியம் பக். 438; கு. கோதண்டபாணி பிள்ளை.
3. தமிழ் இலக்கியக்கொள்கை - பக். 301; பதிப்பாசிரியர் : டாக்டர் ச. வே. சுப்பிரமணியன், டாக்டர் தா.வே வீராசாமி
4. நன்னூல் - நூற்பா : 10.
5. சேக்கிழார் - பக். 159; சி. கே. சுப்பிரமணிய முதலியார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அறம்

''ஈண்டுத் தெய்வப் புலமைத் திருவள்ளுவராற் சிறப்புடைய ஒழுக்கமே அறமென எடுத்துக் கொள்ளப்பட்டது'' என்றார் பரிமேலழகர்.[1]

அறன் எனப்பெற்றது இல்வாழ்க்கையே; பிறன் பழிப்பது இல்லாயின், துறவறமும் இல்வாழ்க்கையின்பாற்பட்டதே[2] என்றார் திருவள்ளுவர். திருவள்ளுவரே இனிது நடாத்தப் பெறுகின்ற இல்லறத்தையும், துறவறத்தையுமே அறம் எனப் புகன்றார்.

அறுபத்து மூன்று நாயன்மார்களுள் மூர்த்தியார், அப்பர், சண்டேசர் ஆகிய மூவர் நீங்க மற்ற அறுபது நாயன்மார்களும் இல்லறத்தில் ஈடுபட்டு இனிது வாழ்ந்தவர்கள். ''மூர்த்தியார், அப்பர் நல்ல துறவற வாழ்க்கையில் பிறர் பழித்தல் இல்லாமல் வாழ்ந்து காட்டியவர். சண்டேசர் பிரமசாரி''.[3] அறுபத்துமூன்று நாயன்மார்களும் அறம் எனப்படுகின்ற இல்லறம், துறவறம் ஆகிய இரண்டனுள்ளும் வாழ்ந்து காட்டிய பெருமக்கள்.

பொருள்

பொருளாவன அகப்பொருளும், புறப்பொருளும்.[4] நம்பியாரூரர் வரலாற்றைக் கூறுகின்ற தடுத்தாட்கொண்ட புராணத்துள்ளும், ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணத்துள்ளும் சுந்தரர், பரவையார், சங்கிலியார் ஆகியோரைக் கண்டு, நோக்கித் திருமணம் செய்து கொண்ட நிகழ்ச்சிகளிலும் அவரோடு வாழ்ந்த இல்லற வாழ்க்கையிலும் அகப்பொருளைக் காணலாம். மனுநீதிச்சோழன் தம் அமைச்சனுடன் உரையாடுதல், புகழ்ச்சோழர் யானையை வெட்டி வீழ்த்திய எறிபத்த நாயனாரொடு பேசுதல், பல்லவன் திருநாவுக்கரசரைக் கொல்ல முனைதல், நாயன்மார்கள் தம் தொண்டர்களோடு தலயாத்திரை புரிதல் ஆகிய நிகழ்ச்சிகள்

---

1. திருக்குறள் - பரிமேலழகருரை - உரைப்பாயிரம் : பக், 2.
2. திருக்குறள் - 49.
3. சேக்கிழார் புராணம் - 47.
4. தொல்காப்பியம் - பொருளதிகாரம் : புலவர் குழந்தை உரை - பக். 1.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எல்லாம் புறப்பொருள்தாம். குறிப்பாகப் போர் நிகழ்ச்சிகளைக் கூறுகின்ற புறப்பொருள், புகழ்ச்சோழ நாயனார் புராணம், இயற்பகை நாயனார் புராணம், ஏனாதிநாத நாயனார் புராணம், கோட்புலி நாயனார் புராணம், கூற்றுவ நாயனார் புராணம் ஆகியவற்றுள் உள.

இன்பம்

களவியல், கற்பியல் என இருவகையுடைத்து. பிறறியாமல் சந்தித்துக் கூடி மகிழ்கின்ற களவியல் பெரியபுராணத்துள் விரிவாக இல்லை. சுந்தரர்-பரவையார் இவர்தம் இன்பியல் வாழ்க்கையினை மட்டும் சேக்கிழார் சுருங்கக் கூறினர். கற்பியல் உண்டு. ''இப் புராணத்துப் பல சரிதங்களிலேயும் கற்பியல் காணத்தக்கதாம்''.[1]

கற்பியலுக்கு விளக்கமாக, ''கற்பு என்று சிறப்பித்துக் கூறப் படுவது மணவினையொடு பொருந்த கொள்ளுதற்குரிய முறைமை யினையுடைய தலைவன் தலைவியைக் கொடுத்தற்குரிய முறைமை யினையுடைய பெற்றோர் முதலானோர் கொடுக்க கொள்ளுத லாகும். அவ்வாறு கொண்டு இல்லறம் நடத்துவதைக் கூறுவது கற்பியலாம்''[2] எனச் சொல்லினர்.

ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணத்து நம்பியாரூரரும் பரவையாரும், நம்பியாரூரரும் சங்கிலியாரும் வாழ்ந்த வாழ்க்கை, காரைக்கால் அம்மையார் புராணத்தில் பரமதத்தனாரும் புனிதவதி யாரும் செய்துகொண்ட திருமணமும் வாழ்ந்த இல்லறமும், திருநீலகண்ட நாயனாரும் அவர்தம் மனைவியாரும் கொண்ட ஊடல் வாழ்க்கை, மானக்கஞ்சாற நாயனார் புராணத்து அவருடைய திருமகளாருக்கும் ஏயர்கோன் கலிக்காம நாயனாருக்கும் நடைபெற்ற திருமணம் ஆகியவற்றில் கற்பியல் பேசப்பட்டுள்ளது.

வீடு

பிறப்பின்மை, விடுபடுதல். பிறவித் துன்பத்தினின்று விடுபடுதலே வீடு.[3] பரனையே நினைந்து அறம், பொருள்,

---

1. சேக்கிழார் - சி. கே. சுப்பிரமணிய முதலியார் ; பக். 161.
2. தொல்காப்பியம் - பொருளதிகாரம் - பக். 273 ; புலவர் குழந்தை உரை.
3. திருத்தொண்டர் புராணம் - முதற்பகுதி-பக். 178; சி. கே. சுப்பிரமணிய முதலியார் உரை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இன்பம் ஆகிய ''இம்மூன்றனையும் விட்டதே பேரின்ப வீடு'' என்று ஆன்றோர் இதனை எடுத்துக் காட்டினர். அறவாழ்க்கை வாழ்ந்து பொருளாகிய புறத்தில் நெறியோடு நின்று முறையான ஒழுக்கத்தோடு கூடிய இன்பத்தைத் துய்ப்பான் எனின் அவனுக்கு வீடு தானாகக் கிடைக்கும். வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும் தெய்வத்துள் வைக்கப் படுவான் என்றார் திருவள்ளுவர்.[1] இதுதான் வீடு. பெரிய புராணத்துள் வீடு வேண்டும் என்பது கருதி அடியார் வாழவில்லை; வாழ்ந்த வாழ்க்கையினால் வீடு அவர்களுக்குக் கிடைத்தது. இறைவனால் கொடுக்கப்பெற்ற அந்த வீட்டையும் வேண்டாத வீரர்கள் திருத்தொண்டர்கள்.

''கூடும் அன்பினிற் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்''[2]

என்றார் சேக்கிழார். ஓடும், செம்பொன்னும் ஒக்க நோக்கிய அடியார் பெருமக்கள் எந்நாளும் இறைவனுக்கும், அவன் அடியார்களுக்கும் திருத்தொண்டு புரியும் சிவத்தொண்டர்களாக இருக்க விரும்பினரேயன்றிப் பிறவியின்மையாகிய வீட்டினை விரும்பாத நெஞ்சுறுதிச் சிவ சீலர்களாய் விளங்கினர்.

முடிந்த நிலையாகிய வீட்டிற்கு மேலும் ஒரு நிலையுளதேல் அதனையும் இப்புராணம் காட்டும்.

காவியத் தலைவன்

மற்றக் காப்பியங்களைப் போன்று பெரியபுராணம் ஒரே தலைவனைக் கொண்டதன்று. இதனுள் அறுபத்து மூவர் வரலாறுகள் பேசப்பட்டுள. இவர்களுள் யார் தலைவன்? காவியத் தலைவனாக வருகின்றவன் காவியத்தின் ஆரம்பத்திலிருந்து இறுதி வரை வந்து செல்லுகின்றவனாக இருக்க வேண்டும். அவனைச் சுற்றியே காவிய நிகழ்ச்சிகள் நடைபெறல் வேண்டும். காவியத்தின் பெரும்பகுதி அவனாக இருக்க வேண்டும்.

---

1. திருக்குறள் - 50.
2. திருக்கூட்டச் சிறப்பு - 8.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஞானப்பால் உண்டவராகிய திருஞானசம்பந்தர் தமிழுக்கும், தமிழ் இசைக்கும், சைவ சமயத்திற்கும் பெருந்தொண்டாற்றியவர். முதல் மூன்று திருமுறைகள் அவருடையன. பெரியபுராணத்திலேயே இவருக்குத்தான் அதிக எண்ணிக்கை கொண்ட பாடல்களைச் (1256) சேக்கிழார் பாடியுள்ளார். இரண்டாங் காண்டத்தின் முதல் நாயன்மாராகச் சம்பந்தர் அமைந்துள்ளார். நாயன்மார் களுள் வயதில் குறைந்தவராக இருந்தும் அற்புதச் செயல்கள் பல புரிந்துள்ளார். இவரைக் காவியத்தலைவராக ஆக்கலாம். ஆனால் இவ்வளவு பெருமை இருந்தும், காவியம் முழுவதும் ஆரம்பத்தில் இருந்து இறுதி வரை இவர் விரவி வரவில்லை. இடையிலே தோன்றி இடையிலேயே இவர் புராணத்தோடு நின்று விட்டார். எனவே இவர் காவியத்தலைவர் அல்லர்.

''திருஞானசம்பந்தரை விட, ஏனைய அடியார்களை விட இறைவனோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர் நம்பி ஆரூரர். கயிலையிலிருந்து வந்தவர். தன்னேரில்லாமல் வாழ்ந்தவர்; தம்பிரான் தோழரும் ஆனவர்''[1] என்பதே திரு. கு. கோதண்டபாணி பிள்ளை அவர்களின் கூற்று. மேருமலையின் மேம்பட்ட தவத்தான் என்பதே அவருக்குத் தன்னேரில்லாத் தலைவனாகும் தகுதி உண்டு எனக் காட்டுகின்றது.[2] ''தன்னேரில்லா வன்றொண்டர்'' என்று சேக்கிழாரே குறித்துள்ளார்.[3] திருக்கயிலையில் இறைவனின் அணுக்கத் தொண்டராக இருந்த ஆலால சுந்தரரே நம்பியாரூரர். மண்ணுலகில் பிறந்து, வாழ்ந்து பின் கலந்து அணையுமாறு இறைவன் ஆதிமூர்த்தியால் அனுப்பப் பெற்றவர்.[4] இவருடைய பெயரால் புராணம் இல்லையென்றாலும் திருமலைச் சருக்கம், வெள்ளானைச் சருக்கம் ஆகிய இரண்டு சருக்கங்களிலும், ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம், கழறிற்றறிவார் நாயனார் புராணம் ஆகிய இரு புராணங்களிலுமாக நான்கு இடங்களில் இவர்தம்

---

1. பெரியபுராணச் சொற்பொழிவுகள் : பெரியபுராணம் - சைவப்பெருங்காவியம்-பக். 436; திரு. கு. கோதண்டபாணி பிள்ளை.
2. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 239.
3. கழறிற்றறிவார் நாயனார் புராணம் - 45.
4. திருமலைச் சிறப்பு - 27.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெருமை அதிகமாகப் பேசப்பட்டுள்ளது. சடைய நாயனார், இசை ஞானியார் ஆகியோர் புராணத்துள் பதினொரு சருக்கங்களின் இறுதியிலும் இவருடைய துதி வைக்கப் பெற்றுள்ளது. புராணத்துள் மேற்கூறிய திருஞானசம்பந்தரை விட எண்ணிக்கையில் இவருக்குக் குறைவான பாடல்களே உள.

திருமலைச் சருக்கம்	-	239	பாடல்கள்
ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்	-	401	,,
கழறிற்றறிவார் நாயனார் புராணம்	-	132	,,
வெள்ளானைச் சருக்கம்	-	53	,,
சுந்தரர் துதி	-	11	,,
சடைய நாயனார் புராணம்	-	1	,,
இசைஞானியார் புராணம்	-	1	,,
மொத்தம்		838	பாடல்கள்

இங்ஙனம் பாடல்கள் குறைவெனினும் காவியம் முழுவதும் விரவி நின்று நிறைவைத் தந்தவர் இவரே. அவருடைய திருத்தொண்டத் தொகை முழுவதும் அவராகவே உள்ளார். அதைத்தழுவி எழுந்த பெரியபுராணத்திலும் அவராகவே விளங்கினார். இதை முன்னர்க் குறித்துள்ளோம்.[1]

காவியத்துள் அகப்பொருள் துறை இருத்தல் வேண்டும். வேறு நாயன்மார் வாழ்க்கையில் இதனைக் கூறாமல் நம்பியாரூரர் வாழ்க்கையில் மட்டும் சேக்கிழார் கூறினர். நன்மணம் புணர்தலை, மற்ற நாயன்மார் வாழ்க்கையிலும் நிகழ்ந்தது எனச் சேக்கிழார் கூறிய போதிலும் பூம்பொழில் நுகர்தல், புனல் விளையாடல், புலவியிற் புலத்தல், கலவியிற் கலத்தல் என்ற காவிய உறுப்புக்களை அங்குக் கூறவில்லை. ஆரூரர் வாழ்க்கையில்தான் அழகுபட இயம்பினர்.[2],[3].

1. இவ்வாய்வு ஏடு - பக்கம் : 39-40.
2. தடுத்தாட்கொண்ட புராணம் - 182 - 183.
3. கழறிற்றறிவார் நாயனார் புராணம் - 154, 155.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மற்ற நாயன்மார் வரலாற்றினைக் கூறப் புகுமுன் அவர்தம் நாட்டினையும், நகரத்தினையும், ஊரினையும் சுருக்கமாகச் சொல்லினர். நம்பியாரூரர் காவியத் தலைவன் எனுங் காரணம் பற்றிக் காவியத் தொடக்கத்தின்கண் அவருடைய நாடு சோழ நாட்டினையும், நகரம் திருவாரூரினையும் பெருக்கமாகப் பாடிப் பெருமை செய்தனர். காவிய உறுப்புக்களாகிய இவற்றைத் திரு நாட்டுச் சிறப்பு, திருநகரச் சிறப்பு என்று தலைப்பிட்டுத் தனித் தனியே சேக்கிழார் செப்பினர். நாவலூர் மன்னராகிய நம்பியாரூர ரையே காவியத் தலைவனாக ஆக்க வேண்டும் என்பது சேக்கிழாரின் ஆழ்ந்த உள்ளக் கிடக்கை போலும். இன்ன காரணங்களால் எம்பிராவின் தம்பிரான் தோழராகிய நம்பியாரூரரே காவியத் தலைவர் ஆகும் தகுதியுடையவர்.

மலை

திருமலை என்னும் கயிலைமலையைச் சிறப்பித்துள்ளார். இதை ஆசிரியர் திருமலைச் சிறப்பு எனக் குறித்தார். கண்ணப்ப நாயனார் புராணத்துள் திருக்காளத்தி மலை பேசப் பெற்றுள்ளது.

கடல்

காரைக்காலம்மையார் புராணத்தும், அதிபத்த நாயனார் புராணத்தும் கடல் வருணிக்கப் பெற்றுளது.

நாடு

திருமலைச் சருக்கத்தில் சோழ நாடு சொல்லப்பட்டுள்ளது. சேக்கிழார் ஒவ்வொரு நாயன்மார் வரலாற்றைக் கூறுங்கால் அவரவர் நாட்டைச் சிறப்பித்துள்ளார்.

நகர்

திருவாரூர், திருநகரச் சிறப்பாக இயம்பப் பெற்றுள்ளது. நாயன்மார்களின் நகர், ஊர் அங்கங்கு உரைக்கப் பெற்றுள்ளன.

பருவம்

பெரும்பொழுது, சிறுபொழுது என இரண்டு வகைப்படும்.

பெரும்பொழுது

பெரும்பொழுது என்பது ஆண்டிற்குரிய பருவ காலங்கள். இவை ஆறுவகைப்படும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

(1) கார் (2) கூதிர்
(3) முன்பனி (4) பின்பனி
(5) இளவேனில் (6) முதுவேனில்

இவற்றை (1) கார் காலம் (2) பனிக்காலம் (3) வேனிற்காலம் என மூன்றாக ஆக்குவர்.

சிறுபொழுது

சிறுபொழுது என்பது நாளுக்குரிய சிறிய காலங்கள். இவையும் ஆறு வகைப்படும்.

(1) மாலை (2) யாமம்
(3) வைகறை (4) காலை
(5) நண்பகல் (6) ஏற்பாடு (எல் - கதிரவன் பாடு - படுகின்ற (மறைகின்ற) காலம்,

(1) கார் காலம்

கார்மழை மேகமென்ன கண்ணப்ப நாயனார் வேட்டைக்குச் சென்றார்.[1] மாரிக்காலத்து இரவினை இளையான்குடிமாற நாயனார் புராணத்துள் இயம்பினர்.[2] திருஞானசம்பந்தர் வரலாற்றுள் கார்ப்பருவம் பேசப்படுகின்றது.[3]

(2) பனிக்காலம்

திருஞானசம்பந்தர் செங்குன்றூர் என்னும் திருசெங்கோடுக்கு வந்தபொழுது அங்குத்தோன்றிய குளிர்மிக்க பனிக்காலத்தைச் சேக்கிழார் வருணித்துள்ளார்.[4]

(3) வேனிற்காலம்

திருஞானசம்பந்தர் தலயாத்திரை மேற்கொண்டு திருவலஞ்சுழி, திருப்பட்டீச்சரம் ஆகிய திருத்தலங்களுக்கு எழுந்தருளினார். ஆண்டு

1. கண்ணப்ப நாயனார் புராணம் - 67.
2. இளையான்குடிமாற நாயனார் புராணம் - 15.
3. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 812.
4. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 328, 330, 331.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தோன்றிய வேனிலின் வெம்மையைச் சேக்கிழார் எடுத்தோதியுள்ளார்.[1] இவ்வெம்மையைத் தணிப்பான்வேண்டி இறைவர் திருஞானசம்பந்தர்க்கு முத்துப் பந்தர் அருளினர்.[2]

சிறுபொழுது

(1) மாலை (கதிரவன் மறைந்த பிறகு இரவுப்பொழுதின் முற்பகுதி)

நம்பியாரூரரும், பரவையாரும் சந்தித்து மீண்டும் ஒருவரை ஒருவர் பார்க்க விரும்புங்கால் மாலை வந்தது.[3]

(2) யாமம் (நள்ளிரவு; இரவுப் பொழுதின் நடுப்பகுதி)

திருக்காளத்திமலையின் உச்சியில் திண்ணனார் இரவு நேரத்தில் இறைவனைக் காவல் காத்தார்.[4]

(3) வைகறை (கதிரவன் தோன்றுவதற்கு முன் இரவுப் பொழுதின் இறுதிப்பகுதி)

மூர்த்தி நாயனாரைத் துன்புறுத்திய கொடியவனாகிய மன்னன் இறந்து விட்டான். அவனைப் போன்றே இரவு அழிந்து வைகறை புலர்ந்தது.[5]

(*காலை*)

(4) காலை (கதிரவன் தோன்றியதற்குப் பின் பகற் பொழுதின் முற்பகுதி. விடியற்காலம்)

திருக்காளத்திமலையின் உச்சியில் வீற்றிருக்கும் குடுமித் தேவர்க்கு ஊன் ஊட்டுவான்வேண்டி விலங்கினங்களை வேட்டையாடக் காலைப்போதில் திண்ணனார் சென்றார்.[6]

---

1. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 384, 386, 388.
2. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 392.
3. தடுத்தாட்கொண்ட புராணம் - 158.
4. கண்ணப்ப நாயனார் புராணம் - 131.
5. மூர்த்தி நாயனார் புராணம் - 26.
6. கண்ணப்ப நாயனார் புராணம் - 134.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

(5) நண்பகல் (பகற்பொழுதின் நடுப்பகுதி)

திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணத்தில் தொண்டை நாட்டின் ஐந்நிலங்கள் பேசப் பெற்றுள. பாலை நிலத்தின் பொழுது கூறப்பட்டுள்ளது.[1] பாலைக்குரிய பெரும் பொழுது வேனில்; சிறுபொழுது நண்பகல்.

(6) ஏற்பாடு (பகற்பொழுதின் இறுதிப் பகுதி: கதிரவன் மறைகின்ற காலம்)

தல யாத்திரை மேற்கொண்ட திருஞானசம்பந்தர் தம் தொண்டர்களுடன் திருவரத்துறை இறைவரைத் தொழுவான் வேண்டி விரைந்தேகினார். அப்பொழுது வெய்யவன் மேல் கடலில் வீழ்ந்தனன்.[2]

இருசுடர்த் தோற்றம் - கதிரவன் தோற்றம்

"இதே வெய்யவன் மீண்டும் தோன்றினன்"[3]

நம்பியாரூரருக்கும் சடங்கவி சிவாச்சாரியார் மகளுக்கும் நடைபெற இருந்த திருமணத்தைக் காணக் கதிரவன் வந்தனன்.[4]

நிலாத் தோற்றம்

நம்பியாரூரரும் பரவையாரும் கண்டு காதல் கொண்ட பின்னர் இரவு வந்தது;[5] நிலவு முகிழ்த்தது.[6]

நன்மணம் புணர்தல்

தடுத்தாட்கொண்ட புராணத்துள் நம்பியாரூரர் பரவையாரைத் திருமணம் செய்து கொண்டதையும்,[7] ஏயர்கோன் கலிக்காம

---

1. திருக்குறிப்புத்தொண்ட நாயனார் புராணம் - 134.
2. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 192.
3. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 209.
4. தடுத்தாட்கொண்ட புராணம் - 13.
5. தடுத்தாட்கொண்ட புராணம் - 159.
6. (1) தடுத்தாட்கொண்ட புராணம் - 160.
   (2) தடுத்தாட்கொண்ட புராணம் - 162.
7. தடுத்தாட்கொண்ட புராணம் - 180.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாயனார் புராணத்துள் நம்பியாரூரர் சங்கிலியாரைத் திருமணம் புரிந்ததையும்[1] காணலாம். திருஞான சம்பந்தர் நம்பியாண்டார் நம்பியின் மகளை வதுவை செய்து கொண்டதையும்,[2] ஏயர்கோன் கலிக்காமர், மானக்கஞ்சாற நாயனாரின் திருமகளாரின் கரம் பிடித்த செய்தியினையும் அறியலாம்.[3]

பொன்முடி கவித்தல்

கழறிற்றறிவார் நாயனார்,[4] மூர்த்தி நாயனார்,[5] கூற்றுவ நாயனார்[6] ஆகியோர் வரலாற்றில் இதை அறியலாம்.

பூம்பொழில் நுகர்தல் - புனல் விளையாடல் - உண்டாட்டு

கழறிற்றறிவார் நாயனார் எம்பிரான் தோழராகிய நம்பியாரூரரை அரண்மனைப் பொழிலில் இருத்தி மகிழ்வித்தார்.[7] புனல் விளையாட்டினையும், உண்டாட்டுச் சிறப்பினையும் காட்டினார்.[8]

சிறுவரைப் பெறுதல்

மேம்படு சடையனாரும் இசைஞானியாரும் நம்பியாரூரையும்,[9] நாகனும் தத்தையும் திண்ணனார் என்ற கண்ணப்பரையும்[10] புகழனாரும் மாதினியாரும் மருணீக்கியார் என்ற அப்பரையும்[11] சிவபாத இருதயரும் பகவதியாரும் திருஞானப்பால் உண்ட சம்பந்தரையும்[12] சிறுத்தொண்டரும் திருவெண்காட்டு நங்கையும்

---

1. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 266.
2. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 1253.
3. மானக்கஞ்சாற நாயனார் புராணம் - 36.
4. கழறிற்றறிவார் நாயனார் புராணம் - 16.
5. மூர்த்தி நாயனார் புராணம் - 46.
6. கூற்றுவ நாயனார் புராணம் - 6.
7. கழறிற்றறிவார் நாயனார் புராணம் - 154.
8. கழறிற்றறிவார் நாயனார் புராணம் - 155.
9. தடுத்தாட்கொண்ட புராணம் - 3.
10. கண்ணப்ப நாயனார் புராணம் - 13.
11. திருநாவுக்கரசு நாயனார் புராணம் - 18.
12. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 26.

5

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சீராள தேவரையும்[1] சிறுவராகப் பெற்றுச் சிறப்படைந்த செய்தி புராணத்துள் புகலப்பட்டுளது.

புலவியிற் புலத்தல், கலவியிற் களித்தல்

வன்றொண்டர் பரவையார், சங்கிலியாரொடு புலவியிற் புலந்தும் கலவியிற் களித்தும் வாழ்ந்தார்.[2] சங்கிலியாரொடு கொண்ட புலவியில் இன்புற்றார்; பரவையாரொடு கொண்ட புலவியில் துன்புற்றார்.

அரசியற் செய்திகள்

முடிகவித்தல்

முன்னால் கூறப்பெற்றுளது.[3]

மந்திரம்

கன்றினை இழந்த தாய்பசுவுக்கு என்செய்தால் வருத்தம் தீரும் என்று செங்கோல் மனுவேந்தன் தன் அமைச்சரொடு ஆராய்ந்தான்.[4] முறைமையால் திறைகொணராத மன்னர்களைப் பற்றிப் புகழ்ச் சோழ நாயனார் அமைச்சர்களிடம் வினவினார்.[5]

தூது

கலவி விரும்பிய நம்பியாரூரருக்காகப் புலவி கொண்டிருந்த பரவையார்பால் அலகிலா விளையாட்டுடையாரும் மாலும் அயனும் காணாதாருமாகிய இறைவன் தூதுசென்றார்.[6] இறைவனையே தூது அனுப்பிய செய்தியை இக்காவியம் ஒன்றில்தான் காண்கின்றோம்.

---

1. சிறுத்தொண்ட நாயனார் புராணம் - 17.
2. (அ) ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 267, 268, 315.
   (ஆ) தடுத்தாட்கொண்ட புராணம் - 181.
3. இவ்வாய்வு ஏடு - பக்கம். 65
4. திருத்தொண்டர் புராணம் - திருநகரச் சிறப்பு - 33.
5. புகழ்ச்சோழ நாயனார் புராணம் - 14.
6. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 331.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செலவு, இகல், வென்றி

புகழ்ச்சோழர், அதிகன் என்னும் மன்னனோடு மாறுபட்டுச் சமர்புரிய தம் படைவீரர்களை அமைச்சரொடு அனுப்பினார்.[1] அவனொடு போர்புரிந்தனர்.[2] இறுதியில் வெற்றி பெற்றனர்.[3]

பெருங்காப்பியத்தின் பகுப்பு இலக்கணப்படியே இப்புராணமும் சருக்கங்களாகப் பகுக்கப் பெற்றுத் திருமலைச் சருக்கம் தொடங்கி வெள்ளானைச் சருக்கம் ஈறாகப் பதின்மூன்று சருக்கங்களில் அமைந்துள்ளது. பாயிரத்திலே வாழ்த்தும் நூல் அரங்கேறிய பேரவையும், அவையடக்கமும், நூற்பெயரும் திருமலைச் சிறப்பிலே நூல்வந்த வழியும், இதற்கு முதல் நூல், வழி நூல் ஆகியவையும் புராணத்துள் கூறப்பெற்றுள்ளன. இந்நூல் ஆலாலசுந்தரன் கயிலையிலிருந்து புறப்பட்டு மண்ணுலகில் நம்பியாரூரராகப் பிறந்து எம்பிரான் தோழராக வாழ்ந்து மீண்டும் கயிலைக்குச் சென்று ஆலாலசுந்தரனாக ஆனவரை ஒரே தொடர்நிலைச் செய்யுளாகிய பழங்கதையாய், ஒவ்வொரு சருக்கத்தின் இறுதியிலும் சுந்தரர் துதி பெற்று இறுதியிலே வாழ்த்துடன் இனிது நிறைவேறிப் பெருங் காப்பிய இலக்கணம் முற்றும் அமையப்பெற்று, நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக் கலைபல கற்றோராகிய சேக்கிழாரால் புனையப் பெற்று ஒரு பெருங் காவியமாக விளங்குகின்றது.

இஃது ஒரு பெருங்காவியம் என்ற கருத்தில், ''சைவம் வாழ வந்த நூலாயினமையின் இதைச் சைவப் பெருங்காவியம் என்றே அழைப்பர்''[4] என்று உறுதி கூறினர் கு. கோதண்டபாணி பிள்ளை அவர்கள்.

''நாயன்மார்கள் தென்னாடு முழுவது மட்டுமன்றிக் கயிலையோடும் தொடர்பு கொண்டிருத்தலான், பெரியபுராணம் தமிழ்நாடு

---

1. புகழ்ச்சோழ நாயனார் புராணம் - 18.
2. புகழ்ச்சோழ நாயனார் புராணம் - 20-29.
3. புகழ்ச்சோழ நாயனார் புராணம் - 30.
4. பெரியபுராணச் சொற்பொழிவுகள் - 'பெரியபுராணம் - சைவப் பெருங்காப்பியம்' - பக்கம். 424 - திரு. கு. கோதண்டபாணி பிள்ளை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மட்டுமன்றி, இந்தியா முழுமைக்கும் உரிய பொதுக்காப்பியம் எனக் கூறுவது பொருந்தும். இதைத் தேசீயப் பொதுக் காப்பியம் என்று கூடச் சொல்லலாம்''[1] என்றார் மு. அருணாசலம் அவர்கள்.

மறுப்புரை

இனிப் பெரியபுராணம், பெருங்காவியம் அன்று என்று கூறினாரும் உளர்.[2] இவர்கள் கூறிய ஒரே காரணம் காவியத் தலைவனாக அக்காவியத்துள் ஒருவரும் இல்லை; அத்துடன் சுந்தரரைக் காவிய நாயகன் எனக் கூறுதல் சிறிதும் பொருந்தாக் கூற்றாம் என்பதேயாம்.

பெரியபுராணத்தைக் காலமெல்லாம் கற்று ஆழ்ந்து ஆய்ந்து உணர்ந்து விரிவான உரை எழுதிய சி.கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் இப்புராணம் சுந்தரரைத் தலைவராகக் கொண்ட ஒரு பெருங்காவியம் என்பதை நிறுவியுள்ளனர்.[3] பெரியபுராணத்தை ஆராய்ச்சி செய்த மா.இராசமாணிக்கனார் அவர்கள், ''இந்நூலுள் சுந்தரர் வரலாற்றை நூலின் முதல் – இடை – கடைகளில் வைத்தும், சுந்தரரால் குறிக்கப்பெற்ற நாயன்மார் வரலாறுகளை இடையிடையே வைத்தும் சென்றதை நோக்க, காவியத் தலைவர் சுந்தரர் என்பது தெளிவாகப் புலனாகும்''[4] என்று கூறிப் பெரிய புராணம் பெருங்காவியமே எனக் கூறிப் போந்தனர். தெ. பொ.

---

1. தமிழ் இலக்கிய வரலாறு - 12 - ஆம் நூற்றாண்டு - பக். 178; மு. அருணாசலம்.
2. (அ) கி.வா. ஜகன்னாதன், தில்லிச் தமிழ்ச்சங்க வெள்ளி விழா மலர் - பக். 96.
   (ஆ) எஸ். வையாபுரிப்பிள்ளை, (தமிழ் இலக்கிய சரிதத்தில் காவிய காலம்) காவியங்களின் வரலாறு - பக். 239.
   (இ) பெ. திருஞானசம்பந்தன் - தமிழ் இலக்கியக் கொள்கை - பக். 304 - 305.
3. சேக்கிழார் - பக். 151 - 172; சி. கே. சுப்பிரமணிய முதலியார்.
4. பெரியபுராண ஆராய்ச்சி - பக். 275; மா. இராசமாணிக்கனார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மீனாட்சிசுந்தரனாரும் இதைப் பெருங்காப்பியம் என்ற பொருளிலேயே கூறினார்.[1]

பெருங்காவிய இலக்கணத்தில் ஒருறுப்பு இல்லை என்பதற்காக அதைத் தள்ளி விடுதல் சிறப்பன்று. பெருங்காப்பிய இலக்கணத்தை வகுத்த தண்டியே புறனடைச் சூத்திரமாக, ''கூறிய உறுப்பிற் சில குறைந்தாலும் வேறுபாடு இல்லை'' என்றனர்.[2]

காவியத்தில் ஒரு குறிப்பிட்ட தலைவன் இல்லை என்பதற்காகப் பெரியபுராணம் பெருங்காப்பியம் அன்று என்பார்தம் கூற்றை ஏற்றுக் கொண்டாலும் தண்டியலங்கார நூற்பா இலக்கண விதியான் பெரியபுராணத்தைப் பெருங்காப்பியம் என்றே கூறலாம். ''அறமுதல் நான்கினுங் குறைபாடுடையது காப்பியம்'' என்றே தண்டியலங்காரம் விதியமைத்துள்ளது.[3] சில உறுப்புக்கள் குறைந்தால் பெருங்காப்பியம் இல்லை எனக் கூறவில்லை. அதிலும் பெரியபுராணத்தில் தலைவன் என்ற ஒருறுப்பே அவர்கள் கூற்றுப் படி குறைந்துள்ளது எனக் கொண்டாலும் மற்றவற்றை நோக்க பெரியபுராணம் பெருங்காவியத்திற்குரிய இலக்கணங்களையெல்லாம் பெற்றுள்ளது எனலாம்.

இவர்கள் கூற்று இவ்வாறிருக்க, உமாபதி சிவாச்சாரியார் பெரியபுராணத்தைத் ''தப்பில் பெருங்காவியம்''[4] என்று அழைத்து மணிமுடி சூட்டுகின்றார். இன்னோரன்ன காரணங்களால் பெரியபுராணம் ஒரு பெருங்காவியமே.

இலக்கியத்திற்குத் தலையாய வேண்டப்படுவனவாகிய பொருள், கற்பனை, உணர்ச்சி, வடிவம் என்ற நான்கனுள்' பெரியபுராண இலக்கியத்திற்கு வடிவமாகச் சிறந்த முறையில் அமைப்பினை அமைத்துத் தந்தார் சேக்கிழார்.

---

1. பெரியபுராணச் சொற்பொழிவுகள் - பக். 156; தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்.
2. தண்டியலங்காரம் - சூத். 9.
3. தண்டியலங்காரம் - 10.
4. சேக்கிழார் புராணம் - 28.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இலக்கியச் செய்திகளை நன்முறையில் கொடுப்பது முக்கிய மெனினும் எந்த வடிவத்தில், அமைப்பில் அவற்றைக் கொடுப்பது என்பதும் முக்கியமாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பகுதி 5

கற்பனையும் அணிநலனும்

''உள்ளத்தைக் கவர்ந்து உணர்ச்சியூட்டக் கூடிய உருவங்களைப் படைக்குந்திறன் கற்பனை.''

— Principles of Literary criticism. Page - 239-242, I.A. Richards.

''பாடுகின்ற கவிஞர்கள் உள்ளதை உள்ளவாறு பாடாமல் படிக்கின்றவர் உள்ளம் விழையுமாறு, சிலவற்றைச் சேர்த்து அழகுபடுத்திக் கற்பனை நயத்தோடு பாடுவர்; சுவையை உண்டாக்குவர். மங்கை ஒருத்திக்கு அணிகலன்களால் அழகை உண்டாக்குவதைப் போன்று, கவிதைகள் என்னும் கன்னிகளுக்குச் சில அலங்காரங்களைப் புலவர்கள் சேர்ப்பர். அவற்றிற்குத் தாம் அணிகள் என்று பெயர்.''

— இவ்வாய்வு ஏடு - பக். 2-23

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கற்பனையும் அணிநலனும்

கற்பனையின் அமைப்பினை முன்னர்க் கண்டோம்.[1] இக்கற்பனையை இயைபுக் கற்பனை, கருத்து விளக்கக் கற்பனை, படைப்புக் கற்பனை என மூன்று வகையாகக் கூறலாம். இவை சேக்கிழாரால் எவ்வாறு எடுத்தாளப் பெற்றன என்பதைக் காண்போம்.

இயைபுக் கற்பனை

ஒரு பொருள், கருத்து அல்லது உணர்ச்சி ஆகியவை சம்பந்தப்பட்ட உணர்வால் ஒற்றுமையுள்ள காட்சிகளை இணைத்து நிற்பது இயைபுக் கற்பனையாகும். சேக்கிழார் சோழ நாட்டைக் கூறுங்கால், பொன்னியாற்றின் சிறப்பினைக் கூறினர்.

"வம்பு லாமலர் நீரால் வழிபட்டுச்
செம்பொன் வார்கரை எண்ணில் சிவாலயத்(து)
எம்பி ரானை இறைஞ்சலின் ஈர்ம் பொன்னி
உம்பர் நாயகர்க் கன்பரும் ஒக்குமால்" [2]

என்பது அவர் வாக்கு.

அன்பர்கள் சிவபெருமானை நீராட்டி, மலர் தூவி வழிபடுவர். பொன்னியாறும் தன்னிரு கரைகளில் உள்ள சிவாலயங்களைத் தன்னிடத்திலுள்ள நீராலும், மலராலும் வழிபட்டுச் சென்றது எனச் சேக்கிழார் இவ்வாறு கற்பித்துக் கூறினர்.

சிவபெருமானை நீராலும், மலராலும் வழிபடுவது மரபு. பொன்னியாற்றில் நீரும், நீர் அடித்துக் கொண்டு செல்லுகின்ற

---

1 இவ்வாய்வு ஏடு - பக்கம்: 10-12.
2 திருநாட்டுச் சிறப்பு - பாடல்: 7.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மலரும் இருப்பது இயற்கை. பொன்னியாறு ஓரிடத்தில் நிற்காமல் ஓடிக்கொண்டே இருக்கின்றது. அதன் கரைகளின் இருமருங்கே எண்ணில் சிவாலயங்கள் உள. அன்பர்கள் மலரையும், நீரையும் கொண்டு ஒவ்வொரு சிவாலயத்தையும் வணங்கிச் செல்வது போன்றே சிவபெருமானின் அன்பரான காவிரியாறும் சிவாலயங்களையெல்லாம் வணங்கிச் சென்றது என்றார் சேக்கிழார். இதில், அன்பர்கள் மலராலும் நீராலும் சிவபெருமானை வணங்குகின்ற முறையில் பொன்னியாறு சென்றதை இயைபுபடுத்திக் காட்டினர் ஆசிரியர்.

திருஞானசம்பந்தர் பாண்டி நாட்டுத் திருஆலவாய்க்கு எழுந்தருளினர். திருஞானசம்பந்தர்க்கும் சமணர்க்கும் அனல் வாதம், புனல் வாதம் நிகழ்ந்தன. அனல் வாதத்தில் சமணர் தோற்க, புனல் வாதத்திற்கு சம்பந்தர், மன்னர், அமைச்சர் குலச்சிறையார் ஆகியோருடன் வைகை ஆற்றிற்குச் சென்றனர். வைகையில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியதைச் சேக்கிழார்.

''கார்கெழு பருவம் வாய்ப்பக் காமுறு மகளிர் உள்ளம்
சீர்கெழு கணவன் தன்பால் விரைவுறச் செல்லுமா போல்
நீர்கெழு பௌவம் நோக்கி நிரைதிரை இரைத்துச் செல்லும்
பார்கெழு புகழின் மிக்க பண்புடை வைகையாறு''[1]

என நயம்பட உரைத்தார். தலைவன் பொருளுக்காகத் தலைவியைப் பிரிந்து செல்கின்றான். கார் காலத்தில் வருவதாக உரைத்தான். கார் காலம் வந்துற்றது; ஆனால் அவன் வரவில்லை. மற்றக்காலங்களில் தலைவி தலைவனை அவ்வளவாக நினைக்காவிட்டாலும் வருவதாகக் கூறின கார் காலத்தில் வரவில்லையெனின் தலைவியின் உள்ளம் அவனையே நினைத்துக் கொண்டிருக்கும். அக்கார்காலத்தில் தனித்திருக்கும் மகளிர் உள்ளம், பிரிந்து சென்ற கணவனை நோக்கி மிக விரைவாக ஓடும். கணவன் சேய்மைக்கண் இருந்த போதிலும் மகளிர் நெஞ்சம் நினைத்த அளவில் அவனிடம் ஓடிவிடும். இதை வைகையின் வெள்ளப் பெருக்கிற்குச் சேக்கிழார் உவமைப்படுத்தினர்.

---

1 திருஞான சம்பந்த நாயனார் புராணம் - 812.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வைகையின் வெள்ளப் பெருக்குக் கடலை நோக்கி ஓடிய விதத்தினைத் தனித்திருக்கும் மகளிரின் நெஞ்சம் அவர் தம் கணவன் பால் விரைவாகச் சென்ற தன்மையோடு இயைபு படுத்தினர். மகளிர் நெஞ்சம் கார்காலத்தில் நினைத்ததும் கணவனை அடைந்தாற்போன்று, வெள்ளம் புறப்பட்டதும் கடலை அடைந்தது எனக் கூறினார். அவ்வளவு வேகமாகச் சென்றதாம். ஆற்று வெள்ளம் கடலை நோக்கி விரைவது இயல்பு. வேறொன்றையும் நாடி ஓடாது. தனித்திருக்கும் மகளிரின் உள்ளமும் தன் கணவரையன்றி வேறொன்றையும் நாடாது. விரைந்து அடைவதில் இரண்டும் ஒன்றாக இருக்க, இரண்டனையும் சேக்கிழார் இயைபுபடுத்தினர்.

கருத்து விளக்கக் கற்பனை

இயற்கைக் காட்சிகளைக் கண்ணுறும் கவிஞன், தான் கண்டவற்றை அப்படியே கூறாது அக்காட்சிகளால் தன் உள்ளத்தில் கிளர்ந்தெழும் உணர்ச்சிகளை மட்டிலும் சித்திரித்தால் அதனைக் கருத்து விளக்கக் கற்பனை என்று கூறலாம் என முன்னர்க் கண்டோம்.[1] இதைத் தற்குறிப்பேற்ற அணியாகவுங் கொள்ளலாம்.

கண்ணப்பன் எனப் பெயரேற்கும் திண்ணன் திருக்காளத்தி மலை உச்சியினில் வீற்றிருக்கும் குடுமித் தேவரை இரவு முழுவதும் காவல் காத்த போது புள்ளின் சிலம்போசை கேட்டு விடிந்தது என அறிந்தார்; இறைவர்க்கு உணவு படைக்க எண்ணினார்; வேட்டைக்குக் கிளம்பினார். விலங்கினத்தின் உருவம் தனக்கும், தன் உருவம் அவற்றுக்கும் விளக்கமாய்த் தெரியாத விடியற்காலம் அது. இருள்திரை இன்னும் சரிவர விலகவில்லை. கதிரவன் எழுந்தான். இக்காட்சியினைச் சேக்கிழார்,

''மொய்காட்டும் இருள்வாங்கி முகம் காட்டும் தேர்இரவி
மெய்காட்டும் அன்புடைய வில்லியார் தனிவேட்டை

---

1 இவ்வாய்வு ஏடு - பக்கம்: 12

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எய்காட்டின் மாவளைக்க இட்டகருந் திரைஎடுத்துக்
கைகாட்டு வான் போலக் கதிர்காட்டி எழும் போதில்''[1]

எனச் சித்திரித்தார். புலர்ந்தும் புலராத அக்காலைப்போதில் விலங்குகளை அடையாளம் கண்டு கொள்ளத்தான் ஒளி இருந்ததே தவிர அம்பு தொடுத்துக் குறிப்பாக எய்வதற்கு ஒளியில்லை. திண்ணனுக்குத் துணைசெய்யும் பொருட்டு விலங்குகளை மறைத்திருந்த இருள் கருந்திரையினை நீக்கி, ''அவற்றை நன்கு கண்டு கொள்க; இனி வளைக்க'' எனக் கைகாட்டிக் கூறியது போல், தன் கதிர்களைக் காட்டித் தேர் இரவி முகம் காட்டி மேலெழுந்தான். கதிரவன் இயற்கையாக எழுந்தபோதிலும் திண்ணன் வேட்டைக்கு உதவி செய்வான்வேண்டிக் கதிரவன் தோன்றியதாகக் கருத்து விளக்கம் கொடுத்தார் கவிவலவர் சேக்கிழார்.

சம்பந்தர் தங்கியிருந்த மடத்திற்குச் சமணர்கள் தீயிட எண்ணினர். அப்பொழுது இரவு நேரமும் சமணர்களுக்கு ஒத்திருந்தது. தீயும் இட்டனர். உடன்பட்ட இரவுப்பொழுது மறைய, ''மடத்திற்குத் தீயிட்டனர்'' என்பதை உலகத்திற்குக் காட்டுவான் வேண்டி வெய்யவன் குணக்கடலிடை எழுந்தனன் என மேலும் ஒரு கருத்தை ஏற்றிக் கூறினார்.[2]

அடுத்துக் கதிரவன் மறைவினைக் கூறியபொழுதும் இத்தகைய கருத்து விளக்கக் கற்பனையை எடுத்தியம்பினர். திருஞானசம்பந்தர் தம் தொண்டர்களுடன் திருப்பெண்ணாகடத்திலிருந்து திருவரத்துறைக்குப் புறப்பட்டுச் செல்லுங்கால் கதிரவன் தன் ஆயிரம் கரங்களைக் கரந்து மேற்கடலுள் வீழ்ந்தனன். இதை ஆசிரியர்,

''உய்ய வந்தசம் பந்தருடன் வந்தார்க்கு
எய்து வெம்மை இளைப்பஞ்சி னான்போலக்
கைகள் ஆயிரம் வாங்கிக் கரந்துபோய்
வெய்ய வன்சென்று மேல்கடல் வீழ்ந்தனன்''[3]

என்றார்.

1 கண்ணப்ப நாயனார் புராணம் - 134.
2. திருஞானசம்பந்த நாயனார் புராணம்-707.
3. திருஞானசம்பந்த நாயனார் புராணம்-192.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருஞானசம்பந்தர்க்கும் அவருடைய தொண்டர்க்கும் தன் சுடும் வெம்மையினான் களைப்பு ஏற்படும் என அஞ்சித் தன் ஆயிரம் கரங்களை வாங்கி ஆதவன் மேலைக்கடலுள் புக்கனன். ஏற்கெனவே தொண்டர்கள், தன் வெம்மைக் கதிர்களால் தாக்குண்டு துன்புற்றதற்குக் கழுவாயாகக் கதிரவன்கடலுள் வீழ்ந்தனன் எனக் கற்பனையோடு இணைத்துக் கருத்தினை விளக்கினர் ஆசிரியர்.

திருஞானசம்பந்தர் முத்துச்சிவிகையில் அமர்ந்து, மதுரையை அணுகினார். அவர் அமர்ந்து சென்ற முத்துச்சிவிகையில் வெண் கொற்றக்குடை ஒன்று வைக்கப் பெற்றிருந்தது. நிழலுக்காக வைக்கப்பெற்ற வெண்கொற்றக் குடை முத்துச்சிவிகையில் வெண் மதி போன்றிருந்தது. தொண்டர் குழாம் சம்பந்தரை வணங்கிச் சென்றபொழுது அம்மதியும் திருஞானசம்பந்தரை வணங்கிச் சென்றது போன்றிருந்தது[1] எனச் சேக்கிழார் இயம்பினார். இங்ஙனம் இயற்கையாக நடைபெற்ற நிகழ்ச்சியைக் கூறி, அந் நிகழ்ச்சி மூலம் ஒரு கருத்தினைக் கற்பனை செய்து கூறல் கருத்து விளக்கக் கற்பனையாம். இக்கற்பனை நிகழ்ச்சியையே, இடம், காலம், சூழ்நிலைக்குத் தக்கவாறு இயற்கை நிகழ்ச்சியோடு புலவன் தன் குறிப்பையும் ஏற்றிக் கூறுவதால் இதைத் தற்குறிப் பேற்றம் எனவும் கூறினர்.

படைப்புக் கற்பனை

கவிஞன் ஒருவன் தன் அனுபவத்தில் கண்ட பல பண்புகளை ஒருவிதக் கட்டுப்பாடுமின்றித் தானாகத் தேர்ந்தெடுத்து அவற்றினைத் தொடுத்துப் புதியதொரு வடிவினைப் படைப்பது படைப்புக் கற்பனையாகும். திருஞான சம்பந்தரின் திருவருளால் சாம்பரும் எலும்பும் இருந்த குடத்தினின்றும் எழுந்த பூம்பாவையைச் சேக்கிழார் வருணித்துள்ளார். அவருடைய கூந்தலிலிருந்து திருத்தாள் வரையில் உள்ள உறுப்புக்களின் நலன்களை ஒவ்வொரு பாடலிலும் ஒவ்வோர் உறுப்பாகப் பல பாடல்களில் வியந்து பாராட்டினர்.[2] அவளுடைய வடிவம்,

1. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 648
2. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 1095-1108.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''மொய்கருங் குழலின் பாரம் கரிய வண்டு ஒழுங்கு[1]

''திருநுதல் வானவில்''[2]

''புருவமென் கொடிகள் காமனின் போர்வில் சேமவில்''[3]

''கண்ணிணை கரியசெய்ய கயலிரண்டு''[4]

''நாசி காமரூபி''[5]

''பவளவாய் பனிநிறக் கோபம்''[6]

''குழைகொள் காது அனங்கன் வென்றிக்கொடி இரண்டு[7]

''விளங்கிய கழுத்து சங்கநன் நிதியம்''[8]

''பொற்பமை வதனம் பதும நன்நிதியம்''[9]

''மங்கை கைகள் காந்தி வெள்ளம்''[10]

''ஏந்திளங் கொங்கை அமுதக் கும்பம்''[11]

''உந்தியிற் கரந்து கொங்கை''[12]

''உரோம வல்லி சலாகை தூக்கியதே போலும்''[13]

''அணிவளர் அல்குல் சேடன் பணம்''[14]

''மங்கைபொற் குறங்கு இளம்பிடிக் கைகதலி மென் தண்டு[15]

''செழுமுழந்தாள் பொற்பந்து''[16]

---

1. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 1095.
2. திருஞானசம்பந்த நாயனசர் புராணம் - 1096.
3. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 1097.
4. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 1098.
5. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 1099.
6. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 1099.
7. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 1100.
8. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 1101.
9. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 1101.
10. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 1102.
11. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 1103.
12. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 1104.
13. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 1104.
14. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 1105.
15. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 1106.
16. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 1106.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''பொற்கொடி கணைக்கால் காமன் ஆவநாழிகை''[1]
''ஓவியர்க்கெழுத வொண்ணாப் பரட்டு செம்பொற்றட்டு''[2]
''பூந்துணர் மலர்ந்த போலும் நற்பதம்''[3]

எனக் கூறப்பெற்று ''அற்புதம் எய்தத் தோன்றி அழகினுக் கணியாய் நின்றாள்'' எனச் சேக்கிழார் வருணித்தார். அவர் பூம்பாவையின் உருவத்தைப் பதினான்கு பாடல்களில் வரைந்து காட்டினர். பாவையின் உறுப்புக்கள் மட்டும் இப்பாடல்களினின்றும் தொகுக்கப்பட்டுள.

பூம்பாவையின் அழகினைத் திறனுடைய சேக்கிழார் இங்ஙனம் வருணித்தார். இது கேசாதிபாதம் எனப்படும். பலவிதப் பண்புகளை ஒன்றாக்கி ஒருருவமாகப் படைத்துக் காட்டினர். ஆசிரியர், அவள்தான் பூம்பாவை; அக்கன்னிதன் வனப்பினைக் கண்கள் இரண்டால் அளவிட முடியாது என்றார்.[4] திண்ணன் வேட்டையாடச் சென்றபொழுது கேசாதிபாத வருணனையாக அவனையும் வருணித்துள்ளார்.[5]

தன்மை நவிற்சி அணி

ஒரு பொருளின் தன்மைகளை உள்ளதை உள்ளவாறு இயல்பாக நயம்படக் கூறுவது தன்மை நவிற்சி அணியாம். இவ்வணி பொருளின் இயல்பை நேரிற் பார்த்தாற்போலத் தோன்றுமாறு உள்ளபடி விளங்கச் சொல்லுவது. இறைவனின் தன்மைகளை,

''உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்''[6]

1. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 1107.
2. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 1107.
3. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 1108.
4. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 1095.
5. கண்ணப்ப நாயனார் புராணம் - 57 - 62.
6. பாயிரம் - பாடல். 1.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எனப் பகர்ந்தார் சேக்கிழார். கண்ணுதற் கடவுளின் தன்மைகள் இயல்பாக இதன்கண் கூறப்பட்டுள்ளன. இயற்கையான பொருளை அடிப்படையாக வைத்துப் பின் அதை அழகுபடுத்த வேண்டும். அடுத்துச் சிவபெருமானைக் கூறிய பொழுதும் புராணத்துள் மற்றவற்றை உரைத்த பொழுதும் சேக்கிழார் அணிநயங்களோடு கூறியதற்கு இஃது ஆரம்பம் என்பதற்காக அணிகளால் அழகுபடுத்தாது இயற்கையாக கூறிய திறம் இன்புறற்குரியது. இயற்கையாகக் இருக்கும் அடிப்படைப் பொருளை வைத்துத்தான் அணிகளைச் சூட்ட வேண்டும். இஃது எல்லா அணிகளுக்கும் பொதுவாம்.

உவமையணி

தக்க பொருளை அதற்குத் தக்க பொருளோடு தக்க சொற்களால் உவமித்துக் காட்டுவது உவமையாகும். இதனை, வினை, பயன், மெய், உரு ஆகிய நான்கு பொருட்களோடு அமைத்துக் காட்டினர்.[1] பண்பு, தொழில், பயன் என மூன்றாக அடக்கினர், தண்டியலங்கார நூலாசிரியர்.[2] ஒரு பொருளை அப்படியே கூறின் சிறப்பன்று; அந்தப் பொருளை அதனுடைய ஒத்த பொருளோடு சேர்த்து அழகுபடுத்திக் கூறின் சிறப்புடைத்து.

உவமை என்பது பொருளைத் தக்க ஒப்புமை கொண்டு விளக்குவதாகும். அதாவது ஒரு பொருள் மற்றொரு பொருளோடு குணத்தாலோ, தொழிலாலோ, பயனாலோ ஒத்திருப்பதாக வருணிப்பது உவமை அணி எனலாம். மேலும் அறிந்தவற்றைக் கொண்டு அறியாதவற்றைத் தக்க பொருளால் ஒப்பிட்டு விளக்குவது உவமை. இவ்வாறு பல கருத்துக்கள் கூறப்படினும், ''ஒரு பொருளை வேறொன்றினோடு ஏதேனும் ஒருவகையில் ஒப்பிட்டுக் கூறுதல் உவமை'' என்ற கருத்தினையே பல அறிஞர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.[3]

சேக்கிழார் தான் எடுத்துக்கொண்ட பொருளை விளக்கு வதற்காக உவமையைப் பல்வேறு இனங்களில் அமைத்துள்ளார். இறைவன் மீது கொண்ட பத்தியை எடுத்துக்காட்ட தோன்றியது

1. தொல்காப்பியம் - சூத். 272.
2. தாண்டியலங்காரம் - சூத். 31.
3. பெரியபுராணத்தில் உவமைகள்-பக்.2-3; அ.சங்கரி,எம்.ஏ.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருத்தொண்டர் புராணம். எனவே சேக்கிழார் தாம் கண்ட பொருட்களில் எல்லாம் இறைவனைக் கண்டார். இறைவனுடைய அகத்தோற்றம் போன்றும் புறத்தோற்றம் போன்றும் தாம் கண்ட பொருட்கள் அத்தனையும் உள என்பதை எடுத்துக் காட்டினர். உவமையைப் படைத்த விதத்தில் சேக்கிழாருக்கும் மற்ற இலக்கிய ஆசிரியர்களுக்கும் வேற்றுமை உண்டு. மற்ற இலக்கிய ஆசிரியர்கள் உவமைப் பொருளின் தன்மைகளாகிய பண்பு, வினை, பயன் ஆகியவற்றை மட்டும் உவமிக்கப்படும் பொருளின் மீது ஏற்றி ஒப்பிட்டுக் காட்டினர். இவ்வுவமைகளின் மூலமாகப் பண்பு, வினை, பயன் ஆகியவை மட்டும் புலப்படும். ஆனால் சேக்கிழார் அமைத்த உவமைகளில் இவை தோன்றியதோடு வேறொன்றும் புதிதாகத் தோன்றியது. அதுதான் பத்தி உணர்வு. இதைப் பத்தி உவமை என்றும் கூறினர்.

சேக்கிழார், பத்தி உவமையோடு இன்னும் பல உவமைகளையும் தம் புராணத்தில் அமைத்து அழகு செய்தார். உணர்ச்சியை உவமை வழி தெரிவித்தார். நுண்பொருளோடு நுண்பொருளையும், பருப்பொருளோடு பருப்பொருளையும் அமைத்து உவமையாக்கிப் புராணத்தைப் பொலிவுபடுத்தினார். இனிச் செம்பொருள் கண்ட சேக்கிழார் உவமைகளின் சிறப்பினைக் காண்போம்.

பத்தி உவமை

சேக்கிழார் திருக்கயிலாய மலையின் சிறப்பினை,

> *''பொன்னின் வெண்திரு நீறு புனைந்தெனப்*
> *பன்னும் நீள்பனி மால்வரைப் பாலது''*[1]

எனக் கூறினர். பனி மூடிய அம்மலையின் தோற்றம், தூய வெண்திருநீற்றினை அணிந்து கொண்டிருந்ததைப் போன்றுள்ளது என்றார். திருவெண்ணீற்றுப் பெருமையை எடுத்துக்கூறும் கண்ணுதற் கடவுள் வாழ்கின்ற கயிலைமலை அத்திரு வெண்ணீற்றையே அணிந்து கொண்டிருந்ததைப் போன்றிருந்தது எனக் கூறியது பொருத்தமே. இத்தகைய மாமலை, மூன்று உலகங்களும் நான்மறைகளும் எண்ணில்லாத மாதவம் செய்ததால்

---

1. திருமலைச் சிறப்பு - 1.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெற்ற புண்ணியமெல்லாம் திரண்டு ஒருங்கு சேர்ந்து ஓர் உருவம் எடுத்தது போன்றுள்ளது.[1]

சோழ நாட்டு வளத்தினைப் பாடுங்கால், மருத நிலங்களில் நெற்பயிர் விளைந்து நின்ற காட்சியைக் கூறினர். நெற்பயிர்கள் எல்லாம் சூல் கொண்டிருந்தன. சூல் முதிர முதிர பசலை நிறம் படர்ந்தது. சூல் முதிர்ந்து நெல்மணிகளைக் கொண்ட சுருள் வெளியே வந்து பின் அலர்ந்தது. இக்காட்சி, சேக்கிழாருக்குச் சைவ அன்பர்களை நினைப்பூட்டியது. இஃது அன்பர்களுடைய மனம் இறைவனை நோக்கி மலர்ந்தது போல் இருந்தது என்றார்.[2] மணிகள் எல்லாம் முற்றிய பின்பு தலைசாய்ந்தன. இக்காட்சியினைத் திருத்தொண்டர்கள் ஒருவரை ஒருவர் கண்டு வணங்கிய செயலுக்கு ஒப்பிட்டார் ஆசிரியர். இதைச் சேக்கிழார்,

> *''பத்தியின் பால ராகிப் பரமனுக் காளாம் அன்பர்*
> *தத்தமிற் கூடி னார்கள் தலையினால் வணங்கு மாபோல்*
> *மொய்த்தநீள் பத்தி யின்பால் முதிர்தலை வணங்கி மற்றை*
> *வித்தகர் தன்மை போல் விளைந்தன சாலி யெல்லாம்''*[3]

என்றார்.

இறைவனை வணங்கிய மெய்யன்பர்க்குச் சிவபோகம் கிடைத்ததைப் போன்று நெல் முதிர்ந்து போகம் விளைந்தது. புற்றிடங்கொண்டவரின் பூங்கோயில் முன்றிலில் சிவனடியார் குழுமி உள்ளனர். அவர்தம் மேனி மேல் பூசப்பெற்ற நீற்றொளியாலும், மனநிறைத் தூய்மையாலும், அவர் எழுப்பிய அஞ்செழுத் தோசையானும் ஒவ்வொரு அடியாரும் ஒவ்வொரு பாற்கடலைப் போன்றுள்ளனர். எண்ணிறந்த அடியார் அங்கிருந்ததால் எண்ணிறந்த பாற்கடல்கள் அங்கிருந்தனவாம். பாற்கடல் திருவெண்ணீற்றைப் போன்று வெண்மையும், அடியார் மனத் தூய்மை போன்று தூய்மையும், மாதவர் எழுப்பும் ஐந்தெழுத்து ஓசை போன்று அலை ஓசையும் உடைமையின் பாற்கடல்

---

1. திருமலைச் சிறப்பு - 2.
2. திருமலைச் சிறப்பு - 21.
3. திருநாட்டுச் சிறப்பு - 22.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருத்தொண்டர்க்கு உவமையாயிற்று. இவ்வடியார் ''பூசு நீறு போல் உள்ளும் புனிதர்கள்'' என்றார் ஆசிரியர். புறத்திலே மட்டும் திருவெண்ணீற்றால் புனிதர்களல்லர்; அகத்திலேயும் பூசுகின்ற திருநீறுபோல் தூய்மையான வெள்ளைப் பளிங்கினர்.

மற்றக் கடல்களை நினைத்தபொழுது பத்தி தோன்றுவதில்லை; திருப்பாற்கடலை நினைத்ததும் பத்தி தோன்றும்; திருத்தொண்டர்களை நினைத்ததும் பத்தி பெருக்கெடுக்கும். திருப்பாற்கடல் திருவெண்ணீறென வெண்மையாக இருந்தமையானும், திருப்பாற்கடலையும் தொண்டர் தம்மையும் நினைத்தவுடன் பத்தி தோன்றியமையானும் சேக்கிழார் இரண்டையும் இணைத்து உவமையாக்கினர். உருத்திரக் கணிகையரான பரவையாரும் ஆதிசைவக் குலத்தில் தோன்றிய ஆரூரரும் திருவாரூர்ப் புற்றிடங்கொண்ட ஈசனார் கோவில் புறத்தே சந்தித்துக் காதல் கொண்டனர். பின் பிரிந்தனர், இரவுக் காலம் வந்தணைந்தது அவ்விரவுப்பொழுதினை அதனோடு ஒத்த பொருளுடன் உவமைப்படுத்தினர் சேக்கிழார். சிவபெருமானுக்குரிய ஐந்தெழுத்தினை அறியாத அறிவில்லாரின் நெஞ்சம் போன்று இரவு சூழ்ந்தது.[1] அவ்விரவின் இடையே அண்ணல் எம்பிரானின் தூய வெண்ணீற்றின் பேரொளி போன்று நீள்நிலா அண்டமெலாம் பரவியது.[2] இரவை அண்ணலின் உருவத்திற்கும், இரவினிடையே எழும் நிலவை கருமை உடம்பில் பூசப் பெறும் திருவெண்ணீறுக்கும் ஆசிரியர் ஒப்பிட்டு உவமையாகக் கொண்டார்.

சிவபெருமானும் சிவனடியார்களும் அணிந்த திருவெண்ணீறு நன்னெறிக்குப் பயன் தருவது போன்று சின்னேரங்களில் தீநெறிக்கும் பயன்பட்டுவிடும். போரில் தோல்வியுற்ற முத்தநாதன், வஞ்சகத்தால் மெய்ப்பொருள் நாயனாரைக் கொல்லத் துணிந்தனன். இவன் கொல்லச் சென்ற முறையை ஆசிரியர்,

''மெய்யெலாம் நீறு பூசி வேணிகள் முடித்துக் கட்டிக்
கையினிற் படைக ரந்த புத்தகக் கவளி ஏந்தி
மைபொதி விளக்கே என்ன மனத்தினுட் கறுப்பு வைத்துப்
பொய்த்தவ வேடங் கொண்டு புகுந்தனன் முத்த நாதன்''[3]

---

1. தடுத்தாட்கொண்ட புராணம் - 159.
2. தடுத்தாட்கொண்ட புராணம் - 162.
3. மெய்ப்பொருள் நாயனார் புராணம் - 7.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என மொழிந்தார். மெய்ப்பொருள் நாயனாரை வஞ்சிப்பதற்குப் புறத்தே உடம்பு முழுவதும் நீறு பூசி அகத்தே அவரைக் கொல்லும் எண்ணத்தினைக் கொண்டான். திருநீறு பூசிக்கொண்டது விளக்கைச் சுற்றிலும் விளங்கிய ஒளி போன்றும், அகத்தே வைத்த தீய எண்ணம் எரிகின்ற தீநாக்கின் இடையே விளங்கிய நீல நிறம் போன்றும் இருந்தது, எனச் சேக்கிழார் விளம்பினர். வஞ்ச நெஞ்சினனான முத்தநாதன் பூசிக் கொண்டமையின் "திருநீறு" என்னாது "நீறு" என்று மட்டும் கூறினார். சிவனும், சிவனடியார்களும் அணியப் பெற்ற திருநீறு சைவப் பகைஞனான முத்தநாதன் அணிந்தபொழுது அதற்குள்ள மதிப்பில் குறைந்தது.

திண்ணனார் பதினாறு ஆண்டு அகவை நிரம்பப் பெற்று விற் கலையையும், ஏனைப் படைக்கலையையும் கற்றுக் கலைவளர் திங்களே போலாயினார். வேண்டிய கலைகளையெல்லாம் கற்றுத் தேர்ந்த திண்ணனார், எல்லையில்லாத சிவபுண்ணியங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து மேன்மேல் வளர்வதன் பொலிவு போன்றவரா யினார்.[1] முதல் நாள் தோன்றிய திங்கள் மறுநாள் அதைப் போன்று இருக்காது. கலை கூடி வளர்ச்சி பெற்றிருக்கும். விற்கலையைக் கற்ற திண்ணனும் முதல் நாள் கற்ற கலையறிவோடு மறுநாள் இருந்தானில்லை. கலை வளர்ச்சி பெற்றிருந்தான். இவ்விடத்தில் வளர்ந்ததும் கலை; திங்களிடத்தில் வளர்வதும் கலை. வளர்ச்சியில் இரண்டும் பொருத்தமுற இருந்தமையின் சேக்கிழார் இரண்டையும் இணைத்து ஒப்புமை காட்டினார். கலை வளர, வளரத் திங்கள் ஒளி கூடி உலகத்திற்கெல்லாம் தெரிவதுபோல், கலை வளர்ச்சி யுற்றுத் திண்ணனும் உலகத்திற்கெல்லாம் பின்னர் தெரியப் போகின்றனன் என்று கருதிய சேக்கிழார் கலைவளர் திங்களைத் திண்ணனுக்கு உவமைப்படுத்தினார்.

மானக்கஞ்சாற நாயனார் திருமகளாரின் திருமணத்திற்கு இறைவன் பைரவராய் சென்றார். அம்மகளாரின் மஞ்சு தழைத்தென வளர்ந்த மலர்க்கூந்தலைக் கேட்டுப் பெறப் போயினர். திருநீறால் தன் மேனியை மூடிச் சென்றார். திருநீறால் உடம்பை மூடி, உள்ளத்தே மலர்க்கூந்தலை நினைத்துக் கொண்டிருந்த நினைப் பினை நீறுபூத்த நெருப்புக்கு உவமைப்படுத்தினார் ஆசிரியர்.

---

1. கண்ணப்ப நாயனார் புராணம் 42.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வெப்பு அடங்கிய நீற்றுக்குள் நெருப்பு இருப்பது தெரியாது. பைரவரின் தீய எண்ணமும் தெரியவில்லை. தொட்ட பின்பு தெரிவது போன்று கேட்ட பின்பே அவருடைய எண்ணம் தெரிந்தது. இதைவிட பொருத்தமான உவமை இன்று. தீய பண்பு உருவமாக இருந்தபோதும் இறைவனின் திருமேனியாயினமையின் அவருடைய உருவத்தினை, "பொடி மூடு தழல் என்னத் திருமேனி" என்றார் சேக்கிழார்.[1]

ஆநிரைகளை மேய்ப்பதற்குச் சென்ற ஆனாய நாயனார் கொன்றை மாலையினையும் சடையினையும் தாங்கிய சிவபெருமான் போல் காட்சியளித்த கொன்றை மரத்தை நோக்கி மனமுருகி அன்பு மடை திறந்தார்.[2] கொன்றையின் உருண்ட நீண்ட கனிகள் இறைவனின் சடை போன்றன. கண்ணுதல் அண்ணலார் போன்றே இயற்கைக் காட்சிகளும் தோன்றியதால் பத்தர்கள் பத்தியோடு பணிந்தனர்.

கங்கையின் கிளை நதிகளைப் போன்று அமைந்த தெருக்களைக் கொண்ட காஞ்சியின் கண், வீதிகளின் இருமருங்கே வான் தோய் மாடங்கள் கட்டப்பெற்றுள. மேல் நிலையில் வயிரத்தாலமைந்த சாளரமும், கீழ் நிலையில் நீல மணிகள் அழுத்தப் பெற்ற பொற்படிகளும், சிவபெருமானின் முடியையும் திருவடியையும் தேடச் சென்ற அன்ன உருக்கொண்டானையும் ஏன உருக்கொண்டானையும் ஒத்திருந்தன.[3] நீட்சியும் அகலமும் தெருக்களுக்கு இருந்தமையின் அவை கொண்ட நதிகள் உவமையாயின. அன்னம் சிவபிரானின் முடியைத் தேட எவ்வளவு உயரம் பறந்து சென்றதோ அந்த அளவு உயரம் சாளரங்கள் உயர்ந்துள்ளன என்றும், படிகள் ஏனம் சென்ற அளவுக்குக் தாழ்ந்துள்ளன என்றும் கூறினர், உவமையில் கூட சிவபெருமானின் பழங்கதையையே சேக்கிழார் செப்பினர். இவ்விரண்டன் அளவினையும் அளந்தறிய முடியாது என்றார். மற்றவர்கள் இத்தகைய உவமையைப் படைத்த பொழுது கதிரவனை, மதியை மேல் எல்லையாகவும், பாதாள

---

1. மானக்கஞ்சாற நாயனார் புராணம் - 25.
2. ஆனாய நாயனார் புராணம் - 21.
3. திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணம் - 91.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உலகத்தைக் கீழ் எல்லையாகவும் கூறினர்.[1] இவற்றிற்கு எல்லை உண்டு; சேக்கிழார் கூறியவற்றிற்கு எல்லை இல்லை.

ஞானப்பால் அருந்திய திருஞானசம்பந்தரும் நஞ்சு குடித்த திருநாவுக்கரசரும் முதன் முதல் திருப்புகலி என வழங்கும் சீர்காழியில் சந்தித்தனர். அழுதழைத்துக் கொண்டவராகிய ஆளுடைய பிள்ளை, ''அப்பரே'' என்ன அவரும் ''அடியேன்'' என்றார். அருட்கடலும், அன்புக் கடலும் சந்தித்தன போன்றும், சைவநெறி பெற்றெடுத்த புண்ணியக் கண்கள் இரண்டு இணைந்ததற்கு ஒப்பவும் கடுவுண்ட சிவபெருமான் திருவருளும், உமையாளின் திருவருளும் ஒன்று சேர்ந்தன போலவும் இவர்கள் சந்தித்தனர். இதனைச் சேக்கிழார்,

''அருட்பெருகு தனிக்கடலும் உலகுக் கெல்லாம்
அன்புசெறி கடலுமாம் எனவும் ஓங்கும்
பொருட்சமய முதற்சைவ நெறிதான் பெற்ற
புண்ணியக்கண் ணிரண்டெனவும் புவனம் உய்ய
இருட்கடவுண் டவர்அருளும் உலகம் எல்லாம்
ஈன்றாள்தன் திருவருளும் எனவுங் கூடித்
தெருட்கலைஞா னக்கன்றும்அரசுஞ் சென்று
செஞ்சடைவா னவர்கோயில் சேர்ந்தார் அன்றே''[2]

என்றார். அருள் குறையாது நாள்தோறும் பெருகிக்கொண்டே இருக்கும்; முதிர்ந்த அன்பு செறிவுடையதாக இருக்கும். குறையாது வளரும் அருளும், செறிவுடைய அன்பும் இணைந்தால் ஒரு புதிய சக்தி தோன்றும், இவ்விருவரும் இணைந்ததன் மூலம் சைவ உலகின்கண் ஒரு புதிய சக்தி தோன்றி, ஆக்கம் பல உண்டாயின. மற்றக் கண்கள் சந்தித்தால் தீமை பிறக்கும். தீமை கலவாப் புண்ணியக் கண்கள் சந்திப்பின் நன்மை தோன்றும். சிவபெருமானின் திருவருளும் பின் உமையாளின் திருவருளும் நன்மை

---

1. (1) கம்பராமாயணம் - பாலகாண்டம், நகரப்படலம் - பாடல் : 15, 38,
   (2) மனோன்மணீயம் - அங்கம் 1 - களம்-1; வரி 77-78.
2. திருநாவுக்கரசு நாயனார் புராணம் - 185.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பயப்பன. அப்பர், சம்பந்தர் சந்திப்பினால் நன்மை பயந்தன. இப்பாடலுள் சேக்கிழார் மூன்று உவமைகளை வைத்தது அப்பரும் சம்பந்தரும் மூன்று முறை சந்தித்துக் கொள்ள இருந்தனர் என்பதாம்.[1] திருத்தோணிபுரம், திருப்புகலூர், திருப்பூந்துருத்தி ஆகிய திருத்தலங்களில் முறைப்படி இவர்கள் சந்தித்தனர்.

திருத்தொண்டர் புராணம் பத்தியை விளக்க வந்ததாகலின். பத்தியை அடிப்படையாகக் கொண்டே உவமையைப் படைத்தார், பத்திச்சுவை நனிசொட்டச் சொட்டப் பாடிய கவிவலவர். பத்தி உவமைகள் இன்னும் பல. அளவு கருதி இந்த நிலையில் நிறுத்தி, வேறு காண்போம்.

நுண்பொருள் உவமை

அரிய காப்பியம் படைத்த அருண்மொழித்தேவர், திருக்கயிலை மலையின் சிறப்பினை,

''ஐயர்வீற் றிருக்குந் தன்மையி னாலும்
அளப்பரும் பெருமையி னாலும்
மெய்யொளி தழைக்குந் தூய்மையி னாலும்
வென்றிவெண் குடைஅந பாயன்
செய்யகோல் அபயன் திருமனத் தோங்கும்
திருக்கயி லாயநீள் சிலம்பு''[2]

என நவின்றனர். அளப்பரும் பெருமையும், மெய்யொளி தூய்மையும், கண்ணுதல் கடவுளைப் போன்றிருக்கின்ற, வென்றி வெண்குடை அநபாய சோழனுக்கு இருந்தமையின் அவனுடைய திருமனம் ஓங்கியிருந்ததைப் போன்று திருக்கயிலைமலை ஓங்கியிருந்தது. அநபாய சோழனின் மனம் உயர்ந்தது; அதைப் போன்று திருக்கயிலைமலையும் உயர்ந்தது. கயிலை மலையின் அளவினைத் துல்லியமாகக் கூறவியலாது. அநபாயன் இறைவனுக்கும், அவன் மனம் திருக்கயிலாய உச்சிக்கும் உவமை.

---

1. திருத்தொண்ட புராண உரை - மூன்றாம் பகுதி : முதற் பாகம் - பக். 268; சி. கே. சுப்பிரமணிய முதலியார்.
2. திருமலைச் சிறப்பு - 12.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கங்கையும் காவிரியும் மலையினின்று தோன்றி வருவதாலும்' பொங்கு வெண்ணுரைகளைக் கொண்டிருத்தலாலும் இரண்டும் ஒன்றாகவே காணப்பட்டன. ''கங்கையாம் பொன்னியாம் கன்னி நீத்தமே'' என்றார் கவிஞர். கங்கையைப் போன்ற இக்காவிரி நதி எண்ணில் பல அறங்களை உண்டாக்கினமையின் அவ்வறங்களைச் செய்த இறைவியின் கருணை ஒழுக்கத்திற்கு இயைபுபடுத்தினார்.

இதனை,

''அண்ணல்பா கத்தையா ளுடைய நாயகி
உண்ணெகிழ் கருணையின் ஒழுக்கம் போன்றது''[1]

என்றார். இறைவியின் கருணை ஒழுக்கம் வேண்டுதல், வேண்டாமை இல்லாமல் ஒரே சீராக இருத்தல் போன்று, பொன்னியும் வேண்டுவார், வேண்டாதார் இன்றி ஒரே போக்காக ஓடிக் கொண்டிருந்தது.

நம்பியாரூரரும் பரவையாரும் புற்றிடங்கொண்ட ஈசனார் கோயில் முன் ஒருவரை ஒருவர் கண்டு ஏகிய பின்பு,

''பஞ்சின் மெல்லடிப் பாவையர் உள்ளமும்
வஞ்ச மாக்கள்தம் வல்வினை யும்''[2]

போன்று இருள் சூழ்ந்தது என்றார் சேக்கிழார். அன்பிற்காக இன்றிப் பொருளுக்காக வாழ்கின்ற பாவையர் உள்ளமும், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுகின்ற வஞ்ச மாக்கள்தம் வல்வினையும் கொடுமை செய்யவல்லன. மாலைக் காலத்தே தோன்றிய இருளும் இவை போன்று இருண்டு இவ்விருவரையும் துன்புறுத்திக் கொடுமை செய்தன. உவமையில், பொருத்தத்தை அமைத்த சேக்கிழாரின் இலக்கியத் திறன் பாராட்டற்குரித்து.

காஞ்சி நகரத்தைச் சுற்றியுள்ள மதிலின் வாயில்கள், உயர்வும் நடுநிலை பிறழாமையும் கொண்ட பெரியோர்களின் உள்ளம் போன்றிருந்தன.[3] பெரியோர் உள்ளம் சிவவொழுக்கமல்லாது

1. திருநாட்டுச் சிறப்பு - 6.
2. தடுத்தாட்கொண்ட புராணம் - 159
3. திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணம் - 88.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தீயொழுக்கம் உட்புகவிடாது. அதுபோல மதில்வாயிலும் நல்லொழுக்கம் உட்புக விட்டும் அல்லொழுக்கம் உட்புக விடாமலும் உள்ளது.

அளவில்லாத மக்கள் இடைவிடாது சென்ற வழிக்கரையில் அப்பூதியடிகள் அமைத்த தண்ணீர்ப் பந்தல், அருளுடையார் உள்ளம் போன்று தண்ணளித்தாய் உறுவேனில் காலத்தின் வெம்மைத் துன்பத்தையெல்லாம் போக்கும்படி அமைந்திருந்தது.[1] தன்னைக் கொல்ல வந்த பகைவனையும் ஆட்கொண்டு தண்ணளி செய்யும் அருளுடையார் உள்ளம். அவ்வுள்ளம் போன்று வெய்யிலின் வெம்மையைத் தான் தாங்கி மற்றவர்க்குத் தண்மையை நல்கும் தண்ணீர்ப் பந்தல்.

சிலவற்றை அளவிடலாம். சிலவற்றை அளவிடமுடியாது. பசி, வேட்கை, துன்பம், வேதனை ஆகிய நுண்பொருள்களை அளவிட முடியாது. உவமையின் மூலமாகத்தான் இவற்றின் அளவினைக் காண இயலும்.

ஏயர்கோன் கலிக்காம நாயனாருக்கு இறைவன் கொடுத்தருளிய சூலை நோய் அனலில் தோய்த்தெடுக்கப் பெற்ற வேல் குடைவது போல மேன் மேலும் அவருக்கு வேதனையைக் கொடுத்தது.[2] வடநாட்டுப் பைரவராக வந்த சிவபெருமான், சிறுத்தொண்டரிடத்தில் அடுத்துக் கேட்கப் போவதனை.

> *"புண்செய் நோவில் வேலெறிந்தாற்*
> *போலும் புகல்வ தொன்று"*[3]

என்றார். அடுத்துக் கேட்பது ஒரு குடிக்கு நல்ல சிறுவனாகிய ஒரு மகனைத் தாதை அரிய தாய் பிடிக்க வேண்டும்; அப்பொழுது இருவரும் மனமுவந்து காணப்பெறல் வேண்டும் என்பதாம்.

இவை போன்ற உவமைகளைக் கம்பரும் எடுத்தாண்டுள்ளார். வேள்வியைக் காக்க இராமனை அனுப்புக என்று விசுவாமித்திர முனிவன் தசரதனைக் கேட்டபொழுது அவருக்கேற்பட்ட துன்பத்தின் அளவினைக் கம்பர்,

1. அப்பூதியடிகள் நாயனார் புராணம் - 5.
2. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 390.
3. சிறுத்தொண்ட நாயனார் புராணம் - 50.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"எண்ணிலா வருந்தவத்தோ னியம்பிய சொன்
மருமத்தி னெறிவேல் பாய்ந்த
புண்ணிலாம் பெரும்புழையிற் கனனுழைந்தா
லெனச் செவியிற் புகுதலோடும்"[1]

என்றியம்பினார்.

பருப்பொருள் உவமை

குன்றைவாழ் முனிவர் திருக்கயிலை மலையைச் சிறப்பித்து உள்ளார். இறைவன் வீற்றிருக்கும் பேறு பெற்றது திருக்கயிலை மலை. இஃது என்றும் பனி மூடியிருப்பதால் வெண்மையாகவும், உயரத்தில் இருப்பதால் உயர்வாகவும், இறைவன் அமர்ந்து உள்ளமையின் தூய்மையாகவும் விளங்குகின்றது என்றார் சேக்கிழார். இதனை அவர் மேலும் சிறப்பித்து,

"நிலவும் எண்ணில் தலங்களும் நீடொளி
இலகு தண்தளிர் ஆகஎ முந்ததோர்
உலகம் என்னும் ஒளிமணி வல்லிமேல்
மலரும் வெண்மலர் போல்வதம் மால்வரை"[2]

என்று பாடினர். நிலவுகின்ற எண்ணில்லாத தலங்களைத் தளிராக உடைய உலகம் என்னும் கொடியில் வெண்மலர் ஒன்று பூத்ததைப் போன்று திருக்கயிலைமலை விளங்கியதாம்.

திருமணக் கோலங்காணச் சென்ற நம்பியாரூரனை ஆடவர் சிலர், வாசநெய்யூட்டிய தூநீரால் நீராட்டி மேனி எழில்பெற விளக்கினார்கள். குஞ்சியில் இருந்த ஈரத்தைப் புலர்த்துவதற்கு வெண்மையான துகிலினைக் கைவலான் குஞ்சியின் இடையே செலுத்தினான். இது கருமுகிலின் இடையே சென்ற வெண்மதியம் போன்று இருந்தது.[3]

மணம்வந்த புத்தூரில் திருமுனைப்பாடி நாட்டாராகிய நம்பியாரூரருக்குத் திருமண வினைகள் நடைபெற்ற வண்ணம்

---

1. கம்பராமாயணம் - பாலகண்டம்: 328.
2. திருமலைச் சிறப்பு 3.
3. தடுத்தாட்கொண்ட புராணம் - 16.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இருந்தன. மைந்தரும் மாதராரும் திரண்டு வந்துள்ளனர். இத் திருமண எழுச்சியினைச் சேக்கிழார் கருங்கடலுக்கு உவமித்தார். மகளிர் அணிந்திருந்த வெள்ளிய சங்கு வளைகளாலும், பெருமை மிக்க குழை மகரங்களினாலும், ஒளி விளங்கு மணிகளினாலும், மயிற்பீலிக் குஞ்சங்களின் வரிசையினாலும் நிறைந்த கூட்டத்திற்கும் அவை போன்ற பொருட்கள் உள்ள கடலுக்கும் பொருந்துவ வதாயிற்று.[1]

கடலில் சூல்கொண்டு அடக்கி ஒலித்த பெண்சங்குகள் திருமண எழுச்சியில் பெண்கள் அணிந்திருந்த ஆர்த்த வெள்வளைகளுக்கும், பெரிய வாயினை உடைய மகர மீன்கள், மகளிர் அணிந்திருந்த காதணிகளுக்கும், கடலில் கிடைக்கும் மணிகள், கூட்டத்தினர் அணிந்துள்ள அணிகளிலுள்ள மணிகளுக்கும், நீல நிறமுடைய அலைகள் மயிற்பீலிக்குஞ்சங்களின் வரிசைகளுக்கும் உவமைகளாய் வந்தன.

திருப்பூம்புகலூரில் அப்பரும் சம்பந்தரும் அவர்தம் திருநீற்றுத் தொண்டர் கூட்டத்தினரோடு சந்தித்தனர். இச்சந்திப்பு இரண்டு நிலவுகளைக் கொண்ட இரண்டு கடல்கள் அணைந்தன போன்று இருந்தது என்றார். இரண்டு நிலவுகள் அப்பரையும் சம்பந்தரையும் குறித்தன. இரண்டு கடல்கள் இருதிறத்துத் திருத்தொண்டர் களைச் சுட்டின.[2] தத்தை திண்ணனார் என்ற கண்ணப்ப நாயனாரைப் பான்மதியைக் கடல் ஈன்றாலெனப் பெற்றெடுத்தாள்.[3] இங்ஙனம் கடலையும் அதன்கண் தோன்றுகின்ற பொருளையும் உவமையாக வைத்தது கற்றற்குச் சுவையுடைத்தாம். திருவலஞ் சுழியில் வந்தணைந்த முத்தமிழ் விரகர் திருஞான சம்பந்தரை அன்பர்கள் முன்வந்து எதிர்கொண்ட நிகழ்ச்சியை,

"................ மதியைக்
கதிர்செய் வெண்முகிற் குழாம்புடை சூழ்ந்தெனக் கலந்தார்"[4]

என உவமைப்படுத்தினார் சேக்கிழார். தண்ணளி செய்யும் திருத் தொண்டர்களுக்குத் தண்மையான மதியையும் முகிற் கூட்டத்தையும்

1. தடுத்தாட்கொண்ட புராணம் - 22.
2. திருநாவுக்கரசு நாயனார் புராணம் - 233.
3. கண்ணப்ப நாயனார் புராணம் - 13.
4. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 379.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சேக்கிழார் உவமையாகக் கூறிச் சென்றது நயமும் பொருத்தமும் உடைத்தாம்.

மணம்வந்த புத்தூரினின்றும் திருவெண்ணெய் நல்லூருக்கு வழக்காடச் சென்ற நான்மறையோன் பின்னால் சுந்தரர் சென்றதைச் சேக்கிழார் பெருமான்,

> *''செல்லுநான் மறையோன் தன்பின் திரிமுகக் காந்தஞ் சேர்ந்த*
> *வல்லிரும் பணையு மாபோல் வள்ளலுங் கடிது சென்றான்''*[1]

எனக் கூறினார். சுந்தரர், காந்தத்தை இரும்பு அணைந்தது போல அணைந்து சென்றார். இதற்கு, ''இவண் சுந்தரருக்கு இரும்பையும், வேதிய வேடந்தாங்கிய இறைவனுக்குக் காந்தத்தையும் ஒப்பிட்டு, காந்தம் தனது இழுப்புச் சக்தியால் இரும்பை இழுப்பதுபோன்று, இறைவன் சுந்தரரை அன்பால் ஆட்கொண்டதையும், இரும்பு தனது அணையும் ஆற்றலால் காந்தத்தை அடைவது போன்று, சுந்தரரும் தனது வேட்கையால் இறைவனை அடைந்த நிலையினையும் பௌதிகக் கண்ணோட்டத்தோடு உவமை கண்ட திறம்போற்றற்குரியது'' என்று விளக்கம் கூறினர்.[2] ''வழக்கு மன்றத்திற்கு வா'' எனச் சொல்லாமல் சென்ற வேதியருக்கும் உடனே ஏதும் உரை செய்யாது பின்சென்ற ஆரூரருக்கும் உவமைப் பொருட்களாகக் காந்தத்தையும் இரும்பையும் வைத்தது சாலப் பொருத்தமுடைத்தாம். காந்தம் இருக்கும் இடத்திற்குத்தான் இரும்பு கடிது செல்லும். எனவே தான் சேக்கிழார் மறையவனைக் ''கடிது சென்றார்'' எனக் கூறாது சுந்தரர் அணைந்ததைத்தான் ''கடிது சென்றான்''எனக் கூறினர். காந்தம் உடனே இரும்பை இழுக்கும் என்பதை விளக்கத்தான் ஆசிரியர் ஈண்டுக் ''கடிது'' எனும் சொல்லைப் பயன்படுத்தினர்.

ஏனாதிநாத நாயனாருக்கும் அதிசூரன் என்பானுக்கும் வாள் பயிற்சி கற்றுத் தந்ததில் பகை வந்தது; போர் மூண்டது. எழுகின்ற கதிரோனுக்கு முன்னால் காலை நிலா போன்று அதிசூரன் விளங்கினான்.[3] கதிரவன் எழ, எழ ஒளி பெருகி வரும். அவ்

1. தடுத்தாட்கொண்ட புராணம் - 8.
2. பெரியராணத்தில் உவமைகள் - பக். 33; அ. சங்கரி.
3. ஏனாதிநாத நாயனார் புராணம் - 8.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒளியின் முன்னால் காலை நிலவின் ஒளி தானாகக் குறைந்து குறைந்து மறையும். அதிசூரன் தானாக மறைந்து விடுவான் என்பதை இவ்வுவமை காட்டியது.

திண்ணன் திருக்காளத்தி மலையின் உச்சியில் உள்ள குடுமித் தேவர் மீது மால் கொண்டனன். அவருடைய இன்ப துன்பத்தில் தானும் பங்கேற்றனன். குடுமித் தேவரை அணைத்துக் கொண்டனன். நாணன் அழைத்தபோதும் பிடியை விட்டிலன். அவன் அணைத்துக் கொண்ட விதத்தினைச் சேக்கிழார்,

''*அங்கிலன் மலையில் தேவர் தம்மைக்கண் டணைத்துக் கொண்டு*
வங்கினைப் பற்றிப் போதா வல்லுடும் பென்ன நீங்கான்[1]

என மொழிந்தார். இந்த இடத்தில் வேறு பொருளைக் கூறாது பிடியை விடாத உடும்பினைத்தான் உவமையாக வைக்க வேண்டும். வேடர்கள் பேச்சில் அவர்கள் வழக்குக்கேற்ற தன்மையில் அக்கானவர்களோடு தொடர்புடைய பொருளையே உவமை கூறி அமைத்தது ஆசிரியரது பெருங்கவித் திறமையாம்.

விசார சருமர் என்ற சண்டேசுர நாயனாரின் தந்தையான எச்சதத்தனை அரவு போன்றார் என்றார் ஆசிரியர்.

''*அருமை மணியும் அளித்ததுவே நஞ்சும் அளிக்கும் அரவுபோல்*
இருமை வினைக்கும் ஒருவடிவாம் எச்ச தத்தன் உளனானான்''[2]

என்பது அவருடைய வாக்கு. அரவு மணியையும் அளிக்கும்; விடத்தையும் கொடுக்கும். இந்த இரண்டில் சண்டேசரைப் பெற்றது அருமணியை அளித்தது போன்றாம். விசாரசருமர் செய்த சிவபூசைக்குத் தந்தை இடையூறு செய்தது நஞ்சாம். சண்டேசரைப் பெற்றெடுத்ததாகிய நல்வினையும், சிவபூசைக்கு இடையூறு செய்ததாகிய தீவினையும் ஆகிய இருமை வினைகளுக்கும் வடிவமாகிய எச்சதத்தன் நல்ல பொருளாகிய மணியையும், கெட்ட பொருளாகிய நஞ்சினையும் அளிக்கின்ற அரவு போன்றான் என்றார். இங்கு எச்சதத்தனுக்கு அரவு பொருத்தமான உவமை.

---

1. கண்ணப்ப நாயனார் புராணம் - 116.
2. சண்டேசுர நாயனார் புராணம் - 10.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உணர்ச்சி உவமை

அன்புக்கு அஞ்சாமை உண்டு; தன் உயிருக்கு அன்பு செலுத்தாது மற்ற உயிருக்கு அன்பு செலுத்தி, அதைக் காக்க முனையும். அன்புடையார் சந்திப்பின் அவர்தம் கண்ணீரே அவர்தம் அன்பைப் புலப்படுத்தும். இதனைத் திருவள்ளுவர்,

> *''அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாழ்ஆர்வலர்*
> *புன்கணீர் பூசல் தரும்''*[1]

என்றார். சேக்கிழார் தம் பெரியபுராணத்தில் இத்தகு அன்பினைக் காட்சிகளின் மூலமாகவும் உவமைகளின் வழியாகவும் காட்டியுள்ளார்.

சிவகாமியாண்டார் மலர் பறித்துக் கூடையில் இட்டு, வந்து கொண்டிருந்தபொழுது பட்டத்து யானை ஒன்று மலர்க்கூடையைப் பறித்துச் சிந்தியது. இதைக் கண்ட எறிபத்தர் அஞ்சாமல் மழுவினால் அதைத் துணித்தார். இதனை,

> *''அச்சம், தாய்தலை அன்பின் முன்பு நிற்குமே''*[2]

என்றார் குன்றை முனிவர் சேக்கிழார். தாயின் தலையன்பு போன்றது எறிபத்தரின் தலையன்பு. அடியார் மீது வைத்த அன்புக்கு முன்னால் யானை, தன்னைக் கொல்லுமே என்ற அச்சம் முன் நிற்காது.

திருவெண்ணெய் நல்லூர் திருவருட்டுறையில், சிவவேதியராக வந்த இறைவன் ஆரூரரைத் தடுத்தாண்டபின் மறைந்தனர். ''துன்புறு வாழ்க்கையினின்றும் நாம் உன்னைத் தடுத்தாண்டோம்'' என்ற பேச்சின் ஓசை மட்டும் சுந்தரருக்குக் கேட்டது. ஆனால் சுந்தரர் இறைவனைப் பார்க்கவில்லை. தன்னைத் தடுத்தாண்டவன் இறைவனே என்று எண்ணிய சுந்தரர்,

''என்றெழும் ஓசை கேளா ஈன்ற ஆண் கனைப்புக் கேட்ட கன்றுபோல்''[3] கதறினார். கனைப்புக் கேட்ட கன்று போல்

1. திருக்குறள் - 71.
2. எறிபத்த நாயனார் புராணம் - 24.
3. தடுத்தாட்கொண்ட புராணம் - 68.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கதறிய திருநாவலூரார் மண்ணுலகில் வாழ்ந்து முடிந்த பின்பு இறைவனால் அனுப்பப் பெற்ற வெள்ளானையில் ஏறித் திருக்கயிலை சேர்ந்தார். தூரத்தே விட்ட கன்று தாய்ப்பசுவைக் கண்டு அணைந்தது போன்று அணைந்தார்.[1] இங்கு அன்பு, பிரிந்திருந்த இரண்டையும் ஒன்றாக்கியது. கன்றுக்கும் தாய்ப் பசுவிற்கும் விளங்குகின்ற அன்புதான் மாசுமறுவற்ற தூய அன்பாகும். முதலில் திருவெண்ணெய் நல்லூரில் கன்று போல் கதறிய சுந்தரரை ஏற்றுக் கொள்ளாது மண்மேல் விட்டுச் சென்ற இறைவன் அவருடைய பணி முடிந்ததென அறிந்த பின்னர் ஏற்றுக் கொண்டனன். கன்று பிரிந்து சென்று மீண்டும் தன்னிடம் அணைந்த போதும் தாய்ப்பசு ஏற்றுக் கொள்ளும். கன்றுக்குள்ள அன்பும், பசுவிற்குள்ள பாசமும் இணையும்பொழுது இரண்டும் ஒன்று சேருவது இயல்பு. சுந்தரர் இறைவன் மீது கொண்ட அன்பும், இறைவன் சுந்தரர் மீது கொண்ட பாசமும்தாம் இருவர் இணைப்புக்கு வழிகோலியவை.

இதைப்போன்றே மேலும் அன்பு,[2] உவகை,[3] சினம்,[4] வீரம்,[5] ஆகிய உணர்ச்சிகளை உவமை வாயில்களாக ஆங்காங்குக் காட்டினர். விரிவஞ்சி மேலே செல்லுவாம்.

தத்துவ உவமை

''சிறந்த சிந்தனையின் தொகுப்புக்களே தத்துவம். தத்துவம் சுத்தம், அசுத்தம் என்னும் இருவகை மாயைகளினின்றும் தோன்றுவதாகும். வாழ்க்கையின் இன்ப துன்பச் சூழல்களை நடுநிலையுடன் ஆழ்ந்து நோக்கும் பொழுது தத்துவம்

1. வெள்ளானைச் சருக்கம் - 42.
2. (அ) கண்ணப்ப நாயனார் புராணம் - 112.
   (ஆ) அரிவாட்ட நாயனார் புராணம் - 14.
   (இ) திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 723.
3. (அ) அப்பூதியடிகள் நாயனார் புராணம் - 18.
   (ஆ) சிறுத்தொண்ட நாயனார் புராணம் - 69.
4. (அ) திருநகரச் சிறப்பு - 39.
   (ஆ) அமர்நீதி நாயனார் புராணம் - 26.
5. (அ) ஏனாதிநாத நாயனார் புராணம் - 11.
   (ஆ) இயற்பகை நாயனார் புராணம் - 21.
   (இ) தடுத்தாட்கொண்ட புராணம் - 129.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிறக்கின்றது. நிலையாமை உணர்வு இதற்குப் பெரிதும் உதவுகின்றது''.[1]

சேக்கிழார் இறைவன், உலகம், உயிர், வினை, மலங்கள், பிறவி, வீடு இவற்றைப் பற்றிக் கூறுங்கால் தத்துவ நோக்கிலேயே கூறினர். திண்ணனும் நாணனும் திருக்காளத்தி மலை மீது ஏறிச் சென்றனர். இருவரும் மலைப்படிகளில் ஏறிச் சென்ற பொழுது வெவ்வேறு நிலையை உணர்ந்தனர். நாணன் அகத்தேயும் புறத்தேயும் மலைப்படிகளில் ஏறிச் சென்றதாக உணர்ந்தான். ஆனால் திண்ணனுடைய உடம்புதான் புறத்தே மலைப்படிகளில் ஏறிச் சென்றதே தவிர அவனுடைய அகம் மலையின் மீது ஏறியதாக உணரவில்லை. தத்துவமாகிய படிகளில் ஏறி முத்தி நிலைக்குச் சென்றதாக அவ்வகம் உணர்ந்தது.

இதனை ஆசிரியர்,

''*நாணனும் அன்பும் முன்பு நளிர்வரை ஏறத் தாமும்*
பேணுதத் தவங்க ளெனும் பெருகுசோ பானம் ஏறி
ஆணையாம் சிவத்தைச் சார அணைபவர் போல ஐயர்
நீணிலை மலையை ஏறி நேர்படச் செல்லும் போதில்''[2]

என்றுரைத்தார். சிவயோகிகள் தத்துவப் படிகளில் ஏறிச் சிவத்தை அடைவர். அதைப்போன்று திண்ணனாரும் உயரத்தில் வீற்று இருக்கும் சிவனை அடைவதற்காகத் தத்துவங்களாகிய மலைப் படிகளில் ஏறினார். நல்லுயிர்கள் இறுதியில் சிவத்தைச் சார்ந்து வீடு பேறு அடைய விழையும். நாகன் மகனும் உயரத்தே இருக்கும் மாதொருபாகனின் மலர்ப்பாதங்களை நண்ணிட கீழிருந்து மேலே சென்றனன்.

சிவனடியார்க்குக் கறியமுது ஆக்குவதற்காக இளையான்குடி மாற நாயனார் புன்செய்ப் பயிரினை வேருடன் பறித்ததனை, அவரது பாசத்திற்கு மூலமாகிய வேரினைப் பிடுங்கி அகற்றியதற்கு ஒப்பிட்டார் ஆசிரியர்[3]. இத்தத்துவ உவமைகளை வேறிடங்களிலும் வைத்தார்[4].

---

1. சிவலிங்க வழிபாடு - பக். 96; சி. சத்தியமூர்த்தி.
2. கண்ணப்ப நாயனார் புராணம் - 103.
3. இளையான்குடிமாற நாயனார் புராணம் - 21.
4. (அ) ஏனாதிநாத நாயனார் புராணம் - 27.
   (ஆ) அரிவாட்ட நாயனார் புராணம் - 17.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உருவகவணி

ஒத்த பொருளோடு ஒத்த பொருளை உவமைப்படுத்தி ஒப்புமை காட்டும்பொழுது பொருளை நீக்கிவிட்டு உவமையையே பொருளாக்கி விடுவது உருவகம். இதையே தண்டியலங்கார நூலாசிரியர்,

> *''உவமையும் பொருளும் வேற்றுமை ஒழிவித்து*
> *ஒன்றென மாட்டின் அஃது உருவகமாகும்''*[1]

என்று கூறினர். இரண்டு பொருட்களையும் வேறுவேறாகக் காணாமல் ஒன்றிலேயே மற்றொன்றைக் கண்டால் அது உருவகம்.[2] சுருங்கிய உவமையே பிறகு உருவகம் ஆயிற்று[3]. உருவகம்என்பது வேறொன்றும் இல்லை; உவமையின் சுருக்கம் உருவகம்.[4] (Compressed Simile). உவமைகளைவிட உருவகங்கள் ஆற்றல் மிக்கவை.

நன்மணக்கோலங் கொண்ட நம்பியாரூரனை மடவார் நோக்கி மகிழ்ந்தனர். அவன் இம்மாதராரைத் திரும்பி நோக்கிய அளவில்,

> *''ஆண்டகை அருளின் நோக்கின்*
> *வெள்ளத்துள் அலைந்தோம்''*[5]

என்றார் மகளிர். ஆண்டகை ஆரூரரின் அருள் நோக்கப் பெருக்கில் மகளிர் அகப்பட்டு மீளும் வகையறியாது நின்றார். கருணை கலந்த பார்வையாதலின் அதனை அருள் நோக்கு என்றார். அதை வெள்ளமாக உருவகம் செய்து அதில் அம்மாதரார் திளைத்து விளையாடியதாகக் கவினுடை ஆசிரியர் கற்பனை செய்தார்.

தில்லைக் கோயிலின் திருவாயில்கள் நான்கும் பிரம்மதேவனின் நான்கு முகங்களாக உருவகப்படுத்தினர்.[6] நம்பியும் நங்கை பரவையும் சந்தித்த அளவில் இருவரும் ஒன்றாயின பின்

---

1. தண்டியலங்காரம் - நூற்பா : 36.
2. இலக்கியத் திறன் - பக். 229; டாக்டர் மு. வரதராசனார்.
3. இலக்கியக் கலை - பக். 186; அ. ச. ஞானசம்பந்தன்.
4. Poetry and the Ordinary Reader. P. 64, M. R. Ridley.
5. தடுத்தாட்கொண்ட புராணம் - 26.
6. தடுத்தாட்கொண்ட புராணம் - 97.

7

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பரவையைத் தன்னுயிர் என்றே தேடினர். ஆரூர் ஆரூரர் காதல் நிலையில் ஒன்றனை[1] உயிர் என்றவர் பத்தி நிலையில் இறைவனை உயிர் என்றும்,[2] மருந்து[3] என்றும் கூறினார். இரவினை நங்கை என்று உருவகம் செய்தவர் வெண்ணிலவினை அந்நங்கை கொண்ட புன்முறுவல் என்று அதையும் உருவகப்படுத்தி,

''நறும லர்க்கங்குல் நங்கைமுன் கொண்டபுன்
முறுவல் என்ன முகிழ்த்தது வெண்ணிலா''[4]

என்று கூறினர். இரவினை நங்கையாகக் கூறியதோடன்றி நிலத்தை, பெண்ணாக்கி

''மெய்யொளியின் நிழற்காணும் ஆடியென வெண்மதியை
வையமகள் கைய ணைத்தாற் போலுயர்வ மலர்ச்சோலை''[5]

எனக் கூறிய மரபும் உண்டு. வையம் - மகள்; மரங்கள் - கைகள்; கருவண்டுகள் - கைகளைச் சூழ்ந்த நீலவளையல்கள்; மரங்களின் சிவந்த தளிர்கள் - கைவிரல்கள்; அரும்புகள் - விரல்களின் நகங்கள்; வெண்மதி - ஆடி. இங்ஙனம் ஒவ்வொன்றையும் பிறிதொன்றாக உருவகப்படுத்தினார் கவிஞர். வெண்ணிலாவை ஓரிடத்தில் நங்கையின் புன்முறுவல் என்றும், நாட்டு வளம் கூறுமிடத்தில் ஆடி என்றும் இடத்திற்குத் தக்கவாறு ஆசிரியர் உருவகம் செய்தார். பரவையாரைக் கண்டு காதலித்துத் துன்புற்ற நம்பியாரூரருக்கு நம்பிக்கை யூட்டுவான்வேண்டி வெண்ணிலவைப் புன்முறுவலாகக் காட்டினர். பரவையாரே தன்முன் வந்து முறுவலிப்பதாக உணர்வான்பொருட்டுச் சேக்கிழார் இவ்வாறு அமைத்தனர்போலும்! கம்பரும் நிலவை ஆடியென்றார்.[6] வைய மகளுக்குத் திலகம் வேண்டும் அல்லவா? இப்புவி எனும் மகளுக்குப் பொன்னித் திருநாடே திலகமாம்.[7]

---

1. தடுத்தாட்கொண்ட புராணம் - 151.
2. கண்ணப்ப நாயனார் புராணம் - 174.
3. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 176.
4. தடுத்தாட்கொண்ட புராணம் - 160.
5. திருநாவுக்கரசு நாயனார் புராணம் - 9.
6. கம்பராமாயணம் - பால காண்டம் - வரைக்காட்சிப் படலம் - 35.
7. கழறிற்றறிவார் நாயனார் புராணம் - 149.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நிலத்தை நங்கையாக உருவகம் செய்தவர், காலத்தையும் பெண்ணாக உருவகம் செய்தனர்.[1] சிறுபொழுதாகிய கங்குல் இடையாமத்தினைக் கடலாகக் கூறினர்.[2] பெண்களுள் அழகிற் சிறந்தாளை இலக்குமி என்று கூறினர். திருவோடு வழங்கிய திருநீலகண்ட நாயனாரின் மனைவியாரையும், இயற்பகை நாயனாரின் மனைவியாரையும் இலக்குமியாக இயம்பினர். இவ்விருவரையும் இலக்குமியாகக் கூறியது என்னையெனின், இலக்குமியென விளங்கிய மனைவியை நீத்துப் பொதுமகள்பால் சென்ற திருநீலகண்டர் எளியர் எனவும், இலக்குமியெனத் திகழ்ந்தவளை அடியாருக்குக் கொடுக்க மனம் துணிந்தவரான இயற்பகை நாயனார் வீரர் எனவும் காட்டுவான்வேண்டி இருவர் மனைவியாரையும் இலக்குமி எனக் கூறினார் ஆசிரியர்.

பருப்பொருட்களை உருவகம் செய்த சேக்கிழார் நுண் பொருட்களையும் உருவகம் செய்தார். புலவியையும் துன்ப மிகுதியினையும் கடலாகவும், அதனைக் கடத்தற்குத் துணையாவாரைப் புணை ஆகவும் உருவகம் செய்தார்.[3] மகிழ்ச்சியை வெள்ளமாகக் கூறினார்.[4]

உயர்வு நவிற்சி அணி

உள்ளதை உள்ளவாறு கூறாது, கவிஞனின் உள்ளம் விரும்ப கற்பனையாக உயர்வாகக்கூறுவது உயர்வு நவிற்சியணியாம். இதை ''ஒரு பொருளை அதன் தன்மையினும் மிகுத்துக் கூறுவது உயர்வு நவிற்சியணி'' என்று வேறுபட மொழிந்தார் ந. சுப்பு ரெட்டியார் அவர்கள்.[5] ஒரு கட்டிடத்தின் உயரத்தைத் துல்லியமாகக் கூறுவது அறிவியல்; அதை அப்படியே கூறாமல் அது வானத்தைத் தொட்டு நிற்கின்றது எனக் கூறல் கலையியல்.

---

1. ஆனாய நாயனார் புராணம் - 19.
2. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 321.
3. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 321.
4. தடுத்தாட்கொண்ட புராணம் - 106.
5. கவிதையனுபவம் - பக். 218; ந. சுப்பு ரெட்டியார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருவாரூர் நகர வீதிகளைக் குறிக்குமிடத்துச் சேக்கிழார், ''மங்குல்தோய் மாட வீதி''[1] என்றுரைத்தார். தில்லையைச் சுற்றி உள்ள அகழியைக் கூறுமிடத்து,

''நடந வின்றருள் சிலம்பொலி போற்றும்
நான்ம றைப்பதியை நாளும் வணங்கக்
கடல்வ லங்கொள்வது போல்புடை சூழுங்
காட்சி மேவி...... ......''[2]

என்றும், மேன்மழநாட்டு வைக்கோற் போர்களில் மேகம் வந்து தங்குவதை,

''ஈடு பெருக்கிய போர்களின் மேகம் இளைத்தேற''[3]

என்றும், குண்டையூரில் நம்பியாரூரர்க்கு இறைவன் கொடுத்த நெல் அளவை,

''விண்ணினை அளக்கும் நெல்லின் வெற்பு''[4]

எனவும் உயர்வு நவிற்சியாகக்கூறினார் செய்யுள்வல்லார் சேக்கிழார்

தற்குறிப்பேற்றவணி

இயற்கையாக நிகழும் நிகழ்ச்சிகளில் புலவன் தன்னுடைய குறிப்பை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்றவணியாம்.

சேக்கிழார் பெருமான் பலவிடங்களில் தற்குறிப்பேற்றத்தை அமைத்துள்ளார். அவற்றுள் சிலவற்றைக் காண்போம். திருஞான சம்பந்தர் சிவிகையில் மதுரையை அணைந்தார். அப்பொழுது,

''செந்தமிழ்மா ருதம்எதிர்கொண் டெம்மருங்குஞ் சேவிப்ப''[5]

என்றார் குன்றைவாழ் முனிவர். சம்பந்தர் மதுரையை அணைந்த போது தென்றல் வந்தது. இதைச் சேக்கிழார் சிவிகையின் மேல்

1. திருநகரச் சிறப்பு.
2. தடுத்தாட்கொண்ட புராணம் - 95.
3. ஆனாய நாயனார் புராணம் - 1.
4. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 19.
5. திருஞானசம்பந்த நாயனார் புராணம்-649.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வந்த திருஞானசம்பந்தரை மறைமுனிவர்கள் வணங்கினர். அவர்களுடன் செந்தமிழுடன் பொருந்தி வந்த தென்றல் காற்றும் எதிர்கொண்டு வரவேற்று எப்பக்கமும் சேவித்தது எனக் கற்பித்துக் கூறினர். தமிழ் மலையிற் பிறந்து, தமிழ்நாட்டில் பயின்று தமிழுடன் விரவித், தமிழ்த் தென்றல் தமிழ் ஞானசம்பந்தரைச் சேவிக்க வந்தது சாலப் பொருத்தமே. வடக்கினின்றும் வந்த சம்பந்தரைத் தெற்கினின்றும் சென்ற தென்றல் வரவேற்றது முறையே.

ஆரூரர் பரவையாரைக் கண்டு காதல் கொண்டு பின் தேடினர். அப்பொழுது மாலை வந்தது. கதிரவன் மேற்கடலில் விழுந்த செய்தியினை ஆசிரியர்,

''நாட்டு நல்லிசை நாவலூ ரன்சிந்தை
வேட்ட மின்னிடை இன்னமு தத்தினைக்
காட்டு வன்கட லைக்கடந்''தென்பபோற்
பூட்டு மேழ்பரித் தேரோன் கடல்புக''[1]

என்று விளக்கினர். மின்னிடை அமுதமாகிய பரவையைக் கடலைக் கடந்து காட்டுவன் என்பபோல் கதிரவன் மேலைக் கடலுள் புக்கனனாம். பரவை-அமிழ்தம்.

இதனை, ''அமுதம்-மரணத்தைப் போக்கி உயிரைக் கொடுப்பது. அமுதமலை கடலுக்கு அப்புறம் உள்ளது என்றும், அது வந்தால் இறந்தாரும் உயிர் பெறுவர் என்றும் பெருநூல்கள் பேசும். கதிரவன் மேல்கடல் கடந்தாற் கீழ்கடலிற் தோற்றுவன். அதுவே உதயம் எனப்படும். மறுநாள் பரவையார் மணம் நிகழ்தலின் கடல் கடந்து காட்டுவன் என்பது குறிப்பாம்'' என்று விளக்கினார். சி. கே. சுப்பிரமணிய முதலியார்.[2] உயிர் போய்க் கொண்டிருக்கும் ஆரூரரைக் காக்க வல்லவள் அமுதமாகிய பரவையார்தான் என்ற நயமும் உண்டு. இஃது உருவகமும் தற்குறிப்பேற்றமும் வந்த கலவையணி.

---

1. தடுத்தாட்கொண்ட புராணம்-157.
2. திருத்தொண்டர் புராண உரை-முதற்பகுதி-பக். 367 -சி.கே. சுப்பிரமணிய முதலியார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிலேடை அணி

பலபொருள் தருகின்ற ஒருவகைச் சொற்றொடருக்குச் சிலேடை அணி எனப் பெயராம்.

"ஒருவகைச் சொற்றொடர் பலபொருட்பெற்றி
தெரிவுதர வருவது சிலேடை யாகும்"[1]

திருவாரூர்க் கடைவீதிக்கும் கடலுக்கும் சிலேடை வகையால் ஒப்புமை காட்டினர்.

"விளக்க மிக்க கலன்கள் விரவலால்
துளக்கில் பேரொளி யால்துன்னு பண்டங்கள்
வளத்தொ டும்பல வாறு மடுத்தலால்
அளக்கர் போன்றன ஆவண வீதிகள்"[2]

கடைவீதிகள்

ஒளிமிக்க ஆபரணங்கள், பேரொலி, பல பண்டங்கள் நிறைந்திருக்கும்.

கடல்

பலவகை விளக்குகள் கொண்ட மரக்கலன்கள், அலைகளின் பேரிரைச்சல், மலை, காடு, நாடு முதலிய பல இடங்களின் பண்டங்களை வளத்துடன் பல ஆறுகள் வாரிக்கொணரும் என்று இருபொருள்படப் பேசினர்.

இளையான்குடிமாற நாயனாரிடத்து மாரிக்காலத்து இரவினில் வந்த சிவனடியாரை,

"கொற்ற ஏனமும் அன்ன மும்தெரியாத கொள்கைய ராயினார்"[3] என்று நுவன்றார் சேக்கிழார். பன்றி உருவமெடுத்த திருமாலும் அன்னம் உருவெடுத்த அயனும் தெரியாத கொள்கையினரான இறைவர் என்பது ஒரு பொருள். பசித்த உடம்பினரான

1. தண்டியலங்காரம்-சூத். 76.
2. திருநகரச் சிறப்பு-9.
3. இளையான்குடிமாற நாயனார் புராணம்-8.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிவனடியார், பாத்திரமும் இன்றி, அதில் சோறும் இன்றி, இவ்விரண்டனையும் காணாத தன்மையை உடையவர் என்பது பிறிதொரு பொருள். இனி மூன்று பொருள் தோன்றும்படியும் பாடியுள்ளார். இறைவனைச் சேக்கிழார்,

''பூவணத் தவரை உற்றார் அவரலால் புரங்கள் செற்ற
ஏவணச் சிலையி னாரை யார்தொடர்ந் தெட்ட வல்லார்''[1]

எனப் பாடினர். இதற்குச் சி. கே. சுப்பிரமணிய முதலியார், பூவணத்தவரை என்ற சொற்றொடர்க்குப் ''பூ வணத்தவர் - அழகிய திருமேனியுடையவர்; திருப்பூவணத்தில் எழுந்தருளிய இறைவர்; பூவும் மணமும் போன்று பிரிக்க முடியாதவர் (பூவணம் - பூவின் தன்மை)'' என்று பொருள் கூறினார்.[2]

இங்ஙனம் பல்பொருள் வைத்துச் சிலேடை நயம் தோன்றக் கூறியது சேக்கிழாரின் நுண்மாண் நுழைபுலத்தைக் காட்டுகின்றது.

சொல்பின்வரு நிலையணி

பொருள் மாறுபட்டதாயினும் வந்த சொல்லே திரும்பத்திரும்ப வருவது சொல்பின்வரு நிலையணி.

பரவை என்னும் பெயரைக் கொண்டு பரவையாரை,

''பேர்பரவை பெண்மையினில் பெரும்பரவை விரும்பல்குல்
ஆர்பரவை அணிதிகழும் மணிமுறுவல் அரும்பரவை
சீர்பரவை ஆயினாள் திருவுருவின் மென்சாயல்
ஏர்பரவை இடைப்பட்ட என்ஆசை எழுபரவை''[3]

எனச் சொல்லடுக்கு வைத்துப் பாடினர்.

இப்பாடலில் பரவை எனும் சொற்கள் பொருள் மாறுபட்டதாயினும் மீண்டும் மீண்டும் தோன்றி ஒருவித நயத்தைப் புலப்படுத்தின.

---

1. தடுத்தாட்கொண்ட புராணம்-44.
2. திருத்தொண்டர் புராண உரை-முதல் பகுதி-பக். 221; சி. கே. சுப்பிரமணிய முதலியார்.
3. தடுத்தாட்கொண்ட புராணம்-148.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொருட்பின்வரு நிலையணி

சொற்கள் வேறுபட்டதாயினும் வந்த பொருளே மீண்டும் மீண்டும் வருமெனின் பொருட்பின்வரு நிலையணியாம்.

வேடர்களைப் பற்றிக் கூறிய சேக்கிழார்.

''செந்தினை இடியும் தேனும் அருந்துவார்; தேனில் தோய்த்து
வெந்தஊன் அயில்வார்; வேரி விளங்கனிக் கவளம் கொள்வார்
நந்திய ஈயல் உண்டி நசையொடு மிசைவார்; வெவ்வேறு
அந்தமில் உணவின் மேலோர் ஆயினர் அளவிலார்கள்''[1]

எனப் பாடினார். அருந்துவார், அயில்வார், கொள்வார், மிசைவார் என்ற பல சொற்கள் ''உண்டார்'' என்ற ஒரே பொருளைத் தந்தன.

சொற்பொருட்பின்வரு நிலையணி

சொல்லும் அதற்குள்ள பொருளும் மீண்டும் மீண்டும் வருவது சொற்பொருட்பின்வரு நிலையணியாம்.

பரவையாரின் இளமையழகுச் செழிப்பினைக் கவிவலவர்,

''மானிளம் பிணையோ? தெய்வ வளரிள முகையோ வாசத்
தேனிளம் பதமோ? வேலைத் திரை இளம் பவள வல்லிக்
கானிளம் கொடியோ? திங்கட் கதிரிளங் கொழுந்தோ? காமன்
தானிளம் பருவம் கற்கும் தனி இளந் தனுவோ என்ன''[2]

என்று உருவகப்படுத்தி வருணித்தார். இப்பாடலுள் ''இளம்'' எனும் ஒரே சொல் பொருள் மாறாமல் எட்டிடங்களில் வந்துள்ளது.

உள்ளுறை

செய்யுள்களில் வெளிப்படையாகச் சொல்லப்படுகின்ற பொருளே அல்லாமல், சில குறிப்புப் பொருள்களும் தோன்றும். இவை செய்யுளுக்கு உள்ளே உறைந்து மறைவாக இருக்கும். இத்தகைய குறிப்புப் பொருள்கள் எல்லாம் உள்ளுறை எனப்படும். புலவன்

---

1. கண்ணப்ப நாயனார் புராணம் - 35.
2. தடுத்தாட்கொண்ட புராணம் - 134.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தான் வெளிப்படையாகக் கூறாது படிக்கின்றவர் எடுத்துக்கொள்ளும் வண்ணம் அவர்களுக்கே அதை விட்டு விடுவான். சேக்கிழார் இவ்வுள்ளுறையை,

"மலைவளர்சந் தகில்பீலி மலர்பரப்பி மணிகொழிக்கும்
அலைதருதண் புனற்பெண்ணை யாறுகடந் தேறியபின்"[1]

என்ற பாடலுள் அமைத்துச் சென்றார். பெண்ணையாற்றின் தன்மையினைச் சேக்கிழார் இவ்வாறு நவின்றார். மலையிலே வளர்ந்த சந்தனம் அகில் என்னும் மரங்களையும், மயிற்பீலியையும் மலர்களையும் வாரிக்கொண்டு எங்கும் பரப்பி மணிகளைக் கொழித்து அலைகளுடன் ஓடிவரும் குளிர்ந்த நீர்ப்பரப்பினைக் கொண்டது பெண்ணையாறு என ஆற்றின் செயலையும் தன்மையையும் கூறினார்.

"அகில் - சந்து - பீலி முதலியன மலைபடு பண்டங்களாம். மலர்கள் மலையிலும் முல்லைப் புறவங்களிலும் சோலைகளிலும் உள்ளன. இவற்றை வாரிக்கொண்டு தான் புகுந்து செல்லும் மருத நில முழுதும் பரப்பி ஓடுதல் பெருவெள்ளமுடைய பெண்ணையாற்றின் இலக்கணமாம். மணி கொழித்தல் அதன் செல்வப் பெருக்கையும், அலைதருதல் நீரின் பெருக்கையும் குறிக்கும். இதனால் அதன் பிறப்பிடச் சிறப்பும், புகுமிடத்திற்குத் தரும் பயனும் கூறினார். பெண்களின் இலக்கணமும் இதுவேயாம். பெண்ணை என்ற பேரும் காண்க. இவ்வாறு வருணனையிலே பொருட் சிறப்பினை உள்ளுறையாகக் கூறுதல் மகாகவியின் தன்மை" என விளக்கம் கூறினர்.[2]

பெண்ணையாறு மணங்கமழ்கின்ற பொருள்களைத் தன் நீர்ப் பெருக்கால் பரப்பிச் சென்று கொண்டிருந்தது. இக்காட்சியைச் சேக்கிழார் அடுத்துவரும் காட்சிக்கு முன்னோடியாகவும் வைத்தார். நம்பி இறைவனால் தடுத்தாட்கொண்ட பின்பு திருத்தலங்கள் தோறும் சென்று இறைவனை வணங்கித் திருத்தில்லைக்குச் சென்று

---

1. தடுத்தாட்கொண்ட புராணம் - 82.
2. திருத்தொண்டர் புராண உரை - முதற் பகுதி - பக். 263; - சி.கே. சுப்பிரமணிய முதலியார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொண்டிருந்தார். அப்பொழுது பெண்ணையாற்றைக் கடந்தார். அப்பெண்ணையாறு நீர்ப்பெருக்கால் மணம் பரப்பிச் சென்றது போன்று, திருவெண்ணெய்நல்லூரிலு திருத்துறையூரிலும் தான் பெற்ற பெருவெள்ள அருட்செல்வத் தவநெறியை நம்பிகளும் இனித் தான் புகும் திசைகளிலெங்கும் பரப்பிச் செல்வார் என்பது உள்ளுறை யாகும். ஆற்றில் வருபவை உயர்ந்த சிறந்த மணங்கமழ் பொருள் போன்றே சுந்தரர் திருவாயினின்றும் வருபவை பிறவி நீக்கும் பேரின்பப் பொருட்களாகும் என உள்ளுறையும் அமைந்துள்ளது. மேலும் சேக்கிழார்.

"பூமுகை அவிழ்ந்துமணம் மேவுபொழில் எங்கும்
தேமருவு தாதொடு துதைந்ததிசை யெல்லாம்
தூமருவு சோதிவிரி யத்துகள் அடக்கி
மாமலய மாருதமும் வந்தசையும் அன்றே"[1]

என்ற பாட்டிலும் உள்ளுறை அமைத்தார். சோலைகளில் பூக்கள் விரிந்து மணமுடைய பூந்தாதுகளைத்திசையெங்கும் பரப்பின. மணம் பரவியபோதிலும் பரவிய பூந்தாதுக்கள் ஒளியை மறைத்து இருளை உண்டாக்கின. அக்காலை மாமலைய மாருதம் வந்து ஒளியை மறைத்து இருள் உண்டாக்கின துகளை அடக்கி மீண்டும் ஒளி பரவத் துணை செய்தது.

திருஞானசம்பந்தர் தோன்றி அமண் இருளைப் பரப்பிய சமணர்களை அடக்கித் திருவெண்ணீற்றின் ஒளியினைப் பரப்பச் செல்லுகின்றார் என்பதை உள்ளுறையாக சீர்காழிப் பொழிலின்கண் மந்த மாருதம் தோன்றி பூந்துகளை அடக்கி ஒளி பரப்பியது என்பதன் மூலம் சேக்கிழார் எடுத்துக் கூறினர்.

வருணனை

நாடு

சோழ நாடு

சேக்கிழார் நாயன்மார் வாழ்ந்த அத்தனை நாடுகளையும் வருணித்துக் கூறினும், காவியத்திற்குரிய நாடாக காவிரி பாயும் சோழ நாட்டடையே எடுத்துக்கொண்டு அந்நாட்டு இயல்பினை, தன்மையினை உள்ளவாறு வருணித்தார்.

---

1. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 29.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''அகத்திய மாமுனியின் நீர்க்கமண்டலத்தினின்றும் பொழிந்த காவிரி, நிலமடந்தையின் பொன்மார்பில் அணியப்பெற்ற முத்தாரம் போன்றது. தன் இரு கரைகளிலும் சிவபெருமானின் எண்ணற்ற திருத்தலங்களைக் கொண்டு திகழ்கின்றது. மதகுகளின் வழியே சென்ற புதுவெள்ளம் வயலினுள் புகுந்ததும், மன்னர்கள் மகிழ்ச்சியினால் கைகொட்டி ஆரவாரிக்கின்றனர். மாதர் ஒரு பக்கம் நாற்று பறிக்கின்றனர்; நாற்று முடிகளை இன்னொரு பக்கம் சேர்க்கின்றனர்; சேர்த்த நாற்றினை இந்திர தெய்வத்தைத் தொழுது வரிசை வரிசையாக உழவர் உழுத சேற்றில் நடுகின்றனர்.

நட்ட பயிர்கள் வளர, வளர சுருள் விரியக் கடைசியர்கள் களையெடுப்பர். முத்துக்களை ஈனும் சங்குகள் தம் காலில் இடறுவதால் கூந்தல் அசைய அருகில் உள்ள வரம்புகளில் சேர்வார். தாமரையில் தேன் பருகுவர். வளர்ந்த பயிரைக் கரும்பென மயங்குவர்; கரும்பினைக் கமுகு என மயக்கங்கொள்வர். கரும்பாலையைச் சுழற்றுகின்றவரின் ஆர்ப்பொலியும், சோலையிடத்து வண்டுகளின் ஆர்ப்பும், நான்மறையோர் வேத முழக்கமும் கடலலையின் ஒலியினும் பெரிது முழங்கும். அன்னங்கள் விளையாடுகின்ற பெரிய துறைகளையுடைய வாவிகளிலே கூட்டமாகிய எருமைகள் வீழ்ந்து முழுகுதலால் இளவாளை மீன்கள் அருகிலிருக்கும் கமுக மரங்களின் மேல் பாய்கின்றன. இக்காட்சி வானத்திலே தோன்றி மறையும் வானவில்லைப் போன்றிருக்கும். அன்பர் மனம்போல அலர்ந்த பயிர் விளைந்தன. விளைந்த செந்நெல் அரிகளை அரிந்து மலையென அடுக்குவர்; நெல்லினைச் சாலியினின்றும் அடித்தெடுத்து மழை பெய்வதுபோலத் தூற்றிய பின்னர் பொற்குன்றுபோல் குவிப்பர். எங்கு நோக்கினும் நெல் மலைகளே தோன்றும். நெல் மணிகள் பிரித்தெடுக்கப்பெற்றதாட் குவியலை எருமைக் கூட்டங்களால் மிதிக்க விடுவர். இக்காட்சி, கருமேகங்கள் பெரிய பொன்மலையின் சாரலின்மேல் வலம் வந்து சுற்றுவது போல் தோன்றும். எங்கு நோக்கினும் நெல்மலைகளும். நவமணிக் குன்றுகளும் இருக்கின்றமையால், தாமரை பூத்த நீர் பொருந்திய மருத நிலம் குறிஞ்சி நிலத்தைப் போன்றிருக்கின்றது.

விளைந்த நெற்குவியல்களில் ஆறில் ஒரு பங்கினை அரசர்க்குச் செலுத்திய பின்பு, எஞ்சியவற்றைக் கொண்டு அறங்கள், கடவுள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பூசை, தென்புலத்தார், விருந்தினர், சுற்றத்தினர் இவர்களை ஓம்பி வாழ்கின்ற மக்கள் உறையும் மாடங்கள் அப்பதியெங்கணும் மலை போன்று உயர்ந்து காணப்படுகின்றன. உயர்ந்த மாடங்களும், பரந்த சோலைகளும் எங்கும் உள்ளன.

தென்னை, செருந்தி, நறுமலர் நரந்தம், அரசு, கடம்பு, பச்சிலை மரம், குளிர்மலர்க் குரவம், பனை, சந்தன மரம், நாகம், நீள்இலைவஞ்சி, காஞ்சி, நிறைமலர்க் கோங்கம் ஆகிய மரங்கள் எங்கணும் காணப்பட்டன.

மா, பாதிரி, சுரபுன்னை, குங்குமப்பூ ஆகிய மரங்களும், கொடிப் பூ வகையாகிய சாதிப்பூ, முல்லை, மல்லிகை, கோட்டுப்பூ வகையாகிய அனிச்சம், மாதவி, சரளம், வகுளம் ஆகிய மலர்களும், போதவிழ்கைதை, கமுகு, புன்னை ஆகிய மரங்களும் எங்கும் நிறைந்துள.

மங்கல வினைகளும், அவ்வினைகளுக்காக அமைக்கப் பெற்ற பந்தர்களும், செங்கயல் வயல்களும் சூழ்ந்துள. இது திருமகள் உறையுமிடமாயிற்று. வேதமோதுகின்ற மாணவர் கூட்டம்; இசை பயில்கின்ற மடவார் கூட்டம், யாகம் செய்கின்ற மறையவர் ஈட்டம்; யோகம் செய்கின்ற முனிவர் கூட்டம் யாண்டும் பெருகியுள. விழவின் ஆர்ப்பும், விருந்தினர் ஆர்ப்பும் வீதிகளில் மிக்கன. சாதி நெறியினின்று தப்பாது, மனை ஒழுக்கத்தினின்று வழுவாது மக்கள் வாழ்தலாலும் எல்லா உயிர்களும் ஐந்தெழுத்தை ஓதுதலாலும், வருகின்ற பிணிகளும் வர அஞ்சும்.''[1] இத்தகைய சிறப்புடையது சோழ நாடு என்று வருணித்தார் சேக்கிழார்.

நகர்

''சோழ நாட்டிடை திருவாரூர் தொன்மைமிக்க பதியாகும். இலக்குமித் தேவியினால் வழிபடப் பெற்றது. வன்னியும், கங்கையும், நிலாவும் தங்கிய சிவந்த சடைமுடித் தலைவராகிய தியாகேசர் எழுந்தருளிய திருவாரூர்த் திருநகர் சிறப்பு வாய்ந்தது. வேத ஓசையும், வீணையின் ஓசையும், வானவர் தோத்திரஓசையும், மாதர் ஆடலுக்குத் தக்க முழவோசையும் ஒன்று கலந்து அந்நகரில்

1. திருநாட்டுச் சிறப்பு - 2, 7, 10, 11, 12, 13, 15, 18, 19, 23, 24, 25, 26, 27, 28, 29, 30, 31, 32, 33, 34.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெருங்கிளர்ச்சியைத் தந்தன. இத்தகைய ஒலிகளுடன் திருவீதிகளில் அழகிய தேர்களின் ஒலியும், யானை, குதிரைகளின் ஒலியும் நகரெங்கும் எழுந்தன. மாடம், மாளிகை, சூளிகை, மண்டபம், கூடம், சாலைகள், கோபுரம், தெற்றிகள், சாளரம், அரங்கு ஆகிய இடங்களில் ஆடல் மாதராரின் அணி சிலம்பு ஆர்த்தன.

இத்தகைய நகரின்கண், பரவையார் அவதாரம் செய்கின்ற மாளிகையும் ஒன்றாம். சுந்தரருக்குத் தூது போன இறைவனின் செந்தாமரையடியால் நகரத்து வீதிகள் கமழ்ந்துகொண்டே இருக்கும். மகளிர் சிந்திய குங்குமக் குழம்பினை அவர் கூந்தலினின்றும் வீழ்ந்த பூந்தாதுக்கள் உலர்த்தும். திருப்பதிகங்களைக் கிள்ளைகள் பாட, நாகண வாய்ப்புட்கள் கேட்கும். விளக்கமிக்க கலன்களாலும், பேரொலியாலும், பண்டங்கள் நெருங்கியிருத்தலாலும் கடைவீதிகள் கடலைப்போன்று காட்சியளித்தன. வேதங்கள் முழக்கத்துடன் யானைகளும் முழங்கின. சடைமுடியினர், சைவர், பெருந்தவசியர், சிந்தை முனிவர், மறையவர், இன்பத் துறைகளில் பொருந்தியவர் ஆகியோர் வாழும் பழமைமிக்க நகரம் திருவாரூர். நிலமடந்தையின் நெற்றியில் திலகம் போன்றது. மலர்மடந்தை உறைகின்ற தாமரை போல மலர்ந்து அளவில்லாத சிறப்புடையது திருவாரூர்த் திரு நகரம்''.[1]

ஆதனூர்ப் புலைப்பாடி

''திருநாளைப் போவார் நாயனார் புராணத்தில், ஆதி திராவிடர்கள் சேரி வருணனைப் பகுதி முதற்கண் சிந்திக்கத் தக்கது''.[2] ''ஆதனூரில் வயல்கள் சூழ்ந்து, குடிசைகள் நிறைந்த பகுதிகளில் உழவுத் தொழிலை உரிமையாகக் கொண்ட மக்கள் பலர் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். வீடுகள் பழங்கூரை உடையவை. கூரையின் மீது வைக்கோற்புல் வேயப் பெற்றிருக்கும். அதன் மீது சுரைக்கொடிகள் படர்ந்திருக்கும். அவ்வீடுகள் உள்ள பகுதி புலைப்பாடி என வழங்கும்.

சிறு நாய்கள் அத்தெருவில் சுழலும்; கோழிக்குஞ்சுகள் சுற்றித் திரியும். முற்றங்களில் விளையாடிக் கொண்டிருக்கின்ற நாய்க்

1. திருநகரச் சிறப்பு - 1-12.
2. கலைக்களஞ்சியம் - பகுதி-7; பக். 539.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குட்டிகளைக் கரிய சிறுவர்கள் கையில் ஏந்திக் கொண்டு ஓடுவர். அவர்களின் இடுப்பில் கட்டப்பெற்ற இருப்பு மணிகளின் ஒலி நாய்க் குட்டிகளின் மெல்லிய ஒலியை அடக்கிவிடும். அங்குள்ள மருத மர நிழலிலே உழத்தியர் தம் குழந்தைகளைத் தோலின் மீது கிடத்தி உறங்கச் செய்வர். வஞ்சி மரத்தின் அடியில் கோழிகள் முட்டை யிட்டு அடை காக்கும் பானைகளைப் புதைத்து வைத்திருப்பர்; மாமரத்திலே வார் கட்டிய பறைகளைத் தொங்கவிட்டிருப்பர். தென்னை மரங்களின் அடிப்பொந்துகளில் குட்டிகளை ஈன்ற நாய்கள் படுத்துறங்கும். விடியற்காலத்தில் உழவர்களை எழுப்பும் சேவல்கள் காஞ்சி மரக்கிளைகளில் தங்கியிருக்கும். அம்மரங்களின் நிழலில் புலைமகளிர் நெற்குற்றும் பாட்டு ஒலி எங்கும் கேட்கும். குவளை மலர்களையும் நெற்கதிர்களையும் கூந்தலில் அணிந்த புன்புலைச்சியர் கள்ளினை உண்டு பறைகொட்டி அதற்கிசையப் பாடி ஆடுவர்.''[1]

கண்ணப்ப நாயனார் புராணத்தில் உடுப்பூர் வேடர் சேரி யினையும்,[2] அதிபத்த நாயனார் புராணத்தில் பரதவர் நுளைப் பாடியினையும் சேக்கிழார் வருணித்துள்ளார்.[3]

திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணத்துள் ஐந்து நிலங் களை வருணித்தார்.[4] இவற்றைத் தொண்டைநாட்டு வருணனை யாகவுங் கொள்ளலாம். ஒவ்வொன்றின் வருணனையையும் விரிப்பின் பெருகும். இவற்றுள் திணை மயக்கத்தினை மட்டும் சான்றுக்கு ஈண்டு காண்பாம்.

திணை மயக்கம்

ஐந்திணை வருணனையை இனிக்கக் கூறிய சேக்கிழார் திணை மயக்கத்தையும் கூறினர். இயற்கையைக் கூர்ந்து நோக்கும் பொழுது ஒவ்வொரு திணையும் தனித்து இருப்பதுடன், பிற திணைகளுடன் மயங்கியும் இருக்கும். அஃது இயற்கையாக இருத்தலின் ஐந்நில வருணனையைக் கூறிய சேக்கிழார், அதனை

---

1. திருநாளைப்போவார் நாயனார் புராணம் - 6-10.
2. கண்ணப்ப நாயனார் புராணம் - 2-7.
3. அதிபத்த நாயனார் புராணம் - 5-8.
4. திருக்குறிப்புத்தொண்ட நாயனார் புராணம் - 6-40.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யொட்டிய திணை மயக்கங்களையும் கூறினர். குறிஞ்சியுடன் - நெய்தல்,[1] மருதம்,[2] முல்லை,[3] முல்லையுடன் - நெய்தல்,[4] மருதம்,[5] மருதத்துடன் - நெய்தல்,[6] ஆகியவை மயங்கின என்று ஆறுவகைத் திணைமயக்கங்களை அழகுபட அமைத்தனர் ஆசிரியர். சான்றுக்கு ஒன்று காண்போம். சேக்கிழார்,

> " கவரும் மீன்குவை கழியவர் கானவர்க் களித்துச்
> சிவலும் சேவலும் மாறியும் சிறுகழிச் சியர்கள்
> அவரை ஏனலுக் கெயிற்றியர் பவளமுத் தளந்தும்
> உவரி நெய்தலும் கானமும் கலந்துள ஒழுக்கம் "[7]

என நெய்தலும் முல்லையும் கலந்த திணைமயக்கத்தினைச் செப்பினர். நெய்தல் நிலத்து ஆண்பாலார் முல்லை நிலத்து ஆண் பாலாரிடம் மீன் கொடுத்துச் சிவலும் சேவலும் பெற்றனர். நெய்தல் நிலத்துப் பெண்பாலார் முல்லை நிலத்துப் பெண்பாலாரிடம் அவரையும், ஏனலும் பெற்றுக் கொண்டு பவளத்தையும் முத்தையும் அளந்து கொடுத்தனராம். மீனாகிய உயிர்ப்பொருளுக்கு சிவலும் சேவலுமாகிய உயிர்ப் பொருட்களும், அவரை, ஏனலுமாகிய விளை பொருட்களுக்கு முத்தும் பவளமுமாகிய விளைபொருட்களும் தரப் பெற்றன. பொருட்களின் மதிப்பு கருதப்பெற்றது. இங்ஙனம் திணை ஒழுக்கத்தில் நெய்தலும் முல்லையும் கலந்தன.

இவ்வாறு சேக்கிழார் கற்பவர் உள்ளம் மகிழும் வண்ணம் கற்பனையையும் அணிநலத்தையும் காவியத்துள் அமைத்துச் சுவையாக்கினார்.

---

1. திருக்குறிப்புத் தொண்டர் நாயனார் புராணம் - 41.
2. திருக்குறிப்புத் தொண்டர் நாயனார் புராணம் - 42.
3. திருக்குறிப்புத் தொண்டர் நாயனார் புராணம் - 43.
4. திருக்குறிப்புத் தொண்டர் நாயனார் புராணம் - 44.
5. திருக்குறிப்புத் தொண்டர் நாயனார் புராணம் - 45.
6. திருக்குறிப்புத் தொண்டர் நாயனார் புராணம் - 46.
7. திருக்குறிப்புத் தொண்டர் நாயனார் புராணம் - 44.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பகுதி 4

சுவைகள்

''உண்ணிகழ் தன்மை புறத்துத் தோன்ற
எண்வகை மெய்ப்பாட்டி னியல்வது சுவையே''.

— தண்டியலங்காரம் - நூற்பா 69.

✲

''நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பால் எட்டே மெய்ப்பா டென்ப''.

— தொல்காப்பியம் - பொருளதிகாரம்,
நூற்பா 247.

✲

''கடவுளிடம் காட்டும்அன்பு பத்தியாகும். இந்த மண்ணில் இத்தகைய அன்பு உணர்ச்சி ஒரு சுவையாக ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டும். அதுவே உண்மையும் இயற்கையுமாகும்''.

— The Number of Rasas P. 129, 135.
டாக்டர் வி. இராகவன்

✲

''எல்லாச் சுவையினும் பத்திச் சுவை மேம்பட்டதாகத் திகழ்கின்றது''.

— இலக்கியக் கலை - பக். 249.
அ. ச. ஞானசம்பந்தன்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

007487

சுவைகள்

ஐம்புலன்கள் வழியாக உணர்ச்சிகள் அடைந்து அகத்தே தங்கி மெய்யின் மூலமாகச் சில மாறுதல்களை உண்டாக்கும். இதற்கு மெய்ப்பாடு எனப்பெயர். அகத்தே உணர்வு தோன்ற மெய்யில் படுகின்ற அசைவுகள் மெய்ப்பாடாம். ''புறத்துப் பொருள்களைக் ''கண்டு கேட்டுண்டுயிர்த் துற்றறியும்'' ஐம்பொறி வழியாக அகத்துச் சுவைத்து எய்திய அகவுணர்வின் உண்மையினை உள்ளவாறே புறத்தார்க்கு மெய்யின்கண் புலப்படச் செய்யும் நெறி''[1] என்றார் பேராசிரியர். ''சுருங்கக் கூறின், உடலசைவு களால் வெளிக்காட்டப்பெறும் உள்ளக் கிளர்ச்சியே மெய்ப்பாடு''[2] என்ற மேற்கோளைத் தம் நூலுள் காட்டினர். மெய்ப்பாடு தோன்றும்பொழுது அதனைப் பார்க்கின்றவர்க்கு ஒருவித இன்பம் ஏற்படுகின்றது; சுவை பயக்கின்றது. எனவே மெய்ப்பாடு சுவை எனப்படும். தொல்காப்பிய உரையாசிரியர்கள் மெய்ப் பாட்டினைச் சுவை என்றே குறித்துள்ளனர்.[3] இலக்கியத்தில் பயிலப்படும் மெய்ப்பாடுகளைச் சுவைக்கும்போது, உணர்ச்சியும், உள்ளக்கிளர்ச்சியும் உருப்பெறும். அதன் காரணமாகப் புற உடற்றோற்றங்களை நாம் அடைய முடியும். இதனையே தண்டியாசிரியர்,

''உண்ணிகழ் தன்மை புறத்துத் தோன்ற
எண்வகை மெய்ப்பாட்டி னியல்வது சுவையே''[4]

என நூற்பா அமைத்தார். சிலப்பதிகார உரையாசிரியர்

---

1. தொல்காப்பியம் - பொருளதிகாரம்: பேராசிரியர் உரை - பக். 3; கழகப் பதிப்பு.
2. சிலம்பில் மெய்ப்பாடுகள் - பக். 1; டி. ஜி. என். தாசன்.
3. தொல்காப்பியம்-பொருள். சூத். 249; பேராசிரியர் உரை.
4. தண்டியலங்காரம் - சூத். 69.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அடியார்க்கு நல்லார் மெய்ப்பாட்டினைச் சுவை என்றே குறித்து உள்ளார்.[1]

வடமொழியாளர்கள் மெய்ப்பாட்டைப் ''பாவம்'' சத்துவம், ரஸம் என்றனர். எண்வகை மெய்ப்பாட்டுடன் சாந்தமும் (நடுவு நிலை) இணைக்கப்பெற்று நவரஸங்கள் என அழைக்கப்பட்டன.[2] மனிதனின் எல்லா வகையான உணர்ச்சிகளும் இவ்வொன்பது வகையுள் அடங்கிவிடும் எனக் கருதினர் வடமொழியாளர்கள்.

தொல்காப்பியர் மெய்ப்பாட்டினை,

''நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பால் எட்டே மெய்ப்பா டென்ப''[3]

என எட்டு வகையாகக் கூறினர். இவ்வெட்டு வகை மெய்ப்பாடு களுடன் தொல்காப்பியர் தொண்ணூற்று நான்கு (94) வகையான துணைமெய்ப்பாடுகளையும் விளக்கிக் கூறினார். ஒவ்வொரு மெய்ப்பாட்டுள்ளும் பல பிரிவுகளைக் காட்டினர். இதிலிருந்து தொல்காப்பியர் மெய்ப்பாடுகளை நுணுகி நோக்கியுள்ளார் என்பது புலனாகும்.

இத்துணை மெய்ப்பாட்டுப் பிரிவுகளையும் ஒரு காப்பியத்தில் ஆசிரியன் கூறாவிடினும் தலையாய எட்டுவகை மெய்ப்பாடுகளைக் காப்பியத்தில் அமைத்திருப்பான். பெரியபுராணக் காப்பியத்தில் சேக்கிழார் அமைத்த எட்டு வகையான மெய்ப்பாடுகளைக் காண்போம்.

1. நகை

உள்ளத்துள் தோன்றிய ஒருவகை இன்ப உணர்வினை, அது தோன்றும் புலன்வழி வெளிப்படுத்துவது நகையாகும். இதை நகைச்சுவை என்பர். உண்மையாகச் சிரித்தல் உடல் நலத்திற்

---

1. சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும் - பக். 83.
2. கலைக்களஞ்சியம் - தொகுதி: 5, பக். 10.
3. தொல்காப்பியம் - பொருள். சூத். 247.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கேற்றது என்று உரைத்தனர் உளநூலோர். ''இடுக்கண் வருங்கால் நகுக''[1] என்றார் திருவள்ளுவர்.

நகை தோன்றுவதற்குரிய நிலைக்களன்களாக,

''எள்ளல் இளமை பேதைமை மடனென்று
உள்ளப் பட்ட நகைநான் கென்ப''[2]

என்றனர், தொல்காப்பியர். ''உள்ளப்பட்ட நகை நான்கு என்றதனான் உள்ளத்தோடு பிறவாத நகையுமுள''[3] என்று பொருள் விரித்தனர் பேராசிரியர். காரணமின்றிச் சிரிப்புத் தோன்றும்.

நம்பியாரூரர், திருமணத்தன்று பழ ஓலை காட்டி, ''இந்நாவல் நகர் ஊரன் என் அடியான்'' என்று கூறிய மறைவேதியனை,

''நின்றார் இருந்தார் ''இவன் என்நினைந்தான்கொல்'' என்று
சென்றார் வெகுண்டார் சிரித்தார், திருநாவ லூ ரான்
நன்றால் மறையோன் மொழி'' என்றெதிர் நோக்கி நக்கான்[4]

என்றார். திருமணத்திற்கு வந்திருந்த அத்துணை அந்தணர்களும் மறையவனைப் பார்த்துச் சிரித்தனர்; ''மறையவன் மொழி நன்றாக இருக்கின்றது'' என்று கூறி திருநாவலூராரனும் சிரித்தனன். அத்தனை பேரும் அவ்வேதியனைப் பார்த்துச் சிரிக்கவில்லை. அவர் கூறிய கூற்றினைக் கேட்டுச் சிரித்தனர். ''அந்தணர்கள் வேறோர் அந்தணர்க்கு அடிமையாதல் இல்லை.[5] ஆனால் இந்த அந்தணன் சைவ வேதியர் குலத்தில் தோன்றிய ஆரூரனை அடிமை என்று கூறுகின்றானே. இவன் பித்தனோ?'' என்பதற்காகச் சிரித்தனர். பேதைமை என்பது அறிவின்மை. இது தன் பேதைமையால் பிறர் நகுதலும், பிறர் பேதைமை

---

1. திருக்குறள் - 621.
2. தொல்காப்பியம் : பொருள். சூத். 248.
3. தொல்காப்பியம் : பொருள். பேராசிரியர் உரை - பக். 7; கழகப் பதிப்பு.
4. தடுத்தாட்கொண்ட புராணம் - 38.
5. தடுத்தாட்கொண்ட புராணம் - 40, 52.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கண்டு தான் நகுதலும் என இரண்டாம்.[1] தொல்காப்பியர் வகுத்த நகை தோன்றும் நான்காகிய பேதைமை என்பதனுள் மேற்குறித்த இந்நகையை அடக்கலாம்.

திருநாவுக்கரசரை நீற்றறையில் தள்ளி ஏழுநாள் கழிந்ததற்பின் பல்லவனும் அமணர்களும் அதைத் திறந்து பார்த்தனர். சாம்பராகப் போயிருப்பார் தருமசேனர் என்று எண்ணிய சமணர்கள் ஊனந்தான் இலராகி அவர் உவந்திருந்த நிலையைக் கண்டு,

''அதிசயம்அன் றிது;முன்னை அமண் சமயச் சாதகத்தால்
இதுசெய்து பிழைத்திருந்தான்''[2]

என வேந்தற்குரை செய்தனர். நெடுங்காலம் சமண சமயத்திலிருந்து கற்றுக் கொண்ட வித்தையைச் சைவத்திற்கு வந்து, அதுவும் நீற்றறையில் இருந்தபொழுது பயன்படுத்திப் பிழைத்தான் என்று சமணர்கள் கூறிய கூற்றில் நகை தோன்றியது. நகை தோன்றும் நான்கு வகை நிலைக்களன்களுள் மடன் கீழ் இஃது அமையும்.

சமணர்கள் தாம் எழுதிய ஏட்டினைத் திருஞானசம்பந்தரோடு நடத்திய புனல்வாதத்தின்கண் நட்டாற்றில் விட்டனர். தாம் வெற்றி பெற வேண்டும் என நட்டாற்றில் விட்ட ஏடு சமணர் களையே நட்டாற்றில் விட்டுவிட்டுப் போய்விட்டது. இதனைச் சேக்கிழார்.

'' நாணிலா அமணர் தம்மை நட்டாற்றில் விட்டுப் போக''[3]

என விளம்பினர். இதனை நகைச்சுவையுள் அடக்கலாம்.

திருமுதுகுன்றத்தில் கிடைத்த பொன் முழுவதையும் செழுமணி முத்தாற்றில் இட்டுத் திருவாரூர்க் குளத்தில் எடுக்கச் சென்ற ஆரூரரைப் பார்த்துப் பரவையார்.

'' என்னஅதி சயம்இதுதான்? என்சொன்ன வா''றென்று
மின்னிடையார் சிறுமுறுவ லுடன்''[4]

---

1. தொல்காப்பியம் - பொருளதிகாரம் : பக். 386; குழந்தை உரை.
2. திருநாவுக்கரசர் நாயனார் புராணம் - 102.
3. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 816.
4. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 128.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விளம்பினார். குளத்தில் பொன்னைத் தேடியும் கிடைக்காத வன்றொண்டரை நோக்கி,

''ஆற்றினில்இட் டுக்குளத்தில் தேடுவீர் அருள்இதுவோ[1]
சாற்றும்''

எனக் கோற்றொடியார் எள்ளி நகையாடினார். இவ்வெள்ளல் நகை சுந்தரரை வேல்கொண்டு குத்துவது போன்றிருந்தது. திருமுனைப்பாடி நாட்டார் இறைவனை நோக்கி,

'' முன்செய்த அருள்வழியே முருகலர்பூங் குழற்பரவை
தன்செய்ய வாயில்நகை தாராமே தாரும்''[2]

என வேண்டினார். இஃது எள்ளல் வகையைச் சார்ந்தது. இங்ஙனம் நகைச்சுவையைச் சேக்கிழார் தம் காவியத்துள் சிறப்புற அமைத்துள்ளார்.

2. அழுகை

நகைக்கு எதிரான மெய்ப்பாடு அழுகை. இதனை அவலம் எனவும் கூறுவர். மகிழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு வாய்ப் புலன் வழி தோன்றும் அசைவு அல்லது வெளிப்பாடு நகையாகும்; துன்பத்தை அடிப்படையாகக் கொண்டு கண், வாய் முதலிய புலன் வழி தோன்றும் அசைவு அல்லது வெளிப்பாடு அழுகையாகும். சுருங்கக்கூறின் துன்பத்தின் உச்சி அழுகை எனலாம்.

''இலக்கியத்தில் துன்ப உணர்ச்சி மேலோங்கி அதுவே முடிவும் ஆகிவிட்டால் அதைத் துன்பியல் இலக்கியம் என்ற வகையுள் அடக்குவர். துன்பியல் (Tragedy) இலக்கியத்திற்கு இம்மெய்ப் பாடு தலைக்காரணமாக நின்று செயல்படுகின்றது. இஃதின்றேல் துன்பியல் இலக்கிய வகை உலக மொழிகளில் அமைய முடியாது எனலாம்.''[3]

---

1. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 131.
2. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 132.
3. சிலம்பில் மெய்ப்பாடுகள் - பக். 71; டி. ஜி. என். தாசன், எம்.ஏ.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"இழிவே இழவே அசைவே வறுமையென
விளிவில் கொள்கை அழுகை நான்கே"[1]

என்பன அழுகைக்குரிய நான்கு நிலைக்களன்களாம்.

மனுநீதிச் சோழன் மகன் திருவாரூர் மாடவீதியின்கண் தேரில் சென்றகாலை அத்தேர்க்காலின் இடையே சிக்குண்டு இறந்துபட்ட கன்றினைக் கண்ட தாய்ப்பசுவின் நிலையை,

"உம்பரின் அடையக் கண்டங் குருகுதாய் அலமந் தோடி
வெம்பிடும் அலறும் சோரும் மெய்ந்நடுக் குற்று வீழும்"[2]

எனச் சேக்கிழார் உரைத்தார். தன் உயிர் போன்ற கன்று இறந்துபடத் தாய்ப்பசு அத்துயரத்தைத் தாங்க முடியாது, நெருப்பு வீசுதல் போன்று பெருமூச்சு விட்டு முகத்தினில் கண்ணீர் பெருக, எல்லா உயிர்களையும் காக்கின்ற செங்கோல் மன்னன் மனுநீதிச்சோழன் அரண்மனையில் கட்டப்பெற்ற ஆராய்ச்சி மணியைத் தன் கொம்பினால் அசைத்து அடித்தது.[3] பசு அஃறிணையேயாயினும் உயர்திணை போலவே அறிவு பெற்று இச்செயல் செய்தது. மக்கள் கண்ணீர் விட்டு அழுவது அழுகைச் சுவையேயாயினும் மண்ணுயிர் அத்தனையும் கண்ணீர் சிந்தி அலமருவதும் அழுகைச் சுவையின் பாற்படும்.

வளம் நிறைந்த பொழில்கள் சூழ்ந்தது வைப்பூர் என்னும் தலம். அவ்வூரின்கண் தாமன் எனும் வணிகனுக்கு இளம்பிடி போன்ற மகளிர் எழுவர். மூத்தாளை உரிமையுடைய மருமகனுக்குத் திருமணம் செய்து கொடுப்பதாகத் தாமன் உறுதி கூறியிருந்தனன். ஆனால் தன் மனம் நிறையப் பணம் பெற்றுக்கொண்டு தன் மகளை அயலான் ஒருவனுக்குத் திருமணம் செய்து கொடுத்து விட்டனன். இங்ஙனம் கடைப்பெண் ஒழிய எல்லோரையும் பணம் பெற்று மற்றவர்க்கு ஈந்தான். ஒருவர் போக இன்னொருவரைத் தனக்கு மணமுடித்து வைப்பார் என்று காத்துக் கொண்டிருந்த அவன் மனமுடைந்து வருந்தினான். இவன் நிலை கண்டு இரங்கிய

1. தொல்காப்பியம் - பொருளதிகாரம்: சூத். 249.
2. திருநகரச் சிறப்பு - 23.
3. திருநகரச் சிறப்பு - 27.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கடைப்பெண் தன் தந்தையின் வஞ்ச நெஞ்சறிந்து தானே இவனை மணமுடிக்கத் துணிந்தனள். தந்தை அறியாதபடி இருவரும் உடன் போக்கில் அவ்வூரை விட்டே நீங்கினர். திருமருகலில், உடன் போக்கில் அவ்வணிதை நல்லாளுடன் வந்த அவ்வணிகனைப் பாம்பு தீண்ட அவன் இறந்தான். மறிகடலில் கலங்கவிழ்ந்தார் போல நின்ற அக்கன்னி நெடிது தளர்ந்து புலம்பி,

''அன்னையையும் அத்தனையும் பிரிந்து நின்னை
அடைவாக உடன்போந்தேன் அரவால் விடி
என்னைஉயிர் விட்டகன்றாய் யானென் செய்கேன்?
இவ்விடுக்கண் தீர்க்கின்றார் யாரு மில்லை''[1]

என்று கூறிக் கண்ணீர் விட்டு அழுதாள். தொல்காப்பியர் கூறிய நான்கு நிலைக்களன்களுள் இவை இழவு என்பாற்படும். ''இழவாவது உயிரானும் பொருளானும் இழத்தல்.''[2]

சிவபாதவிருதயர் நீராடச் சென்றகாலை குழந்தை திருஞான சம்பந்தர் தொடர்ந்தழுது பின் சென்றார்.[3] குளத்தில் நீராடச் சென்ற தந்தையார் வரக்காணாது, கண்மலர்கள் நீர் ததும்ப கைமலர்களாற் பிசைந்து வண்ண மலர்ச் செங்கனி போன்ற திருவாயின் உதடுகள் துடிக்க புண்ணியக்கன்று போன்றவராகிய பிள்ளையார் பொருமி அழுதார்.[4] இவர் அழுகை உலகிற்குப் பயனாயிற்று. ''அழுதழைத்துக் கொண்டவர்'' என்ற பெயரும் இவருக்காயிற்று.[5]

சங்கிலியாரைத் திருவொற்றியூர் கன்னிமாடத்தில் சேர்த்து விட்டு, அவருடைய தந்தையார் அவரைப் பிரிந்து சென்றகாலை சங்கிலியார் வருந்திக் கண்ணீர் உகுத்தார்.[6]

---

1. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 475.
2. தொல்காப்பியம் - பொருளதிகாரம் : இளம்பூரணம் - பக். 364; கழகப் பதிப்பு.
3. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 56.
4. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 62.
5. திருநாவுக்கரசு நாயனார் புராணம் - 182.
6. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 221

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாலை தொடுக்கும் மண்டபத்தின்கண் வீழ்ந்ததொரு பூவினை எடுத்து மோந்தமைக்காகச் செருத்துணையார் கழற்சிங்கரின் மனைவியாரின் மூக்கினை அரிய அவள் பார்மேல் வீழ்ந்தாள். அவள் வீழ்ந்து கிடந்ததனைச் சேக்கிழார்.

''......மலர்ந்தகற் பகத்தின் வாசப்
பைந்தளிர்ப் பூங்கொம் பொன்று பார்மிசை வீழ்ந்த தென்ன''[1]

வீழ்ந்து அரற்றினார் எனக் கூறினார், இவை அழுகைச் சுவை நிலைக்களன்களுள் அசைவு என்பதன்பாற்படும். அசைவென்பது பண்டை நிலைமை கெட்டு வேறொருவாறாகி வருந்துதல்.[2] மற்ற இரண்டு களன்களாகிய இழிவு, வறுமை என்பவற்றிற்கு அழுகை தோன்றலாம் என்றார் தொல்காப்பியர். இவை இரண்டிற்கும் பெரியபுராணத்தில் சான்றில்லை. இழிவும், வறுமையும்புராணத்தில் வந்துள்ளன. இவ்விரண்டிற்கும் அழுததாக இல்லை. திருநாவுக்கரசர், தண்டியடிகள், நமிநந்தியடிகள், மூர்த்தி நாயனார் இவர்கள் எல்லோரும் மன்னரால் சமணர்களால் இழிக்கப்பட்டனர். அழாது இழிவினைத் தாங்கி எதிர்நீச்சலடித்து வாழ்க்கையில் வெற்றி பெற்றனர். இளையான்குடிமாற நாயனார், கலிய நாயனார், கணம்புல்ல நாயனார், குங்குலியக் கலய நாயனார் முதலியோர் செல்வ நிலையிற்றாழ்ந்து வறுமை நிலை அடைந்த போதும் அழாது, அவ்வறுமையினின்றும் மீண்டு உயர்ந்தனர். அவ்வாழ்க்கையினைப் பெருமிதமாகக் கொண்டனர்.

உயிரை இழந்தபோதும் பொருளைப் பிரிந்தபோதும் அழுகை தோன்றக்கூடும் என மொழிந்தனர் உரையாசிரியர்கள்.[3] ஆனால் ஏயர்கோன் கலிக்காம நாயனார் இறந்தபோது அவர்

---

1. கழற்சிங்க நாயனார் புராணம் -8.
2. தொல்காப்பியம், பொருள். சூத். 253; பேராசிரியர் உரை.
3. தொல்காப்பியம் - பொருளதிகாரம் - இளம்பூரணம் - சூத். 249 உரை. பேராசிரியர் - சூத். 253 உரை. (சூத்திர எண்கள் நூலுக்கு நூல் மாறியுள்ளன) - கழகப் பதிப்பு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மனைவியாரும், மூத்த திருநாவுக்கரசு பாம்பு தீண்டி உயிர் இழந்த போது அவன் பெற்றோரும், காண்கின்ற கண்களைக் கொடுத்த போது கண்ணப்பரும், கண்ணனைய மகனைப் பிரிந்தபோது சிறுத் தொண்டரும் திருவெண்காட்டு நங்கையும், இழப்பு ஏற்பட்டபோது அழவில்லை. அழாது நெஞ்சுறுதியைக் காட்டினர். இஃது ஒருவகையான வீரமே. ஆனால் இக்காட்சிகள், படிக்கின்றவர் களின் கண்களில் நீர் மல்கச் செய்து அழுகையைத் தோற்றுவிக் கின்றன.

3. இளிவரல்

தன்மாட்டும், பிறர்மாட்டும் தோன்றிய இழிவு ''இளிவரல்'' எனப்படும். இளிவரல் என்பதனை ''இழிபு'' என்று பேராசிரியரும், ''இழிப்பு'' என்று அடியார்க்கு நல்லாரும் குறித்து உள்ளனர்.[1] இளிபு, இழிபு ஆகிய இரண்டும் ஒரு பொருளையே குறிக்கும். இளிவரலும் அழுகையும் நெருங்கிய தொடர்புடையன. தொல்காப்பியரும் இது கருதியே அழுகைக்கு அடுத்து இளிவரல் வைத்தார் போலும். இளிவரலால் அழுகை தோன்றும். இளிவரல் தோன்றுதற்கு நிலைக்களன்களாக,

> ''*மூப்பே பிணியே வருத்த மென்மையொடு*
> *யாப்புற வந்த இளிவரல் நான்கே*''[2]

என இயம்பினர் தொல்காப்பியர். முதிர்ந்த தள்ளாத வயது கண்டு இளிவு பிறத்தல் மூப்பின்பாற்படும். பிணியென்பது - பிணியுறவு கண்டு இழித்தல். அதனாலே உடம்பு தூயதன்று என இழித்தலுமாம். வருத்தமென்பது - தன்மாட்டும் பிறர்மாட்டும் உளதாகிய வருத்தத்தாலும் இழிப்புப் பிறக்கும். மென்மை என்பது நல்குரவு.[3] மெலிமை எனக் கொண்டார் பேராசிரியர்.[4]

---

1. சிலம்பில் மெய்ப்பாடுகள்-பக். 87; டி. ஜி. என். தாசன்.
2. தொல்காப்பியம் - பொருளதிகாரம் - இளம்பூரணம். சூத். 250. -
3. தொல்காப்பியம் - பொருளதிகாரம் - இளம்பூரணம் - சூத். 250.
4. தொல்காப்பியம் - பொருளதிகாரம் - பேராசிரியர்; சூத். 254 உரை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்நான்கன் அடிப்படையில் பெரியபுராணத்துள் இளிவரல் எங்ஙனம் தோன்றியுள்ளது என்பதைக் காண்போம்.

திருமணம் செய்ய இருந்த நம்பி ஆரூரனைத் தடுத்து ஆட்கொள்ளுவதற்காகக் கண்ணுதற் கடவுள் சிவபெருமான் முதுமைப் பருவம் எய்தி கிழவேதியனாக,

''கண்ணிடை கரந்தகதிர் வெண்படம் எனச்சூழ்
புண்ணிய நுதல்புனித நீறுபொலி வெய்தத்
தண்மதி முதிர்ந்துகதிர் சாய்வதென மீதே
வெண்ணரை முடித்தது விழுந்திடை சழங்க''[1]

தோன்றினார். வெண்மதி முதிர்ந்து கதிர் சாய்ந்த தன்மை போல வெள்ளிய நரை மயிர் தொங்கியது, காதில் உருத்திராக்கக் குழைகள். மார்பில் பூணூல், தோளின் மேல் உத்தரியம், கையிலே குடை, அசைகின்ற ஆடை, இன்னொரு கையில் மூங்கிற்றண்டு, மூப்பினால் தள்ளாடிய நடை[2] இவற்றோடு ஒருவர் மணப்பந்தரிடை வந்தார். முதுமைத் தோற்றத்தினராகிய இவர் வந்ததோடு இளிவரல் சுவையையும் உண்டாக்கினார்.

திருவதிகைப் புறத்தே அமைந்திருக்கும் சித்தவட மடத்தில் ஆரூரர் துயில் கொண்டகாலை. அவர் சென்னியில் தன் கால் வைத்துத் துயின்றதை,

''என்னுடைய மூப்புக் காண்''[3]

என்று இறைவர் பகர்ந்தார். இளமைத் தோற்றத்தினராக இருப்போர் மூப்படைந்து முதுமைத் தோற்றத்தினராக ஆவதும் காவியத்திற்குச் சுவையுடையதே.

தம்மை ஏற்றுக்கொள்ளக் கணவன் மறுத்தபொழுது புனிதவதியார், தம் உடம்பின்கண் இருந்த தசையையும் அதனை இடமாகக் கொண்டிருந்த அழகினையும் உதறிவிட்டு எலும்புக்கூடே உடம்பாகப் பேய் வடிவம் கொண்டார்.[4] முன் இருந்த தோற்றத்தினை மாற்றி வேறு ஓர் உருவமாகக் கொள்ளல் ஒருவித சுவை

1. தடுத்தாட்கொண்ட புராணம் - 29.
2. தடுத்தாட்கொண்ட புராணம் - 30, 31.
3. தடுத்தாட்கொண்ட புராணம் - 86.
4. காரைக்காலம்மையார் புராணம் - 50.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பயக்கின்றது. சுந்தரரும் அவருடைய தொண்டர்களும் வழி நடந்த களைப்பினால் தளர்ந்து உண்ணீரின்-வேட்கையோடும் உறுபசியோடும் வருந்தினர்' இவர்தம் வாட்டத்தைப் போக்குவான் வேண்டி இறைவன் மறைவேதியராய், முதியவராய்த் தோன்றி இவர்கள் வந்த வழியின்கண் தண்ணீரும் பொதிசோறும் கொண்டு காத்து இருந்தார்.[1] திருக்கச்சூரில் வீடுதோறும் இரந்து இன்னடிசிலுங் கறியும் தன்னால் ஆட்கொள்ளப் பெற்றார்க்குக் கொண்டு வந்தார். கண்டவர்கள் மனம் உருக இவர் உருவம் விளங்கியது.[2] இவர்கள் எல்லோரும் முதுமைத் தோற்றத்தினராகத் தோன்றும்பொழுதும் அவர்களைக் காணும்பொழுதும் ஒருவகையான உணர்ச்சி ஏற்படுகின்றது. அதுவே சுவையாக மாறுகின்றது. இவை இளிவரல் தோன்றுவதற்குரிய காரணங்களுள் மூப்பு என்பதன் கீழ் அடங்கும்.

தம்பி மருள்நீக்கியார் சமண மதத்தில் இருந்து கொண்டிருக்கின்றானே எனக் கவன்ற திலகவதியார் இறைவனை வேண்ட, இறைவன் மருள்நீக்கியாருக்குச் சூலை நோயைத் தந்தனர். அந் நோயால் துன்புற்றதை,

''வடஅனலும் கொடுவிடமும் வச்சிரமும் பிறவுமாம்
கொடியஎலாம் ஒன்றாகும் எனக்குடரின் அகங்குடையப்
படருழந்து நடுங்கிஅமண் பாழியறை யிடைவிழுந்தார்''[3]

என்று இயம்பினர் ஆசிரியர். கூறியவற்றுள் ஒவ்வொன்றும் உயிரைப் போக்கும் தன்மையுடையது. மூன்றும் ஒன்று கூடினால் எத்தகைய துன்பத்தைக் கொடுக்குமோ அத்தகைய துன்பத்தைச் சூலை நோய் திருநாவுக்கரசருக்குக் கொடுத்தது. ''குடைய'' என்னும் சொல்லால் வயிற்று வலியின் மிகுதியைக் கூறினார். அவருடைய பிணி கண்டோரை நெகிழச் செய்து அதுவே சுவையாக மாறியது. இறைவனைத் தூதுவிட்ட சுந்தரரையும், அதனால் அவன்மேல் சினந்து கொண்ட ஏயர்கோன் கலிக்காம நாயனாரையும் ஒற்றுமைப்படுத்துவதற்காக இறைவன், ஏயர்கோன் கலிக்காமனாருக்குச் சூலை நோய் அருளினன்.[4] இவருக்கும்

1. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 156, 157.
2. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 177, 178.
3. திருநாவுக்கரசு நாயனார் புராணம் - 50.
4. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 389, 390.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சூலை நோய் அனல்செய் வேல் குடைவது போன்றிருந்தது. கூன் பாண்டியனுக்கு ஏற்பட்ட வெப்பு நோய் மாளிகைப் புறத்து நின்றார்களையும் வாட்டித் தீய்த்தது.[1] பொதுவாகப் பிணிகளைக் கொண்டாரைக் கண்டால் உளமொப்புவதில்லை; இழிக்கின்றோம். அதுவே ஒருவித சுவையையும் உண்டாக்குகின்றது. தீராத மேற்கண்ட இப்பிணிகளரல் இளிவரல் சுவை தோன்றுகின்றது.

வருத்தம் இளிவரல் மெய்ப்பாடு ஆகும். திருத்தொண்டர் புராணத்தின்கண் சிவனுக்கும், சிவனடியார்களுக்கும் உரிய நேரத்தில் தாம் நினைத்த தொண்டினைச் செய்ய முடியவில்லையே என்ற பொதுவான வருத்தம்தான் திருத்தொண்டர்களுக்கு நிலவியது. சிவயோகியார் கொடுத்த திருவோட்டினைத் திருப்பித் தர முடியவில்லை என்பதற்காகத் திருநீலகண்டர் வருந்தினார்; இதற்காகத் தாம் செய்த சபதத்தினை முறிக்காமல் பொருந்திய வகையால் மனைவியோடு குளத்தில் மூழ்கிச் சத்தியம் செய்தார்.[2] சிவனடியார் நல்கிய அழுக்கேறிய கந்தையினைத் துவைத்து வெய்யோன் அணைவதற்கு முன் திருப்பித் தர முடியவில்லையே எனக் கவன்று வருந்தி, துவைத்த பாறையிலேயே தன் தலையை இடித்துத் தன் உயிரைப் போக்கத் துணிந்தார் திருக்குறிப்புத்தொண்ட நாயனார்.[3] இவர்கள் மற்றவர்க்காக வருந்தினார்கள்.

தனிப்பட்ட முறையிலும் மாந்தர் வருத்தத்தை அனுபவித்தனர். சுந்தரரைக் கண்ட பரவையாரும் பரவையாரைக் கண்ட சுந்தரரும் வருந்தினர். சுந்தரன் நிலவை, தென்றலைப் பழிக்க, பரவையார் தன் மேனியில் பூசப்பெற்ற குளிர்க்கலவையைப் பழித்தாள்.[4] தன்னை மணக்க இருக்கும் கலிப்பகையார் இறந்தார் எனக்கேட்டு இறக்கத் துணிந்த திலகவதியாரை நோக்கி, மருள்நீக்கியார் ''என்னைஇனித் தனிக்கைவிட் டேகுவீர் எனில்யானும் முன்னம் உயிர் நீப்பன்' என வருந்திக் கூறினர்.[5] இவையெல்லாம் இளிவரல் சுவை பயக்கும் வருத்தத்தின்பாற்படும்.

---

1. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 711.
2. திருநீலகண்ட நாயனார் புராணம் - 36
3. திருக்குறிப்புத்தொண்ட நாயனார் புராணம் - 125.
4. தடுத்தாட்கொண்ட புராணம் - 165, 167, 173.
5. திருநாவுக்கரசு நாயனார் புராணம் - 33.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இளிவரலுக்குக் களனான மென்மை என்பது நல்குரவு. காப்பியத்தில் சில நாயன்மார் வாழ்க்கையில் நல்குரவு தோன்றியது. சிவத்தொண்டு, செல்வம் இருந்தபொழுது செய்தது போல் வறுமை நிலையிலும் செய்வார்களா எனச் சோதிப்பான் வேண்டித் திருத்தொண்டர்களை இறைவன் நல்குரவு ஆக்கினர். அங்ஙனம் அவர்கள் நல்குரவு ஆயினபோதிலும் அதனை மகிழ்ச்சியோடு ஏற்றனர்.

குங்குலியக் கலய நாயனாரின் வறுமை வாழ்க்கையைச் சான்றாகக் காட்டலாம். சிவன்கோவிலில் குங்குலியத் தூபம் இட்டு வழிபட்டது இவரது தொண்டாகும். இந்நெறி ஒழுகு நாளில் இவருக்கு நீடித்த வறுமை தோன்றிற்று. நன்னிலங்கள் அனைத்தையும் விற்றார்; நல்ல அடிமைகளை விற்றார். பன்னெடுந் தனங்கள் அனைத்தும் அழிய, மனையில் உள்ளாரும், சுற்றத்தினரும் பசியினால் வாடினர். உண்பதற்கு ஒன்றும் இல்லையாகி இரண்டு நாட்கள் பட்டினி கிடந்தனர். மைந்தரும் சுற்றத்தினரும் வாடிய நிலையைக் கண்டு மனைவியார் குங்குலியக்கலய நாயனாரிடம் தன் மங்கலத் தாலியைக் கொடுத்து நெல் வாங்கி வரச் சொன்னார்.[1] தாலியை விற்கும் அளவிற்கு வறுமை அவர்களை வாட்டியது.

கலிய நாயனார் மனைவியை விற்கத் துணிந்தார்.[2] மனைவியைவிற்கும் அளவுக்கு வறுமையின் உச்சநிலைக்குச் சென்றார்.

இளையான்குடிமாற நாயனாரின் வறுமை வாழ்க்கை வந்த விருந்தினர்க்கு உடனே உணவிட முடியாத கொடுமையுடையதாம்.[3]

இத்தகைய வறுமைக் காட்சிகள் இளிவரல் சுவையை உண்டாக்கின. அதுவும் செல்வ வாழ்க்கை வாழ்ந்தவர் வறுமை வாழ்க்கையில் உழன்றார் எனின் இன்னும் சுவையுடைத்தாம்.

---

1. குங்குலியக்கலய நாயனார் புராணம் - 8, 9.
2. கலிய நாயனார் புராணம் - 13.
3. இளையான்குடிமாற நாயனார் புராணம் - 3.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

4. மருட்கை

மருட்கை என்பது வியத்தலாகும். நம் எண்ணத்திற்கும் கற்பனைக்கும் மாறாக இருக்கும் ஒன்று வியப்பைத் தரும். இப்படித்தான் இருக்கும் என்று நாம் எண்ணிக் கொண்டிருக்கும் பொழுது அது வேறுபட்டுத் தோன்றின் நம்மிடத்தில் ஓர் உணர்ச்சி தோன்றும். அதுவே மருட்கையாம். "உலகத்து வியக்கத் தகுவனவெல்லாம் மருட்கையின்பாற்படும்".[1]

மருட்கை தோன்றுவதற்குரிய நான்கு நிலைக்களன்களாக,

"புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு
மதிமை சாலா மருட்கை நான்கே"[2]

என விளக்கினர் தொல்காப்பியர்.

யாதொன்றானும் எவ்விடத்தினும் எக்காலத்திலுந் தோன்றாததோர் பொருள் தோன்றியவழி வியத்தல் புதுமையின் பாற்படும். அது கந்திருவர் அந்தரம் போவது கண்டு வியத்தல் போல்வன[3] என்றார் இளம்பூரணர். பெரியபுராணத்துள் புதுமை பல காண முடியும். சில காண்போம்.

நீற்றறையில் அடைக்கப்பெற்ற திருநாவுக்கரசர் ஏழுநாள் கழித்தும் முன்னையதினும் பொலிவோடு திகழ்ந்தார். இதைச் சேக்கிழார்,

"ஆனந்த வெள்ளத்தின் இடைமூழ்கி அம்பலவர்
தேனுந்து மலர்ப்பாதத் தமுதுண்டு தெளிவெய்தி
ஊனந்தான் இலராகி உவந்திருந்தார் தமைக்கண்டே
"ஈனந்தாங் கியதிலதாம் என்னஅதி சயம்" என்றார்"[4]

என்று பாடினர். நீற்றறை திருநாவுக்கரசருக்கு ஆனந்த வெள்ளமாம்: நிறைந்த இன்பம் எனக் குறிக்க ஓரத்தில் என்னாது

1. தொல்காப்பியம் - பொருளதிகாரம் - சூத்; 251; உரை - இளம்பூரணம். கழகப் பதிப்பு.
2. தொல்காப்பியம் - பொருள். 251.
3. தொல்காப்பியம் - பொருள். 251. இளம்பூரணம் - சூத். 251; உரை. கழகப் பதிப்பு.
4. திருநாவுக்கரசு நாயனார் புராணம் - 101.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''இடைமுழ்கி'' என்றார். இறைவன் மேல் வைத்த நினைவு ஆராவமுதாம். இறவாதிருந்த நாவுக்கரசரை நோக்கிப் பல்லவ மல்லனும் சமணர்களும் வியப்படைந்தனர். இன்னும் அவர், நஞ்சு குடிக்க வைத்தும்,[1] களிறு கொண்டு அவரை இடறவைத்தும்,[2] கல்லுடன் கயிற்றால் கட்டிக் கடலிடைப் பாய்ச்சிய போதும்[3] இறவாது வீறு கொண்டு விளங்கியது புதுமையினும் புதுமையாகும். ஆண்பனையை ஈனும்படி செய்ததும்[4] முதலை உண்ட மைந்தனை முன்போல் வரவழைத்ததும்[5] புதுமை எனும் மருட்கையில் அடங்கும். புதிதாகக் கண்டனவற்றைப் புதுமை என்றார் பேராசிரியர்.[6]

காஞ்சியில் வீற்றிருக்கும் இறைவி இறைவனை நோக்கி,

''ஈறி லாதஇப் பதியினுள் எல்லா அறமும்
யான்செய அருள்செய வேண்டும்''[7]

என்று வேண்ட இறைவர் மனமுவந்து,

''இடையறா அறம் வளர்க்கும்வித் தாக
இகபரத்திரு நாழிநெல் அளித்து''[8]

அருளினார். இரண்டு நாழி நெல்லைக் கொண்டே இறைவி மன்னுயிர் அனைத்திற்கும் அறம் செய்தனள். இகத்திற்கு ஒரு நாழி நெல்லும் பரத்திற்கு ஒரு நாழி நெல்லுமாக இரண்டு நாழி நெல்லினை இறைவன் அளித்தார். வித்தாக அளிக்கப் பெற்ற இரண்டு நாழி நெல், மன்னுயிர்க்கெல்லாம் அறம் செய்யும் அளவு மல்கிப் பெருகிற்று.

---

1. திருநாவுக்கரசு நாயனார் புராணம் - 103.
2. திருநாவுக்கரசு நாயனார் புராணம் - 117.
3. திருநாவுக்கரசு நாயனார் புராணம் - 124.
4. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 980.
5. வெள்ளானைச் சருக்கம் - 16.
6. தொல். பொருள். பேராசிரியர் உரை-சூத். 255.
7. திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணம் - 69.
8. திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணம் - 70.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இது பெருமை என்பதன்கண் அடங்கும். பண்டு கண்ட பொருள்கள் போலாத பொருள்கள் அவ்வளவிற் பெருத்தன கண்டு வியத்தல்[1] என்றார் இளம்பூரணர்.

சுந்தரர் பரவையை வதுவை புரிந்து,

"பன்னுதமிழ்த் தொடைமாலை பலசாத்திப் பரவையெனும்
மின்னிடையாள் உடன்கூடி விளையாடிச் செல்கின்றார்"[2]

என்று சேக்கிழார் குறிப்பிட்டார். இங்குப் பரவையைக் குறிப்பிட்ட பொழுது "மின்னிடையாள்" என்றார். தோன்றி மறையும் மின்னலைப் போன்ற வியக்கத்தக்க சிறிய இடை என்றார். இது பிறன்கட்டோன்றிய சிறுமை வியப்பு.

பேராசிரியரும்,

"கடையிற் சிறந்த கருநெடுங்கட் பேதை
இடையிற் சிறியதொன் றில்"[3]

எனச் சான்று காட்டினர்.

பெரியபுராணம் இறைவனைப் பற்றிப் பேசுகின்றமையின் அவர் தன்மையினைச் சேக்கிழார்,

"அருவாகி உருவாகி அனைத்துமாய் நின்றபிரான்"[4]
"நாரணற்கும் நான்முகற்கும் அறிய ஒண்ணா நாதனை"[5]

என மொழிந்தனர். மாலும் அரியும் அறியாத ஒருவராகிய சிவன் எவரும் காண முடியாத அருவமாக விளங்கினன். இதையே மாணிக்கவாசகர்,

---

1. தொல்காப்பியம்: பொருள் - இளம்பூரணர் உரை - சூத். 251. கழகப் பதிப்பு.
2. தடுத்தாட்கொண்ட புராணம் - 182.
3. தொல்காப்பியம்: பொருளதிகாரம் - பேராசிரியர் உரை - சூத். 255.
4. திருவாரூர்ப் பிறந்தார் புராணம் - 1.
5. முப்போதும் திருமேனி தீண்டுவார் நாயனார் புராணம் - 3.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"ஐயா! எனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே"[1]

என்றார். இறைவன் அளவு கூற முடியாத சிறுமை உடையவன். இவை தொல்காப்பியர் கூறிய சிறுமையுள் அடங்கும்.

குங்குலியக்கலயர் வறுமை அடைந்தபோது குபேரன், தன் நிதியை எல்லாம் தரணியில் கொணர்ந்து, அவர் மனையில் பொற் குவியலையும் நெல்லையும் பிற வளங்களையும் கொட்டிவிட்டுச் சென்றனன்.[2] பரவையார் மாளிகைக்குப் படிசமைக்க நெல் இல்லையே என வேளாளர் குண்டையூர்க்கிழவர் வருந்தியபொழுது ஊர் முழுதும் நெல்மலையைக் கைம்மான்மறிக் கரத்தார் தோற்று வித்தார்.[3]

மைவண்ணத் திருமிடற்றாரை மன்றத்தில் நடனமாடிக் கொண்டிருக்கின்ற நிலையில் கும்பிடுவதெவ்வண்ணம் எனச் சிந்தனையில் ஆழ்ந்த திருநாளைப்போவார், இறைவன் வேண்டு கோளின்படி எரியுள்புக்கார். இதை,

"கைதொழுது நடமாடுங் கழலுன்னி அழல்புக்கார்;
எய்தியஅப் பொழுதின்கண் எரியின்கண் இம்மாயப்
பொய்தகையும் உருவொழித்துப் புண்ணியமா முனிவடிவாய்
மெய்திகழ்வெண் ணூல்விளங்க வேணிமுடி கொண்டெழுந்தார்"[4]

என்றார் ஆசிரியர். மேற்கூறப்பெற்ற இவை தொல்காப்பியர் வகுத்த நான்கனுள் ஆக்கம் என்பதன்கண் அடங்கும். ஒன்று வேறொன்றாகத் திரிதல் ஆக்கம் எனப்படும். ஒன்றன் பரிணாமங் கண்டு வியத்தல். நல்கூர்ந்தான், யாதொன்றுமிலாதான் ஆக்கம் உற்றானாயின் அதற்குக் காரணமுணராதான் அது கண்டு வியத்தல்.[5] ஒன்று ஒன்றாய்த் திரிதல் என்றார் பேராசிரியர்.[6]

---

1. திருவாசகம் - சிவபுராணம் - வரி. 35; மாணிக்கவாசகர்.
2. குங்குலியக்கலய நாயனார் புராணம் - 14.
3. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 14, 15.
4. திருநாளைப்போவார் நாயனார் புராணம் - 32.
5. தொல்காப்பியம்: பொருள் - இளம்பூரணர் உரை-பக், 367; கழகப் பதிப்பு.
6. தொல்காப்பியம்: பொருள்-பேராசிரியர் உரை-நூற்பா 255.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

5. அச்சம்

அச்சம் என்பது கற்பனையாக ஒன்றை நினைத்தோ அல்லது நேரில் பார்த்தோ அஞ்சுவது. வடமொழியில் பயம் என்றனர். அஞ்சுவதற்கு அஞ்சல், அச்சம் என்றார் திருவள்ளுவர்.[1] தீமை செய்கின்ற பொருட்களைப் பார்த்தல் அச்சமே ஆயினும் தீமையை நினைத்தலே அச்சமாகும். எல்லா உயிரினங்களுக்கும் அச்ச உணர்வு உண்டு. இவ்வாறு வாழ்க்கையோடு இணைந்து அமைந்த அச்ச மெய்ப்பாடு, இலக்கியத்திலும் இன்றியமையாத ஓர் இடத்தைப் பெற்றுளது.

அச்சத்திற்குரிய நிலைக்களன்களாகத் தொல்காப்பியர்,

''அணங்கே விலங்கே கள்வர்தம் இறையெனப்
பிணங்கல் சாலா அச்சம் நான்கே''[1]

என்றார்.

திருத்தொண்டர் புராணத்துள் சேக்கிழார் அச்சத்தினை எங்ஙனம் அமைத்துள்ளார் என்பதைக் காண்போம்.

இறைவன் அருளிய அதிமதுரக்கனியை உண்ட பரமதத்தன், ''இது முன் நான் கொடுத்த மாங்கனியன்று. மூவுலகிலும் பெறற்கரிது. பெற்றது எங்கு?'' எனக் கேட்க, புனிதவதியார் மாங்கனி வந்த வழி உரைத்தார். மீண்டும் அதைப்போன்ற அருங்கனியை இறைவன்பாற் கேட்டு அவன் கையில் கொடுத்தார். இந்நிகழ்ச்சியினை,

''வணிகனும் தன்கைப் புக்க மாங்கனி பின்னைக் காணான்
தனிவரும் பயமேற் கொள்ள உள்ளமுந் தடுமா றெய்தி
அணிகுழ லவரை வேறோர் அணங்கெனக் கருதி நீங்கும்
துணிவுகொண் டெவர்க்குஞ் சொல்லான் தொடர்வின்றி ஒழுகு நாளில்''[2]

என்றார் ஆசிரியர். புனிதவதியாரை மானிடப் பெண் எனக் கருதாமல் தெய்வ மகள் எனவுன்னி அவரை நீங்க எண்ணினன்.

1. திருக்குறள் - 428.
1. தொல்காப்பியம்: பொருள். சூத். 252.
2. காரைக்காலம்மையார் புராணம் - 31.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மனைவியாரைக் கண்டு முன் அஞ்சாதவன் தெய்வ அணங்கினைக் கண்டு அஞ்சினன். ஆனால் புனிதவதியார் தம்மைத் தெய்வப் பிறப்பினர் என எண்ணாமல் பாண்டி நாட்டில் மீண்டும் திருமணம் செய்த கணவனைக் கண்டபொழுதும் அச்சத்தோடு சுற்றத்தவர் பால் ஒதுங்கி நின்றனர்.[1] புனிதவதியார் தம் அழகையெல்லாம் உதிர்த்துப் பேய் வடிவம் கொண்டபொழுது,

''*தொலைவில்பல் சுற்றத் தாரும் தொழுதஞ்சி அகன்றுபோனார்*''[2]

என்றார் சேக்கிழார். அம்மையாரை நன்கு தெரிந்த சுற்றத்தினரே அச்சத்துடன் அகன்றனர் எனின் மற்றவரைக் கூற வேண்டா.

சங்கிலியாரை மணம் பேச வந்தவர்களும், மணம் பேச அனுப்பியவரும் இறந்தனர் எனக் கேட்டவுடன் பெற்றோர் மருண்டனர். தெய்வத்தன்மை உடையவள் என அவளைப் பற்றிப் பேசுவதற்கும் அஞ்சினர்.[3] இவை தொல்காப்பியர் கூறிய அணங்கு என்ற களனுள் அமையும். அணங்கென்பன பேயும் பூதமும் பாம்பும் ஈறாகிய பதினெண் கணனும் என்பர் பேராசிரியர்.[4]

பழக்கப்படுத்தப்பெற்ற பார்வை மிருகமாகிய புலியின் திறந்த அகன்ற வாயினைச் சிறு குகையென்று கருதிக் குழந்தையாகிய திண்ணன் தன் அழகிய கையை அதனுள் நீட்டினன். இதனைக் கண்ணுற்ற தந்தை அஞ்சிப் பைந்தழை கொண்டு அவன் மீது ஒச்சினர்.[5] குழந்தை புலியைக் கண்டு அஞ்சவில்லை; புலி குழந்தைக்கு ஏதம் செய்து விடுமோ என தந்தை அஞ்சினர். பழக்கப் படுத்தினும் புலி ஐந்தறிவுதானே! இது விலங்கு என்னும் களனோடு பொருந்தும்.

சேக்கிழார், மன்னன் மன்னுயிரைக் காக்கும் முறையைக் கூறுங்கால், ஐந்து பயங்களிலிருந்து அவற்றை அவன் காப்பாற்ற

---

1. காரைக்காலம்மையார் புராணம் - 46.
2. காரைக்காலம்மையார் புராணம் - 51.
3. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 217.
4. தொல்காப்பியம்: பொருள். சூத். 256; பேராசிரியர் உரை.
5. கண்ணப்ப நாயனார் புராணம் - 23. ...

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வேண்டும் எனக் கூறினர்.[1] அவற்றில் கள்வர் பயமும் ஒன்று. அச்சம் கள்வர்தம்மாலும் ஏற்படும் எனத் தொல்காப்பியர் சொல்லினர்.

தொன்னகரான மதுரையைத் திருஞானசம்பந்தர் அணைந்த பொழுது அங்கு வாழ்ந்த சமணர்கள் தீக்கனா கண்டனர்; துன்னிமித்தங்கள் நிகழ்ந்தன. இவை அடிகண்மார்களுக்குத் தீங்கு விளைவிக்கும் என்று எண்ணிய சமணர்கள் உண்ணாமல் துன்பமுற்று அஞ்சி நடுங்கினர்.[2]

சமணர் விட்ட ஏடு நில்லாமல் கடலை நோக்கிச் சென்றதைக் கண்ட அமணர் சிதறினார்; திகைத்தார். மன்னவன் ஆணையினின்றும் தப்ப முடியாது என அஞ்சினர்.[3] வேறு செயல் ஒன்றும் இல்லாதவர்களாகிய அமணர்கள் வெருக்கொண்டு நடுங்கித் தமக்கு முடிவு வந்து விட்டதென்றே துணிந்து அரசன் முன் வந்தனர்.[4] இவையெல்லாம் இறை என்னும் நிலைக்களனோடு பொருந்தும். இறை எனப்படுவார் தந்தையரும் ஆசிரியரும் அரசரும் முதலாயினார்.[5] மேற்கண்டவை மன்னனால் தோன்றிய அச்சமாம்.

கம்பையாற்றின் வெள்ளம் கண்டு அம்மை அஞ்சி, வேணியாரைத் தழுவிக் கொண்டனள்.[6] சம்பந்தர் அமர்ந்திருந்த பல்லக்கினைத் தாங்கி உயர்ந்ததாக, அப்பர் கூறக்கேட்ட சம்பந்தர் அச்சம் கொண்டார்.[7] இவை அன்பினால் தோன்றிய அச்சங்களாம்.

---

1. திருநகரச் சிறப்பு - 36.
2. திருஞான சம்பந்த நாயனார் புராணம் - 641.
3. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 816.
4. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 817.
5. தொல்காப்பியம்: பொருள் - பேராசிரியர் உரை - நூற்பா: 256.
6. திருக்குறிப்புத்தொண்ட நாயனார் புராணம் - 63.
7. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 935, 936.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

6. பெருமிதம்

எல்லாரொடும் ஒப்ப நில்லாது பேரெல்லையாக நிற்றல் பெருமிதம் எனப்படும்.[1] இது தோன்றுங்கால் மனிதன் மேம்பட்டு நிற்கின்றான். உள்ளத்தில் அளவில்லா மகிழ்ச்சி பிறக்கின்றது. மற்றவரை விடத் தன்னைப் பெரியனாக நினைக்கின்றான்.[2] பொலிவான முகமும், எடுப்பான தோற்றமும், பீடு நடையும் பெருமிதத்தின் அறிகுறிகளாம்.

பெருமிதத்திற்குரிய நிலைக்களன்களாகத் தொல்காப்பியர்,

''கல்வி தறுகண் புகழ்மை கொடையெனச்
சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே''[3]

எனக் குறித்தார்.

இவை புராணத்துள் வந்தவாறு காண்போம்.

கல்விப் பருவம் வந்துற்றபோது திண்ணனாருக்கு ஆசிரியரைக் கொண்டு வில் வித்தை கற்றுத்தர ஏற்பாடு செய்தனர். இதைப் பெருவிழாவாக வேடர்கள் கொண்டாடினர். இதற்கு வில் விழா என்று பெயர்.[4] கானவர்க்கு அரிய சிங்கமெனத் திகழும் திண்ணன் அற்றை நாள் தொடங்கி அடற்சிலைக் கல்வி கற்றான். இவன் கல்வி கற்ற விதத்தினைக் கவிவலவர்,

''வண்ணவெஞ் சிலையும் மற்றப் படைகளும் மலரக் கற்றுக்
கண்ணகல் சாயல் பொங்கக் கலைவளர் திங்க ளேபோல்
எண்ணிரண் டாண்டின் செவ்வி எய்தினார் எல்லை இல்லாப்
புண்ணியந் தோன்றி மேன்மேல் வளர்வதன் பொலிவு
போல்வார்''[5]

---

1. தொல்காப்பியம்: பொருள் - பேராசிரியர் உரை - சூத். 257.
2. தொல்காப்பியம்: பொருள் - இளம்பூரணர் உரை - சூத். 253.
3. தொல்காப்பியம்: பொருள் - இளம்பூரணர் உரை - சூத். 253.
4. கண்ணப்ப நாயனார் புராணம் - 36.
5. கண்ணப்ப நாயனார் புராணம் - 42.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்றுரைத்தனர். எல்லாக் கலைகளும் நிரம்பிய திங்களே போல திண்ணனார் விற்கலையையும் அதனோடு தொடர்பு கொண்ட ஏனைக்கலைகளையும் கற்றுக் காளைப்பருவம் எய்தினார். வளர்ந்த திங்கள் பெருமிதத்துடன் உயரத்தில் எங்ஙனம் காணப்பட்டதோ அங்ஙனம் திண்ணன் தோன்றினன்.

ஐந்து ஆண்டு நிரம்பப் பெற்றதும் சண்டேசுரர் கல்வி பயிலத் தொடங்கினர். முன் பிறப்பில் அவருக்கிருந்த அறிவு இப்பிறப்பும் தொடர்வதாயிற்று. அரும்பு முற்றி மலர, மலர மணம் பரப்பியது போன்று அறிவின் முன்னைத் தொடர்ச்சி இவருக்கு வந்தது.[1] தந்தையார் மகிழ்ச்சி கொள்ளும்படி, செழுமையாகிய கலைகளின் வகைகளையெல்லாம் முன்னைய தொடர்பினால் எளிதிற் பயின்று முதிர்ச்சியுடைய அறிவு வெளித்தோன்றும்படி மருள்நீக்கியார் மறுவொழித்த இளம்பிறை போல் வளர்ந்தார்.[2] திருஞானசம்பந்தர் கல்வி கற்றதாகச் சேக்கிழார் கூறவில்லை. உமையம்மை பொற் கிண்ணத்தில் அவருக்குப் பாலூட்டியதும்,

"உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாம்உணர்ந்தார் அந்நிலையில்"[3]

என்றார் சேக்கிழார். கலைஞானம் தானாகவே அவர்க்கு அமைந்தது. கல்வி கற்கும் பருவமாகிய ஐந்து ஆண்டுகள் நிரம்புமுன், மூவாண்டிலேயே ஞானப்பால் உண்டு விட்டார். கல்வியினால் ஏற்பட்ட பெருமிதத்தை இவ்வாறு சேக்கிழார் செப்பினர். இவை கல்வி என்னும் நிலைக்களனுள் அடங்கும்.

இயற்பகை நாயனாரின் மனைவியாரை வேதியர் ஒருவர் அழைத்துச் செல்லுவதினின்றும் தடுத்த உறவினர் எல்லோரையும் இயற்பகை நாயனார் வாளினால் வெட்டித் துணித்தார்.[4] போர்க்களத்தில் வெற்றிப் புன்னகையுடன் வீரர் இயற்பகையார் சுற்றிச் சுற்றி வந்தார். இவருடைய வீரத்தின் முன் பகை நிற்கவில்லை.

---

1. சண்டேசுர நாயனார் புராணம் - 13.
2. திருநாவுக்கரசு நாயனார் புராணம் - 21.
3. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 70.
4. இயற்பகை நாயனார் புராணம் - 23.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஏனாதிநாத நாயனார்க்கும் அதிசூரன் என்பானுக்கும் போர் மூண்டது. இவ்வாறு மூண்ட கொடிய போரின்கண் இரு பக்கத்தும் வீரமிக்க படை ஓர் கடும் போர் புரிந்து பலர் இறந்தனர். இறந்த பின்னர், ஏனாதிநாதர், மடியாது எஞ்சிய தன்னுடைய பல படை வீரர்களும் பின்வர சினத்துடன் போரிட எழுந்தனர்.[1] சிவபெருமானுக்காக வைத்திருந்த நெல்லினை உண்ட சுற்றத்தினரை வாளினால் துணித்தார், கோட்புலிநாயனார்.[2] புகழ்ச்சோழ நாயனார் படைவீரர்களும், திறை கொடுக்காத அதிகன் என்பானின் படை வீரர்களும் தமக்குள் வீரத்தோடு போர் புரிந்தனர்.[3] வீரத்தை விளம்பினமையின் இவை ''தறுகண்'' என்பதனுள் அடங்கும்

ஒவ்வொரு நாயன்மாரும் சைவத்தை வளர்ப்பதற்காக அரியன புரிந்து புகழடைந்தனர். புகழுக்காக அவர்கள் சிவத்தொண்டு புரியாது, சிவத்தொண்டு புரிந்தமைக்காகப் புகழடைந்தனர்.

பசுங்கன்று ஒன்று இறத்ததற்குத் தன் மகன் காரணம் என அறிந்த மனுநீதிச்சோழன், அப்பசு அடைந்த துன்பத்தையே தானும் அடைவது அறம் என எண்ணிக் குலத்துக்கொரு மைந்தனைத் தேர்க்காலில் இட்டு ஊர்ந்தான்.[4] பழியினின்றும் நீங்கினான். மண்ணவரும் விண்ணவரும் பூமழை பொழிந்து புகழ் பாடினர்.

திருக்காளத்தி மலை மீது வீற்றிருக்கும் குடுமித்தேவர், முதலில் வலக்கண்ணிலும்,[5] அடுத்து இடக்கண்ணிலும்[6] குருதி வழியுமாறு செய்தார். இரண்டு கண்களுக்கும் தன்னிரு கண்களை நல்கினான் திண்ணன்.[7] இடக்கண் அளவில் செயல் முற்றுப்பெறவில்லை.

---

1. ஏனாதிநாத நாயனார் புராணம் - 25.
2. கோட்புலி நாயனார் புராணம் - 9.
3. புகழ்ச்சோழ நாயனார் புராணம் - 20 - 32.
4. திருநகரச் சிறப்பு . 44.
5. கண்ணப்ப நாயனார் புராணம் - 169.
6. கண்ணப்ப நாயனார் புராணம் - 180.
7. கண்ணப்ப நாயனார் புராணம் - 178, 182.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வேட்கோவர் குலத்தில் வந்தவராகிய திருநீலகண்ட நாயனார் சிவனடியார்களுக்குத் திருவோடு நல்கி இன்புற்றார்.[1] அமர்நீதி நாயனார் இறையடியார்களைத் திருவமுது செய்வித்துக் கந்தை, கீளுடை, கோவணம் முதலியவற்றை ஈந்துவந்தார்.[2] மாவிரத முனிவராக வந்த இறைவர், மானக்கஞ்சாற நாயனார் மகளாரின், மஞ்சு தழைத்தெனை வளர்ந்த மலர்க்கூந்தலைத் தம் பஞ்சவடிக்காகக் கேட்டபொழுது இல்லையென்னாமல் அதனை அரிந்து கொடுத்தார்.[3] உயிரும் உடம்பும் உறுப்பும் முதலாகிய எல்லாப் பொருளுங் கொடுத்தல் கொடை எனப்படும்.[4] இவை பெருமித நிலைக்களன்களுள் கொடையின்பாற்படும்.

இவையன்றி நாயன்மார்கள் யார்க்கும் அஞ்சாது சிவன் கழலுக்கே அஞ்சி, சோதனை வந்தபோதும் கொண்ட கொள்கை விடாது வெற்றி பெற்று வாழ்க்கையில் தடுமாறாத பெருமித வாழ்க்கையை உடையவராய் இருந்தனர்.

7. வெகுளி

நெஞ்சம் கடுத்ததை முகத்தில் காணுகின்றோம். அதுவே வெகுளியாகும். விலங்கினங்களுக்கும் விலங்குணர்ச்சி கொண்ட மக்களுக்கும் இவ்வெகுளி மிகுதியாக அமைந்துள்ளது. மனிதனாக இருக்கின்ற ஒருவனை விலங்காக மாறச் செய்யும் பண்புகளுள் இவ் வெகுளியும் ஒன்று. வெகுளி தோன்றியவுடன் முன்னை உருவம் நீங்கி, கடுகடுத்த வேறு ஒரு உருவமாக மாறி விடுகின்றது. பொலிவான தாமரை போன்ற முகம் கூட எரிகின்ற நெருப்புப் போன்று உருவம் பெற்று விடுகின்றது. வெகுளி வாழ்வினைக் குறைக்கும். வெகுளியைத் திருவள்ளுவர், ''சேர்ந்தாரைக் கொல்லி'' என்றே அழைத்தார்.[5] கருப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள் என்றார் தொல்காப்பியர்.[6]

---

1. திருநீலகண்ட நாயனார் புராணம் - 3.
2. அமர்நீதி நாயனார் புராணம் - 3.
3. மானக்கஞ்சாற நாயனார் புராணம் - 30.
4. தொல். பொருள். சூத். 257; பேராசிரியர் உரை.
5. திருக்குறள் - 306.
6. தொல்காப்பியம்: சொல். சூத். 372.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வெகுளி தோன்றும் நிலைக்களன்களாக,

"உறுப்பறை குடிகோள் அலைகொலை என்றன
வெறுப்ப வந்த வெகுளி நான்கே"[1]

என்று இயம்பினர் தொல்காப்பியர். இனி, இவ்வெகுளியைப் பெரியபுராணத்துள் காண்போம்.

சிவகாமியாண்டாரின் மலர்க்கூடையைப் புகழ்ச்சோழ நாயனாரின் பட்டத்து யானை தட்டிப் பறிக்க, சிவகாமியாண்டார் *"சிவதா"*, *"சிவதா"* என்று ஓலமிட்டார். எதிரே வந்த எறிபத்தர் இக்காட்சியைக் கண்ணுற்றுக் கடுஞ்சினம் கொண்டார். இதைச் சேக்கிழார்,

"என்றவ குரைத்த மாற்றம் எறிபத்தர் எதிரே வாரா
நின்றவர் கேளா முளும் நெருப்புயிர் தழன்று பொங்கி
'மன்றவர் அடியார்க் கென்றும் வழிப்பகை களிறே யன்றோ
கொன்றது வீழ்ப்பன்' என்று கொலைமழு எடுத்து வந்தார்"[2]

என மொழிந்தார். களிற்றொடு, உடன்வந்த ஐவரையும் கொன்றார். செய்தி அறிந்த மன்னவன் வந்து கொன்றவர் யாவர் என அறியாமல் "வென்றவர் யாவர்?" என்று வெடிபட முழங்கினான்.[3] சூதில் மறுத்தாரை மூர்க்க நாயனார் தன் சுரிகை உருவிக் கனன்று குத்தினார்.[4] இவை உறுப்பறை என்பதனுள் அடங்கும். உறுப்புக்களைக் குறைத்தல், அதாவது கொல்லுதல் இதன் பொருள். கொல்லுதற்கோ அல்லது கொன்றதற்கோ ஏற்படுகின்ற வெகுளி.

கோட்புலி நாயனார் போர்க்களத்தினின்று திரும்பி வருவதற்குள், கண்ணுதல் கடவுளுக்கு அமுது படிக்காக வைத்துச் சென்ற செந்நெல்லினை உறவினர் உண்டனர் எனவறிந்து சினத்து அவர்களையெல்லோரையும்,

---

1. தொல்காப்பியம்: பொருள். சூத். 254, இளம்பூரணம்.
2. எறிபத்த நாயனார் புராணம்-20.
3. எறிபத்த நாயனார் புராணம் - 35.
4. மூர்க்க நாயனார் புராணம் - 9.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

*"நல்லார்தம் பேரோன்முன் கடைகாக்க நாதன்றன்
வல்லானை மறுத்தமுது படிஅழித்த மறக்கிளையைக்
கொல்லாதே விடுவேனோ'*[1]

எனக் கனன்று கொலைபுரிந்தார். சுற்றத்தினரை மட்டும் கொலை புரிந்ததோடு மட்டுமின்றி நெல்லை உண்ணாத ஒரு குழந்தையையும் "இந்நெல் உண்டாள் முலைப்பால் உண்டது" என எடுத்தெறிந்து மின்னலல்ல வடிவாளால் இருகூறாக்கினார்.[2] கோட்புலி நாயனாரின் வெகுளி குழந்தையையும் விட்டு வைக்கவில்லை.

தன் மனைவியை அழைத்துச் செல்லும் வேதியரைத் தடுப்பவர் தன் உறவினரும் தன் மனைவி உறவினருமே எனவறிந்த இயற்பகை நாயனார் வென்றடு புலியேறென்ன, அவர்தம் தோள் தாள் தலைகள் ஆகியவற்றைத் துணித்தார்.[3]

இவை நான்கு நிலைக்களன்களுள் குடிகோள் என்பதனுள் அடங்கும். குடிகோள் என்பது தாரமுஞ் சுற்றமுங் குடிப்பிறப்பும் முதலாயவற்றுக்கண் கேடு சூழ்தல்.[4]

நாடோறும் இறைவர்க்குச் சந்தனக் காப்பு இட்டு வந்த மூர்த்தி நாயனாரை, மதுரையில் அரசு புரிந்த வடுகக் கருநாட மன்னவன் ஒருவன் வெஞ்சமணரோடு சேர்ந்துகொண்டு, சைவத் தொண்டு புரிவதினின்றும் தடுத்தனன். கொடுங்கோன்மை செய்வானாகிய அவன் நாயனாருக்குச் சந்தனம் கிடைக்காதவாறு செய்தனன். கொடிய சீற்றத்தினரான நாயனார் பகல் எல்லைக்குள் சந்தனம் எங்கும் கிடைக்காது மீண்டனர். தன் முழங்கையையே சந்தனக் கட்டையாகக் கொண்டு தோல், நரம்பு, எலும்பு தேய தேய்த்தனர்.[5] கொடுங்கோல் கொண்டு மன்னன் நாயனாரை அலைக்கழித்தான்.

---

1. கோட்புலி நாயனார் புராணம் - 8.
2. கோட்புலி நாயனார் புராணம் - 10.
3. இயற்பகை நாயனார் புராணம் - 22.
4. தொல்காப்பியம் : பொருள். சூத். 258; பேராசிரியர் உரை.
5. மூர்த்தி நாயனார் புராணம் - 20.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருவாரூர்த் திருக்குளத்தை, கயிறு கொண்டு கட்டி அதனைத் தடவியே தோண்டிக் கொண்டிருந்த தண்டியடிகளைச் சமணர்கள் தடுத்து ''மண்ணைக் கல்லிற் பிராணி படும் வருத்த வேண்டாம்'' என்றுரைத்து, அவர் கண்ணில்லாமையையும் இகழ்ந்தனர்; வைதனர்.[1] இவை தொல்காப்பியர் கூறிய நான்கனுள் அலை என்பதன் கீழ் அமையும். அலைக்கழித்தல், இடையூறு செய்தல் அலை என்பதன்பாற்படும். கோல் கொண்டலைத்தல் என்றார் பேராசிரியர்.[2] வைதலும் புடைத்தலும் என்றார் இளம்பூரணர்.[3]

ஓரிரவு முழுவதும் பரவைபால் இறைவனைத் தூதுவிட்ட நம்பியாரூரர்பால் ஏயர்கோன் கலிக்காம நாயனார் செற்றம் கொண்டார். அவன் ''வரவெதிர் காண்பேனாகில் வருவதென்னாங் கொல்'' என வெகுண்டார்.[4] இதுவும் வெகுளியின் பாற்படும்.

அப்பூதியடிகள் அமைத்த தண்ணீர்ப் பந்தலுக்கு அவருடைய பெயரை வைக்காது வேறொரு பெயர் வைத்த காரணம் என்னை? என்று திருநாவுக்கரசர் அப்பூதியடிகளிடம்கேட்டபொழுது, அப்பூதியடிகள் வெகுண்டதனைச் சேக்கிழார்,

'' *நின்றமறை யோர்கேளா நிலையழிந்த சிந்தையராய்*
நன்றருளிச் செய்திலீர்: நாணில் அமண் பதகருடன்
ஒன்றியமன் னவன்சூழ்ச்சி திருத்தொண்டின் உறைப்பாலே
வென்றவர்தந் திருப்பேரோ வேறொருபேர்? எனவெகுள்வார்''[5]

எனச் செப்பினர். அப்பூதியடிகளுக்கு, வந்தவர் திருநாவுக்கரசர் என்பது தெரியாது. தன்னுடைய பெயரையே ''வேறொரு பேர்'' என்று திருநாவுக்கரசர் கூறியவுடன் அப்பூதியடிகள் கேட்டு வெகுண்டார். திருநாவுக்கரசர் பெயரைத் திருநாவுக்கரசர் என்றே அழைக்க வேண்டும் என்பது அப்பூதியடிகளின் விருப்பம். திருநாவுக்கரசர் பெயரை வந்தவர் இகழ்ந்துரைத்தார் என்று எண்ணி அப்பூதியடிகள் சினந்தார்.

---

1. தண்டியடிகள் நாயனார் புராணம் - 6.
2. தொல். பொருள். சூத். 258-உரை; பேராசிரியர் உரை.
3. தொல். பொருள். சூத். 254-உரை; இளம்பூரணம்.
4. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 387.
5. அப்பூதியடிகள் நாயனார் புராணம் - 13.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நமிநந்தியடிகள் விளக்கெரிக்க அமணர் வீட்டில் நெய் கேட்ட பொழுது ''கையில் விளங்கு கனலுடையார் தமக்கு விளக்கும் மிகை; நெய்யிங்கில்லை; நீரை முகந்து விளக்கெரிப்பீர்'' என்று சொன்ன இகழ்ச்சி உரைகள் நாயனார் மனத்தகத்தே உட்கோபத்தை மூட்டின.[1]

அங்கணரின் அடியார்களை இகழ்ந்துரைத்த நாவினைக் குறடு போன்ற கருவியால் இழுத்துக் கத்தியால் அரிந்தார் சத்தியார்.[2]

இவை வெகுளிக்குரிய காரணங்களுள் கொலை என்பதன்பாற் படும். அறிவும், புகழும் முதலாயினவற்றைக் கொன்றுரைத்தல், இகழ்ந்துரைத்தல் கொலை என்பதாம்.[3]

8. உவகை

நகையோடு தொடர்புடையதும் நகையினின்று சிறிது மாறுபட்டதுமான மெய்ப்பாடு உவகை.[4] உள்ளத்தளவில் மகிழ்ச்சி அடைவது உவகையாம். வடமொழியாளர் இதனைச் ''சிருங்கார ரஸம்'' என்றனர். காமத்தினால் ஏற்படுகின்ற உவகையைச் சிருங்கார ரஸம் எனக் கூறினர். தொல்காப்பியர் காமத்துவழி பிறந்த மகிழ்ச்சியை மட்டும் உவகை எனக்கூறாது மற்றவற்றால் ஏற்படுகின்ற மகிழ்ச்சியையும் உவகை என்றார். வரலாறு, வாழ்க்கை வரலாறு ஆகியவற்றுள் வரும் அவலத்தைப்போன்று, கற்பனையாகத் தோன்றும் அவலத்தின் மூலமும் உவகை தோன்றும் என மொழிந்தார் மேனாட்டுத் திறனாய்வாளர்.[5]

தொல்காப்பியர் உவகை தோன்ற நான்கு நிலைக்களன்களாக,

''செல்வம் புலனே புணர்வு விளையாட்டென்
றல்லல் நீத்த உவகை நான்கே''[6]

---

1. நமிநந்தியடிகள் நாயனார் புராணம் - 10.
2. சத்தி நாயனார் புராணம் - 3.
3. தொல்காப்பியம். பொருள். சூத். 258; பேராசிரியர் உரை.
4. சிலம்பில் மெய்ப்பாடுகள் - பக். 126; டி.ஜி என். தாசன்.
5. Priniciples of literary criticism. page 66 C.T.Winchester.
6. தொல்காப்பியம்: பொருள். சூத். 255 - இளம்பூரணம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்றார். ''அல்லல் நீத்த உவகை'' என்றதனால் பிறரது துன்பம் காரணமாகத் தோன்றும் உவகையும் உவகையின் பாற்படாது உரைத்தார் பேராசிரியர்.[1] பிறன்கட்டோன்றிய இன்பம் பற்றியும் உவகை பிறக்கும் என்றார் அவர்.[2] காப்பியத்துள் கூறப்பெற்ற ஏழு சுவைகளும் ஒருங்கிணைந்து முழு உருவமாக அமையும்பொழுது ஒரு சுவை தோன்றும். அதையும் உவகையுள் அடக்கலாம். இனிப் புராணத்துள் உவகையைக் காண்போம்.

நான்மாடக்கூடலில் மன்னிய சிவன் கொடுத்த திருமுகப்பாசுரத்தினைக் கண்டு, அதனை முடிமேற்கொண்டு கூத்தாடி பொழி கண்ணீர் சிந்திப் பாணபத்திரனாருக்கு நிறைந்த பொருள் களைப் பொறையர் புரவலனாராகிய கழறிற்றறிவார் அளித்தார். பைம்பொன் மௌலிச் சேரலனார் அருளிய நிதியெல்லாங் கண்டு, பாணபத்திரனார் மகிழ்வுற்றார்; அதிசயித்தார்.[3] கழறிற்றறிவார் இருந்து அரசு புரியும் கொடுங்கோளூர் நகரின்கண், மனைகள் தோறும் மிக்க செல்வங்கள் நிறைந்திருந்தன. அதனால் மக்களுக்கு நிறையின்பம் விளைந்தது.[4]

மக்கள் செல்வத்தால் மகிழ்ந்திருக்க, கழறிற்றறிவார் தில்லைத் திருச்சிற்றம்பலத்துள் ஆடுங்கழலைத்தான் தேடும் பொருளாகவும், பெருந்துணையாகவும், பெருஞ்செல்வமாகவும் கருதினார்.[5] காஞ்சிபுரத்தின் வளத்தினைக் கூறுங்கால்,

''*புவனம் பதினான்கிலும் உள்ள வளமெல்லாம் காஞ்சி நகரின்கண் நிறைந்தது. அது ஒரு கொள்கலமாக விளங்கியது*''

என்றார்.[6] அந்நகரின்கண் வாழ்ந்த மக்களின் செல்வ நுகர்ச்சி அளவிடற்பாலது.

---

1. தொல்காப்பியம்: பொருள். சூத். 259 - பேராசிரியர் உரை.
2. தொல்காப்பியம்: பொருள். சூத். 259; பேராசிரியர் உரை.
3. கழறிற்றறிவார் நாயனார் புராணம்-36.
4. கழறிற்றறிவார் நாயனசர் புராணம் - 3.
5. கழறிற்றறிவார் நாயனார் புராணம் - 23.
6. திருக்குறிப்புத்தொண்ட நாயனார் புராணம்-110.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவை தொல்காப்பியர் கூறிய நான்கனுள் ஒன்றாகிய செல்வத்தின் பாற்படும். செல்வம் என்பது நுகர்ச்சி.

சண்டேசுரர் அவதாரம் செய்த திருச்சேய்ஞலூரின்கண் வாழ்ந்த மறையவர்களைப் பற்றிச் சேக்கிழார் கூறுங்கால்,

"செம்மை வெண்ணீற் றொருமையினார் இரண்டு பிறப்பின்
சிறப்பினார்;
மும்மைத் தழலோம் பியநெறியார்; நான்கு வேதம் முறை
பயின்றார்;
தம்மைஐந்து புலனும்பின் செல்லும்தகையார்; அறுதொழிலின்
மெய்ம்மை ஒழுக்கம் ஏழுலகும் போற்றும் மறையோர்
விளங்குவது"[1]

எனப் பகர்ந்தார். போற்றத்தக்க நுண்மாண் நுழைபுலம் மிக்க மறையவர்கள் அவ்வூரின்கண் வாழ்ந்திருந்தனர். கசடறக் கற்று அறிவுப் புலனில் மிக்கவராய் விளங்கினர். இப்பாடலுள் எண்கள் முறைப்படி வந்தமைந்துள்ள அழகினைக் காணலாம்.

சிறுத்தொண்டர் ஆயுள் வேதம் எனப்படும் மருத்துவ நூற் கலையையும், அளவில்லாத வடநூல்கவில் உள்ள பலவிதக் கலைகளையும், படைக்கலத் தொழிலையும் கற்றுத் துறை போயினார். அந்தக் கலைகளைப் பயின்றதனோடு பாய்கின்ற குதிரைகளையும், மதம்பொழிகின்ற யானைகளையும் செலுத்துகின்ற கலையையும் கற்றுப் பேருவகை உடையவராயினார்[2]. மேற்கூறப் பெற்ற இவை, நான்கனுள் ஒன்றாகிய புலன் என்பதன்கீழ் அடங்கும். புலனென்பது கல்விப் பயனாகிய அறிவுடைமை.[3]

நம்பியாரூரர் சங்கிலியாரைத் திருமணம் புரிந்து இல்லறத்துள் புக்கு அவளோடு இன்பந்துய்த்த பாங்கினை ஆசிரியர்,

"புண்டரிகத் தவள்வனப்பைப் புறங்கண்ட தூநலத்தைக்
கண்டுகேட் டுண்டுயிர்த்துற் றமர்ந்திருந்தார் காதலினால்"[4]

எனக் கூறினர்.

---

1. சண்டேசுர நாயனார் புராணம் - 2.
2. சிறுத்தொண்ட நாயனார் புராணம் - 3.
3. தொல்காப்பியம்: பொருள். சூத். 259; பேராசிரியர் உரை.
4. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 267.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள"[1]

எனத் திருவள்ளுவர் கூறிய தலைவியைப் போன்றே சேக்கிழாரும் சங்கிலியாரைக் கூறி, சுந்தரர் அவள்பால் தன் ஐம்புலன்களாலும் இன்பம் அனுபவித்தார் எனப்பகர்ந்தனர். யாழ்மொழி, எழில் முறுவல், மாவடுக் கண்ணள், வனமுலை கொண்ட சங்கிலியாரின் மணியல்குல் துறை படிந்து எழுந்த சுந்தரரும் அவளுடன் கலவியும் புலவியும் புரிந்து உவகை வெள்ளத்துள் நீந்தித் திளைத்தனர்.[2] சங்கிலியாருடன் இன்பந் துய்த்தது போன்றே ஆரூரர் பரவையாருடனும் இன்பந்துய்த்தார்.[3]

இவை நான்கனுள் புணர்வு என்பதனுள் அடங்கிக் காமத்து வழி பிறந்த உவகையாகும்.

"பெரியபுராண அமைப்பு" என்னுந் தலைப்பில் பெருங்காப்பியத்தைப் பற்றிக் கூறுங்கால் "பூம்பொழில் நுகர்தல்; புனல் விளையாடல்" என்பவற்றிற்குக் கூறப்பெற்ற செய்திகளை உவகை தோன்ற நிலைக்களனாயுள்ள நான்கனுள் விளையாட்டு என்பதற்கும் கூறலாம்.[4]

இங்ஙனம் எண்சுவைகளைச் சுவைபட அமைத்தார் சேக்கிழார்.

பத்தி

மக்களுடைய உணர்ச்சிகள் என்றும் ஒரே நிலையானவை அல்ல. காலத்திற்குக் காலம் உணர்ச்சிகள் கூடும். தொல்காப்பியர் காலத்தில் மக்கள் எட்டுச் சுவைகளைக் கொண்டிருந்தனர். எனவே அவற்றிற்கு மட்டும் அவர் இலக்கணம் வகுத்தார். வடமொழியாளர்கள் ஒருணர்ச்சியும் இல்லாமல் அமைதியாக இருத்தலை நடுநிலை (சாந்தம்) எனக்கூறி அதையும் ஒரு சுவையாக்கினர். பின்னர் இறைவனையும், இறைவனுடைய தொண்டர்களையும் அறிந்து கொள்ளுவதிலும் அவர்களைப்பற்றிக்

1. திருக்குறள் 1101.
2. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 268.
3. தடுத்தாட்கொண்ட புராணம் - 181.
4. இவ்வாய்வு ஏடு - பக். 65.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கூறுவதிலும் மக்கள் சுவையைக் கண்டனர். இது பத்தி எனப்பட்டது. இதையொட்டி பத்தி இலக்கியங்கள் தோன்றின. இதுவரை கூறப்பெறாத, படிக்கின்றவர்க்கு மகிழ்ச்சி தந்த ஒரு சுவையை உணர்ந்தனர். இது பத்தியை அடிப்படையாகக் கொண்டிருந்தமையின் பத்திச் சுவை எனப் பெயரிட்டனர்.

மற்றச் சுவைகளை எல்லோரும் எளிதில் துய்க்கமுடியும். பத்திச் சுவையினைப்பத்தி அனுபவம் உள்ளவர் மட்டுந்தாம் துய்க்கமுடியும்; அனுபவிக்க முடியும். திருவாசகத்தை வள்ளலாரும் சிவப்பிரகாசரும் போல் எத்தனை பேர் அனுபவித்திருப்பர்? ''அதனால்தான் எல்லாச் சுவையினும் பத்திச் சுவை மேம்பட்டதாகத் திகழ்கின்றது''[1] என்றார் அ. ச. ஞானசம்பந்தனார். இனிப் பத்திச்சுவையும் சுவைகளுள் ஒன்றா எனக் காணல்வேண்டும். டாக்டர் வி. இராகவன் அவர்கள் சுவைகளைப் பற்றிக் கூறும்பொழுது, ''முதலில் எண்சுவைகள்தாம் இருந்தன. காளிதாசர் எண்சுவைகளைத் தாம் குறிப்பிட்டார். பின்னர் வந்தோர் சாந்தநிலையை ஒரு சுவையாக்கி ஒன்பதாக்கினர். இதைப் பெரும்பான்மையோர் ஏற்றுக் கொண்டனர்.[2] என்று கூறினார். மேலும் கடவுளிடம் காட்டும் அன்பு பத்தியாகும். இந்த மண்ணில் இத்தகைய அன்பு உணர்ச்சி ஒரு சுவையாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். அதுவே உண்மையும் இயற்கையுமாகும். பத்தியைச் சாந்தத்தின் கீழ் கொண்டுவர விரும்புகின்றனர். சிலவிடங்களில் ஞானநிலையில் பத்தி சாந்தத்தின் அங்கமாக இருக்கலாம். அப்பொழுதுகூட பத்தியின் ஆற்றல்கள்தாம் உச்சநிலையில் செயல் புரிகின்றன. எனவே பத்தி வேறு; சாந்தம் வேறு'' என்று ஆராய்ந்து முடிவு காட்டி பத்தியும் ஒரு சுவையே என்றனர்.[3] பி. திருஞானசம்பந்தன் அவர்களும் பத்தியைச் சுவைகளுள் ஒன்றாகவே கொண்டனர்.[4]

குழந்தை தாயிடம் காட்டுவது அன்பு; பத்தர்கள் இறைவனிடம் காட்டுவதும் இதைப்போன்ற அன்புதான். ஆனால் பத்தர்கள் அவ்வன்பினைக் காட்டும்பொழுது அஃது உச்சநிலைக்குச் சென்று

---

1. இலக்கியக்கலை - பக். 249; அ. ச. ஞானசம்பந்தம்.
2. The Number of Rasas, P. 142; Dr. V. Raghavan.
3. The Number of Rasas, P. 129, 135; Dr. V. Raghavan.
4. The Concept of Bakti, P. 5; P. Thirugnanasambandam.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உருமாறிப் பத்தியாகப் பரிணமிக்கின்றது. இந்தப் பத்தியினைத் தான் சேக்கிழார் தம் புராணத்துள் வெளிப்படுத்தினார். அப் பத்தியை இனிக் காண்போம்.

அடியார் வாழ்க்கையில் பத்தி

முடிசூட்டிய பின்பு நகர்வலம் வந்தபோது கழறிற்றறிவார் நாயனார் எதிரே வண்ணான் வரக் கண்டார். மழையிற் கரைந்த உவர்மண், ஊறி மேனி வெளுத்த அவ்வண்ணானைத் திருநீறு பூசிய அடியார் எனக் கருதி கழறிற்றறிவார் நாயனார் பத்தியால் வணங்கினார்.[1] திருக்காளத்தி மலையின் உச்சியில் வீற்றிருந்த குடுமித் தேவரைக் கண்ட திண்ணன்,

"நெடிதுபோ துயிர்த்து நின்று நிறைந்தெழு மயிர்க்கால் தோறும்
வடிவெலாம் புளகம் பொங்க மலர்க்கண்ணீர் அருவி பாய
அடியனேற் கிவர்தாம் இங்கே அகப்பட்டார் அச்சோ" என்று
படியிலாப் பரிவு தானோர் படிவமாம் பரிசு தோன்ற"[2]

இறைவனோடு ஒன்றிப் போயினர். உயிரைக் கொன்று தின்னும் வேடுவர் இனத்தில் தோன்றிய கண்ணப்ப நாயனார் வரலாறு ஒன்றே பத்திச் சுவைக்குச் சாலும்.

உயிர்கள் வாழ, உலகம் இயங்குவதற்காக ஐயர் ஆடும் தில்லைத் திருக்கூத்தினைப் புராணத்துள் பாடாத இடமில்லை. அத்தில்லையைத் தொழுதவர்களுக்கு ஆணவ மலம், கன்ம மலம், மாயா மலம் என்ற மும்மை மலங்கள் நீங்கி வீடுபேறு கிடைத்தது.[3] திருப்பாதிரிப்புலியூரில் கடலினின்றும் தருமசேனர் கரையேறிய போது மெய்த்தவக் குழாமெலாம் ஆர்த்தெழுந்தது; கடலும் ஆர்த்தது. இதைச் சேக்கிழார்,

"எத்திசையி னும்அர என்னும் ஓசைபோல்
தத்துநீர்ப் பெருங்கடல் தானும் ஆர்த்ததே"[4]

என்றார். தொண்டர் மட்டுமன்று; கடலும் சிவ ஒலியையே எழுப்பியது போன்றிருந்தது. சிவ ஒலியே எங்கும் முழங்கியது.

---

1. கழறிற்றறிவார் நாயனார் புராணம் - 19.
2. கண்ணப்ப நாயனார் புராணம் - 106.
3. தடுத்தாட்கொண்ட புராணம் - 92.
4. திருநாவுக்கரசு நாயனார் புராணம் - 132.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அடியாராகிய தொண்டர்தம் காதல் வாழ்க்கையைக் கூடப் பத்திச் சுவையோடு பாடினர். புலவர் பெண்ணைக் கொடியாக, மயிலாக உருவகம் செய்வது மரபு. ஆனால் சேக்கிழார் பரவையாரை,

"பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ?"
"அற்புதமோ? சிவனருளோ? அறியேன்!"

எனப் புண்ணியத்தின் புண்ணியமாகவும் சிவனருளாகவும் உருவகப் படுத்தினர்.

ஆரூரரைக் காளை. புலி எனக் கூறாமல்,

"முன்னேவந் தெதிர்தோன்றும் முருகனோ?"
"மின்னேர்செஞ் சடையண்ணல் மெய்யருள் பெற்
றுடையவனோ?"

என முருகனாகவும், செஞ்சடை அண்ணலின் மெய்யருட்டன்மை பெற்றவனாகவும் கூறிப் பத்தியோடு இணைத்துக் காட்டினர்.[1]

அடியார்களுக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பில் பத்தி

புராணம் முழுவதும் திருத்தொண்டர்களின் பத்தி வாழ்க்கை, அத்தொண்டர்களோடு இறைவன் ஈடுபாடு இவற்றைப் பற்றியே உள்ளன. தொண்டர்களுக்குச் சோதனையை இறைவன் நல்கினான். அச்சோதனையில் அவர்கள் வெற்றி பெற்றபோது மகிழ்ந்தான். தொண்டர்கள் துன்புற்றபோது துணையாய் வந்தான்.

சுந்தரன் வழிநடந்த களைப்பால் உண்ணீர் வேட்கையும், உறுபசியும் ஏற்பட்டபொழுது தண்ணீரும் பொதிசோறும் தந்தான். இருவரும் "சிவாயநம" எனப் பேசி மகிழ்ந்தனர்.[2] "சிவாயநம" என்னும் ஐந்தெழுத்து மந்திரமே காவியம்முழுவதும் நிறைந்து உள்ளது. அன்பர் பசி போக்குவதற்காக இறைவன் மனைதோறும் சென்று இரந்து இன்னடிசிலும் கறியுங் கொணர்ந்தார்.[3]

1. தடுத்தாட்கொண்ட புராணம் - 140, 144.
2. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 156, 158.
3. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 179.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒரு தொண்டனுக்காக அவன் மனைவிபால் இறைவன் தூது போன காட்சியைப் படித்தபோது பத்தியின் பெருமையைக் கண்டோம். பகைவர் என்று அறிந்தும், அவர்கள் அணிந்திருந்த திருநீற்றால், இறைவன் மீது வைத்திருந்த பத்தியினால் அவர்களைக் கொல்லாது, அவர்களால் தாம் மடிந்த திருத்தொண்டர்களையும் புராணத்துள் கண்டோம்.[1]

அடுத்துச் சேக்கிழார் இயற்கையைப் படம் பிடித்துக் காட்டிய பொழுது கூட இறைவனாகவும், இறைவனைப் போன்றும், அவனைச் சார்ந்தவராகவும், அவனுடைய பொருளாகவும், சின்னங்களாகவும் கூறிப் பத்திச்சுவையையே புலப்படுத்தினார்.

''கற்பனையும் அணிநலனும்'' எனுந் தலைப்பின் கீழ் வந்துள்ள பத்தி உவமைகளைப் பத்திச் சுவையாகக் கொள்ளலாம்.[2] அவற்றுள் இயற்கையும் இறைவனாக, இறைவனோடு தொடர்பு உடைய பொருட்களாகப் பேசப்பெற்றுள்ளன.

இறைவனைப் பற்றியும் இறைவனுடைய திருத்தொண்டர்களைப் பற்றியுமே சேக்கிழார் புராணம் பாடினமையின் மற்றச் சுவைகளை விடப் பத்திச் சுவையினைத்தான் நனி கூறியுள்ளார்.

*

1. (1) ஏனாதிநாத நாயனார் புராணம் (2) மெய்ப்பொருள் நாயனார் புராணம்.
2. இவ்வாய்வு ஏடு - பக். 81-87.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Forwarded free of Cost, and with the Compliments of the Department of Education, Government of India, New Delhi.

பகுதி 5

இலக்கிய நயங்கள்

"நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு".

— திருக்குறள் 783.

*

"இலக்கியத்தில் இன்பந் தருவன அதன்கண் இடம்பெற்ற சிறப்பான பகுதிகளாம். இலக்கியத்தில் இன்பத்தை நல்குவன. சொற்சுவை, பொருட்சுவை, கவிதைச்சுவை ஆகியன தோன்றும் பகுதிகள், கவிதை அமைப்பு, சொற்றொடர் அமைப்பு, இருபொருட்டிறன், நயம்படக் கூறுந்திறன் போன்று அமைந்தவையே".

— இவ்வாய்வு ஏடு - பக். 153-154.

*

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இலக்கிய நயங்கள்

நல்ல இலக்கியங்கள் படிப்பவர்களின் உள்ளங்களைத் தட்டி எழுப்பி இன்பத்தில் திளைக்கும்படி செய்யும். இதுவரையிலும் தாம் அனுபவிக்காத ஒருவகையான இன்பத்தைச் சிறந்த இலக்கியத்தைப் படிப்பவர் அனுபவிப்பர். ஆழ்ந்து கற்க, கூர்ந்து நோக்க புதுப் புதுப் பொருளை நல்கிப் புதிய புதிய இன்பத்தை இலக்கியம் வழங்கும். இங்ஙனம் இலக்கியத்தினின்று தோன்றும் இன்பத்தைத் தான் இலக்கிய இன்பம் என்பர். இதைத் திருவள்ளுவரும்,

> ''நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
> பண்புடை யாளர் தொடர்பு''[1]

என்றார். பண்புடையார் தொடர்புக்கு நல்ல நூல் நயத்தை உவமையாகக் காட்டினர்.

இலக்கியத்தில் இன்பந்தருவன அதன்கண் இடம்பெற்ற சிறப்பான பகுதிகளாம். இலக்கியத்தில் கையாளப்பெற்ற எல்லாத் தொடர்களும் சொற்களும் இன்பத்தை நல்கா என்பது ஓரளவு உண்மையாயினும் சில தொடர்கள், சில சொற்கள் மட்டுமே சிறப்புப் பகுதிகளாக இருந்து இன்பத்தை அளிக்கும். தோன்றிய இடம், சூழ்நிலை, அடுத்து வரும் சொல், வேறு பொருள் அளிக்கும் திறன் இவற்றாலேயே புதுப்புது இன்பம் தோன்றும். சிலவிடங்களில் நீண்ட சொற்றொடரை விட, ஒரே ஒரு சொல் மட்டும் உயர்ந்த, நிலைத்த இன்பத்தைக் கொடுக்கும். அந்தச் சொல் மட்டும் அந்த இடத்தில் இல்லையென்றால் முழு இலக்கியமே பொருளற்றுப் போய்விடும். ஒரு சொல்லே இலக்கியத்தை வளைத்துத் தன்னுள் இணைத்துக் கொண்டிருக்கும். அத்தகைய ஆற்றல் சொற்களுக்கு உண்டு.

---

1. திருக்குறள் - 783.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இலக்கியத்தில் இன்பத்தை நல்கிச் சிறப்புப் பகுதிகளாக இருப்பவை சொற்சுவை, பொருட்சுவை, கவிதைச்சுவை, கவிதை அமைப்பு, சொற்றொடர் அமைப்பு இருபொருட்டிறன், கூறும் திறன் போன்று அமைந்தவையே.

சேக்கிழார் பெரியபுராணத்தினைப் பத்திக் காவியமாகப் படைத்தபோதினும் அதனுள் இலக்கிய நயங்களையும் எடுத்துக் காட்டத் தவறினாரில்லை. ஆசிரியன் இலக்கியச் சுவைகளை இலக்கியத்தில் வலிந்து அமைப்பது உண்டு. அவை சிறப்பாக அமையா. சேக்கிழார் போன்ற தெய்வக் கவிஞர்கள் உயர்ந்த நிலையில் பாடிச் செல்லும்பொழுது இலக்கியத்தின்கண் இலக்கியச் சுவைகள் ஆங்காங்குத் தாமே அமையும்; படித்துப் பார்த்தபின்பே அவர்களுக்கே விளங்கும். தெய்வக் கவிதைகளாக விளங்குகின்ற பெரியபுராணத்துள் இவ்விலக்கியச் சுவையை, நயத்தை இனிப் பருகுவோம்.

சொற்சுவை

நம்பியாரூரர் புத்தூர் சடங்கவி சிவாச்சாரியாரின் திருமகளைத் திருமணம் செய்யப் போயினர். இத்திருமணம் இறைவனுக்கு உடன்பாடு இல்லை. திருக்கயிலையில் தன்னைவிட்டு நீங்குங் கால், மானிட வாழ்க்கையில் தான் மயங்கிய காலத்தில் தன்னைத் தடுத்தாட் கொள்ள வேண்டும் என, [1] சுந்தரன் வேண்டிக் கொண்ட தற்கிணங்க நடைபெறவிருந்த திருமணத்தை நிறுத்தி ஆரூரனைத் தடுத்து இறைவன் ஆட்கொள்ள வேண்டும். எனவே இத்திருமணம் நடைபெறாது நின்று விட இருந்தது. இதை முடிவில் உடனே எடுத்துக் கூறாமல், திருமணத்திற்குரிய ஏற்பாடுகளைப் பெண் வீட்டார் செய்து கொண்டிருந்தனர் என்று கூறியபொழுதே ஆங்காங்குச் சில சொற்களால் திருமணம் நின்று விடும் எனும் பொருள்படக் கூறிச் சென்றார் ஆசிரியர்.

சேக்கிழார் ஓரிடத்திலேனும் மணம் என்றோ திருமணம் என்றோ கூறினாரில்லை. மணம் என்ற சொல்லுக்கோ அல்லது இப்பொருள் கொண்டு வேறு ஒரு சொல்லுக்கோ முன்னும் பின்னும்

1. திருமலைச் சிறப்பு - 28.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொருத்தமான வேறு ஒரு சொல்லை அமைத்துத் திருமணம் நடைபெறாது எனுங் குறிப்பைக் காட்டிச் சென்றார். மணத்திறம்,[1] மண வினை,[2] மங்கல வினைகள்,[3] திருமணக் கோலம்,[4] விதிமணக் கோலம்,[5] நன்மணக் கோலம்,[6] அருங்கடி மணம்,[7] வருமணக் கோலம்,[8] மணத் தொழில்,[9] மன்றல் வினை,[10] வேள்வி,[11] ஆகிய சொற்றொடர்களால் திருமணம் நடைபெறாது என்ற கருத்தினைப் புலப்படுத்தினர். இவற்றில் மணம் என்ற சொல்லுக்கு முன்னும் பின்னும் அல்லது மணத்தைக் குறிக்கின்ற மன்றல், மங்கலம் என்ற சொற்களுக்கு முன்னும் பின்னும் தக்க வேறு சொற்களை அமைத்துக் கருத்தைப் புலப்படுத்தினர் ஆசிரியர்.

''செந்திரு அனைய கன்னி மணம் செப்பி விட்டார்'' என்று சேக்கிழார் கூறாது, ''மணத்திறம் செப்பி விட்டார்''[12] என்று கூறினர். ''கன்னி மணம்'' எனக் கூறியிருந்தால் திருமணத்தைத் தான் குறிக்கும். ''கன்னிமணத்திறம்'' எனக் கூறினமையின் மணத்தைக் குறிக்காமல் மணத்திற்கு முன் நடந்த நிகழ்ச்சிகளைக் குறித்துச் செப்பி விட்டார் எனப் பொருளாயிற்று. இங்ஙனம் கூறியது போன்றே மணம் நடைபெறாது மணத்திற்கு முன் நிகழ்ச்சிகளெல்லாம் நடைபெற்றன. அதாவது திருமணங் குறித்து ஓலை அனுப்பியது. மாலைப்பந்தர் அமைத்தது, நீள்முளைப்பாரி சாத்தியது. சுந்தரரை அலங்கரித்தது ஆகியவை. இங்ஙனம் பொருள்பட்ட சொற்களைச் சேக்கிழார் அமைத்தபொழுது அவற்றில் சொற்சுவை தோன்றுகின்றது.

---

1. தடுத்தாட் கொண்ட புராணம் - 7.
2. தடுத்தாட் கொண்ட புராணம் - 9.
3. தடுத்தாட் கொண்ட புராணம் - 11.
4. தடுத்தாட் கொண்ட புராணம் - 13.
5. தடுத்தாட் கொண்ட புராணம் - 14.
6. தடுத்தாட் கொண்ட புராணம் - 18.
7. தடுத்தாட் கொண்ட புராணம் - 23.
8. தடுத்தாட் கொண்ட புராணம் - 27.
9. தடுத்தாட் கொண்ட புராணம் - 33.
10. தடுத்தாட்கொண்ட புராணம் - 34.
11. தடுத்தாட்கொண்ட புராணம் - 35.
12. தடுத்தாட்கொண்ட புராணம் - 7.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''மணவினை உவந்து சாற்றி''[1] - மணத்தைக்குறிக்காமல் மணத்திற்குரிய வினைகளை மகிழ்ந்து ஓலையில் குறித்தனுப்பினர். மணத்தை குறித்த ஓலையை ஏந்திச் செல்லாமல் ''மணவினை ஓலை ஏந்திச் சென்றனர்.''[2] திருமணமாகிய மங்கலத்தைச் செய்யாமல் ''மங்கல வினைகளைச்''[3] செய்தனர். தேமரு தொடையல் மார்பனாகிய ஆரூரரின் திருமணத்தைக் காணக் கதிரவன் உதயம் செய்யவில்லை. ''திருமணக் கோலத்தைக்''[4] காண உதயஞ் செய்தனன். திருமணத்திற்காகச் செய்த கோலத்தை, அழகினைக் காண எனப் பொருள் கொள்ளலாம். திருமணம் நின்ற கோலத்தைக் காண எனவும் பொருள் கொள்ளலாம். முன் தொடர்பால் இத்திருமணம் நடைபெறாது, இயற்கை மணமாக இல்லாது பெரியோர்களால் விதிக்கப்பட்டு நடைபெற இருந்தமையின் இதனை ''விதி மணம்''[5] என்றார். பின்னர் இந்த மணம் நின்றுவிடப் போகின்றமையின் 'கடிமணம்'[6] என்றார். கடியப்படும்-தடுக்கப்படும் மணம் என்ற பொருள் இதனுள் பொதிந்துளது. திருமணத்திற்கு வேண்டியவையெல்லாம் செய்து திருமணம் நின்று விட்டமையின் இது புதுமையான மணமாகும். ''கடி'' என்பதற்குப் புதுமை என்ற பொருளும் உண்டு. திருமணத்திற்கு முன் நெருப்பு வளர்த்துச் செய்யும் சடங்கு வேள்வி எனப்பட்டது. அப்பொருளில் ''வேள்வியினை நீ முயல்தி''[7] என்று கூறினர். ''மணத்தை முயல்தி'' எனக் கூறவில்லை. அதுவும் முயல்தி எனக் கூறினரேயன்றிச் ''செய்'' எனக் கூறவில்லை. கூறின் மணத்திற்குரிய வேள்வியைச் செய்தாக வேண்டும்.

திருமணம் நின்றுவிடும் என்பதைப் பதினான்கு இடங்களில் அதற்குரிய சொற்களால் குறிப்பாகக் காட்டினர் ஆசிரியர். இத்தகைய சொற்குறிப்பு உள்ளத்தில் பேருவகையை உண்டாக்குகின்றது.

---

1. தடுத்தாட்கொண்ட புராணம் - 9.
2. தடுத்தாட்கொண்ட புராணம் - 10.
3. தடுத்தாட்கொண்ட புராணம் - 11.
4. தடுத்தாட்கொண்ட புராணம் - 13.
5. தடுத்தாட்கொண்ட புராணம் - 14.
6. தடுத்தாட்கொண்ட புராணம் - 23.
7. தடுத்தாட்கொண்ட புராணம் - 35.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சுந்தரருக்கும் சங்கிலியாருக்கும் திருமணம் நடைபெற்றது. இருவரும் சிறிது காலந்தான் இல்லற வாழ்க்கையில் மகிழ்ந்துறைந் தனர். பின்னர் சுந்தரர் சங்கிலியாரைப் பிரிந்தனர். இவர்களுடைய இல்லற வாழ்க்கை நீடிக்கவில்லை. இவர்கள் பிரிந்து விடுவர் என்பதைக் காட்டுகின்றமுகத்தான் இவர்களுடைய திருமணத்தைக் குறித்தபொழுது ''மணம்'' எனக் குறிக்காமல் ''மண வினை'', ''மன்றல் வினை'' எனக் குறித்தார்.[1]

இவர்கள் போன்றே புனிதவதி என்ற காரைக்காலம்மையாரும் பரமதத்தனும் இல்லற வாழ்வில் இனிதாக இல்லை. கணவன் பரமதத்தன் புனிதவதியை நீங்கி வேறு ஒரு திருமணம் செய்து கொண்டனன். முன்னமேயே இவர்களுடைய திருமணத்தைக் கூறிய சேக்கிழார், ''வதுவை வினை''[2] ''வதுவைத் தொழில்''[3] ''மண வினைகள்'',[4] என்றே முன்னர் குறித்தது போன்றே குறித்தனர். இருவரும் இணைந்து திருமணம் செய்து கொண்டதை மட்டும் மணம் என்று குறிக்காமல் ஒன்றுபட்ட மனத்தினராய் இல்லறத்தில் இனிது வாழ்ந்ததையும் மணம் என்றே கொள்ள வேண்டும். சுந்தரர் - சங்கிலியார், பரமதத்தன் - புனிதவதியார் ஆகியோர் திருமணத்தில் வினை நிகழ்ந்ததேயொழிய மணம் நிகழவில்லை. ஆனால் பரமதத்தன் புனிதவதியை நீங்கிப் போய் பாண்டி நாட்டில் செய்த திருமணத்தை ''செப்பருங் கன்னி தன்னைத் திருமலி வதுவை செய்தான்''[5] என்று கூறி ''வதுவை'' என்னும் சொல்லுக்கு முன்னும் பின்னும் அடைமொழி கொடுக்காது கூறினர். காரணம் யாதோவெனின் இவ்விருவரும் ஒன்றுபட்டு வாழ்ந்தனர் என்பதே.

மானக்கஞ்சாற நாயனாரின் திருமகளாருக்கும் ஏயர்கோன் கலிக்காம நாயனாருக்கும் நடைபெற்ற திருமணம் சிறிது தடைப் பட்டது. மானக்கஞ்சாற நாயனார் தம் திருமகளாரின் கூந்தலை வழித்து முனிவராக வந்த இறைவனுக்குக் கொடுத்து விட்டார்.

1. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 264, 265.
2. காரைக்காலம்மையார் புராணம் - 9.
3. காரைக்காலம்மையார் புராணம் - 10.
4. காரைக்காலம்மையார் புராணம் - 12.
5. காரைக்காலம்மையார் புராணம் - 35.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மங்கல நாளில் ஒரு அமங்கலம் நடைபெற இருக்கின்றது என்பதைக் குறிக்கவே சேக்கிழார், திருமண நாளைக் குறித்துக் கூறுங்கால் ''மன்றல்வினை மங்கலநாள் மதிநூல்வல் லவர்வகுத்தார்''[1] என்றார். திருமணத்தைக் குறித்தபொழுதே மதிநூல்வல்லார் மன்றலைக் குறிக்காமல் ''மன்றல் வினை''யைக் குறித்தனர் என்று கூறினார். அதுவாவது திருமணத்தைக் குறிக்காமல் திருமண நிகழ்ச்சிகளைக் குறித்தார் என்பதாம்.

இராமனுக்கு முடிசூட்டு விழா நாளினைக் குறித்த கணிதநூற் புலவரை, சோதிடம் பயன்படாமை பற்றிக் கம்பர், ''கணித மாக்கள்'' என்றே அழைத்தார்.[2]

திலகவதியாருக்கும் கலிப்பகையாருக்கும் மணம் நிச்சயிக்கப் பெற்றது. மணம் நிகழ்வதற்கு முன்னால் கலிப்பகையார் போர்க் களத்தில் உயிர் துறந்தார். நடைபெறாத் திருமணம் ஆயினமையின் இவர்களுடைய மணத்தை ஆசிரியர் கூறியபொழுதே. ''வதுவை வினை'' என்றே கூறியிருக்க வேண்டும். ஆனால் ''வதுவை யினை''[3] என்றே பதிப்பில் இருக்கின்றது. ''வி'', ''யி''யாக மாறிவிட்டது. இது பாடபேதமாக இருத்தல் கூடும். ''வதுவை வினை'' என்றே இருத்தல் வேண்டும். மற்றெல்லா இடங்களிலும் அவ்வாறு குறித்தவர் இங்கு மட்டும் இவ்வாறு குறித்திரார். ஆனால் ஆறுமுக நாவலர் பதிப்பிலும், சி. கே. சுப்பிரமணிய முதலியார் உரையின் கண்ணும் ''வதுவை வினை'' என்றே உள்ளது. சில பதிப்புக்களில் ''வதுவையினை'' என்றே காணப்படுகின்றது.

சேக்கிழார் தம் காவியத்துள் மற்ற இடங்களிலும் திருமணத் தைப் பற்றிக் கூறினர். அவ்விடங்களில் எல்லாம் அடைமொழிகள், பின்சொற்கள் இல்லாமலேயே கூறிச் சென்றார். சுந்தரர்க்கும் பரவையார்க்கும் திருமணம் நடைபெற்றது. இதை ''மன்றல்'',[4] ,'மணம்''[5], ''வதுவை''[6] என்று மட்டும் கூறி நிறுத்தினர்.

---

1. மானக்கஞ்சாற நாயனார் புராணம் - 18.
2. கம்பராமாயணம் - மந்தரை சூழ்ச்சிப் படலம் - 1; வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார் உரை.
3. திருநாவுக்கரசு நாயனார் புராணம் - 25.
4. தடுத்தாட்கொண்ட புராணம் - 178.
5. தடுத்தாட்கொண்ட புராணம் - 179.
6. தடுத்தாட்கொண்ட புராணம் - 180.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இங்ஙனம் கூறியதால் இவர்களுடைய இல்லற வாழ்க்கை இனிதாக இருந்தது. இவர்களுடைய இல்லற வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கும் எனக் கருதியே சேக்கிழார் இவர்களுடைய திருமணத்தைப் பற்றிக் கூறியபோது முன் பின் அடைமொழிகள் இன்றிக் கூறினர்.

நம்பியாண்டார் நம்பி பெற்ற காதலியைக் காழி நாடுடைய பிரானாகிய திருஞானசம்பந்தர் கைப்பிடித்த திருமணத்தைப்பற்றிக் கூறுங்கால் இங்ஙனம் எதிர்மறைப் பொருள் தரும் அடைமொழி யின்றியே சேக்கிழார் செப்பினர். கலியாணம் திருமணம், மணம் பெருமணம் ஆகிய சொற்களையே ஆசிரியர் பயன்படுத்தினர்.[1] திருமணம் முடிந்ததும் இறைவனுடைய சோதியிற் கலந்த போதிலும், இருவரும் பிரியாமல் ஒன்றாகவே கலந்தனர் என்பதை இச்சொற்களால் எடுத்துக்காட்டினர்.

திருநீலகண்டர் காமத்தை வெல்ல முடியாது அதற்கு அடிமை யாக இருந்தபொழுது அவரை ''எளியர்'' என்றும், தன்னைத் தொடக்கூடாது என்று மனைவியார் கூறியபொழுது அவரைப் பெயர்ந்து நீங்கி காமத்தை வென்றுவிட்டதால் அவரைப் ''பெரியவர்''[3] என்றும் சேக்கிழார் மொழிந்தார். இறைவன், திருவோட்டினைத் திருநீலகண்டருக்குக் கொடுத்த பொழுது தான் கொடுத்த திருவோட்டைத் தனக்குத் திருப்பிக் கொடுக்க அவருக்கு வாய்ப்பு இருக்காது எனக் கருதியே ''வாங்கித் தருக'' என்னாது ''வாங்கு நீ'' என்றார்.[4] தில்லைவாழ் அந்தணர்கள் பேரவையில் சிவயோகியராகிய இறைவன் வழக்காடிய போது திருநீலகண்டர்,

> ''நீணிதியாம் இதுவென்று நின்றஇவர் தரும்ஓடு
> பேணிநான் வைத்தஇடம் பெயர்ந்துகரந் ததுகாணேன்''[5]

என்று விளம்பினார். ''இதன்கண்'' நின்ற இவர்'' என்றதனால் அடியார் நிற்றல் பொறாராய், ''நெடுநேரம் அடியாரை நிற்க

1. திருஞானசம்பந்தர் நாயனார் புராணம் - 1191, 1192, 1196, 1199, 1204, 1205.
2. திருநீலகண்ட நாயனார் புராணம் - 3.
3. திருநீலகண்ட நாயனார் புராணம் - 7.
4. திருநீலகண்ட நாயனார் புராணம் - 16.
5. திருநீலகண்ட நாயனார் புராணம் - 34.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வைத்து அவர் வாய்ப்பிறப்புக் கேட்டீர். அந்தணீர்! அவர்க்கு ஓரிருக்கை நல்கவேண்டும்'' என்று அவையத்தாருக்குக் குறிப்பித்தமை தோன்றலின் அவருக்கு அடியார்மாட்டுள்ள பரிவினை விளக்கிற்று'' என விளக்கங் கூறினர் வா. மகாதேவ முதலியார்.[1]

மறையவர் அளித்த கோவணத்திற்குச் சமமாக எடைக்கு எடை துணி கொடுக்க அமர்நீதி நாயனார் ஒப்புக் கொண்டபொழுது, ஒரு துலை நாட்டினர். முதற்கண் அதை, அடைமொழி இல்லாமல் சாதாரணமாக ''துலை'' என்றார்.[2] அதில் இன்னும் இறைவனுடைய கோவணம் வைக்கப் பெறவில்லை. எனவே சிறப்புப் பெறவில்லை. நல்ல பொன், வெள்ளி, நவமணித் திரள், பல்வகைத் திறத்துலோகம் ஆகியவை வைத்தபோதும் தட்டு சமன் ஆகாதபோது, புனைமலர்க் குழல் மனைவியார், புதல்வன் ஆகியவரொடு நாயனார் ஏறப்புக்குழி அதற்குத் ''தனித்துலை''[3] எனப் பெயரிட்டார். அனைவரும் ஏறி நின்றபொழுது அதனைப் ''பெருந்துலை''[4] என்றார். நாதர்தம் திருவருளினால் அது விமானமாக மேற்சென்றபோது ''நற்பெருந்துலையே''[5] என வுரைத்தார்.

இங்ஙனம் சிறப்பு, பெருமை, தொடர்பு, ஆகியவற்றிற்குத் தக்கவாறு துலை, பெருந்துலை, நற்பெருந்துலை எனக் கூறிப் போந்தார் கவிஞர்.

இங்ஙனமே காரைக்காலம்மையார் புராணத்திலும் சேக்கிழார் கனியைப் பற்றிக் கூறினர். பரமதத்தனுக்கு அவனிடம் வந்தணைந்தோர்கள் கனிகளைக் கொடுத்த பொழுது ''மாங்கனிகள்''[6] என்றே இயம்பினார். ''ஓரிரண்டு'' எனக் கூறியதால் இரண்டில் ஒன்று இறைவனுக்குக் கிடைக்கப் போகின்றது என்ற குறிப்பும் உளது. பரமனார் திருத்தொண்டராகப் புனிதவதியார் இல்லம்

1. பெரியபுராண ஆராய்ச்சி - வா. மகாதேவ முதலியார்: பக். 63.
2. அமர்நீதி நாயனார் புராணம் - 32.
3. அமர்நீதிநாயனார் புராணம் - 42.
4. அமர்நீதி நாயனார் புராணம் - 43.
5. அமர்நீதி நாயனார் புராணம் - 48.
6. காரைக்காலம்மையார் புராணம் - 16.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வந்தபொழுது, திருஅமுது கைகூட கறியமுது அங்கு உதவாதே, இல்லாளன் ''வைக்க'' எனக் கொடுத்த மாங்கனிகளில் இரண்டில் ஒன்றனைத் திருத்தொண்டருக்கு இட்டார் புனிதவதியார். திருத் தொண்டருக்கு இடுவதற்கு உதவிய மாங்கனியாயினமையின் ''நறுமாங்கனிகள்''[1] எனக் கூறினார் சேக்கிழார். இன்னொன்றினைக் கணவருக்கு அன்போடு இட்டதால் ''மதுரமிக வாய்த்த கனி''[2] என்றார். கணவர் மீண்டும் கேட்டபொழுது, இறைவனிடம் வேண்டிப் பெற்ற கனியை ''அதிமதுரக் கனி''[3] என்றியம்பினார். அதைச் சுவைத்துவிட்டுப் பரமதத்தன் முன்கொடுத்த கனியின் சுவை போன்று இல்லாமல் அதிசுவையாக இருக்கின்றதே எங்குப் பெற்றது எனப் புனிதவதியாரைக் கேட்க, இறைவனிடம் பெற்றது என அவர் உரைக்க, மீண்டும்.

''தேசுடைய சடைப்பெருமான் திருவருளேல் இன்னமும்ஓர்
ஆசில்கனி அவனருளால் அழைத்தளிப் பாய்''[4]

என மொழிந்தான். அவ்வாறே புனிதவதியாரும் கனியை வரவழைத்துக் காட்டினர். அப்பொழுது சேக்கிழார் அடைமொழியின்றி ''மாங்கனி''[5] என்றே உரைத்தார். முன்னர் வந்தது நுகர்தற் பொருட்டு அளிக்கப்பட்டதாதலின் சுவை பற்றி ''அதிமதுரக்கனி'' என்றார். இது நுகர்தற்கன்றி சான்றுக்காக வந்ததாகலின் ''மாங்கனி'' ஒன்று என உருவத்தை மட்டும் கூறினார்.

இங்ஙனம் சிறப்பு, தொடர்பு, இடம் ஆகியவற்றிற்குத் தக்கவாறு மாங்கனிகள், நறுமாங்கனிகள், மதுரக் கனி, அதிமதுரக் கனி, மாங்கனி எனப் பெயர் கொண்டமை அக்கனிகளிலும் நனிசுவையுடைத்தாம்.

ஒரு பொருளுக்குச் சிறப்பும் பெருமையும் ஏற ஏற அடைமொழிகளை ஏற்றிக்கொண்டு சென்ற சேக்கிழார் ஒரு பொருளின்

---

1. காரைக்காலம்மையார் புராணம் - 20
2. காரைக்காலம்மையார் புராணம் - 24.
3. காரைக்காலம்மையார் புராணம் - 25.
4. காரைக்காலம்மையார் புராணம் - 29.
5. காரைக்காலம்மையார் புராணம் - 30.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிறப்பு குறையக் குறைய அடைமொழியினையும் குறைத்துக் கொண்டே சென்றார். கழற்சிங்கனின் மனைவியார் கோயில் மண்டபத்தில் கிடந்த புதுப்பூவினை எடுத்து மோந்ததற்கு முன்னால், அவளை ஆசிரியர் ''மாமயில்''[1]. எனக் கூறினார். புதுப்பூவினை எடுத்து மோந்தபின் அதற்காகச் செருத்துணை நாயனாரால் மூக்கரியப் பெற்று மண்ணில் குருதி சோர வீழ்ந்து கிடந்த போது அவளை ''மயில்'' என்றார்.[2]

மானக்கஞ்சாற நாயனார் மணக்கோலம் புனைந்திருந்த தன் திருமகளாரை முனிவராக வந்த இறைவனிடம் அழைத்துக் கொண்டு வந்த பொழுது,

''தேனக்க மலர்க்கூந்தல் திருமகளைக் கொண்டணைந்து''[3]

''மஞ்சுதழைத் தெனவளர்ந்த மலர்க்கூந்தல் புறம்நோக்கி''[4]

என்றெல்லாம் கூறினார். கூந்தலை வலியுறுத்திக் கூறின காரணம் யாதோவெனின், பின்னர் இறைவன் தன் பஞ்சவடிக்காகக் கேட்ட பொழுது அந்தக் கூந்தலை மானக்கஞ்சாறர் வழித்துக் கொடுக்க இருந்தார் என்பதே. பின்னர், மஞ்சு தழைத்தென வளர்ந்த மலர்க்கூந்தலை வழித்தெடுக்கப் போகின்றார் என்பதனைக் கருதி வேறு சொல் கொண்டு கூறாது கூந்தல் எனும் சொல் கொண்டு கூறி முன்னரே சுட்டினார் ஆசிரியர்.

இங்ஙனம் கவிதைக்குள்ளே ஏற்ற சொல்லை வைத்துச் சொல்லுக்குள்ள பொருளைக் காட்டாமல் வேறு ஒரு பொருளைக் காட்டிச் சொற்சுவை பெற வைத்தார் ஆசிரியர் சேக்கிழார்.

பொருட்சுவை

சமன் ஆகாத தட்டில் அமர்நீதி நாயனார் மட்டும் ஏறி நிற்காமல் அவருடன் மலர்க்குழல் மனைவியார், புதல்வன் ஆகியோரும் ஒருசேர ஏறி நின்று தட்டுக்களைச் சமன்படுத்தினர்.

---

1. கழற்சிங்க நாயனார் புராணம் - 5.
2. கழற்சிங்க நாயனார் புராணம் - 7.
3. மானக்கஞ்சாற நாயனார் புராணம் - 28.
4. மானக்கஞ்சாற நாயனார் புராணம் - 29.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> "புனைம லர்க்குழல் மனைவியார் தம்மொடு புதல்வன்
> தனையு டன்கொடு தனித்துலை வலங்கொண்டு தகவால்
> இனைய செய்கையில் ஏறுவார்"[1]

எனக் கூறினார் சேக்கிழார். தட்டுக்களைச் சமன்படுத்த முன்னர்த் தனம் முதலிய பொருள்களை இட்டது போல இவர்களையும் ஒவ்வொருவராக இடாமல் இவ்விருவரையும் அமர்நீதியார் உடன் கொண்டு ஏறியதென்னையோ? இதற்கு, "சிறுவரைப் பெற்றோரைப் பிரித்துத் தனியாக இடுவது இயைபில்லை. சிறுவரையும் மனைவியாரையும் ஒக்கவே இடுவதென்றால், என்றும் பிரியேன் என்ற மணக்காலத்துக் கூறிய உறுதிச் சொல் வழுவா மாதலின் அஃதும் இயைபில்லை. தாம் மட்டில் முன்னர் ஏறத் துலை நேர் நிற்குமாயின் தாம் முதல்வரிடமும், இவர்கள் உலகினிடமுமாக நிற்க வந்து, தாம் ஆயுளளவும் பிரியேன் என்ற சொல் பிழைக்கும். தாம் ஏறித் துலை நேர் நில்லாதாயின் தம்மை அவ்வாறு மறையவருக்கு நிறுத்துக் கொடுத்து அவ நடைமை யாயின பின்னர்த் துலை நேர் காண மனைவியாரையும், புதல்வனையும் தட்டில் இட்டு மறையவருக்குக் கொடுக்கத் தனக்கு உரிமையின்றாம். இவ்வளவு நியாயங்கள் அடங்கியிருத்தல் பற்றி மனைவியாரொடு புதல்வன்தனையும் தம்முடன் கொண்டு நாயனார் தட்டு ஏறினார்"[2] என்று விளக்கங் கூறினர்.

திருக்காளத்தி அண்ணலாராகிய குடுமித் தேவர், தன் மீது கண்ணப்பர்க்கு அன்பு இருக்கின்றது என்று மறைமுனிவராகிய சிவகோசரியாருக்குக் காட்ட வேண்டித் திருநயனத்தில் ஒன்றில் உதிரம் வருமாறு செய்தனர். யாது செய்தும் குருதி நிற்காததால் ஊனுக்கு ஊனாகத் தன் கண்ணைத் திண்ணனார்.

> "முதற்சர மடுத்து வாங்கி முதல்வர்தம் கண்ணில் அப்ப"[3]

திருவினை புரிந்தார். இன்னொரு கண்ணுக்கு இரண்டாம் முறை அம்பு எடுத்தலின் இதனை முதற்சரம் என்றார். திண்ணனைக்

---

1. அமர்நீதி நாயனார் புராணம்-42.
2. திருத்தொண்டர் புராண உரை - முதற் பகுதி - பக். 680; சி.கே.சுப்பிரமணிய முதலியார்.
3. கண்ணப்ப நாயனார் புராணம் - 178.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கண்ணப்பனாக ஆக்க ஆரம்பித்து வைத்த மேன்மைச் சரம் எனவும் பொருள்படும். வலத்திருக்கண்ணில் எனக் கூறிய பின்பு இடத் திருக்கண் எனக் கூறவில்லை. திண்ணன் இடக்கால் வைத்து ஊன்றுவதாலும் இடக்கண் என்பதை அறியலாம். இறைவனின் இடக்கண்ணில் இடக்கால் வைத்து ஊன்றியதை,

> *''உண்ணிறை விருப்பி னோடும் ஒருதனிப் பகழி கொண்டு*
> *திண்ணனார் கண்ணில் ஊன்றத் தரித்திலர் தேவ தேவர்''*[1]

என்றார் சேக்கிழார். அதுபொழுது, இறைவர் ''கண்ணப்ப நிற்க'' எனக் கூறி அச்செயலினின்றும் அவரைத் தடுத்தார்.[2]

''வாக்கினாற்றடுத்தலே போதும்; கையினால் பிடித்துத் தடுத்தல் வேண்டா எனின், அவ்வாக்கு அவர் செவியிற்புக்கு, அது அறிவிலே தாக்கி, அறிவினால் ஏவப்பட்ட கை அவ்வறிவினாலே மீளத் தடுக்கப்படுதல் வேண்டும். அதன் முன் செயலில் முனைத்து நின்ற கை தடுக்கப்படுதல் வேண்டுமாதலின் திருக்கை பிடித்துக் கொண்டது. அற்றாயின் கையினாற் பிடித்தலே போதும்; வாக்கு எதற்கு என்னில் அவர்க்குப் பொருள் அறிவித்து அமுதமாக்கு வதற்கு வாக்கு வேண்டப்படும்''.[3]

சண்டேசுரர், இறைவனுக்குத் திருமஞ்சனம் ஆட்டுவதற்காக வைத்திருந்த திருமஞ்சனக் குடப் பாலைக் காலால் இடறிச் சிந்தினதற்காகத் தந்தையின் அக்கால்களை மழுவால் துணித்தனன். பாற்குடத்தை இடறிச் சிந்திய ஒரு காலைத் தானே துண்டிக்க வேண்டும். ஆனால் சண்டேசுரர் தந்தையின் இரு கால்களையும் துணித்தனன். சேக்கிழார்,

> *''மறிந்த தாதை இருதாளும் துணித்த மைந்தர்''*[4]

என்று கூறினார். இருதாளையும் துணித்ததென்னையோவெனின், ஊன்றி நின்ற தாளினது துணைகொண்டே மற்ற ஒரு தாளைத்

---

1. கண்ணப்ப நாயனார் புராணம் - 182.
2. கண்ணப்ப நாயனார் புராணம் - 183.
3. திருத்தொண்டர் புராண உரை - இரண்டாம் பகுதி - பக். 1046 - 1047; - சி.கே. சுப்பிரமணிய முதலியார்.
4. சண்டேசுர நாயனார் புராணம் - 52.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தூக்கி இடறினானாதலின் குற்றஞ் செய்த தாளினுக்குத் துணை செய்த குற்றத்திற்கு இன்னொரு தாளும் ஆளாயது. எனவே அத்தாளும் குற்றம் செய்தது. எனவே இருதாளும் குற்றஞ் செய்தமையின் சண்டேசுரர் இரண்டையும் வெட்டினார் என்னும் நயம் புலப்படுகின்றது.

வாழைக்குருத்து அரியச் சென்ற மூத்த திருநாவுக்கரசைப் பாம்பு தீண்டி விட, அப்பூதியடிகளும் அவர் மனைவியாரும் அவனைக் கவனிக்க, விருந்தினராய் வந்த திருநாவுக்கரசர் திருவமுது செய்ய காலந்தாழ்ந்தது. அப்பூதியடிகள், அடிசிலும் கறியும் எல்லாம் அழகுற அணைய வைத்துத் தொண்டனார் முன் பணிந்தெழுந்து,

''அமுது செய்தெங் குடிமுழு துய்யக் கொள்வீர்''[1]

எனப் பன்மையால் வேண்டினார். இறந்து கிடந்த மூத்த திருநாவுக்கரசரையும் சேர்த்துக் குடிமுழுதுய்யக் கொள்ள இறைஞ்சினார். இறந்த மூத்த திருநாவுக்கரசை உயிர் பெறச் செய்ய வேண்டும் என்ற குறிப்பு உள்ளது இவன் உயிர் பெற்று எழுந்து விடுவான் என்னும் குறிப்பில் திருநாவுக்கரசர் எல்லோருக்கும் திருநீறு அளிக்கும் பொழுது,

''காதலர் இவர்க்கு மூத்த சேயையுங் காட்டும்''[2]

எனக் கூறினார். இறந்தவனைக் காட்ட முடியாது; உயிரோடு இருக்கின்றவனைத்தான் காட்ட முடியும். திருநாவுக்கரசர், அவன் இறந்தாலும் இன்னும் உயிரோடு இருக்கின்றான் எனும் பொருள்பட மொழிந்தார். இதைப்போன்றே வடநாட்டிலிருந்து வந்த பைரவ முனிவர், கறி சமைக்கப் பெற்று இறந்து கிடந்த சீராள தேவரை அழைக்க சிறுத்தொண்டரிடத்தில் கூறியபொழுது சிறுத்தொண்டரும்,

''செய்யமணியே! சீராளா! வாராய் சிவனார் அடியார்யாம்
உய்யும் வகையால் உடனுண்ண அழைக் கின்றார்''[3]

---

1. அப்பூதியடிகள் புராணம் - 30.
2. அப்பூதியடிகள் நாயனார் புராணம் - 32.
3. சிறுத்தொண்ட நாயனார் புராணம் - 81.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்றோலமிட்டார். ''யாம் உய்யும் வகையால்'' எனப் பன்மையில் கூறியதால் இறந்து போன சீராளன் உள்ளிட்ட எல்லோரும் உய்யப் போயினர் என்ற குறிப்பைப் புலப்படுத்தினார் ஆசிரியர். இங்ஙனம் கூறுவது பொருட்சுவையாம்.

திருஞானசம்பந்தர் திருவாலவாய்க்கு எழுந்தருளிய பொழுது அமைச்சர் குலச்சிறையாரும். அரசி மங்கையர்க்கரசியாரும் சைவக் கன்றாகிய சம்பந்தரை அன்புடன் வரவேற்றனர். அவர் வருகைக் காக மங்கையர்க்கரசியார் நீலமலர்க் கண்களில் நீர் பொருந்தப் பவளவாய் குழறி,

''*யானும் என்பதி யுஞ்செய்த தவமென்கொல்*''[1]

என்றார் திருஞானசம்பந்தரின் வருகைக்காக மங்கையர்க்கரசியார் தாம், தவம் புரிந்ததாகக் கூறலாம். தம் கணவர் என்ன தவம் செய்தனரோ எனக் கூறுவானேன்? மன்னன் கூன்பாண்டியன் சமண சமயத்தைச் சார்ந்தவனாயிற்றே! இஃது எங்ஙனம் பொருந்தும்? பின்னர் வெப்பு நோய் கண்டு சமணத்தின் இழிவையும் சைவத்தின் பெருமையையும் உணர்ந்து மன்னன் சைவத்தில் சேரப் போகின்றான் என்ற குறிப்பே இதில் காட்டப்பெறுகின்றது.

''மன்னன் சமண சமயத்தில் ஆழ்ந்த பற்றுக்கொண்டு சமணர்க்குத் தலைவனாக இருந்த காரணத்தினால் ''பதி'' என்பது அவனைக் குறிக்காது, நாட்டையும், நாட்டு மக்களையும் குறிக்கும் என உரை கூறுவாரும் உண்டு''.[2]

பாண்டிய மன்னனின் வெப்பு நோயைத் தீர்ப்பதற்காகத் திரு ஞானசம்பந்தர் சிவிகை நின்றிழிந்து அரண்மனை புக்கார். இவர் வந்த விதத்தினைச் சேக்கிழார்,

''*நிலத்திடை வானி னின்று நீளிருள் நீங்க வந்த*
கலைச்செழுந் திங்கள் போலும் கவுணியார்''[3]

எனக் கூறினார். குளிர்ச்சி பொருந்திய நிலாவைக் கூறியமுகத் தான் வெம்மை நோயால் தாக்குண்ட மன்னவன் தண்மை பெறுவன்

1. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 672.
2. திருத்தொண்டர் புராண உரை - ஐந்தாம் பகுதி-பக். 726; சி. கே. சுப்பிரமணியமுதலியார்.
3. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 751.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்பது குறிப்பாம். கலைச்செழுந்திங்கள் பதினாறு கலைகளை யுடையது. திருஞானசம்பந்தரும் பதினாறு ஆண்டு அகவையான் என்ற குறிப்பு உளது. இங்ஙனம் வேறு வேறு பொருளைக் காட்டிச் சுவையை உண்டாக்கினர் சேக்கிழார்.

சங்கிலியாரைச் சுந்தரர் திருவொற்றியூர்க்கண்ணுதலான் கோயிலில் சந்தித்த முறையினைச் சேக்கிழார்,

"மின்போல் மறையுஞ் சங்கிலியார் தம்மை விதியாற்
கண்ணுற்றார்"[1]

எனமொழிந்தார். திருமணம் புரிந்துகொண்ட திருநாவலூரரும் ஞாயிறு மங்கையும் வாழ்க்கை நடத்தினர். அந்த வாழ்க்கை குறுகிய கால அளவுடையது. பரவையார் மீது நினைவு வரவே திருமுனைப்பாடி நாட்டார் சங்கிலியாரைத் துறந்து திருவாரூர் சேர்ந்தார். இவ்விருவரும் வாழ்ந்த வாழ்க்கை தோன்றி மறையும் மின்னல் போன்ற வாழ்க்கையாகும். சுந்தரர் சங்கிலியாரை மறந்தார்; அவரும் மின்போல் மறைந்தார். எனவேதான் ஆசிரியர் மின்போல் மறையுஞ் சங்கிலியார் என அடைமொழி கொடுத்துக் கூறினார், சுந்தரர் - சங்கிலியார் இவர்தம் வாழ்க்கை மின்னல் போன்ற வாழ்க்கையாம்.

கவிதைச்சுவை

திருநீலகண்டர் பரத்தைபால் நண்ணினார் என்பதற்காக மனைவியார் அவருடன் ஊடல் கொண்டார். ஏனைய எல்லாஞ் செய்து உடனுறைவு மட்டும் இசையார் ஆயினர். அவருடைய புலவியைப் போக்க நாயனார் முயன்றதை,

"முண்டஅப் புலவி தீர்க்க அன்பனார் முன்பு சென்று
பூண்டயங் கிளமென் சாயல் பொற்கொடி அனையார் தம்மை
வேண்டுவ இரந்து கூறி மெய்யுற அணையும் போதில்
தீண்டுவி ராயின் எம்மைத் திருநீல கண்டம் என்றார்"[2]

என்று கூறியதாகச் சேக்கிழார் கூறினர். "எம்மை"[3] என்று

1. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 226.
2. திருநீலகண்ட நாயனார் புராணம்-6.
3. இக்கருத்து சொற்சுவைக்கும் வந்துள்ளது. இவ்வாய்வு ஏடு-பக். 159.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அம்மையார் பன்மையிற் கூறினமையின் தன்னை மட்டுமல்லாது தன்னையொத்த பிற பெண்டிரையும் நாயனார் தீண்டல் கூடாது என்பதாம். மனைவியைத் தீண்டி இன்பம் நுகரவில்லை எனின் பிற மகளிரைத் தீண்ட உணர்வு செல்லும். ஏற்கெனவே சென்று வந்த பரத்தையையே பிற மகளாக இருத்தல் கூடும். அவளிடம் சென்றமைக்காகவே மனைவியார் ஊடல் கொண்டார். இனி மீண்டும் அவளிடம் நாயனார் சென்றார் எனின் இப்பொழுது கொண்ட ஊடலுக்குப் பொருளில்லை. எனவே இவ்வளவும் கருதியே மனைவியார் ''எம்மை'' எனப் பன்மையால் கூறினர்.

தீண்டி அணையும் இன்பம் திருநீலகண்டர் மட்டும் இழந்தாரோ எனின் இன்று. எம்மைத் தீண்ட வேண்டாம் என்று கூறிய மனைவியாரும் இழந்தார். எப்பருவத்தில் இன்பத்தை நுகர வேண்டுமோ அவ்விளம்பருவத்தில் இழந்தார், என்பதற்கே ''இளமென் சாயல் பொற்கொடி அனையார்''[1] என்று அவருடைய இளமையைச் சேக்கிழார் சுட்டிக் காட்டி, அவர் இளம் பருவத்தினர் என்பதை எடுத்துக் காட்டினார். இன்பத்தைத் துறந்த இருவரையும் 'இளமையின் மிக்குளார்கள்'[2] என்ற தொடரால் சேக்கிழார் குறித்தார்.

விசாரசருமர் எனக் கூறப்பெற்ற சண்டேசுரர் தான் மேய்த்துக் கொண்டிருந்த ஆவின் பாலையெல்லாம் கறந்து மண்ணியாற்றில் உகுத்து வருகின்றனன் என்று அவன் தந்தை எச்சதத்தனிடம் சேய்ஞலூர் மறையவர் எல்லோரும் செப்பினர். எச்சதத்தன் தன் மகன் செய்த பிழையினைப் பொறுத்தருளுமாறு வேண்டியதாக,

''மறையோர் மொழியக் கேட்டஞ்சிச் 'சிறுமா ணவகன் செய்தஇது'
இறையும் நான்முன் பறிந்திலேன்; இதற்கு முன்பு புகுந்ததனை
நிறையும் பெருமை அந்தணர்காள்; பொறுக்க வேண்டும்நீங்கள்'
எனக்
குறைகொண் டிறைஞ்சி 'இனிப் புகுதிற் குற்றம் எனதே யாம்'
என்றான்[3]

என இப்பாடல் அமைந்துள்ளது. ஒரு கருத்தினைக் கூறி

1. திருநீலகண்ட நாயனார் புராணம் - 6.
2. திருநீலகண்ட நாயனார் புராணம் - 9.
3. சண்டேசுர நாயனார் புராணம் - 43.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதனின்றும் இன்னொரு கருத்தைப் பெறுமாறு கவிதையை யாத்துள்ளார் கவிவலவர். ''சிறு மாணவகன்'' என்பதால் இவன் சிறுவன்; ஒன்றும் தெரியாது; ''இறையும் நான் முன்பு அறிந்திலேன்'' என்பதால் சிறிதளவு அச்செயலை அறிந்திருந்தாலும் இக்குற்றம் நிகழாதவண்ணம் பார்த்திருக்க முடியும்; முன்பு செய்ததனைப் பொறுக்கவேண்டும். ''இனிப் புகுதிற்'' என்பதால் குற்றம் தனதேயாம்; தன்னைக் கேளுங்கள். இனிமேல் அவன் மீதே தன் கண்கள் இருக்கப் போகின்றன என எச்சதத்தன் கூறினார். இங்ஙனம் பொருள் படும்படி இப்பாடல் அமைந்துள்ளது.

பின்னால் நிகழவிருக்கின்ற நிகழ்ச்சிகளை முன்னால் எடுத்துக் கூறும் இயல்பு சேக்கிழாருக்கு உண்டு. புனிதவதியும் பரமதத்தனும் திருமணம் புரிந்துகொண்ட போதிலும் பின்னால் பிரிந்து விடப் போகின்றனர் என்ற செய்தியினை முன்னரே திருமணத்தன்றே கூறினார்.

''தளிரடிமென் நகைமயிலைத் தாதவிழ் தார்க்காளைக்குக்
களிமகிழ்சுற் றம்போற்றக் கலியாணஞ் செய்தார்கள்''[1]

இஃது அவர்தம் கூற்று. மயிலும் காளையும் பொருந்தாத உயிர் இனங்கள். இவ்விரண்டும் பொருந்தி இணைந்து வாழா. பிற்காலத்தில் புனிதவதியும் பரமதத்தனும் இணைந்து வாழாமல் பிரிந்தனர். மயிலைக் கண்டு காளைமருள்வது இயல்பாதல் போல பரமதத்தன் புனிதவதியின் தெய்வ ஆற்றலைக் கண்டு மருண்டு அஞ்சி அகன்றனன்.

மயில் பக்குவம் வந்தவுடன் வளர்ந்த தன் தோகைகளையெல்லாம் உதிர்க்கும் இயல்புடையது. புனிதவதியார் கணவன் இல்லை எனத் தெளிந்தவுடன் தம் அழகையெல்லாம் உதிர்த்துப் பேய் வடிவம் கொண்டார். மாடு, மேய்கின்ற இடம் பசுமையாக இருந்தபோதிலும் தூரத்தே பசுமை தென்படின் இப்பசுமையை விட்டு விட்டு அப்பசுமைக்குச் சென்று விடும். பரமதத்தனும் தன் மனைவியாகிய புனிதவதியை விட்டு விட்டு வேறு மனைவியைத் திருமணம் செய்து கொண்டனன். எனவே மயிலுக்கும் காளைக்கும்

1. காரைக்காலம்மையார் புராணம் - 11.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உள்ள குணங்களெல்லாம் இவ்விருவர்க்கும் இருத்தலின் இருவரையும் மயில் எனவும் காளை எனவும் பொருத்தமுறக் கூறினர் ஆசிரியர்.

சமணர்கள், மதுரையில் திருஞானசம்பந்தர் தங்கியிருந்த மடத்திற்கு வைத்த தீயினை,

''பொய்ய ராம்அம ணர்கொளு வுஞ்சுடர்
பைய வேசென்று பாண்டியற் காகவே''[1]

எனத் திருஞானசம்பந்தர் பாட, அத்தீ பாண்டியனுக்கு வெப்பு நோயாக மாறியது. சேக்கிழாரும்,

''சைவர் வாழ்மடத் தமணர்கள் இட்டதீத் தழல்போய்ப்
பைய வேசென்று பாண்டியற் கா'' கெனப் பணித்தார்''[2]

என்று சம்பந்தரின் தேவாரப் பாடலின் தொடரையே கையாண்டார். ''பைய'' என்பது மதுரைப் பகுதியில் பயிலப்படுகின்ற வழக்குச் சொல்லாகும். இன்றும் வழக்கில் உள்ளது. திருஞானசம்பந்தர் ''பையவே'' என்ற சொல்லினை ஏன் பயன்படுத்தினார் என்பதற்குச் சேக்கிழாரே விளக்கம் தந்துள்ளார். பாண்டிமாதேவியரது திருமங்கல நாணைப் பாதுகாத்தல், குலச்சிறையார் அரசன்பால் கொண்ட அன்பு நீடித்தல், அரசனுக்கு அபராதம் அளித்தல், மீண்டும் அவன் சிவநெறிக்கு வர இருத்தல், வெப்பு நோய் தீரும்படி அரசனது மேனியைத் தீண்டித் திருவெண்ணீற்றைச் சீகாழி மன்னர் இடும் பேறு அரசனுக்குக் கிடைத்தல் ஆகிய காரணங்களினால் சம்பந்தர் ''பையவே செல்க'' என்றார் என்று கூறினர் சேக்கிழார்.[3] வேறு விதமாகக் கூறியிருப்பின் மன்னன் இறந்திருக்கக் கூடும். மன்னன் இறக்க பாண்டிமா தேவியும், குலச்சிறையாரும் இறப்பர். தன்னை வரவழைத்தவர்க்கே தண்டனையளிக்க சம்பந்தர் விரும்பவில்லை போலும்!

1. திருஞானசம்பந்தர் தேவாரம் - திருஆலவாய்ப்பதிகம் - பக். 551.
2. திருஞானசம்பந்தர் புராணம் - 704.
3. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 705.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆரூர்ப் பூங்கோயிலில் பரவையாரைக் கண்ட சுந்தரர்,

''கற்பகத்தின் பூங்கொம்போ? காமன்தன் பெருவாழ்வோ?
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ? புயல்சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ?
அற்புதமோ? சிவனருளோ? அறியேன்!''[2]

என்றதிசயித்தார். மேகத்தைத் தலையில் சுமந்து கொண்டு, வில்லையும், குவளை மலரையும், பவளத்தையும், கோங்கையும், நிலவையும் ஆகியவற்றைத் தனது பூக்களாகக் கொண்டு பூத்த தொரு வாசனைக் கொடியோ? எனப் பரவையாரை உருவகப் படுத்திக் கூறினர்.

பரவையாரும் சுந்தரரைக் கண்டார். கண்டதும்,

''முன்னேவந் தெதிர்தோன்றும் முருகனோ? பெருகொளியால்
தன்னேரில் மாரனோ? தார்மார்பின் விஞ்சையனோ?
மின்னேர்செஞ் சடைஅண்ணல் மெய்யருள்பெற்
றுடையவனோ?
என்னே!என் மனந்திரித்த இவன் யாரோ?''[3]

என நினைந்தார். இவ்விரு பாடல்களுக்கும் ஆசிரியர் தொடர்பை அமைத்துள்ளார்.

''கற்பகத்தின் பூங்கொம்போ'' என்று நம்பிகள் நினைத்தமைக் கேற்பவே பூத்தல் ஒழிந்து பாழ்பட்டுக் கிடந்த அதனைப் பூக்கச் செய்தவன் விண் குடியேற்றிய முருகனேயாதலால் முருகனே என்ற நினைவு பரவையார் மனத்து எதிர் உருவமாய்க் கிளம்பியது. 'காமன் பெருவாழ்வு' எனும் நம்பிகளின் நினைவு மாரனைப் பரவையார் மனத்திற் புகுத்தியது. நம்பிகள் ''பொற்பின் புண்ணியமோ'' என்றமை சிற்றின்பத்தைப் பேரின்பமாக்கும் புண்ணியமுடையார் விஞ்சையராதலின் விஞ்சையனோ என்ற கருத்தை விளைத்தது. அவர் ''அறியேன்'' என்றபடி இவர், ''யாரோ''[3] என்றார்.

---

1. தடுத்தாட்கொண்ட புராணம் - 140. - (பத்திச்சுவைக்கும் இச்சான்று எடுத்தாளப் பெற்றது).
2. தடுத்தாட்கொண்ட புராணம் - 144.
3. திருத்தொண்டர் புராண உரை - முதல் பகுதி - பக். 354; சி.கே. சுப்பிரமணிய முதலியார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பரவை என்ற சொல்லைக் கவிதையில் பல இடங்களில் அமைத்துப் பல பொருட்களைத் தரும்படி பாடினர்.

"பேர்பரவை பெண்மையினில் பெரும்பரவை விரும்பல்குல்
ஆர்பரவை அணிதிகழும் மணிமுறுவல் அரும்பரவை
சீர்பரவை ஆயினாள் திருவுருவின் மென்சாயல்
ஏர்பரவை இடைப்பட்ட என்ஆசை எழுபரவை"[1]

(1) பேர்பரவை - இவள் பேர் பரவை.

(2) பெரும்பரவை - (பெரு உம்பர் அவை) - பெரிய தேவர் சபைவிரும்புகின்ற திலோத்தமை முதலிய அரம்பையர்களும்.

(3) பரவை (பரவு ஐ) - துதிக்கத் தக்க தெய்வம்.

(4) அரும்பரவை (அரும்பர் அவை) - பல்வரிசைகள் முல்லையரும்புகள்.

(5) சீர்பரவை (சீர் பரவு ஐ) - இலக்குமி விரும்பும் அழகு ஆயினாள்.

(6) ஏர்பரவை (ஏர் பரவை) - அழகிய பரவுதலிடையில்

(7) எழுபரவை (எழு பரவை) - ஆசை ஏழுகடல் போன்றன.

பரவை என்ற ஒரு சொல்லையே ஏழு இடங்களில் அமைத்த திறனைக் கண்டு வியந்து மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் தம்நூலில்

"முறையினொரு சிறுதூக்கின் எழுபரவை யும்புக
முடித்துற நிறுத்தான் இவண்"[2]

என்று பாடினார். எழுபரவையும் புக, "எழுபரவை" என்ற சொற்றொடரும் புகப் பாடினன். கவிதையை முடித்தபொழுதும் ஏழுபரவை என உணர்த்துவான்வேண்டி "எழுபரவை" என்றார்.

---

1. தடுத்தாட்கொண்ட புராணம் - 148. (சொல் பின் வரு நிலையணிக்கும் இது சான்றாகக் காட்டப்பட்டுளது. இவ்வாய்வு ஏடு - பக். 94)
2. சேக்கிழார் பிள்ளைத்தமிழ் - அம்புலிப் பருவம் - 6; மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிறிதோரிடத்தில் எண்ணிக்கை ஒத்து வருமாறு கவிதையில் வைத்துப் பாடினர்.

''கோட்டு மலரும் நிலமலரும் குளிர்நீர் மலரும் கொழுங்கொடியின்
தோட்டு மலரும் மாமலரும்சுருதி மலரும் திருவாயில்
காட்டு முறுவல் நிலவலரக் கனக வரையிற் பன்னகநாண்
பூட்டும் ஒருவர் திருமுடிமேல் புனைய லாகும் மலர்தெரிந்து''[2]

கோட்டு மலர், நிலமலர், நீர் மலர், தோட்டு மலர், மாமலர், சுருதி மலர் என்ற ஆறு வகை மலர்களைக் கூறினர். இம்மலர்களைக் கொண்டு ஆறுவகை மாலைகளாகத் தொடுத்ததை,

''கொண்டு வந்து தனியிடத்தில் இருந்து கோக்கும் கோவைகளும்
இண்டைச் சுருக்கும் தாமமுடன் இணைக்கும் வாச மாலைகளும்
தண்டில் கட்டும் கண்ணிகளும் தாளிற் பிணைக்கும் பிணையல்களும்
துண்டா திறைக்கும் தொடையல்களும் சமைத்து நுடங்கு நூன்
மார்பர்''[3]

எனுங் கவிதையில் பாடினர். கோவை, தாமம், மாலை, கண்ணி, பிணையல், தொடையல் என்ற ஆறுவகை மாலைகளைக்கூறினர்.

இவற்றை அதற்குப் பொருத்தமான ஆறு காலங்களில் அன்பொடு இறைவனுக்குச் சாத்தி நாயனார் வழிபட்டனர்[4] ஆறு என்ற எண் அமைப்பைப் பற்றிக் கூறிய இப்பாடல்களும் ஆறு ஆறு சீர்களால் அமைந்துள்ளன. கவிதை அமைப்புக்கு இப்பாடல்களே சிறந்த சான்றாகும். மேலும் சேக்கிழார்,

''செம்மை வெண்ணீற் றொருமையினார்; இரண்டு பிறப்பின்
சிறப்பினார்
மும்மைத் தழலோம் பியநெறியார்; நான்கு வேதம்
முறைபயின்றார்;

---

2. முருக நாயனார் புராணம் - 8. (யாப்புக்குச் சான்றாக வேறிடத்தில் கூறப்பட்டுள்ளது).
3. முருக நாயனார் புராணம் - 9.
4. முருக நாயனார் புராணம் - 10.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தம்மை ஐந்து புலனும் பின்செல்லும் தகையார் அறுதொழிலின்
மெய்ம்மை ஒழுக்கம் ஏழுலகம் போற்றும் மறையோர்
விளங்குவது''[1]

என்று கூறினர். இதன்கண் ஒன்று முதல் ஏழு வரை எண்கள் முறைப்பட அமைந்துள்ளமை சிறப்பாகும்.

இறந்து போன பூம்பாவையின் எலும்பும் சாம்பரும் வைக்கப் பெற்ற குடம், 'மட்டிட்ட' என்று தொடங்கும் பதிகத்தினைத் திருஞானசம்பந்தர் பாடி முடித்ததும் உடைந்தது. தாமரைப்போது அவிழ்ந்து மலர்ந்தது போன்று உயிர் பெற்று பூம்பாவை எழுந்தாள்; எழுந்தவளைச் சம்பந்தர் எவ்வாறு நோக்கினார் என்பதனைச் சேக்கிழார்,

''எண்ணிலாண் டெய்தும் வேதாப் படைத்தவள் எழிலின்
வெள்ளம்,
நண்ணுநான் முகத்தால் கண்டான்; அவளினும் நல்லாள்
தன்பால்,
புண்ணியப் பதினா றாண்டு பேர்பெறும் புகலி வேந்தர்,
கண்ணுதல் கருணை வெள்ளம் ஆயிர முகத்தாற் கண்டார்''[2]

என்று கூறினார்.

எண்ணில்லாத ஆண்டுகளை எய்திய பிரம்மா, தாம் படைத்த மங்கையின் எழிலின் வெள்ளத்தைக் காண ஒரு முகம் காணாது நான்கு முகங்களால் கண்டனன். நீர்ப்பெருக்கினை வெள்ளம் எனக் கூறுவது போன்று மங்கையின் மேனியழகினை 'எழில் வெள்ளம்'' என்றார் ஆசிரியர். இவளினும் அழகுமிக்காளாகிய பூம்பாவையின் எழில் தோற்றத்தினை நீண்ட தொடர்களால் கூறாது ''அவளினும் நல்லாள்'' எனச் சுருக்கமாகக் கூறினார். பிரம்மா எண்ணில்லாத ஆண்டுகளை உடையவன்; திருஞான சம்பந்தர் பதினாறாண்டு காளைப் பருவத்தினன். திருமணப்

---

1. சண்டேசுர நாயனார் புராணம்-2. ('சுவைகள்' எனுந் தலைப்பில் இது சான்றாக வேறுபொருளில் காட்டப் பட்டுள்ளது).

2. திருஞானசம்பந்த நாயனார் புராணம்-1109'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பருவம் வந்துற்ற ஒருவன், பன்னிரண்டாண்டு எய்தப் பெற்றுத் திருமணப் பருவத்தினளாகிய ஒருத்தியை எங்ஙனம் நோக்கியிருக்க வேண்டும்? காளைக்குப் பதினாறாண்டும் கன்னிக்குப் பன்னிரண் டாண்டும் திருமணத்திற்கு உரிய பருவம். இளமைச் செழிப்பு மிக்க பருவம். இப்பருவத்தில் பிரம்மாவை விட ஆயிரம் முகத்தால் நோக்கியிருக்க வேண்டும். திருஞான சம்பந்தரும் ஆயிரம் முகத்தால் கண்டார். ஆனால் பிரம்மாவைப் போன்று காம வயத்தனாய் நோக்கவில்லை. தெய்வ அருள் பெற்றவனாய், கண்ணுதல் இறைவனின் கருணை வெள்ளத்தினைப் பூம்பாவை பால் கண்டின்புற்றார். பிரம்மா தாம் படைத்த மங்கையின் எழிலின் வெள்ளத்தைக் கண்டார்; சம்பந்தர் பூம்பாவையிடம் இறைவனின் கருணை வெள்ளத்தினைக் கண்டார். எனவேதான் தெய்வக் கண்கொண்டு பார்த்த அப்பருவத்தினைப் ''புண்ணியப் பதினாறாண்டு'' என்றார். இரண்டிடங்களிலும் வெள்ளம் என வந்தபோதினும் முதல் வெள்ளம் அழியுந் தன்மையுடையது; அடுத்தது அழியாதது. இங்ஙனம் பொருட் பொலிவுற ஏற்ற இடங்களில் ஏற்ற சொற்களை இட்டுக் கவிதையை அமைத்தார் அமைச்சர் சேக்கிழார்.

பரவையாரின் பருவ வனப்பினைப் பகன்ற சேக்கிழார் சங்கிலி யாரின் உருவத் தோற்றத்தினையும்,

''கோவா முத்தும் சுரும்பேறாக் கொழுமென் முகையும்
அனையாரைச்
சேவார் கொடியார் திருத்தொண்டர் கண்டபோது சிந்தைநிறை
காவா தவர்பால் போய்விழத் தம்பாற் காம னார்துறந்த
பூவா ளிகள்வந் துறவிழத் தரியார் புறமே போந்துரைப்பார்'[1]

என்றுரைத்தார். கோக்கப் பெறாத முத்து, சுரும்பு ஏறப்பெறாத முகை என்றமையான் இன்னும் சங்கிலியார் மணம் செய்யப் பெறாத கன்னியராய் உள்ளனர் என்பதாம். ''கொழுமென் முகை'' என்ற தொடரான் அவளுடைய பேரழகும், இளம் பருவமும், மணப் பருவம் வந்துற்ற மலர்ந்த நிலையும் காட்டப் பெற்றன. ''திருத் தொண்டர் கண்டபோது'' என்றதால் சுந்தரராகிய வண்டு இனி அம்மலரின் மீது ஏறித் தேனைப் பருகிப் பறந்து விடப் போகின்றது

1. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 227

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்பதைத் தெரிவித்தது. சங்கிலியாரின் தோற்றப் பொலிவினைக் கூறியபோதே அவருடைய பின் வாழ்க்கையினையும் எடுத்துக் கூறிய தெய்வக் கவிநலம் கொண்ட கவிதையமைப்பை என்னென்று புகழ்வது!

சொல்லாட்சி

பொருத்தமான இடங்களில் பொருத்தமான சொற்களைப் பயன் படுத்தி அச்சொல்லால் பொருத்தமான பொருள் பொதிந்திருக்குமாறு ஆசிரியர் சேக்கிழார் எடுத்துக்காட்டினர்.

''ஐயர்'' எனும் சொல்லை இறைவனுக்கு எடுத்தாண்டார்.

''ஐயர் அங்கணைந்த போதில் ''[1]

''ஐயர்: நீர்அருளிச் செய்த வண்ணம்''[2]

''ஐயர் கோலம்அங்கு அளித்தகன்றிட''[3]

இங்ஙனம் இறைவனைச் சுட்டி வந்த ''ஐயர்'' எனுஞ் சொல்லைச் சிலவிடங்களில் நாயன்மாருக்கும் பயன்படுத்தினர்.

''ஐயரே! அம்பலவர் அருளால் இப்பொழுதணைந்தோம்''[4]
''ஐயர்! நீர் யாழ்இதனை முரிக்குமதென்?''[5]

தில்லை வாழந்தணர்கள் திருநாளைப்போவார் நாயனாரையும், ஆளுடைய பிள்ளையார் திருநீலகண்டப் பெரும்பாணனாரையும் ''ஐயரே'' எனக் கூறினர். சிறப்பாகத் தாழ்ந்த குலத்தில் பிறந்த நாயன்மாரைச் சுட்டிக் கூறியபொழுது மேற்குலத்தாரை விளிக்கப் பயன்படுத்தும் இச்சொல்லையே அவர்களுக்கும் பயன்படுத்தினர். அவர்களும் மேற்குலத்தார் என்று எண்ணினர்.

---

1. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 363.
2. திருநீலகண்ட நாயனார் புராணம் - 28.
3. திருநாவுக்கரசு நாயனார் புராணம் - 383.
4. திருநாளைப்போவார் நாயனார் புராணம் - 30.
5. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 451.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அடுத்து வள்ளலார் எனுஞ் சொல்லையும் இறைவனுக்குப் பயன்படுத்தினார். ''வள்ளலார் மலையை நோக்கி''[1]. ''ஆரத் துறை வள்ளலார்''[2] என்பனவாம். இதே சொல்லினை நாயன் மார்க்கும் சுட்டிக் கூறினர். இயற்பகை நாயனார்[3], இளையான் குடிமாற நாயனார்[4], கண்ணப்ப நாயனார்[5], ஆனாய நாயனார்[6] சிறுத்தொண்ட நாயனார்,[7] திருஞானசம்பந்த நாயனார்[8], திருநாவுக் கரச நாயனார்[9] முதலிய நாயன்மார்களையும் வள்ளலார் எனக் குறிப்பிட்டதால், நாயன்மார்களும் இறைவனுக்குச் சமம் ஆனவர் என்பதைக் காட்டினர்.

''அவதாரம்'' என்ற சொல்லைப் பொருளுக்குத் தக்கவாறு மிக அருமையாகப் பயன்படுத்தினார் சேக்கிழார். ''அவதரித்தல்'' என்பது தம்பொருட்டன்றிப் பிறர் பொருட்டுப் பிறப்பை மேற் கொள்ளும் பெரியோர் பிறப்புக்குப் பெயராகும்''.[10] இச்சொல்லைச் சில நாயன்மார்களுக்குப் பயன்படுத்தினார்.[11]

அமங்கலமாகக் கூற வேண்டியவிடத்துத் தம் வாயினால் அப்படியே கூறாது, வேறு விதமாகக் குறித்த பொருள் தோன்ற எதிர்மறையில் சேக்கிழார் கூறினார். சமண மதத்தைத் தீநெறி

---

1. கண்ணப்ப நாயனார் புராணம் - 102.
2. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 206.
3. இயற்பகை நாயனார் புராணம் - 13.
4. இளையான்குடிமாற நாயனார் புராணம் - 17.
5. கண்ணப்ப நாயனார் புராணம் - 180.
6. ஆனாய நாயனார் புராணம் - 29.
7. சிறுத்தொண்ட நாயனார் புராணம் - 59.
8. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 143.
9. திருநாவுக்கரசு நாயனார் புராணம் - 242.
10. திருத்தொண்டர் புராணம் உரை - முதற்பகுதி - பக். 187; —சி. கே. சுப்பிரமணிய முதலியார்.
11. தடுத்தாட்கொண்ட புராணம் - 3.
    திருநாவுக்கரசு நாயனார் புராணம் - 18.
    திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 26.
    மானக்கஞ்சாற நாயனார் புராணம் - 7.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்னாது ''நன்றியில் நெறி''[1] என்றும், சமண, புத்த மதத்தினரை ''நன்றியில் சமயத்தினுள்ளோர்''[2] என்றும் பகர்ந்தார். ஞான சம்பந்தர்க்குத் தீமை செய்பவர் என்னாது, ''நன்மையல்லாது செய்யும்''[3] என்றார். மூத்த திருநாவுக்கரசு இறந்தான் எனக் கூறாது, ''விடத்தினால் வீந்தான்''[4] என மொழிந்தனர்.

மங்கலமாகக் கூற வேண்டியவிடத்துச் சிறப்பில்லாது அமங்கல மாகக் கூறினார். திருநாவுக்கரசரைக் கல்லில் கட்டிக் கடலிடைப் பாய்ச்சுவாரை மக்கள் என்னாது ''வினை மாக்கள்'' என்றார்.[5]

தீயினும் தீயவர், தம் புறத்தோற்றங்களை மறைத்தபோதிலும் அவர் கூறும் சொற்களால் அவர்கள் இன்னவர் என்பதனையும், அவ்வுருவம் உண்மை அல்லாப் போலியுருவம் என்பதனையும் காணலாம். மெய்யெலாம் நீறு பூசி வேணிகள் முடித்துக் கட்டிச் சைவ அடியார்போல் வந்த முத்தநாதன், ''நம் நாயகனார்'' எனக் கூறாது, ''உங்கள் நாயகனார்''[6] என மெய்ப்பொருள் நாயனாரிடத்துக் கூறியதால், ''தான் வேறு'' எனக் காட்டி விட்டனன். தென்னவன் பாண்டியன், தேவி மங்கையர்க்கரசி யாரிடம், ''வாதினில் வெல்ல''[7] கழுமலத்தான் வந்துள்ளான் என அவனறியாமல் வெல்ல எனக் கூறிவிட்டார். உண்மை உருவத்தின னான சிவசம்பந்தர் வெல்வார்; போலி உருவத்தினரான சமணர் தோற்பர் என்பதைச் சொல்லால் காட்டினர்.

நிலை, பயன், தகுதி ஆகியவற்றிற்குத் தக்கவாறு சொற்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன. மனஞ்சுருங்குதல் இன்றி வறுமையைத் தாங்கியதால் இளையான்குடிமாற நாயனாரை ''மன்னன் மாறன்''[8] என்றார். பரமதத்தன் மீண்டும் புனிதவதியைச் சந்தித்த பொழுது,

---

1. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 659.
2. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 1084.
3. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 696.
4. அப்பூதியடிகள் நாயனார் புராணம் - 28.
5. திருநாவுக்கரசு நாயனார் புராணம் - 123.
6. மெய்ப்பொருள் நாயனார் புராணம் - 12.
7. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 691.
8. இளையான்குடிமாற நாயனார் புராணம் - 7.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''யான்உம தருளால் வாழ்வேன்; இவ்விளங் குழவி தானும்
பான்மையால் உமது நாமம்'' என்று முன் பணிந்துவிழ்ந்தான்''[1]

''உனது'' எனக் கூறாமல் ''உமது'' என மதிப்புச் சொல்லால் விளித்தார். ஆனால் புனிதவதியார் தன்னை ஏற்றுக்கொள்ளாத கணவனை,

''ஈங்கிவன் குறித்த கொள்கை இது;இனி இவனுக்காகத்
தாங்கிய வனப்பு நின்ற தசைப்பொதி கழித்து''[2]

என மதிப்புமிக்க கணவனை ''இவர்'' என்றழைக்காமல் ''இவன்'' என்றே கூறினர். பரமதத்தன் ''உமது'' என இரண்டு முறை உரைக்க, புனிதவதியாரும் ''இவன்'' என்று இரண்டு முறை இயம்பினார். தன்னை அறிந்து கொள்ளாதவர்களை' 'மாக்கள்' என்றார்.[3]

சங்கிலியாரைத் திருவொற்றியூர்க் கன்னிமாடத்தில் சேர்த்த பின்பு தந்தையார் அடி வணங்கி,

''யாங்கள் உமக்குப் பணிசெய்ய ஈசற்கேற்ற பணிவிரும்பி
ஓங்கு கன்னி மாடத்தில் உறைகின் றீர்'' என்று[4]

உரைத்தார். தந்தை, மகள் சங்கிலியை ''உமக்கு'', ''உறைகின்றீர்'' என மதிப்புப் பன்மையால் கூறினர்.

தன் பக்கம் ஒருவரும் இல்லாது தனித்து விடப்பட்ட பொழுது அதற்கேற்ற 'தனி' என்னும் சொல்லைச் சிறப்பாக மூவர்க்குப்[5] பாவலர் சேக்கிழார் பயன்படுத்தினார்.

சுந்தரரோடு வழக்காட வந்த மறையவன் பக்கம், பேசுவார் இல்லாதபோது அவரைத் தனியாய் நின்றான்[8] என்றார்;

1. காரைக்காலம்மையார் புராணம் - 45.
2. காரைக்காலம்மையார் புராணம் - 49.
3. காரைக்காலம்மையார் புராணம் - 54.
4. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 221.
5. இறைவர், சுந்தரர், திருக்குறிப்புத் தொண்ட நாயனார்.
8. தடுத்தாட்கொண்ட புராணம் - 52

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மழையால் துவைத்த அழுக்குக் கந்தையினை உலர்த்தி உரிய நேரத்தில் கொடுக்கவியலாதபோது திருக்குறிப்புத் தொண்ட நாயனாரைத் தனி நின்றார்[1] என மொழிந்தார்; மழை நின்றதும் இறைவன் இறைவியைத் தனியாகக் கைதொழுது வணங்கியபோது அவரைத் தனி நின்றார்[2] என அழைத்தார். குளத்தில் பொற்காசுகளை எடுத்துத் தருவதாகக் கூறிய சுந்தரரைப் பரவையார் கூட நம்பாது தனியாக அவர் விடப்பட்டபொழுது அவரைத் தனித் துணைவர்[3] என விளித்தார். பொன்வராது அவர் பக்கம் எவரும் இல்லாதபோது எள்ளி நகையாடப் பெறும் நிலையில் அவரைத் தனித்தொண்டர்[4] எனக் கூறினார்.

இங்ஙனம் இடத்திற்குத் தக்கவாறு ''தனி'' என்னும் சொல்லை ஆண்டார் சேக்கிழார்.

சொற்றொடர் அமைப்பு

சேக்கிழார் சிறந்த சொற்றொடர்களை இடம் நோக்கி அமைத்து அவற்றுள் ஆழ்ந்த பொருளையும் அமைத்துள்ளார்.

''துணங்கிய கேள்வி மேலோன்''[5]

''மேனி எழில்பெற விளக்கினார்கள்''[6]

''நெற்றிவிழி யான்மொழிய நின்ற நிகர்இல்லான்''[7]

''அனைத்துநூல் உணர்ந்தீர்''[8]

''உயர்நாவலர் தனிநாதன்''[9]

---

1. திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணம் - 123.
2. திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணம் - 126.
3. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 129.
4. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 131.
5. தடுத்தாட்கொண்ட புராணம் - 14.
6. தடுத்தாட்கொண்ட புராணம் - 15.
7. தடுத்தாட்கொண்ட புராணம் - 36.
8. தடுத்தாட்கொண்ட புராணம் - 54.
9. தடுத்தாட்கொண்ட புராணம் - 77.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''கங்கைசடைக் கரந்த பிரான் அறிந்திலையோ
எனக்கரந்தான்''[1]

''பொய்கடிந் தறத்தின் வாழ்வார்''[2]

''நாறுபூங் கோதை மாது தவிரவே நானும் நீயும்
வேறிடத் திருக்க வேண்டும்''[3]

''எல்லாம் தான்வைத்து வாங்க வல்லான்''[4]

''களத்து நஞ்சொளித்து நின்றான்''[5]

''கற்பின் மேம்படு காதலியாரை''[6]

''கோவணக் கள்வர்''[7]

''நிழலிலா மரங்க ளேறி நின்றிடக் கண்டோம்''[8]

''பரசமயக் கோளரி வந்தான்''[9]

''வாக்கின் தனிமன்னர் வண்புகலி வேந்தர்''[10]

''அழுதுலகை வாழ்வித்தார்''[11]

''பரவையார்தங் கொழுநனார்''[12]

''பருகா இன்னமுதத்தைக் கண்களாற் பருகினார்''[13]

''முனைப்பாடிப் புரவலனார்''[14]

''நம்மைக் காக்க வருமணியை''[15]

---

1. தடுத்தாட்கொண்ட புராணம் - 87.
2. திருநீலகண்ட நாயனார் புராணம் - 2.
3. மெய்ப்பொருள் நாயனார் புராணம் - 13.
4. திருநீலகண்ட நாயனார் புராணம் - 20.
5. திருநீலகண்ட நாயனார் புராணம் - 27.
6. இயற்பகை நாயனார் புராணம் - 8.
7. அமர்நீதி நாயனார் புராணம் - 19.
8. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 640.
9. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 653.
10. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 941.
11. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 1119.
12. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 39.
13. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 164.
14. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 175.
15. சிறுத்தொண்ட நாயனார் புராணம் - 57.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"பருவ மழைச் செங்கை"[1]

"தூண்டு சோதி விளக்கனையார்"[2]

"பரவைப் பிறந்த திருவனைய பரவையார்"[3]

விரிப்பின் பெருகும். பொருள் ஆழம் கொண்ட சுருங்கிய சொற்றொடர்கள் இவை.

சொற்றிறன்

சேக்கிழார் ஒரு கருத்தைச் சொல்லுங்கால் நயமாகவும், பக்குவமாகவும், காரண காரியத்தோடும், கேட்போர் மறுக்கா வண்ணம் முறைப்பட எடுத்துக் கூறிய அழகு தனியழகு.

திருநீலகண்ட நாயனாரின் மனைவியார் அருந்ததிக் கற்பின் மிக்கார்,[4] தேனலர் கமலப்போதில் உறையும் இலக்குமியினும் அழகுமிக்கார்,[5] என்று சேக்கிழார் அவரை அறிமுகம் செய்தனர். அக அழகும் புற அழகும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற இத்தகு மனைவியாரை விட்டு விட்டு ஆங்கோர் பரத்தைபால் அணைந்தார் என்பதைச் சேக்கிழார், விரிவாகக் கூறாமல் சுருக்கமாகச் செய்தியை மட்டும் விளம்பினார். நாயனார் தவறிய காரணம் என்னை என்பதற்குக் காரணம் கூறியபொழுது,

"இளமைமீ தூர இன்பத் துறையினில் எளியர் ஆனார்"[6]

எனக் கூறினார். தவறு செய்தோரைச் சாடுவதற்குக் கடுமையான சொற்கள் இருக்க, நாயனார் எனும்பொருட்டு "எளியர்" என்றதோடு நிறுத்திக் கொண்டார். ஏன் எளியர் ஆயினார்? இளமைச் செழுமை மிக்கதால் எளியர் ஆனார் எனப் பக்குவமாக உரைத்தார்.

---

1. கழறிற்றறிவார் நாயனார் புராணம் - 67.
2. கழறிற்றறிவார் நாயனார் புராணம் - 72.
3. கழறிற்றறிவார் நாயனார் புராணம் - 73.
4. திருநீலகண்ட நாயனார் புராணம் - 4.
5. திருநீலகண்ட நாயனார் புராணம் - 5.
6. திருநீலகண்ட நாயனார் புராணம் - 3.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இடத்திற்குத் தக்க சொற்கள் அமைப்பு

எந்த இடத்தைப் பற்றிச் சேக்கிழார் கூறினாரோ அந்த இடத்து மக்கள் வழங்கிய சொற்களையே தம் காவியத்தில் பயன் படுத்தினர்.

கண்ணப்பரின் பொத்தப்பி நாட்டு உடுப்பூர்வாழ் வேடுவர்கள் கொலைத்தொழில் புரிகின்றவர். இவர்கள் கூட்டத்திலிருந்து கொல், எறி, குத்து என்ற சொற்களையே கேட்க முடியும் என்றார்.[1] திண்ணன் வேட்டையாடிய மிருகங்களைக் கொன்று அரிந்து வெந் தழலில் சுட்டு வதக்கினான். இதைச் சேக்கிழார்,

''வந்தனகொண் டெழுந்தழலில் வக்குவன வக்குவித்து''[2]

எனப் பாடினார். ''வக்கு'' என்பது வேடரது வழக்குச் சொல்.

தில்லையின் அண்மையில் நந்தனவனத்தில் திருத்தொண்டர்கள் தங்கியபொழுது கூறிய ''அரகர'' எனும் ஒலியையே அங்கு வாழ்ந்த கிளி, பூவைகள் கேட்டு, ''அரகர'' என மொழி பகர்ந்தன.[3]

பருவத்திற்குத் தக்க சொற்கள் அமைப்பு

மானக்கஞ்சாற நாயனாரின் மகளாரை முதற்கண் பெண் கொடி,[4] பொற்கொடி,[5] பெண் அமுதம்,[6] குலக்கொழுந்து,[7] ஒள்ளிழை,[8] பெண்கொடி,[9] திருமகள்,[10] அணங்கிவள்[11], பூங்கொடி[12] எனக் கூந்தல் இருந்தபொழுது இங்ஙனம் அழைத்தார்.

---

1. கண்ணப்ப நாயனார் புராணம் - 5.
2. கண்ணப்ப நாயனார் புராணம் 145.
3. திருநாவுக்கரசு நாயனார் புராணம் - 160.
4. மானக்கஞ்சாற நாயனார் புராணம் - 11.
5. மானக்கஞ்சாற நாயனார் புராணம் - 12.
6. மானக்கஞ்சாற நாயனார் புராணம் - 14.
7. மானக்கஞ்சாற நாயனார் புராணம் - 15.
8. மானக்கஞ்சாற நாயனார் புராணம் - 21.
9. மானக்கஞ்சாற நாயனார் புராணம் - 27.
10. மானக்கஞ்சாற நாயனார் புராணம் - 28.
11. மானக்கஞ்சாற நாயனார் புராணம் - 29.
12. மானக்கஞ்சாற நாயனார் புராணம் - 30.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவளுடைய கூந்தல் மழிக்கப்பெற்று இறைவன் திருவருளால் மீண்டும் முன்புபோல் வளர்ந்த பின்பு பொருளுக்கேற்ப அவளைக் ''குழற்கொடி''[1] என அழைத்தார்.

முறைப்படக் கூறுதல்

மூர்த்தி நாயனார், வடுகக் கருநாடர் மன்னன் சந்தனக்காப்பு தடைசெய்தகாலை சந்தனப் பாறையில் தன் முழங்கையையே சந்தனக் கட்டையாக வைத்துத் தேய்த்தபொழுது,

''கட்டும்புறந் தோல்நரம் பென்பு கரைந்து தேய''[2]

எனக் கூறினார். முதலில் கரைந்து தேய்வது புறந்தோல், அடுத்து நரம்பு, பின் எலும்பு. இங்ஙனம் முறையோடு மொழிந்தனர்.

திருக்குறிப்புத் தொண்ட நாயனார் சிவனடியாரின் அழுக்குக் கந்தையைத் துவைத்த முறையை,

''வெறித்தடநீர்த் துறையின்கண் மாசெறிந்து மிகப் புழுக்கிப்
பிறித்தொலிக்கப் புகும் அளவில்''[3]

எனச் சொல்லினர். (1) அழுக்குப் போகத் தோய்த்தல் (2) உவர் மண் ஏற்றி ஆவியில் புழுக்குதல் (3) துணியழுக்கும் உவரின் கறையும் நீங்கத் தோய்த்தல்-இவை வண்ணார் முறைப்படி செய்பவை. வண்ணார் தொழில் தெரிந்தார் போன்று முறைப்படி குன்றை முனிவர் மொழிந்தார்.

பண்பாடோடு மொழிதல்

திருமருகல் என்னுந் திருப்பதியில் கன்னியுடன் வந்து தங்கிய ஒரு வணிகனைப் பாம்பு தீண்டிவிட்டது. கன்னி அவனைத் தீண்டாது அரற்றினாள். இதை,

---

1. மானக்கஞ்சாற நாயனார் புராணம் - 34.
2. மூர்த்தி நாயனார் புராணம் - 20.
3. திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணம் - 121.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"வாளரவு தீண்டவுந்தான் தீண்ட கில்லாள்"[1]

என்றனர். மணத்திற்கு முன் தீண்டுதல் கூடாது எனுந் தமிழ்ப் பண்பாட்டினைப் புலப்படுத்திப் பாடினார் சேக்கிழார்.

பின்னர் பெயரிடுவதை முற்கூறல்

பூம்பாவை பிறந்ததனைக் கூறியபொழுது,

"கரிய வாங்குழல் மனைவியார் வயிறெனுங் கமலத்
துரிய பூமகள் எனஒரு பெண்கொடி உதித்தாள்"[2]

எனக் கூறினார். சிவநேசர் மனைவியாரின் திருவயிறு கமலமாம். கமலத்தில் வாழ்வாள் பூமகள். இவளைப் போன்று சிவநேசர் மனைவியாருக்குப் பெண்கொடி ஒன்று உதித்தது. பின்னர் இவளுக்குப் பூம்பாவை எனப் பெயர் வைத்தலின் முன்னர் அவளைப் பூமகள் என்றார்.

அடியார்க்கு நேர்ந்த தீங்கினை அச்சொற்களால் கூறாமை

திருத்தொண்டர்களுக்கோ, அவர்கள் வாழ்ந்த இடங்களுக்கோ தீங்கு நேர்ந்தாலும், நேர இருந்தாலும், அதை அப்படியே கூறாமல் வேறு வகையாக விளம்பினார்.

முத்தநாதன் மெய்ப்பொருள் நாயனாரைக் கொன்றான் எனக் கூறாமல்,

"தான்முன் நினைத்தஅப் பரிசே செய்ய"[3]

எனக் கூறினார்.

அதிசூரன் ஏனாதிநாத நாயனாரைக் கொல்ல வேண்டுமென்கிற குறிப்போடு அவரோடு போர் புரிந்தனன். அதிசூரனின் நெற்றியில் வெண்ணீறு இருக்கக் கண்டு, ஏனாதிநாதர் அவனோடு போரிடுவதைத் தவிர்த்தனர். அவன் தன்னைக் கொல்லுமாறு நிற்கக் கருதினர் என்னாமல்,

---

1. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 474.
2. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 1040.
3. மெய்ப்பொருள் நாயனார் புராணம் - 15.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"இவர்தங் கொள்கைக் குறிவழி நிற்பேன்"

என்று ஏனாதிநாதர் கூறுவதாகக் கூறினார். போர் செய்வது போன்று நடித்த ஏனாதிநாதரை அதிசூரன் வெட்டி வீழ்த்தினன் எனக் கூறாமல்,

"முன்னின்ற பாதகனும் தன்கருத்தே முற்றுவித்தான்"[1]

எனச் சாற்றினார்,

வெவ்வினையாளர்கள் திருநாவுக்கரசரைக் கல்லில் கட்டிக் கடலிடைப் பாய்ச்சிய செய்தியை,

"மன்னவன் சொன்ன படிமுடித் தார்அப் பதகர்"[2]

என்றார்.

மூத்த திருநாவுக்கரசை அழைக்குமாறு திருநாவுக்கரசு நாயனார் அப்பூதியடிகளிடம் வேண்ட, அவன் பாம்பு தீண்டி இறந்தான் எனக் கூறாமல் அவர்,

"இப்போ திங்கவன் உதவான்"[3]

என்றார்.

பைரவ முனிவராக வந்த இறைவன், கறியமுதம் ஆக்கப் பெற்ற மைந்தனை அழைக்குமாறு சிறுத்தொண்டரிடம் கூற அவரும் உண்மையை விளம்பாது,

"இப்போ துதவான் அவன்"[4]

என நுவன்றார்.

திருஆலவாயில் திருஞானசம்பந்தர் தங்கியிருந்த சைவ மடத்திற்குச் சமணர்கள் தீயிட்டனர் எனக்கூறாது,

"வந்து தந்தொழில் புரிந்தனர் வஞ்சனை மனத்தோர்"[5]

என நவின்றார்.

---

1. ஏனாதிநாத நாயனார் புராணம் - 40.
2. திருநாவுக்கரசு நாயனார் புராணம் - 124.
3. அப்பூதியடிகள் நாயனார் புராணம் - 32.
4. சிறுத்தொண்ட நாயனார் புராணம் - 79.
5. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 700.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தனக்குத் திருமணம் செய்ய வேண்டும் எனப் பெற்றோர் உரை செய்த உரையினைக் கேட்டு மயங்கி வீழ்ந்த சங்கிலியார். காரணங் கூறியபோது,

"இன்றென் திறத்து நீர்மொழிந்த இதுஎன் பரிசுக் கிசையாது"[1]

எனப் பதிலுரைத்தார். திருமணம் என்ற சொல்லைப் பேசவும், கேட்கவும் அஞ்சினார்.

பரமதத்தன் தன்னை ஏற்றுக் கொள்ள மறுத்தான் என்பதை அங்ஙனமே கூறாமல் வேறு வடிவில்,

"ஈங்கிவன் குறித்த கொள்கை இது"[2]

என்று காரைக்காலம்மையார் உரைத்தார்.

உடைவாளரல் குத்தி உயிர் நீத்த ஏயர்கோன் கலிக்காம நாயனாரைக் காணச் சென்ற சுந்தரரிடத்து மனைத்தொழில் மாக்கள்,

"மற்றிங் கேதமொன் றில்லை உள்ளே
பள்ளிகொள் கின்றார்"[3]

என்றியம்பினர். இறந்தார் எனக் கூறவில்லை. இங்ஙனம் அடியார்க்கு ஏற்பட்ட தீங்கினைக் கூடக் கூற அஞ்சி அப்பொருள் தோன்ற வேறு வடிவில் கூறிய நயம் பாராட்டற்குரித்து.

உரையாடல் அமைக்கும் திறன்

தர்க்க முறைப்படி (Logical method) கேட்போர் மறுத்துக் கூறாது ஏற்றுக் கொள்ளும் விதத்தில் உரையாடலைச் சேக்கிழார் அமைத்துள்ளார். இன்னும் சிறப்பாக நாடகப் போக்கிலும் அஃது அமைந்துள்ளது.

---

1. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 213.
2. காரைக்காலம்மையார் புராணம் - 49.
3. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 402.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கன்றினை இழந்த தாய்ப்பசு தூங்கிய மணியைத் தன் கோட்டினால் புடைக்க, அது கேட்ட மன்னவன் தன் அமைச்சனை நடந்தது யாது என வினவினான். எல்லாம் அறிந்த முதிர்ந்த கேள்வித் தொன்னெறி அமைச்சன், மன்னன் தாளினைத் தொழுது,

"வளவ! நின் புதல்வன் ஆங்கோர் மணிநெடுந் தேர்மேல் ஏறி
அளவில்தேர்த் தானை சூழ அரசுலாந் தெருவில் போங்கால்
இளையஆன் கன்று தேர்க்கால் இடைப்புகுந் திறந்த தாகத்
தளர்வுறும் இத்தாய் வந்து விளைத்ததித் தன்மை" என்றான்.[1]

நடந்த செய்தியையும், சோழன் மைந்தன் மீது தவறு இல்லை என்பதையும் ஒருசேர அமைச்சர் உரைத்தார்.

சோழன் செம்மையை உடையான் என்பதால், 'வளவ' எனவும், ''நின் புதல்வன்'' என்பதால் அரசன் வழிப்படி மகன் ஒரோவழி இருப்பானாகலின் அவனுஞ் செம்மையை உடையன், தவறு செய்யான் என்பதைப் புலப்படுத்தின. ''நெடுந்தேர்'' என்பதால் உடனே புகுந்த கன்றினை நோக்க முடியவில்லை; இவன் மட்டும் செல்லவில்லை. ''அளவில் தேர்த்தானை சூழ''ச் சென்றவன். வீரர்கள் கன்று புகுந்ததைக் கவனித்திருக்க வேண்டும். அங்ஙனம் செய்யவில்லை. ''அரசுலாந்தெரு'' என்பதால் அரச குடும்பத்தினர் செல்லுகின்ற தெருவில்தான் மகன் சென்றான். அந்தத் தெருவில் கன்று செல்லுவதற்கு உரிமையில்லை. ''இளைய ஆன்கன்று'' என்றதால் ''இளங் கன்று பயமறியாது'' என்னும் முதுரைப்படி தன்னியல்பின்படியே கன்று துள்ளிச் சென்று தானே தேர்க்காலுக்குள் புகுந்து இறந்தது. ''தேர்க்கால் இடைப்புகுந்து'' என்பதால், தேர்க்காலுக்குள் அது புகுந்ததேயன்றித் தேர்க்கால் அதன்மேல் செலுத்தப்படவில்லை.

இவ் ஆன், தன் கன்றை இழந்ததனாலாகிய மனச்சோர் வினாற் செய்ததன்றி முறைவேண்டிச் செய்திலதென்பான் ''தளர்வுறும் இத்தாய்' என்றார்.

அமைச்சன் பதிலிறுத்தலில் இவ்வளவும் அடங்கியுள்ளன. அரசகுமாரன் ஒரு சிறிதும் பொறுப்புடையனன்று என்பதைத் தன் உரையாடலால் நிலைநிறுத்தினன்.

---

1. திருநகரச் சிறப்பு - 31.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புத்தூரின்கண் சுந்தரருக்கும் சடங்கவி பேதைக்கும் நடைபெற விருந்த திருமணப் பந்தரிடை வந்து, மறையவனாக வந்த சிவ பெருமான், நாவலர் பெருந்தகையை நோக்கி,

''என்னிடையும் நின்னிடையும் நின்றஇசை வால்யான்
முன்னுடைய தோர்பெரு வழக்கினை முடித்தே
நின்னுடைய வேள்வியினை நீமுயல்தி''என்றான்.[1]

அதற்கு ஆரூரனும்,

''உற்றதோர் வழக்கெனிடை நீயுடைய துண்டேல்
மற்றது முடித்தலதி யான்வதுவை செய்யேன்
முற்றஇது சொல்லுக''[2]

எனச் சொன்னான். மறையவனும்

''ஆவதிது கேண்மின்மறையோர்! என்அடி யான்இந்
நாவல்நகர் ஊரன்இது நான்மொழிவது''[3]

என்றான். தன்னை அடிமை எனக் கூறக்கேட்ட வள்ளல் வன்றொண்டன் வேதியனை நோக்கி,

''ஆசில்அந் தணர்கள் வேறோர் அந்தணர்க் கடிமை ஆதல்
பேசஇன் றுன்னைக் கேட்டோம் பித்தனோ மறையோன்''[4]

என்று கூறினார். திருவெண்ணெய்நல்லூர் அந்தணர் பெரு மக்களும்,

''...மறையவர் அடிமை ஆதல்
இந்தமா நிலத்தில் இல்லை என்சொன்னாய் ஐயா''[5]

என்றார். இதைக் கேட்ட அந்தணனும்,

''வந்தவா றிசைவே அன்றோ வழக்கிவன் கிழித்தஓலை
தந்தைதன் தந்தை நேர்ந்தது''[6]

என்று கூறினன் தனியாய் நின்றான். அந்தணனுக்கு இன்னோர் அந்தணன் அடிமை என்ற வழக்கு இல்லையெனினும்,

1. தடுத்தாட்கொண்ட புராணம் - 35.
2. தடுத்தாட்கொண்ட புராணம் - 36.
3. தடுத்தாட்கொண்ட புராணம் - 37.
4. தடுத்தாட்கொண்ட புராணம் - 40.
5. தடுத்தாட்கொண்ட புராணம் - 52.
6. தடுத்தாட்கொண்ட புராணம் - 52.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தந்தைதன் தந்தை எழுதிக் கொடுத்த ஒப்பந்தத்தால் ஆரூரன் தனக்கு அடிமை எனக்கூறி வாதிட்டது தர்க்க முறையில் அமைந்துள்ளது ஆகும்.

திருவாரூர்ப் பூங்கோயிலின்கண் பரவையாரைக் கண்ட நம்பியாரூரர் அருகே இருந்த தொண்டரை,

''என் மனங்கொண்ட மயிலியலின்
இன்தொண்டைச் செங்கனிவாய் இளங்கொடிதான்
யார்''[1]

எனக் கேட்டார். வினவுவதன் மூலம் அவள்மேல் தனக்கு விருப்பம் உண்டு என்பதைச் சொற்களால் தெரிவித்தார். அண்மையில் இருந்த தொண்டரும்,

''அவர் நங்கை பரவையார்
சென்றும்பர் தரத்தார்க்கும் சேர்வரியார்''[2]

எனச் செப்பினார். தேவத்தன்மை வாய்ந்தவர்களுக்கும் போய் அடைவதற்கு அரியவர். எனவே, சுந்தரர் விருப்பத்திற்குப் பரவையார் உரிமையாகாதவர் என்பது அவருடைய பதிலில் உள்ள கருத்தாகும். இதே போன்று பரவையாரும் அருகிருந்த சேடிதனை நோக்கி,

''ஆரூர் ஆண்ட, மைவிரவு கண்டரைநாம்
வணங்கப்போம் மறுகெதிர் வந்தவரார்''[3]

என்று கேட்க, சேடியும்,

''இவ்வுலகில் அந்தணராய் இருவர்தே டொருவர்தாம்
எதிர்நின் றாண்ட
சைவமுதல் திருத்தொண்டர்; தம்பிரான் தோழனார்;
நம்பி''[4]

---

1. தடுத்தாட்கொண்ட புராணம் - 147.
2. தடுத்தாட்கொண்ட புராணம் - 147.
3. தடுத்தாட்கொண்ட புராணம் -171.
4. தடுத்தாட்கொண்ட புராணம் -171.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்று பதிலிறுத்தாள். நம்பி என்று பெயரையும், சிவபெருமான் தொண்டர் என்ற பெருமையினையும் ஒருசேரக் கூற, இவ்வளவும் இவருக்கிருக்கின்ற சிறப்பான் இவர் மீது பரவையார்க்கு விருப்பம் ஏற்படுமாறு கூறும், பாங்கு அழகுடைத்தாம்.

திருவோட்டை வெளவவில்லை; உளத்திலும் களவு செய்ய வில்லை எனின், ''காதல்உன் மகனைப் பற்றிக் குளத்தினில் மூழ்கிப்போ''[1] என்று சத்தியம் செய்து தருமாறு திருநீலகண்டரைச் சிவயோகியாராக வந்த இறைவன் கேட்டனன். அவரும் அவர் மனைவியாரும் வேறுவேறு வைகி அன்புறு புணர்ச்சி இன்மையால் மகன் எங்ஙனம் தோன்றுவன்? இங்ஙனம் கேட்டவன் கொடுமை இல்லாத கருணையாளனாம். அதற்குத் திருநீலகண்டர் இறைவரை நோக்கி,

''ஐயர்! நீர் அருளிச் செய்த வண்ணமியான் செய்வ தற்குப்
பொய்யில்சீர்ப் புதல்வன் இல்லை: என் செய்கேன்''[1]

எனப் பதிலிறுத்தார். அதற்கு அவர், அன்றேல்,

''மையறு சிறப்பின் மிக்க மனையவள் தன்னைப்பற்றி
மொய்யலர் வாவி புக்கு மூழ்குவாய்''[2]

என மொழிந்தார். தன்னைத் தீண்டக்கூடாது என்று மனைவியார் ஆணை பிறப்பித்தபொழுது அம்மனைவியாரைத் தீண்டிக் குளத் தினில் மூழ்குவது எவ்வாறு? உரையாடல் மூலம் சிவபெருமான் திருநீலகண்டரை மடக்கினர். இறுதியில்,

''பொருந்திய வகையால்மூழ்கித் தருகின்றேன் போதும்''[3]

என்றுரைத்தார் திருநீலகண்டர்.

அடுத்து, மறையவராக வந்த இறைவன் கோவணத்தைத் திருப்பிக் கொடுக்கவியலாத அமர்நீதி நாயனாரை நோக்கி, 'என்

1. திருநீலகண்ட நாயனார் புராணம் - 27.
2. திருநீலகண்ட நாயனார் புராணம் - 28.
3. திருநீலகண்ட நாயனார் புராணம் - 28.
4. திருநீலகண்ட நாயனார் புராணம் - 36.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கோவணத்தைக் கொள்ளுவதற்கோ நல்ல கோவணம் கொடுப்பன் என உலகத்தில் பலரும் சொல்லும்படி செய்தது. உம் வாணிபம் அழகாக இருக்கின்றது''[1] எனக் கூறினர். குலத்தொழிலை இடித்துக் காட்டினார் மறையவர்.

சங்கிலியாரைத் தனக்கு மணம் செய்து வைக்க வேண்டும் என இறைவனிடம் சுந்தரன் வேண்டியபொழுது,

''மங்கை யொருபால் மகிழ்ந்ததுவும் அன்றி மணிநீர்
முடியின்கண்
கங்கை தன்னைக் கரந்தருளுங் காதல் உடையீர்:
அடியேனுக்கு
இங்கு நுமக்குத் திருமாலை தொடுத்தென் உள்ளத்
தொடை அவிழ்த்த
திங்கள் வதனச் சங்கிலியைத் தந்தென் வருத்தந் தீரும்''என[2]

இவ்வாறு கேட்டார். ''இடப்பக்கத்தில் மங்கையாகிய உமா தேவியை வைத்து மகிழ்வதோடன்றித் தலையில் கங்கையையும் வைத்துள்ளீர்'' எனக் கேட்டதன் மூலம் தமக்கும் துணைவியர் இருவர் வேண்டும் என்றார். ஒருத்தி பரவையார்; இன்னொருத்தி சங்கிலியார். ''ஒருத்தியை இடப்பக்கத்திலே வைத்து இன்னொருத்தியைத் தலையிலே வைத்துள்ளாய். அதுவும் இருவரையும் பக்கத்தில் பக்கத்தில் வைத்துள்ளாய். என் பரவையோ நெடுந் தொலைவில் உள்ளாள். எனவே இவளைத் திருமணம் செய்து வையும்'' எனச் சிவபெருமான் மறுக்காதவாறு கேட்டார்.

இங்ஙனம் சுவை ததும்ப உரையாடலை அமைத்த பெருமை தெய்வச் சேக்கிழார் பெருமானுக்கே சாரும்.

சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்

விரிவாகப் பல சொற்களால் கூற வேண்டியதைப் பொருள் குறையாதவாறு சில சொற்களால் சுருங்க உரைத்தார். சுந்தரர் திருமணப் பருவம் எய்தியதை,

---

1. அமர்நீதி நாயனார் புராணம் - 26.
2. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 232.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"அருமறை முந்நூல் சாத்தி அளவில்தொல் கலைகள் ஆய்ந்து
திருமலி சிறப்பின் ஓங்கிச் சீர்மணப் பருவஞ் சேர்ந்தார்"[1]

எனப் பகர்ந்தார். ஏழாம் ஆண்டில் முந்நூல் சாத்தியதைக் கூறிப் பதினாறாண்டு மணப் பருவம் எய்தினார் என்றார்.

திருமருகலில் உடன்போக்கில் வந்த வணிகன் பாம்பு தீண்டி இறக்க, கன்னி தன் வரலாற்றினைத் திருஞானசம்பந்தரிடம் எடுத்தோதுதல் :

"வளம்பொழில்சூழ் வைப்பூர்க்கோன் தாமன் எந்தை;
மருமகன்மற் றிவன்; அவற்கு மகளிர் நல்ல
இளம்பிடியார் ஒரெழுவர்; இவரின் மூத்தாள்
இவனுக்கென் றுரைசெய்தே ஏதி லானுக்கு
உளம்பெருகத் தனம்பெற்றுக் கொடுத்த பின்னும்
ஒரொருவ ராகவெனை யொழிய ஈந்தான்
தளர்ந்தழியும் இவனுக்காத் தகவுசெய் தங்கு
அவரைமறைத் திவன்தனையே சார்ந்து போந்தேன்"[2]

என்பது சேக்கிழாருடைய வாக்கு.

சங்கிலியாரிடம் சுந்தரரின் பெருமையைக் கூறி அவரைத் திருமணம் செய்து கொள்ளும்படி கூறியதைச் சேக்கிழார்,

"சாருந் தவத்துச் சங்கிலி! கேள்; சால என்பால் அன்புடையான்:
மேரு வரையின் மேம்பட்ட தவத்தான்; வெண்ணெய் நல்லூரில்,
யாரும் அறிய யான்ஆள உரியான்; உன்னைஎனை இரந்தான்;
வார்கொள் முலையாய்! நீஅவனை மணத்தால் அணைவாய்
மகிழ்ந்"தென்றார்.[3]

என்று சுருங்கச் சொல்லி விளங்க வைத்தார்.

திருப்புக்கொளியூரின்கண் ஒரு மனையில் அழுகை ஒலியும் எதிர் மனையில் மங்கல ஒலியும் வரக்கேட்டு அப்பக்கம் வந்த சுந்தரர் வினவ,

---

1. தடுத்தாட்கொண்ட புராணம் - 6.
2. திருஞானசம்பந்தர் நாயனார் புராணம் - 480. (இதன் விரிவு வேறிடத்தில் கூறப்பெற்றுளது. இவ்வாய்வு ஏடு-பக்.120.)
3. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 239.

13

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"அந்த ணாளர் வணங்கி "அரும்புதல்வர் இருவர் ஐயாண்டு
வந்த பிராயத் தினர்குளித்த மடுவில் முதலை ஒருமகனை
முந்த விழுங்கப் பிழைத்தவனை முந்நூல் அணியுங் கலியாணம்
இந்த மனைமற் றந்தமனை இழந்தார் அழுகை"[1]

என்றுரைத்தனர் அந்தணப் பெருமக்கள். இதில் சொற்சுருக்கம்; கருத்துப் பெருக்கம்.

இங்ஙனம் இலக்கிய நயங்களை இன்புற அமைத்தார் சேக்கிழார் பெருமான்.

*

1. வெள்ளானைச் சருக்கம் - 6.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பகுதி-6

அறக்கருத்துக்கள்

''ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்''

— திருக்குறள் - 33.

✲

''பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்''.

— திருக்குறள் - 319.

✲

''சத்தியமே தலையாய தருமம். அதில் மற்றும் பல தருமங்களும் அடங்கியிருக்கின்றன என்று நான் கருதுகிறேன்.
என்னைப் போன்றவர்கள் நூற்றுக்கணக்கில் அழிந்தாலும் சரி. சத்தியம் நிலைக்கட்டும். தவறே இழைக்கவல்ல என் போன்றவர்களின் தன்மையைக் கண்டறிவதற்காக, சத்தியத்தின் பெருமையை மயிரிழையும் குறைத்து விடாமல் இருப்போமாக!''.

— மாகத்துமா காந்தியடிகள்,
சத்திய சோதனை - பக். 8 & 9

✲

''தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்
தருமம் மறுபடி வெல்லும்''.

— பாரதியார், பாஞ்சாலி சபதம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அறக்கருத்துக்கள்

சிறந்த கற்பனையும், ஆழ்ந்த உணர்ச்சியுங்கொண்டு விளங்குவதோடு, நிலைத்த உண்மைப் பொருளையும் கவிதை பெற்றிருக்க வேண்டும். கற்பனையும், உணர்ச்சியும் கவிதையில் மேலோங்கி நிற்கும். இவற்றில் உண்மைப் பொருள் இரண்டறக் கலந்துவிடும். கற்பனையையும், உணர்ச்சியையும் நீக்கிவிட்டு வெறும் உண்மைப் பொருளை மட்டும் காண்பேமாயின், அவை மட்டும் நம் அறிவுக் கண்களுக்குப் புலப்படும். ஆசிரியன் தான் கண்டதையும் அனுபவித்ததையும் வடித்தெடுத்து இறுதியில் நிலைத்திருந்தவற்றை, இதுதான் உண்மை என உறுதி கூறுவான். அந்த உண்மைப் பொருளை, கற்பனையும் உணர்ச்சியும் கலந்து, தான் கூறவந்த கவிதையில் இடத்திற்குத் தக்கவாறு ஆங்காங்குத் தெளித்துவிட்டுச் செல்வான். இலக்கியத்தில் இந்த உண்மைப் பொருள், அறக்கருத்துக்கள் இலை மறை காய்போல் பொதிந்து கிடக்கும்; சிலவிடங்களில் தெளிவாகவும் சிறக்கும்.

இலக்கியத்தின் உயிர் ஓட்டமே இவ்வறக் கருத்துக்கள்தாம். பூக்களால் தொடுக்கப் பெறுகின்ற மாலைக்குள் இழைநார் தெரிவதில்லை. ஆனால் இழை இருக்கின்றது. உடம்பிலே உயிர் தெரிவதில்லை; ஆனால் உயிர் இருக்கின்றது. இலக்கியத்துள்ளும் ஆசிரியன் அறக்கருத்துக்களை இப்படித்தான் அமைத்திருப்பான். சிலப்பதிகாரக் கதை ஓட்டத்தில் அறக்கருத்துக்களே நமக்குத் தெரிவதில்லை. படித்து முடித்த பின்பே தலையாய மூன்று அறக்கருத்துக்கள் நமக்குத் தெரிகின்றன; விளங்குகின்றன. பிறனில் விழைகின்றவன் கிளையொடுங் கெடுவான் என்ற அறச் செய்தி இராமாயணத்தின் முடிந்த முடிவாகும். எனவே எந்த இலக்கியமும் அறக் கருத்துக்களை ஆணிவேராகக் கொண்டே திகழும். இங்ஙனமே மாத்யூ ஆர்னால்டு என்ற திறனாய்வாளரின், ''நல்லொழுக்கத்திற்கு முரணான கருத்தினைத் தரும் எந்தக் கவிதையும் வாழ்வுக்கு எதிராகச் செய்யப்பெற்ற புரட்சியாகும்;

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நல்லொழுக்கத்தில் கருத்தில்லாத கவிதை வாழ்விலும் கருத்தில்லாத தாகும்'' என்ற கருத்தினை மேற்கோளாகத் தம் நூலுள் ந. சுப்பு ரெட்டியார் அவர்கள் கையாண்டுள்ளார்.[1]

பெரியபுராணக் காப்பியத்துள் சேக்கிழார் அறக்கருத்துக்களை எங்ஙனம் அமைத்துள்ளார் என்பதைக் காண்போம்.

சான்றோர் இவை நல்லவை என்று கருதினவற்றைச் செய்தல் அறமாம். திருவள்ளுவர்,

''ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்''[2]

எனக் கூறிப் போந்தார். திருத்தொண்டர் புராணத்துள் கூறப் பெற்ற திருத்தொண்டர் அனைவரும் தாம் கொண்ட கொள்கைகளை விடாமலும் நல்லனவற்றைச் செய்வதினின்றும் வழுவாமலும், சென்ற இடங்களிலெல்லாம் அறச்செயல்களில் ஈடுபட்டும் வாழ்ந்து காட்டினர். அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை முழுவதும், அறவாழ்க்கை யாகவே இருப்பதைக் காணலாம். திருநீலகண்ட நாயனாரை ஆசிரியர் கூறுங்கால், ''பொய்கடிந் தறத்தின் வாழ்வார்; வையகம் போற்றும் செய்கை மனையறம் புரிந்து வாழ்வார்''.[3] என்றே கூறினார். சேக்கிழார் இவர்தம் வரலாற்றினைக் கூறிச் செல்லுகின்ற போக்கிலும் அவர்தம் பத்தி வாழ்க்கையில் நம்மை நாமே மறந்து விடுவதாலும் காவியத்தின் இடையே இழையோடிச் செல்லுகின்ற அறக்கருத்துக்கள் நம் கண்களுக்குத் தெளிவாகத் தெரிவதில்லை.

அரசியல்

அரசு புரிந்த மன்னர்கள் அறத்தொடு வாழ்ந்தனர். அறத்தினின்றும் வழுவாமல் தம்மைக் காத்தனர்; மற்றவர்களையும் அறத்தொடு வாழுமாறு செய்தனர். எங்காகினும் அறத்தினின்றும் நீங்கி எவ்வுயிர்க்கேனும் ஊறு ஏற்பட்டதெனின் குற்றத்திற் கேற்றவாறு தண்டித்தனர்.

---

1. கவிதையனுபவம் - பக். 268 - 269; ந.சுப்பு ரெட்டியார்.
2. திருக்குறள் - 33.
3. திருநீலகண்ட நாயனார் புராணம் - 2.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தேர்க்காலில் புகுந்து இறந்த கன்றிற்காக ஆவி சோரும் தாய்ப்பசுவிற்குத் தீர்வு யாது என்று மனுநீதிச் சோழன் அமைச்சர்களைக் கேட்க,

''கொந்தலர்த்தார் மைந்தனைமுன் கோவதைசெய் தார்க்குமறை
அந்தணர்கள் விதித்தமுறை வழிநிறுத்தல் அறம்''[1]

என்றனர்.

இவ்வறத்தின்படி நடந்தால் துயர்வுறும் ஆவினுக்கு மருந்தாமோ? தருமந்தான் சலியாதோ? என மன்னவன் கேட்டான். இக்கருத்துக்கு விளக்கமாக, ''கன்றை இழந்த பசுவுக்கு முறை செய்யுமிடத்தில் அமைச்சர்கள் கூற்றை மறுத்து மனுச்சோழன் கூறிய கருத்துக்கள் அறநெறியின் ஆணிவேராயுள்ளன. நூலாசிரியர் பேரமைச்சராயிருந்து அறங்களை நன்குணர்ந்து கடைப்பிடித்தவர் என்பதை பாடல்தோறும் உணர்த்து கின்றன. ''மனுநீதிச்சோழன்'' என்ற பெயரே அறத்தின் நேர் சொல்லாகிய நீதி என்பதைக் கொண்டிருக்கின்றது'' என்று எடுத்துக் கூறினாரும் உளர்.[2]

ஒரு நாட்டை ஆளும் வேந்தன்,
''மாநிலங்கா வலனாவான் மன்னுயிர்காக் குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னால்தன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்துந்தீர்த் தறங்காப்பான் அல்லனோ''[3]

என்ற ஐந்து பயங்களையும் போக்குகின்றவனாக இருத்தல் வேண்டும் என்றார் சேக்கிழார். மேலும் அவர், மன்னன் எத்தகையவனாக இருத்தல் வேண்டும் எனக் கூறுங்கால்,

''மண்ணில் வாழ்தரு மன்னுயிர் கட்கெலாம்
கண்ணும் ஆவியும் ஆம்பெருங் காவலன்''[4]

---

1. திருநகரச் சிறப்பு - 34.
2. தமிழ் இலக்கிய வரலாறு - பன்னிரண்டாம் நூற்றாண்டு - பக். 291-292; மு. அருணாசலம்.
3. திருநகரச் சிறப்பு - 36.
4. திருநகரச் சிறப்பு - 14.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எனக்கூறி மன்னனின் தன்மையை விளம்பினார். 'மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்''[1] எனப் புறநானூற்றுப் புலவனை ஒட்டியே மன்னன் உயிர் எனச் சேக்கிழார் உரைத்தார். அடுத்து அவனே கண் என்றும் கூறினார். பிறிதோர் இடத்திலும் சேக்கிழார் மன்னவனை உயிர் எனக் கூறினார்.[2]

அன்னியன் ஓர் உயிரைக் கொன்றால் அவனைக் கொல்லுவது அரசமுறையாக இருக்கத் தன் மகன் இழைத்த குற்றத்திற்குத் தீர்வு காண வேறுவழி நாடுவது அறமன்று எனக் கருதிய மன்னவன் தன்னுடைய குலமகனைத் தான் கொண்டு மறுகணைந்தான். இம்மைந்தனை,

''ஒருமைந்தன் தன்குலத்துக் குள்ளான்என் பதும்உணரான்
தருமம்தன் வழிச்செல்கை கடனென்று தன்மைந்தன்
மருமம்தன் தேராழி உறஊர்ந்தான் மனுவேந்தன்''[3]

என்ற சேக்கிழார் வாக்கின்படி அறவழியில் முறைசெய்தான் மாமன்னன் மனுநீதிச் சோழன். இக்கருத்துக்குத் தொடர்பாக, ''சேக்கிழார் அமைச்சராக இருந்தவர். மனுநீதிச்சோழன் அவையில் பசுவினால் வந்த வழக்கை முடிவு செய்யும் வகையில் அமைச்சர் பண்பைச் சிறிது காண்கிறோம். ஆனால் அங்கு அரசனுடைய பண்பு, அமைச்சர் கூறும் அரசியல் தருமத்தைக் கடந்து இன்னும் மேலான ஒரு தெய்வ தருமத்தைக் கடைப்பிடிக் கிறது'' என விளக்கம் தந்தார் ஆய்வாளர் ஒருவர்.[4]

எல்லா உயிர்களின் துன்பத்தினையும் அறிந்து முறை செய்வான் வேண்டி அவை பேசுகின்ற மொழிகளையும் அறிந்து கொள்ளுகின்ற திறனைக் கழறிற்றறிவார் என்ற அரசர் ஒருவர் இறைவனிடம் வேண்டிப் பெற்றார். அதனானே அப்பெயரையும் அடைந்தார். அகிலயோனிகளும் கழறியவற்றை அறிந்து அவற்றின் மெய்யுறு துயரம் தீர்த்து, களவு, கொலைகள் முதலான

1. புறநானூறு - 186.
2. புகழ்ச்சோழ நாயனார் புராணம் - 33.
3. திருநகரச் சிறப்பு - 44.
4. தமிழ் இலக்கிய வரலாறு - பன்னிரண்டாம் நூற்றாண்டு - பக். 290; மு. அருணாசலம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கடிந்து அறவழியில் கழறிற்றறிவார் அரசு புரிந்தார்.[1] எல்லா உயிர்களையும் காப்பாற்றுவதற்காகவே,

"இருமை உலகுக் கொருமைமுடி கவித்தார்; எல்லா
உயிரும்மகிழ்
தரும நிலைமை அறிந்துபுவி தாங்குங் கழறிற்
றறிவார்தாம்"[2]

எனக் கூறினார் சேக்கிழார். அறத்தையே தம் உயிராகக் கொண்டு இவர்கள் அரசு செய்தனர்,

அறம் அல்லாதவை நிகழ்ந்துழி தாம் மன்னராக இருக்கின்றமையின் அவற்றை வாளாவிட்டிருக்கலாம். தம்மை எதிர்த்தோரை ஒறுத்திருக்கலாம். ஆனால் நீதிமன்னர்கள் அறநெறியினின்றும் பிறழாது தவறெனக் கண்டதும் தம்மையே தண்டித்துக் கொண்ட செய்திகளைப் புராணத்துள் காண்கின்றோம். வலியராய் இருந்த மன்னர்கள் மெலியராயினார்க்கு நீதி வழங்கிட நெறியுடன் நடந்து கொண்டனர்.

எறிபத்த நாயனார் பட்டத்து யானையைத் துணித்து, பாகர் மூவர், ஏறி வந்தோர் இருவர் ஆகிய ஐவரையும் தன் மழுவினால் கொன்றார் எனும் செய்தி கேட்டு அவ்விடத்திற்குப் புகழ்ச்சோழர் விரைந்தார். சிவகாமியாண்டார் கொண்டு வந்த பூக்குடலையைப் பறித்துச் சிந்தினமையின் யானையைத் துணித்ததாகவும், அதனைத் தடுத்து நிறுத்தாமையின் பரிக்காரரையும், யானை செலுத்தினாரையும் கொன்றதாகவும் எறிபத்தர் மன்னர்க்கு களக்கியதும் மன்னர் தம் தவறு என உணர்ந்தார். அங்ஙனர் அடியாருக்குச் செய்த அபராதத்திற்காகத் தன்னையும் கொல்ல வேண்டினார். மங்கல மழுவால் தன்னைக் கொல்வது சிறப்பன்று: அதற்குத் தாம் தகுதியில்லை எனத் தம் உடைவாளைக் கொடுத்தனர் உலக மன்னர்.[3]

கோயில் மண்டபத்தின்கண் கீழே விழ்ந்த பூவினை மோந்தாள் என்பதற்காக, புனிதத் தொண்டராகிய செருத்துணை நாயனார்,

---

1. கழறிற்றறிவார் நாயனார் புராணம் - 40.
2. கழறிற்றறிவார் நாயனார் புராணம் - 16.
3. எறிபத்த நாயனார் புராணம் - 42.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மன்னர் கழற்சிங்கருடைய மனைவியாரின் மூக்கினை அரிந்தார். காரணம் அறிந்த கழற்சிங்கர், பூவினை மோந்ததற்கு முன்னால் அதனை எடுத்தற்குக் கை துணை புரிந்தது என அக்கையையும் வளையொடு துணித்தார்.[1]

அரசியலில் முறை செய்து குறைபோக்கிய மன்னர்கள், குற்றத்தையும் அக்குற்றத்திற்கேற்ற தண்டனையையும் நோக்கினார்களேயன்றிக் குற்றம் புரிந்தார் யார் என்று நோக்க வில்லை. அறம் ஒன்றையே கருதினர்.

பொதுமக்கள்

பொதுமக்களும் தங்களுக்குள் நீதிகளை வகுத்துக் கொண்டு அறத்திற்குக் கட்டுப்பட்டவராய் வாழ்ந்தனர். மணம் வந்த புத்தூரின்கண் நம்பியாரூரருக்குத் திருமணம் நடந்த பொழுது இறைவன் சிவவேதியராக வந்து, ''இவன் என் அடிமை; வழக்கினை முடித்து வேள்வியினைச் செய்யட்டும்'' என்று கூறினன்.[2] ஆசில் அந்தணர்கள் வேறோர் அந்தணர்க்கு அடிமையாதல் ஆட்சியில் இல்லையெனினும் முதிய வேதியர் காட்டிய மூல ஓலையின்படி,

''அருமறை நாவல் ஆதி சைவன்ஆ ரூரன் செய்கை
பெருமுனி வெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக் கியானும் என்பால்
வருமுறை மரபு ளோரும் வழித்தொண்டு செய்தற் கோலை
இருமையால் எழுதி நேர்ந்தேன் இதற்கிவை என்எ ழுத்து''[3]

என்ற வாசகத்தினை அவையினர் நோக்கி ஆரூரன் மறையவர்க்கு அடிமைதான் என்று தீர்ப்புக் கூறினர்.

திருநீலகண்டர் சிவயோகியாருக்கு, அவர் கொடுத்த திருவோட்டினைத் திருப்பிக் கொடுக்க முடியாதபொழுது, தில்லை வாழ் அந்தணர்கள் சிவயோகியார் கூறியபடி, ''மருவிய மனைவி

---

1. கழற்சிங்க நாயனார் புராணம் - 10.
2. தடுத்தாட்கொண்ட புராணம் - 35.
3. தடுத்தாட்கொண்ட புராணம் - 59.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யோடு குளத்தில் மூழ்குதல் வழக்கே'' என்றார்.[1] திருநீலகண்டரும் பொருந்தியவகையால் மூழ்கித் தந்தார்.[2]

பிரமசாரி வடிவாகி வந்த இறைவன் கொடுத்த கோவணத்தை மீண்டும் அமர்நீதி நாயனார் கொடுக்க முடியாதபோது 'கோவணக் கள்வராகிய இறைவர், ''அதைப்போன்று மற்றொரு கோவணம் உளது; எடைக்கு எடை கொடும்''[3] என்று கூற நாயனாரும் அவ்வாறே ஒரு துலையின் ஒரு தட்டில் மாற்றுக் கோவணம் ஒன்றை இட்டார். என்ன இட்டாலும் தட்டுக்கள் சமனாகாது, மலர்க் குழல் மனைவியார், புதல்வன் இவ்ரொடு தானும்,

''இழைத்த அன்பினில் இறைதிரு நீற்றுமெய் யடிமை
பிழைத்தி லோமெனில் பெருந்துலை நேர்நிற்க''[4]

என்று கூறித் தட்டில் ஏறினார்; தட்டுக்கள் சமனாகி துலை நேர் நின்றது அண்டர் தம்பிரான் திருஅரைக் கோவணமும், கொண்ட அன்பினில் குறைபடா அடியவர் அடிமைத்தொண்டும் ஒத்தலால் துலை ஒத்து நேர் நின்றது. சுருங்கக்கூறின், நாயனாருடைய குடும்பத்தினரின் அறவாழ்க்கையே தட்டுக்களைச் சமப்படுத்தியது. அறமே இறைவர்க்குச் சமமாக இருக்கின்றது. இதைப் போன்றே அறவாழ்க்கை வாழ்ந்த காந்தியடிகளும் சத்தியமே கடவுள் என்றார்.

பொதுமக்கள் கூட்டத்துள் வல்லமையுள்ளவர், வல்லமை அற்றோர்க்குக் கட்டுப்படுகின்ற சூழ்நிலை வந்தபொழுது கட்டுப் படாமல், அவர்களைத் தமக்குக் கட்டுப்படுத்தச் செய்திருக்கலாம். ஆனால் அறத்திற்குக் கட்டுண்டு வலியார் மெலிந்தோர்க்குக் கட்டுப்பட்டனர் என்பதை மேற்குறித்த சான்றுகளால் அறியலாம்.

இல்லற வாழ்க்கை

இல்லற வாழ்க்கையில் கணவன், மனைவி, மக்கள் ஆகியோர் அவரவர்க்குரிய அறமுறையின்படி ஒழுகினர். இளையான்குடி

1. திருநீலகண்ட நாயனார் புராணம் - 35.
2. திருநீலகண்ட நாயனார் புராணம் - 36.
3. அமர்நீதி நாயனார் புராணம் - 31.
4. அமர்நீதி நாயனார் புராணம் - 43.
5. சத்திய சோதனை - பக். 509; மகாத்மா காந்தியடிகள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாற நாயனார் தன் இல்லம் வந்த சிவத்தொண்டர்க்கெல்லாம் உண்டி நாலு விதத்தினில், ஆறு சுவைத் திறத்தினில் திருவமுது படைக்க எண்ணினார்; மனைவியாரும் அவ்வாறே செய்தார்.[1] மாரிக்காலத்து இரவினில் வந்த விருந்தினர்க்கு விருந்து படைக்க நாயனார் மனைவியாரை நண்ணினார். அவரும் ஏதும் கூறாது விருந்து படைக்கக் கணவரை வழிப்படுத்தி, அன்று வயலில் வித்திய நெல்லைக் கொணரச் செய்து விருந்தினர்க்கு அமுது தயாரித்தார்.[2]

கற்பின் மேம்படு காதலியாரான மனைவியாரை இயற்பகை நாயனார் மெய்த்தவத்தினர்க்குக் கொடுத்து, அவருடன் செல்லுமாறு மனைவியிடம் கூறிய பொழுது அவர் மறுத்தாரில்லை. கணவன் இட்ட கட்டளையைச் செய்வதே அறம் என்று எண்ணினார். அவர்கணவரை நோக்கி,

"இன்று நீரெனக் கருள் செய்த திதுவேல்என்னுயிர்க்கொரு நாத! நீர் உரைத்த
தொன்றை நான்செயும் அத்தனை யல்லால் உரிமை வேறுள தோஎனக்கு?"[3]

என்றார். உடனே கணவனைத் துறந்து மெய்த்தவத்தினரொடு சென்றார்.

வடநாட்டுப் பைரவர் குழந்தைக் கறியமுதம் விரும்ப[4] சிறுத்தொண்டர் தம் காதல் புதல்வனையே கறியமுதம் செய்திடுமாறு மனைவியாரிடம் கூற, அவரும் ஏதும் கூறிலர். இச்செய்தியை,

"என்று கணவர் கூறுதலும் அதனுக் கிசைந்"தெம் பிரான் தொண்டர்
இன்று தாழா தமுதுசெய்யப் பெற்றிங் கவர்தம் மலர்ந்தமுகம்
நன்று காண்ப "தெனநயந்து "நம்மைக் காக்க வருமணியைச்
சென்று பள்ளி யினிற்கொண்டு வாரும்" என்றார் திருவனையார்"[5]

---

1. இளையான்குடிமாற நாயனார் புராணம் - 4.
2. இளையரன்குடிமாற நாயனார் புராணம் - 13.
3. இயற்பகை நாயனார் புராணம் - 9.
4. சிறுத்தொண்ட நரயனார் புராணம் - 51.
5. சிறுத்தெரண்ட நாயனார் புராணம் - 57.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எனக் கூறினர் சேக்கிழார். அங்ஙனமே சிறுத்தொண்டர் மகனை அழைத்து வந்தார். பெரியபுராணத்துள் கணவரொடு மனைவி யாரும் சிவத்தொண்டு புரிந்து, அவர் ஏவியவற்றைத் தலைமேற் கொண்டு அறம்புரிந்த காரணத்தினால், இருவரையுமே இறைவன் தன் மலர்ப்பாதங்களில் சேர்த்துக் கொண்டனன் என்பதைக் காணலாம்.[1]

பெற்றோர் ஏவியதைப் புதல்வர்களும் மறுக்காமல் பணி செய்தனர். தம் உயிர் போவதாக இருந்தாலும் பெற்றோர் ஏவிய பணியே சிறந்தது என முடித்தனர். தந்தை சிறுத்தொண்டரும் தாய் திருவெண்காட்டு நங்கையும் பைரவர்க்குக் கறியமுது செய்யத் தன்னை அரிய முற்பட்டபொழுது சீராளதேவர் ஏதும் கூறிலர். நனிநீடுவகையுற்றார். இக்காட்சியினை ஆசிரியர்,

''பொருவில் பெருமைப் புத்திரன்மெய்த் தன்மை அளித்தான்
எனப்பொலிந்து, மருவு மகிழ்ச்சி எய்தஅவர் மனைவி யாருங்
''கணவனார், அருமை உயிரை எனக்களித்தான்'' என்று மிகவும்
அகமலர, இருவர் மனமும் பேருவகை எய்தி அரிய
வினைசெய்தார்''[2]

என்று பாடினர். தாயாரும் தந்தையாரும் மகிழும்படி சீராளன் நடந்து கொண்டான். அடியாரை ஊட்டும் நியமமும் தனது வாக்கும் தவறின், கணவனார் உயிர் வாழாராதலின், அவ்வாறு நிகழாமற் காத்து, அவரது உயிரைத் தனக்குப் புதல்வன் அளித்தமையின், ''கணவனார் அருமை உயிரை எனக்களித்தான்'' என்றார் திருவெண்காட்டு நங்கையார்.

திருநாவுக்கரசரைத் திருவமுது செய்விக்க வாழைக்குருத்துக் கொண்டு வர மூத்த திருநாவுக்கரசைப் பெற்றோர் ஏவினபொழுது, ''நல்லதாய் தந்தை ஏவ நான்இது செயப்பெற்றேன்''[3] என்று அவன் விரைந்து சென்று வாழைக் குருத்தொன்று ஈர்ந்தபொழுது

1. இளையான்குடிமாற நாயனார் புராணம் - 26.
   இயற்பகை நாயனார் புராணம் - 33.
   சிறுத்தொண்ட நாயனார் புராணம் - 87.
2. சிறுத்தொண்ட நாயனார் புராணம் - 64.
3. அப்பூதியடிகள் புராணம் - 24.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாளரவொன்று தீண்ட விடம் தலைக்கேறியபோதும் காலந் தாழ்த்தாமல் பரிகலக் குருத்தைத் தாயார்பால் வைத்துப் படிமேல் வீழ்ந்தான். தன்னுயிர் போவதைப் பற்றிக் கவலைப்படாமல் பெற்றோர் ஏவிய பணி முடிந்து வாழைக்குருத்துக் காலத்தொடு செல்ல வேண்டுமே என்பதற்காகக் கவலைப்பட்டான் அருமந்த மகன்.

நம்மை ஈன்ற பெற்றோர் விரும்பியவற்றைப் புதல்வர்கள் செய்து மகிழ்ந்தனர். அவர்களுக்குக் கடன்களாற்றுவதையே பேரறம் எனக் கொண்டனர். இதனையே திருவள்ளுவரும்,

> "மகன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
> என்நோற்றான் கொல்லெனும் சொல்"[1]

என மொழிந்தார்.

நம்பினோர்க்கு ஊறு ஏற்படின் இறத்தல்

சான்றோர் ஒழுக்கம் உடையவர். ஒழுக்கத்திற்கு இழுக்கம் ஏற்பட்டுழி உயிர்தரியார்; எதையும் தேராது முடிவு செய்யார். ஊழான் முடிவு தவறுபடின் உடனே உயிர் துறப்பர். இங்ஙனம் உயிர் துறந்த பெருமக்களைச் சேக்கிழார் தம் காவியத்துள் சிறப்பாகக் கூறினர். இதற்குச் சான்றாக,

> "நற்றி றம்புரி பழயைனூர்ச் சிறுத்தொண்டர் நவைவந்து
> உற்ற போதுதம் உயிரையும் வணிகனுக் கொருகால்
> சொற்ற மெய்ம்மையுந் தூக்கிஅச் சொல்லையே காக்கப்
> பெற்ற மேன்மையில் நிகழ்ந்தது பெருந்தொண்டை நாடு"[2]

எனச் சான்றோர் வாழ்ந்த தொண்டை நாட்டைப் பெருமையாகப் பாடினர். பழையனூர் வேளாளர்கள் எழுபது பேர் தம்மிடம் முறையிட்ட வணிகனை அவனுடைய மனைவி நீலி என்பாளோடு தங்குமாறு கூறினர். அவள் மனைவியல்லள்; தன்னைக் கொல்லவந்த பேய் எனக் கூறியபோதும் அவர்கள் மறுத்து, வணிகனுடைய உயிருக்குக் கேடு வருமாயின் தங்கள் எழுபது பேர்களின் உயிரையும்

1. திருக்குறள் - 70.
2. திருக்குறிப்புத்தொண்ட நாயனார் புராணம் - 3.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதற்கு ஈடாகத் தருவதாக வாக்குறுதி தந்தனர். அன்றிரவு இருவரும் ஒன்றாகத் தங்கியபொழுது வஞ்சனை நீலிப்பேய் வணிகனைக் கிழித்துக் கொன்று பழிதீர்த்துப் போய்விட்டது. இதனையறிந்த வேளாளர்கள் நாங்கள் வணிகனுக்குச் சொல்லிய சொல்லே தமது உயிரினும் சிறந்தது எனக்கொண்டு தீ வளர்த்து அதில் எழுபதுபேரும் மூழ்கித் திருவாலங்காட்டு அப்பரது திருவடியை அடைந்தனர். திருஞானசம்பந்தர் புராணத்திலும் இவ்வரலாற்றினைச் சேக்கிழார் குறிப்பிட்டார்.[1]

உமாபதி சிவாச்சாரியார், இந்நிகழ்ச்சியை,

"மாறுகொடு பழையனூர் நீலிசெய்த வஞ்சனையால்
வணிகன் உயிர்இழப்பத் தாங்கள்
கூறியசொல் பிழையாது துணிந்து செந்திக் குழியிலெழு
பதுபேரும் முழுகிக் கங்கை,
ஆறணிசெஞ் சடைத்திருவா லங்காட் டப்பர் அண்டமுற
நிமிர்ந்தாடும் அடியின் கீழ்மெய்ப்
பேறுபெறும் வேளாளர் பெருமை எம்மால் பிரித்தளவிட்
டிவளவெனப் பேசலாமோ"[2]

எனப் பாடியுள்ளார். மிகப் பழைய உண்மைச் சரித்திரமாகிய இதனை ஆளுடைய பிள்ளையார்,

"............ ....முனநட்பாய்
வஞ்சப்படுத் தொருத்தி வாணாள்கொள் ளும்வகைகேட்
டஞ்சும் பழையனூர்"[3]

என்று எடுத்துக் கூறியருளினர்.

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்களும் தீக்குளித்த இவ்வேளாளர் பெருமக்களைக் குறித்துப் பெருமையுடன் பாடியுள்ளார்.[4] பலர் பாராட்டிப் பேசினமையின் இவர்தம் பெருமை, குடிமை அளவிடற்பாலது.

1. திருஞானசம்பந்தர் புராணம் - 1010.
2. திருத்தொண்டர் புராண வரலாறு - 15.
3. திருஞானசம்பந்தர் தேவாரம்-திருவாலங்காட்டுப்பதிகம்-1.
4. சேக்கிழார் பிள்ளைத்தமிழ் - வாரானைப்பருவம் - 6: மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நின்ற சொல்லர்; நீடுபுகழ் வாய்ந்தவராகிய இத்தகைய சான்றோர் போன்றவர்களைத்தாம் வள்ளுவப் பெருந்தகை,

''ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்
காழி எனப்படு வார்'',[1]

என்றனர் போலும்.

> ''வேளாளர் பெருமக்கள் தீக்குளித்த குழி இப்போது பழைய ஊரில் ஒரு குளமாக உள்ளது. நீலிக்குளம் என வழங்குகின்றனர். அதன் கரையில் அந்த வேளாளர் எழுபதின்மர் திருவுருவங்களும் நீலியின் உருவமும் ஒரு கோயிலில் உள்ளன. கோயிலும் குளமும் அழிந்த நிலையில் உள்ளன. இன்றைக்கும் இம்மரபினர் இவ்வூரின்கண் வாழ்ந்து வருகின்றனர்.''[2]

அதிகன் என்பானோடு செய்த போரில் புகழ்ச்சோழரின் படை வீரர்கள் பகைவர்களின் கருந்தலைகளைக் கொணர்ந்து மன்னர் புகழ்ச்சோழர் முன்னால் இட்டனர். அக்கருந்தலைகளின் குவியலின் இடையே தலை ஒன்றில் புன்சடையைப் புகழ்ச்சோழர் கண்டனர். ''நீர்தாங்குஞ் சடைப்பெருமானின் தொண்டர் ஒருவரையல்லவா வீரர் கொன்றனர். அவர் கொல்லப்பட்டதற்கு நான்தான் காரணம். திருநீற்று நெறியினைப் பாதுகாத்து அரசாள்வது அழகாக இருக்கின்றது'' எனக்கூறி, கொன்ற பழியினைப் போக்க செந்தீ வளர்த்து மண்டுதழற் பிழம்பினிடைப் புகுந்து உயிர் போக்கினார்.[3] இதனை விளக்குமுகத்தான் அறிஞர் மு. அருணாசலம் அவர்கள், ''அவருடைய சிவபத்தியானது போரில் இறந்துபட்ட ஒரு வீரனுடைய சடைத்தலையைக் கண்டு அவருடைய உயிரைத் துறக்குமாறு செய்தது. நிராயுதபாணியைக் கொல்லக் கூடாது என்பது ஒரு யுத்த தருமம்'' என்று கூறிய கருத்து இங்குப் பொருந்தும்.[4]

---

1. திருக்குறள் - 989.
2. திருத்தொண்ட புராண உரை-2ஆம் பகுதி-பக்.1408; சி.கே. சுப்பிரமணிய முதலியார்.
3. புகழ்ச்சோழ நாயனார் புரானம்-38.
4. தமிழ் இலக்கிய வரலாறு-பன்னிரண்டாம் நூற்றாண்டு; பக். 293; - மு. அருணாசலம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இதை ஏனாதிநாத நாயனார் வரலாற்றிலும் காண்கின்றோம். ஏனாதிநாத நாயனார், கடையவன் அதிசூரனின் நெற்றியின்மேல் வெண்ணீறு கண்டு, ''இவர் அண்டர்பிரான் சீரடியார் ஆயினார்'' என்று அவனைக் கொல்லாமல், தன்னை அவன் கொல்லுமாறு அவனுடைய குறிப்பின்வழி நின்றார். இவர் நின்ற முறையினை,

''கைவா ளுடன்பலகை நீக்கக் கருதியது
செய்யார் ''நிராயுதரைக் கொன்றார் எனுந்தீமை
எய்தாமை வேண்டும் இவர்க்''கென் றிரும்பலகை
நெய்வா ளுடன்அடர்த்து நேர்வார்போல் நேர்நின்றார்''[1]

என்றார் ஆசிரியர். பகைவனைக் கொல்வது அறமன்று; தான் கொல்லப்படுவதே அறம் என எண்ணினார். போர்புரியும்பொழுது போர்புரிவதுபோல் நடித்தார். அக்காலை முன்னின்ற பாதகனும் தன் கருத்தே முற்றுவித்தான்.

மதுரைக்கு எழுந்தருளிய திருஞானசம்பந்தர்க்குச் சமணரால் தீங்கு விளையுமோ என அமைச்சர் குலச்சிறையாரும் அரசி மங்கையர்க்கரசியாரும் அஞ்சினர்.

''இற்றைநாள் ஈசன் அன்பர் தம்மைநாம் இறைஞ்சப் பெற்றோம்
மற்றினிச் சமணர் செய்யும் வஞ்சனை அறியோம்''

எனக் குலச்சிறையார் அஞ்சிச் சமணர்களின் வஞ்சனைத் தொழிலை எதிர்பார்த்துக் கூறினார்.[2] அதற்கு அரசியார்,

''ஞானசம் பந்தர் தம்பால் நன்மையல் லாது செய்யும்
ஊனம்வந் தடையில் யாமும் உயிர்துறந் தொழிவது''[3]

என்று துணிந்தார். சமணர்கள் சம்பந்தர்க்குத் தீங்கினைச் சிறிய அளவில் செய்யமாட்டார்கள். அவரைக் கொல்லுவதாகத்தான் அத்தீங்கு இருக்கும். கொல்லுகின்ற அளவுக்கு அவர்கள் கொடியவர்கள். சம்பந்தர் உயிருக்குத் தீங்கு எனில் அதற்கு, அழைத்தவர்

1. ஏனாதிநாத நாயனார் புராணம் - 39.
2. திருஞானசம்பந்தர் புராணம் - 695.
3. திருஞானசம்பந்தர் புராணம் - 696.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களாகிய தாம் தாம் காரணம்; அவரோடு தாமும் உயிர் துறந்து விடுவது என முடிவு செய்தனர்.

சான்றாண்மைக்கு ஆழி எனப்பட்ட இத்தகைய தகைசால் பண்புடையவர்கள் தமக்கு ஊறு என்றால் தாங்கிக் கொண்டனர்; தம்மால் மற்றவர்க்குத் தீங்கு எனில் அதைத் தாங்காது கேட்டவுடன் முன்னம் உயிர் துறக்க முனைந்தனர். இறப்பது அறம் என எண்ணினர். இத்தகைய சால்புடையோர்,

"மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்"[1]

என்ற குறள் கருத்துக்கேற்ப வாழ்ந்தார்கள்.

அறம் மீறினால் தண்டனை

அறத்தொடு நடந்து கொள்ளுகின்றவர்க்கு ஆக்கம் உண்டு; புகழும் உண்டு அதனை மீறி நடப்பவர்க்கு இவை இரண்டும் இல்லாமல் தண்டனை உண்டு. அறம் மீறினால் மன்னன் தண்டனை கொடுத்தது போன்று இறைவனும் தண்டனை கொடுத்துள்ளான். அரச தண்டனையிலிருந்து தப்பிய போதிலும் தெய்வத் தண்டனையினின்று எவரும் தப்ப முடியாது.

ஆலாலசுந்தரர் திருக்கயிலைப் பொழிலின்கண் பூக்கொய்த காலை கமலினி, அநிந்திதை என்ற இரு மாதரார் மீது மனம் போக்கினர்.[2] அப்பிழைக்குத் தண்டனையாகச் சுந்தரர்க்கு,

"ஆதி மூர்த்தி அவன்திறம் நோக்கியே
மாதர் மேல்மனம் வைத்தனை தென்புவி
மீது தோன்றிஅம் மெல்லிய லாருடன்
காதல் இன்பம் கலந்தணை வாய்"[3] என

இறைவன் ஆணையிட்டனன். அவ்வண்ணமே சுந்தரர் மண்ணுலகில் பிறந்து, வாழ்ந்து இறுதியில் கயிலை அடைந்தனர்.

---

1. திருக்குறள் - 969.
2. திருமலைச் சிறப்பு - 25.
3. திருமலைச் சிறப்பு - 27.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சுந்தரர் சங்லியாரைத் திருமணம் செய்து கொள்ளும் முன்பு அவர் வேண்டியபடி ஒற்றியூர்க் கண்ணுதலான் கோயிலினுள் இருந்த மகிழமரத்தைமுக்காலும் வலம் வந்து ''மேவாதிங் கியான் அகலேன்'' என்று மெய்ச்சபதம் செய்து கொடுத்தார்.[1] சங்கிலி யாரைச் சுந்தரர் பிரிந்து போகக்கூடாது என்பது இறைவன் ஏற்பாடு. காலங்கள் பல கழிந்தன. பொங்கு தமிழ்ப் பொதியமலைப் பிறந்து, பூஞ்சந்தனத்தின் கொங்கு அணைந்து குளிர்ச்சாரலிடை வளர்ந்த கொழுந்தென்றல் அங்கு அணைந்தபோது, திருவாரூர் அணி வீதி அழகரவர்க்கு எடுக்கின்ற வசந்த விழாவினைச் சுந்தரர் நினைந் தார். புற்றிடங்கொண்டாரை எண்ணி,

''பத்திமையும் அடிமை யையும்
கைவிடுவான் பாவியேன்
பொத்தினநோ யதுவிதனைப்
பொருளறிந்தேன் போய்த்தொழுவேன்
முத்தினை மாமணிதன்னை
வயிரத்தை மூர்க்கனேன்
எத்தனைநாட் பிரிந்திருக்கேன்
என்ஆரூர் இறைவனையே
வங்கமலி கடல்நஞ்சை
வானவர்கள் தாம்உய்ய
நுங்கிஅமு தவர்க்கருளி
நொய்யேனைப் பொருட்படுத்துச்
சங்கிலியோ டெனைப்புணர்த்த
தத்துவனைச் சழக்கனேன்
எங்குலக்கப் பிரிந்திருக்கேன்
என்ஆரூர் இறைவனையே''[2]

எனத் திருப்பதிகம் பாடியருளினார். விழாவில் பண்ணமரும் மொழிப்பரவையின் பாடல் ஆடல் நிகழும். இவை அங்கே நடை பெறுமாறு உள்ளத்தால் கண்டார். அதில் கலந்துகொள்ள முடி

1. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 260.
2. சுந்தரர் தேவாரம் - திருவாரூர்ப் பதிகம் - பக். 147, 150; காசிமடத்து வெளியீடு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வெடுத்தார். சங்கிலியாரைப் பிரிய மனந்துணிந்தார். ஒற்றியூரை விட்டு நீங்கினார். அங்ஙனம் நீங்கியபோது நடந்த நிகழ்ச்சியை,

''பின்னொருநாள் திருவாரூர் தனைப்பெருக நினைந்தருளி
உன்னஇனி யார்கோயில் புகுந்திறைஞ்சி ஒற்றிநகர்
தன்னைஅக லப்புக்கார் தாம்செய்த சபதத்தால்
முன்னடிகள் தோன்றாது கண்மறைய மூர்ச்சித்தார்''[1]

எனச் சேக்கிழார் செப்பினர். இறைவன் முன்னிலையில், செய்த சபதத்தினை மீறினமையின் அவ்விறைவனே கண்களைக் கெடுத்துத் தண்டனை கொடுத்து விட்டான். இறைவன் முன்னால் தவறு செய்தால் கண்ணைக் கெடுப்பான் என்று கூறும் வழக்கம் இந்நிகழ்ச்சியின் மூலம் தமிழ்நாட்டில் பரவியது போலும். கண்களின் பார்வை மறைந்தவுடன் செய்வதனை அறியாது திகைத்தருளி சுந்தரர் நெடிதுயிர்த்தார். மைவிரவு கண்ணார்பால் சூளுறவு மறுத்ததனால் இவ்வினை வந்தெய்தியதாம் என நினைத்து, எய்திய துயர்நீங்க எம்பெருமானை வேண்டி,

''கண்ணாளா: கச்சிஏ கம்பனே: கடையானேன்
எண்ணாத பிழைபொறுத்திங் கியான்காண எழிற்பவள
வண்ணா:கண் ணளித்தருளாய்''[2]

என வீழ்ந்து வணங்கினார். இறைவனுக்குக் கண் இருக்க, தனக்குக் கண் இல்லையே என்னும் பொருள்படக் ''கண்ணாளா:'' என விளித்துக் கூறினார். காஞ்சிபுரத்தில் இடக்கண்ணும்[3] திருவாரூரில் மற்றொரு கண்ணும் பெற்றார்.[4]

சுந்தரர், சேரமான் பெருமாள் நாயனார் அளித்த விலையுயர்ந்த பொன், நவமணிகள், ஒளிர்மணிப்பூண், துகில் வருக்கம், மணப்பொருட்கள் ஆகியவற்றை ஆட்கள் மூலம் ஏற்றிக் கொங்கு நாட்டுத் திருமுருகன் பூண்டி அயல் சென்ற போழ்தின்கண்,

---

1. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 274.
2. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 286.
3. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 287.
4. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 310.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இறைவன் தன் பூதங்களையெல்லாம் வேடர் வடிவினராக அனுப்பிப் பொருட்களையெல்லாம் கவர்ந்து கொண்டனன்.[1]

பொன் வேண்டும்பொழுதெல்லாம் தன்னிடத்தில் கேட்டுப் பெற்ற சுந்தரர் இப்பொழுதும் தன்னிடத்தில் கேட்டுப் பெறாமல் இன்னொருவர் கொடுக்க சுந்தரர் பெறுவதா? எனச் சினந்தார் இறைவர். அந்தப் பொருட்களையும் தாமே கொடுக்க வேண்டும் எனக் கவர்ந்தார். இதைச் சேக்கிழாரே,

''திருமுருகன் பூண்டிஅயற் செல்கின்ற போழ்தின்கண்,
பொருவிடையார் நம்பிக்குத் தாமேபொன்
கொடுப்பதலால்,
ஒருவர்கொடுப் பக்கொள்ள ஒண்ணாமைக் கதுவாங்கிப்
பெருகருளால் தாங்கொடுக்கப் பெறுவதற்கோ
அதுஅறியோம்''[2]

எனப் பொருள் கவர்ந்ததற்குக் காரணத்தை விளம்பினார். ஒருவர் ஒருவரிடத்தில் உறவு வைத்துப் பொருள் பெற்றுக் கொண்டிருக்கும் பொழுதே அவரை விட்டு விட்டு இன்னொருவரிடம் உறவு கொண்டு பொருள் பெற்றது அறமன்று என இறைவன் நினைத்துச் சுந்தரருக்குத் தண்டனை வழங்கினார் போலும். அப்பொருளைச் சுந்தரருக்குப் பின்பு தாமே வழங்கி மகிழ்ந்தனர்.[3] இதற்குப் பொருத்தமாக, ''நம்பிகளுக்கு வேண்டும்போதெல்லாம் தாமே பொன் கொடுத்தருளியுள்ளார்; மீளவும் வேண்டின் தரவுள்ளார். திருப்புகலூர்த் திருப்பாச்சிவாச்சிரமம், திருமுதுகுன்றம் என்ற தலங்களில் பொன் பெற்றுள்ளார்; ஆதலின் பிறர்பாற் பொன் பெறுதல் வேண்டப்படுவதன்று என்றதைக் காட்டும் பொருட்டு அப்பொருளைத் தாம் வாங்கித் தமதாக்கி மீளத் தாமே கொடுக்க — அவர் பெறுவதற்காகவோ— திருவுள்ளங் கொண்டருளியது''[4] என்று சி.கே. சுப்பிரமணிய முதலியார் விளக்கம் தந்தார்.

1. கழறிற்றறிவார் நாயனார் புராணம் - 167.
2. கழறிற்றறிவார் நாயனார் புராணம் - 165.
3. கழறிற்றறிவார் நாயனார் புராணம் - 171.
4. திருத்தொண்டர் புராண உரை - ஏழாம் பகுதி - பக். 157. - சி.கே. சுப்பிரமணிய முதலியார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிறருக்கு இழைத்த துன்பம் தமக்கே வரும்

மின்போல் மறையுஞ் சங்கிலியார் தம்மை, விதியால் கண்ணுற்ற சுந்தரர் அவரைத் திருமணம் செய்து கொள்ள இறைவனை நாடினார். அவரும் ''இம்பர் உலகில் யாவருக்கும் எய்த ஒண்ணா இருந்தவத்துக் கொம்பை உனக்குத் தருகின்றோம்; கொண்ட கவலை ஒழி'' என்றும் சுந்தரருக்குக் கூறினார்.[1] ஆனால் உடனே திருமணம் செய்து வைத்தாரில்லை. தன்னைப் பிரியாதிருக்க சுந்தரனைச் சபதம் செய்து கொடுக்குமாறு சங்கிலியைக் கேட்க வைத்தார். அச்சபதத்தினையும்.

> *''....... நீ அவளை மணம்புணர்தற்கு*
> *ஒன்றியுட னேநிகழ்வ தொருசபதம் அவள்முன்பு*
> *சென்றுகிடைத் திவ்விரவே செய்க''[2]*

என அருள் செய்தார். காலந்தாழ்த்திப் பகல் நேரத்திலும் சுந்தரரைச் சபதம் செய்ய வைத்திருக்கலாம். இறைவர் அங்ஙனம் செய்யாது அவ்விரவே சுந்தரரைச் சபதம் செய்ய வைத்தார். தம் விருப்பம் நிறைவேறின் சாலும் என்றிருந்த ஆரூரர் இறைவன் ஆட்டுவித்தவாறு ஆடினார்.

இரவுப்பொழுதிலேயே சபதம் செய்து தருமாறு கூறிச் சுந்தரர்க்கு வருத்தம் விளைவித்தது போன்றே, சுந்தரரும் அவ்விரவுப் பொழுதிலேயே பரவைபால் தூதாக இறைவனை அனுப்பினார். அப்பொழுது,

> *''நாயன் நீரே நான்உமக்கிங் கடியே னாகில் நீர்எனக்குத்*
> *தாயின் நல்ல தோழருமாம் தம்பி ரானா ரேயாகில்*
> *ஆய அறிவும் இழந்தழிவேன் அயர்வு நோக்கி அவ்வளவும்*
> *போய்இவ் விரவே பரவையுறு புலவி தீர்த்துத் தாரும்''[3]*

என இறைவனுக்கு ஆணையிட்டார்.

---

1. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 235.
2. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 245.
3. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 328.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சங்கிலியைப் பிரியாதிருக்க அவளிடம் சபதம் செய்து தரும் பொழுது இறைவன் மகிழ மரத்தின் கீழ் இருத்தல் வேண்டும் என்று சுந்தரர் இறைவனைக் கேட்க, அவரும் இதற்கு இசைந்தனர்.[1] பின்னர் சங்கிலியாரிடம் சுந்தரரை மகிழ மரத்தின் கீழ் சபதம் செய்து தரும்படி கேட்கச் சொல்லினன். இறைவன் கூறிய வண்ணம் சங்கிலியாரின் தோழியர் கேட்டனர். மறுத்தால் சங்கிலி மணத்திற்கு உடன்படாள் என அஞ்சி அவ்வாறே மூவாத திருமகிழை முக்காலும் வலம்வந்து சபதம் செய்து கொடுத்தனர்.[2]

இங்ஙனம் சுந்தரரை ஓரிடத்துச் சபதம் செய்ய வைக்காது அலைப்புக்கு ஆளாக்கியதனால்தான் இறைவனைத் தன்பால் ஊடல் கொண்ட பரவையிடம் அவள் உடன்படும்வரை இரவெல்லாம் தூதாகப் போய்வரும்படி திருமுனைப்பாடி வேந்தர் செய்வித்தார். இங்ஙனம் இரவெல்லாம் இறைவன் தூதாகச் சென்று உழன்றான் எனக் கேட்டுத்தான்.

> ''காரிகை தன்பாற் செல்லுங் காதலால் ஒருவன் ஏவப்
> பாரிடை நடந்து செய்ய பாததா மரைகள் நோவத்
> தேரணி வீதி யூடு செல்வது வருவ தாகி
> ஓரிர வெல்லாந் தூதுக்கு உழல்வராம் ஒருவர்''என்று[3]

ஏயர்கோன் கலிக்காம நாயனார் சுந்தரர்பால் வெகுண்டார்.

திருவொற்றியூரின்கண் இறைவன் சுந்தரருக்குத் துன்பம் விளைவித்தான். அத்தகைய துன்பம் திருவாரூரின்கண் சுந்தரராலேயே இறைவனுக்கு நேர்ந்தது.

இரண்டு கண்களும் இழந்த நிலையில் சுந்தரர் திருவொற்றியூர் நீங்கித் திருவாரூர் சென்ற வழியில் திருமுல்லைவாயில் எனுந் திருத்தலத்தையடுத்துத் திருவெண்பாக்கம் வந்தனர். இறைவன் கண்களைப் பறித்தான் என்னும் வெறுப்பில் இறைவனை ''இங்கிருந்தாயோ'' என்ன இறைவரும் இவரைப் பொருட் படுத்தாமல் ''உளோம் போகீர்'' என்றார். இந்நிகழ்ச்சியைப் பாடல் வாயிலாகச் சுந்தரர்,

---

1. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 328.
2. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 249.
3. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 385.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"மான்திகழுஞ் சங்கிலியைத் தந்துவரு பயன்களெல்லாம்
தோன்றஅருள் செய்தவித்தாய் என்றுரைக்க உலகமெலாம்
ஈன்றவனே வெண்கோயில் இங்கிருந்தா யோஎன்ன
ஊன்றுவதோர் கோல்அருளி "உளோம்போகீர்" என்றானே"[1].

எனப் பாடினர். "கண்களைப் பறித்த நீ மட்டும் இங்கிருக்கப் போகின்றனையோ? இருக்க மாட்டாய்" என்ற குறிப்பு புலப்படு கின்றது. அன்று மனம் வருந்திச் சுந்தரர் கூறினார். இன்று ஆயிரம் ஆண்டுகட்குப் பின் பூண்டி நீர்த்தேக்கம் அமைய அவ்வூரே மறைந்தது. கோயிலும் அங்கில்லை.

ஆண்டவன் தண்டனை தவறுபுரிந்த அடியார்களுக்கும், மனம் வருத்திய மற்றவர்க்கும் மட்டுமன்று. ஆண்டவனே அடியார்களை வருத்தினாலும் அவனுக்கும் தண்டனை உண்டு. அடியார்களும் இறைவனுக்குச் சமமானவர் என்பது தெளிவு.

திருவாலவாயில் திருஞானசம்பந்தர் தங்கியிருந்தபொழுது அவரைக் கொல்லுவதற்காக வஞ்சனை மனத்தோராகிய சமணர்கள், அவர் தங்கியிருந்த திருமடத்திற்குத் தீயிட்டனர்.[2] தனக்கு இட்ட அத்தீயை,

"வெய்ய தீங்கிது வேந்தன்மேற்(று) எனும்விதி முறையால்
"சைவர் வாழ்மடத் தமணர்கள் இட்டதீத் தழல்போய்ப்
பைய வேசென்று பாண்டியற் காக"[3]

எனப் பணித்தார் சம்பந்தர். சம்பந்தரைக் கொல்ல சமணர்கள் இட்ட தீ அவர்களைச் சார்ந்து நின்ற பாண்டியனுக்கே வெப்பு நோயாக வந்தது.[4]

சிரபுரப் பிள்ளையார்க்கும், அவரைப் பாண்டிய நாட்டுக்கு வரவழைத்த மங்கையர்க்கரசியார், குலச்சிறையார் ஆகியோர்க்கும்,

---

1. சுந்தரர் தேவாரம்-திருவெண்பாக்கம் பதிகம்; பக். 271 - காசிமடத்து வெளியீடு.
2. திருஞானசம்பந்தர் நாயனார் புராணம் - 700.
3. திருஞானசம்பந்தர் நாயனார் புராணம் - 704.
4. திருஞானசம்பந்தர் நாயனார் புராணம் - 706.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மற்றும் சிவத்தொண்டர்களுக்கும் துன்பம் இழைத்து மனத்தை நடுங்கச் செய்த சமண் கூட்டத்தினர் கழுமரத்தில் ஏறிய செய்தியினை,

> "நண்புடை ஞானம் உண்டார் மடத்துத்தீ நாடி
> எண்பெருங் குன்றத் தெண்ணா யிரவரும் ஏறி னார்கள்"[1]

என நவின்றார் சேக்கிழார். பிறருடைய மனத்தை நடுங்கச் செய்து துன்பமிழைத்த அமண் இருள், மேதினியைப் புனிதமாக்க வந்த வெண்ணீற்றின் விரிந்த சோதியில் மாய்ந்தது.[2]

சேக்கிழார் கழுமரத்தில் "எண்ணாயிரவரும் ஏறினார்கள்" எனப் புகன்றார். சமணர்கள் தாமே கழுவேறினார்களோ? அன்றி ஏற்றப் பட்டார்களோ? இதற்குச் சி. கே. சுப்பிரமணிய முதலியார், "புராணங்களுள் மாறுபாடு காணவுள்ளது. இரண்டும் அமையும் என்க. என்னை? அரசன் ஆணையிட்டவழி அதனை நிறைவேற்றும் சிறைச்சாலை அதிகாரி முதலிய தண்டத் தலைவர்கள் கொலையாளியைத் "தூக்கு மேடைக்குப் போ" என்றால் அவன் அதற்குட் பட்டுச் சென்று மேடை ஏறுகின்றான். அவன் ஏறினானா? அல்லது ஏற்றப் பட்டானா? என்று சிந்திக்கில் இரண்டும் உண்மைதானே என்பது புலப்படும். "மதத்தி னின்மான மிக்கார் தாங்களே வலியவேறி" என்று திருவிளையாடற் புராணமுடையார் "சமணரைக் கழுவேற்றிய படலம்" என்று பெயரிட்டமை காண்க" என விளக்கம் கூறினர்.[3] சமணர்கள் கண்ட கனவுக்குப் பின்,

> "விழுவொரு புகலு மின்றி மேதினி தன்னை விட்டு
> நிழலிலா மரங்க ளேறி நின்றிடக் கண்டோம்"[4].

எனச் சமணர்கள் கூறியபடி கழுமரத்தில் அவர்களே ஏறியதாகச் சேக்கிழார் பிறிதோர் இடத்திலும் குறிப்பிட்டார். மற்ற வாதங்களில் தோற்ற சமணர்கள் அடுத்த வாதத்திலும் தோற்றால் என்ன செய்வது என அமைச்சர் குலச்சிறையார் கேட்டதற்கு,

---

1. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 855.
2. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 858.
3. திருத்தொண்டர் புராண உரை-ஐந்தாம் பகுதி-பக்.1065-1066; - சி. கே. சுப்பிரமணிய முதலியார்.
4. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 640.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''தங்கள்வாய் சோர்ந்து தாமே ''தனிவாதில் அழிந்தோ மாகில்
வெங்கழு வேற்று வான்இவ் வேந்தனே''.[1]

என்று அவர்களே சொன்னார்கள். இந்த ஒப்பந்தத்தின்படி தோற்றதும் தாமே கழுவேறினர். வாதில் தோற்றதற்காகக் கழுவேறவில்லையாம். சம்பந்தர்க்கு இழைத்த தீங்கினுக்காகக் கழுவேறினராம். ''ஞானம் உண்டார் மடத்துத் தீ நாடி இட்ட'' என்றுதான் சேக்கிழாரும் குறிப்பிட்டனர்.

சமணரைக் கழுவேற்றிய செய்தியினைக் குலச்சிறை நாயனார் புராணத்திலும் தெய்வச் சேக்கிழார்,

''வாதில் தோற்ற அமணரை வன்கழுத்
தீது நீங்கிட ஏற்றுவித் தார்திறம்
யாது போற்றினேன்?''[2]

எனக்குறிப்பிட்டார். சேக்கிழாரே ''ஏறினார்'' ''ஏற்றுவித்தார்'' என்றனர்.

எனவே இரண்டும் ஒன்றேயாம்.

தண்டியடிகள் பிறவிக் குருடர். திருவாரூர்க் குளத்தை வெட்டுங்கால், சமணர் அதனைத் தடுத்து,

''சிந்தித் திந்த அறங்கேளாய்; செவியும் இழந்தாயோ?
அந்த னான உனக்கறிவும் இல்லை''[3]

என்று அவரை இகழ்ந்துரைத்தனர். மனம் வருந்திய நாயனார் இறைவனிடம் வேண்ட அவர் தண்டியடிகளுக்குத் தூயமலர்க் கண் களையும், இழுதை சமணர்களுக்குப் பார்வை இல்லாமையும் அருளிக் கொடுத்தார்.[4] அமணர்கள் அடிகளை இகழ்ந்துரைத்தது அவர்களுக்கே வந்தது. இதனை உணர்ந்த திருவள்ளுவரும்,

---

1. திருஞான சம்பந்த நாயனார் புராணம் - 789.
2. குலச்சிறை நாயனார் புராணம் - 11.
3. தண்டியடிகள் நாயனார் புராணம் - 8, 17.
4. தண்டியடிகள் நாயனார் புராணம் - 20.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

*''பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்''*[1]

என்றார்.

நன்மை செய்தால் நன்மை வந்தடையும்

தீமை புரிந்தால் தீமை வந்தடைவது போன்று நன்மை செய்தால் நன்மையே வந்தடையும். இதைக் கோச்செங்கண் சோழன் வரலாற்றால் அறியலாம். ''திருவானைக்காவலில் வெண்ணாவல் மரத்தின் கீழ் வீற்றிருந்த இறைவனை நாள்தோறும் வெள்ளானை ஒன்று பூம்புனலை முகந்தாட்டிக் கமழ்பூங் கொத்தினை அணிவித்து இறைஞ்சி வந்தது. சிலந்தி ஒன்று இறைவன் திருமுடிமேல் சருகு உதிராவண்ணமும் கதிரவன் வெப்பம் படாதவாறும் தன் வாய் நூலால் நெருங்கிய நூல்பந்தல் ஒன்றைக் கட்டியது. வழிபட வந்த யானை அது தூய்மையற்றது எனக் கருதி அதனை அழிக்க, சினம் கொண்ட சிலந்தி, யானைத் துதிக்கையினுள் சென்று கடித்தது. சிலந்தி கடித்ததாலும், சிலந்தியைக் கொல்ல துதிக்கையைத் தரையில் யானை மோதியதாலும் இரண்டும் இறந்தன. இறந்த சிலந்தி சிவபெருமானுக்குத் திருப்பணி செய்து வழிபட்டமையின், தொன்மைதரு சோழர்குலத்தரசனாஞ் சுபதேவன் என்பானுக்கும் அவனுடைய பெருந்தேவி கமலவதி என்பாளுக்கும் அருந்தவப் புதல்வனாக அவதரித்தனன். அவன்தான் கோச்செங்கண் சோழன். அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவன்.''[2]

காழ்வு இகழா நெறி

சுந்தரரைக் காதல் பிள்ளையாக எடுத்து வளர்த்த நாடுவாழ் அரசர் நரசிங்க முனையரையர் ஒவ்வொரு திருவாதிரை நாளிலும் மேன்மைநெறித் தொண்டர்களுக்குப் பசும்பொன் நூறு குறைபடாமல் அளித்து இன்னமுதும் படைத்து வந்தார்.[3] ஒரு திருவாதிரை நன்னாளில் நீறணியும் தொண்டர்க்கெல்லாம் விளங்கிய பொன்னிடும்பொழுதில் காமக்குறி கொண்ட ஒருவர் திருவெண்ணீ

---

1. திருக்குறள் - 319.
2. கோச்செங்கட்சோழ நாயனார் புராணம் - 2-10.
3. நரசிங்க முனையரையர் புராணம் - 4.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

றணிந்து ஆங்கு அணைந்தார்.[1] மருங்கிருந்த மற்றத் தொண்டர்கள் அவரை இகழ்ச்சியோடு பார்த்து அவரை அணுகாமல் அருவருத்து ஒதுங்கினர்.[2] இதனைக் கண்ணுற்ற நரசிங்க முனையரையர் செய்த செயலினைப் பற்றி,

"சிலம்இல ரேஎனினும் திருநீறு சேர்ந்தாரை
ஞாலமிகழ்ந் தருநரகம் நண்ணாமல் எண்ணுவார்
பாலணைந்தார் தமக்களித்த படிஇரட்டிப் பொன்கொடுத்து
மேலவரைத் தொழுதினிய மொழிவிளம்பி விடை
கொடுத்தார்"[3]

என்று சேக்கிழார் பாடினார். உடம்பில் ஊனம் ஏற்படுவது இயற்கை; இறைவன் படைப்பு. அக்குறையை இகழ்தல், படைத்த இறைவனையே இகழ்தலாகும். அவர்கட்கு முன்னுரிமை தந்து போற்ற வேண்டும். நரசிங்க முனையரையர் அவ்வாறுதான் செய்தார். திருவெண்ணீறு அணிந்ததனை மட்டும் கண்டு, அவர் ஒரு சிவத்தொண்டர் எனக் கொண்டார்.

கலிக்கம்ப நாயனார் அரனார், அன்பர் எல்லோருக்கும், விரும்பிய கறி நெய் தயிர் தீம்பால், தேனினும் இனிய கனிகள், கரும்புக் கட்டிகள் இவற்றோடு கூடிய திருவமுதினைப் படைத்து வேண்டிய நிதிகளையும் அளித்துவந்தார்.[4] இவ்வாறு தொன்மை முறையில் அளித்து வந்த நாளில் ஒருநாள் மனைவியார் தண்ணீர் கொடுக்க, கலிக்கம்பர் திருத்தொண்டர்களின் திருவடிகளையெல்லாம் தூய்மை செய்து வந்தார். முன்னாளில் அவர் இல்லத்தில் பணிபுரிந்து முனிந்து சென்ற, ஒருவன் அப்பொழுது அடியாருடன் அடியாராய் வந்திருந்தனன். அவருடைய திருவடிகளைப் பிடித்துக் கலிக்கம்பர் தூய்மை செய்ய முனைந்தபொழுது, தம்மிடம் இருந்த பணியாளனாகிய சிவத்தொண்டருக்கு நீர் வார்க்க மனைவியார் காலந்தாழ்த்தினர். காலந்தாழ்த்தியது குற்றம் எனக் கருதி அவருடைய கரத்தை வெட்டித் தாமே அவர்தாள் விளக்கினார்.[5]

---

1. நரசிங்க முனையரையர் புராணம் - 5.
2. நரசிங்க முனையரையர் புராணம் - 6.
3. நரசிங்க முனையரையர் புராணம் - 7.
4. கலிக்கம்ப நாயனார் புராணம் - 3.
5. கலிக்கம்ப நாயனார் புராணம் - 8.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முன்பு தம்மிடம் பணியாளனாய் இருந்தாலும், அப்பொழுது என்பும் அரவும் அணிந்தபிரானின் அடியாராகி வந்துள்ளாரை அடியாராகக் கொள்ள வேண்டுமே தவிர பணியாளனாகக் கருதக்கூடாது என்பது நாயனார் கொள்கை.

நிலையற்ற பொருட்கள்

இவ்வுலகின்கண் நிலைபேறுடைய பொருட்கள் இவை; நிலையாமை உடைய பொருட்கள் இவை எனவுள்ளன. இறைவனும், இறைவனுக்குச் செய்கின்ற திருத்தொண்டுமே நிலைபேறுடையவை; சிவத்தொண்டர்களுக்கு ஆற்றுகின்ற பணிகள் உறுதியானவை. சேக்கிழார் காப்பியத்தின் பிழிவாக இவற்றைத் தெரிவித்தனர். உறுதியற்ற, நிலையற்ற பொருட்களாகச் சிலவற்றைப் பகர்ந்தனர்.

செல்வம்

செல்வம் மாறிக்கொண்டே இருக்கும் தன்மைத்து. வெளிப் பார்வைக்குச் செல்வம் இருப்பதுபோல தோன்றும். ஆனால் செல்வம் இருக்காது. இதைச் சேக்கிழார்,

''மேவு செல்வங் களிறுண் விளங்கனி
யாவ தாகி யழியவும்''[1]

என்று நுவன்றார். விளங்கனிக்கு யானை நோய் என்ற ஒரு நோய் வரும். உள்ளே ஒன்றும் இராது. பார்வைக்குக் கனிபோல் இருக்கும். நோய் வந்ததைக் ''களிறுண் விளங்கனி'' என்று மொழிந்தார். இதைப் போன்றுதான் ஒருவனிடம் செல்வமும் இருக்கும். ஒருவனுடைய புறத்தோற்றத்தைக் கொண்டு பார்த்தால் செல்வம் இருப்பதுபோல் தோன்றும். ஆனால் அவனிடம் செல்வம் இராது. களிறுண் விளங்கனி போன்றாம். இக்கருத்தேபோன்று திருவள்ளுவரும்,

''அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்''[2]

என்றார்.

---

1. அரிவாட்டாய நாயனார் புராணம் - 8.
2. திருக்குறள் - 479.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அரசு, வாழ்வு

செல்வத்தைப் போன்றே அரச பதவியும், உலகின்கண் வாழ்கின்ற வாழ்க்கையும் நிலையல்ல. இதைச் சேக்கிழார் அரசராய் வாழ்ந்த கழறிற்றறிவார் நாயனார் வரலாற்றின் மூலம்,

''உலகின் இயல்பும் அரசியல்பும் உறுதியல்ல''[1]

என நவின்றார்,

பிறிதோரிடத்தில் சேக்கிழார் ''அரசாட்சி இன்னல்''[2] எனப் புகன்றார். சைவத் திருநெறியால் அரசு புரிந்த செங்கோலரர் ஐயடிகள் காடவர்கோன், அரசாட்சியை இன்னல் எனக்கருதி அதனை எழிற்குமரன் மேலிழிச்சி, நிலைத்த பொருளாகிய நன்மை நெறித் திருத்தொண்டில் ஈடுபட்டார்.[3] இங்ஙனம் நிலையற்றதும், இன்னல் தருவதுமாகிய அரசாட்சியை,

''அருமந்த அரசாட்சி அரிதோ? மற்றெளிதோ?''[4].

என்றுரைத்தார் சேக்கிழார்.

ஊழ்வினை

சேக்கிழார் ஊழ்வினையை நம்பினார். தம் காப்பியத்தில் ஊழ்வினையைப் பற்றி உரைத்தனர். தம்பிரான் அருள்,[5] நற்பெரும்பான்மை[6], பண்டை விதி[7] முன்பு[8] முன்னம்[9] தொடர்ந்த[10]

---

1. கழறிற்றறிவார் நாயனார் புராணம் - 8.
2. ஐயடிகள் காடவர்கோன் நாயனார் புராணம் - 3.
3. ஐயடிகள் காடவர்கோன் நாயனார் புராணம் - 3.
4. திருமலைச்சருக்கம்-திருநகரச் சிறப்பு-44.
5. தடுத்தாட்கொண்ட புராணம் - 4.
6. தடுத்தாட்கொண்ட புராணம் - 139.
7. தடுத்தாட்கொண்ட புராணம் - 142.
8. கண்ணப்ப நாயனார் புராணம் - 102.
9. திருநாவுக்கரசு நாயனார் புராணம் - 48.
10. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 55.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விதி[1] வினை[2] முன்னை வினை[3] தொடக்கு[4] முன்னைநல் வினை[5] என்பவற்றால் ஊழைப் பற்றிக் குறிப்பிட்டார். நாயன் மார்களுள் சிலருடைய வாழ்க்கையே ஊழ்வினையால் அமைந் துள்ளது என்று இயம்பினார்.

காவியத் தலைவனாகிய சுந்தரர்[6] இறைவன் ஆணையிட்ட வண்ணம் ஊழால் பிணிப்புண்டு மண்ணுலகின்கண் திருநாவலூரில் ஆதிசைவர் குலத்தினில் அவதரித்து நம்பியாரூரர் எனப் பெயர் கொண்டார்.[7] கமலினி செல்வத் திருவாரூரின்கண் உருத்திரக் கணிகைமாராம் பதியிலார் குலத்துள் பரவையாராகத் தோன்றினர்.[8] அநிந்திதை ஞாயிறு என்னும் ஊரின்கண் வேளாளர் குலத்தினில் சங்கிலியாராக அவதரித்தார்.[9] சுந்தரர் பண்டை விதி கடைக்கூட்ட இவ்விரு மகளிரையும் திருமணம் செய்து மண்ணுலகில் வாழ்ந்து இறுதியில் திருக்கயிலை சேர்ந்தார்.

தம்பி மருள்நீக்கியார் சைவத்தை விட்டுப் பரசமயமான சமணத் தைச் சார்ந்தனனே எனத் தமக்கையார் திலகவதியார் மிக்க கவலை கொண்டனர். திருவதிகை இறைவனிடத்திலே,

> "தவமென்று பாயிடுக்கித் தலைபறித்து நின்றுண்ணும்
> அவமொன்று நெறிவீழ்வான் விழாமே அருளும்"[10]

என வேண்டிக் கொண்டனர். இறைவன் அவருடைய கனவில் தோன்றி,

---

1. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 226.
2. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 275.
3. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 323.
4. வெள்ளானைச் சருக்கம் - 43.
5. வெள்ளானைச் சருக்கம் - 49.
6. திருமலைச் சிறப்பு - 27.
7. தடுத்தாட்கொண்ட புராணம் - 3.
8. தடுத்தாட்கொண்ட புராணம் - 132.
9. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 207.
10. திருநாவுக்கரசு நாயனார் புராணம் - 47.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"உன்னுடைய மனக்கவலை ஒழிநீ; உன்உடன் பிறந்தான்
முன்னமே முனியாகி எமைஅடையத் தவம்முயன்றான்
அன்னவனை இனிச்சூலை மடுத்தாள்வம்"[1]

என அருளினார்.

திருநாவுக்கரசு நாயனார் முன்னைப் பிறவியில் ஒரு முனிவராய் இருந்து சிவனை அடையத் தவம் செய்தனர். அதனில் ஒரு சிறிய பிழை நேர்ந்தது.[2] அதனால் இப்பிறவியிற் போந்தனர். அப் பிழையை அனுபவித்துக் கழிக்கும்வகையால் சமண சமயம் புக்குழன்றனர்; அதற்குத் தீர்வுதர இறைவன் அருளிய சூலை யினால் வருந்தினர். திருவருள் கூட்டுவிக்க அதன்மூலம் தமக்கை யாரை அடைந்து உண்மை உணர்ந்து இறைவரை அடையப் பெற்றனர். நாயனார் முன்பிறவியில் முனிவராகத் தவஞ்செய்தன ராதலின் இளமையிலேயே துறவு பூணும் நிலை கூடிற்று.[3]

முற்பிறவியில் இவருக்கு வாகீசர் என்பது பெயராம். இப் பிறவியில் இறைவனைப் பாடினர். அதன் தொடர்பாகத் திருநாவுக்கரசர் எனப் பெயரினை இறைவர் அவருக்கு வைத்தருளி னார்.[4] இவர்முற்பிறவியில் முனிவராய் இருந்து தவம் நிறைவு பெறாமை குறித்துத் திருநாவுக்கரசரே,

"நில்லாத நிணக்குரம்பைப் பிணக்க நீங்க
நிறைதவத்தை அடியேற்கு நிறைகாத் தென்றுஞ்
செல்லாத செந்நெறிக்கே செல்விப்பானைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே"[5]

எனப் பாடியுள்ளார். இதுவே முன்னைத் தவத்திற்கு அகச் சான்றாம்.

திண்ணனார் என்ற கண்ணப்பர்திருக்காளத்தி மலையை ஏறிச் செல்ல புக்கபொழுது முடிவில்லாத இன்பமாகிய அன்பை எடுத்துக்

1. திருநாவுக்கரசு நாயனார் புராணம் - 48.
2. திருநாவுக்கரசு நாயனார் புராணம் - 49.
3. திருத்தொண்டர் புராண உரை-3 ஆம் பகுதி - பக். 62.
4. திருநாவுக்கரசு நாயனார் புராணம் - 74.
5. அப்பர் தேவாரம் - திருச்செங்காட்டங்குடி பதிகம் - 8.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காட்ட, அதுவே பெருங்காதலாக மலர்ந்தது. வேடனாக இருக்கின்ற ஒருவனுக்கு மலைமீது அன்பு பொங்குவது என்னை? இது, ''முன்புசெய் தவத்தின் ஈட்டம்''[1] எனக் கழறினர் சேக்கிழார் பெருமான். இதற்குச் சி. கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள், ''முன்பு செய்த தவத்தினீட்டம் என்று பொதுப்படக் குறித்தாரன்றி, ஆசிரியர் அப்பிறப்பும் செய்ததவமும் இன்னவெனக் கூறினாரல்லர். முன்னைப் பிறவியில் அருச்சுனன் பாரதப்போர் வெல்லுவதற்குப் பாசுபதப்படை பெறும் பொருட்டு அரிய தவம் செய்தனன். பாசுபதத்தைப் பெற்றனன். முத்தி அடைவதற்கு அவனே வேடனாகப் பிறந்தனன்'' என்று விளக்கம் கூறினர்.[2] முன் அருச்சுனனாக இருந்து செய்த தவத்தின் ஈட்டமே வேடனாக இருந்த திண்ணனைக் கண்ணப்பராக ஆக்கியது எனுங் கருத்து நிலவுகின்றது.

திருஞானசம்பந்தரின் தந்தையார், குழந்தை சம்பந்தரைப் பிரிந்து நீராடச் சென்ற காலை அக்குழந்தை, தந்தை பிரிந்தமைக்கு அழுதது. தந்தை சிவபாதவிருதயரைப் பிரிகின்றோமே என்பதற்காகக் குழந்தை சம்பந்தர் அழவில்லையாம். முன்னைப் பிறவியிலிருந்து பிரிந்து வந்ததனை நினைந்து அழுதனராம். முன்னைப் பிறவி எதுவென்று குறிப்பிட்டுச் சேக்கிழார் கூறவில்லை. பொதுவாக,

> *''பண்டுதிரு வடிமறவாப் பான்மையோர் தமைப்பரமர்*
> *மண்டுதேவ மறைக்குலத்தோர் வழிபாட்டின் அளித்தருளத்*
> *தொண்டின்நிலை தரவருவார் தொடர்ந்தபிரி வுணர்*
> *வொருகால்*
> *கொண்டெழுலும் வெருக்கொண்டாற் போல் அழுவார்*
> *குறிப்பயலாய்''*[3]

''முறைபுரிந்த முன்னுணர்வு மூளஅழத் தொடங்கினார்''[4] என்றே மொழிந்தார். இவை திருஞானசம்பந்தரின் முன்னைப்

1. கண்ணப்ப நாயனார் புராணம் - 102.
2. திருத்தொண்டர் புராண உரை - தொகுதி - 2; பக் 944.
3. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 55.
4. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 61.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிறவிக்குச் சேக்கிழார் நுதலிய சான்றுகளாம். சிவபெருமானைத் தொடர்ந்து கொண்டிருந்து பின் பிரிந்த பிரிவு என்று உரையாசிரியர் உரை எழுதினர்.[1]

முன்னைப் பிறவியினின்று பிரிந்து வந்ததைச் சம்பந்தர் அவ்வப் பொழுது நினைத்துக் கொண்டார் என்பதைச் சேக்கிழார் மற்ற இடங்களிலும் குறிப்பிட்டுள்ளார்.[2] இதனைச் சேக்கிழார் மட்டும் கூறவில்லை. திருஞானசம்பந்தரே, தேவாரத்துள்

''துறக்குமா சொலப்படாய் துருத்தியாய் திருந்தடி
மறக்குமா றிலாதஎன்னை மையல்செய்திம் மண்ணின்மேல்
பிறக்குமாறு காட்டினாய் பிணிப்படும் உடம்புவிட்
டிறக்குமாறு காட்டினாய்க் கிழுக்குகின்ற தென்னையே''[3]

என்று பாடினர். சேக்கிழார் கூறிய சம்பந்தரின் முன்னைத் தொடர்புக்கு இஃதே அகச்சான்றாம்.

மேற்கூறிய காரணங்களால் திருஞானசம்பந்தர் முற்பிறவி யினின்று இப்பிறவிக்கு வந்துள்ளார் என்பது தெரிகின்றது.

அறம் வெல்லும்

நாள்தோறும் இறைவனுக்குச் சந்தனக்காப்பு அளித்து வந்த மூர்த்தி நாயனாரைச் சந்தனக்காப்பு அளிக்க விடாது தடுத்த கொடிய நெஞ்சுடை வஞ்சகன் வடுகக் கருநாட மன்னவன், அந்நாள் இரவிலேயே இறந்தொழிந்தான். இதனைச் சேக்கிழார்,

''அந்நாள்இர வின்கண் அமண்புகல் சார்ந்து வாழும்
மன்னாகிய போர்வடு கக்கரு நாடர் மன்னன்
தன்னாளும் முடிந்தது சங்கரன் சார்பி லோர்க்கு
மின்னாமென நீடிய மெய்ந்நிலை யாமை வெல்ல''[4]

---

1. திருத்தொண்டர் புராண உரை - நான்காம் பகுதி;பக்.61; - சி. கே. சுப்பிரமணிய முதலியார்.
2. திருஞானசம்பந்த நாயனார் புராணம்- 1244, 1245.
3. திருஞானசம்பந்தர் தேவாரம் - திருத்துருத்தி பதிகம்; பாடல் - 5
4. மூர்த்தி நாயனசர் புராணம்- 24.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எனக் கழறினர். மெய் என்ற யாக்கையின் கால அளவு, மின்னல் தோன்றி மறைகின்ற கால அளவுடையதாம். சிவச்சார்பு இல்லாதார் வாழ்நாள், இன்னும் குறைவுடையது. வடுகக் கருநாட மன்னன் சங்கரன் தாள் பற்றாதவன். சங்கரன் தாள் பற்றிய ஒருவரைத் துன்புறுத்தியவன். எனவே இறைவன் அவனுடைய உயிரை ஒருநாள் அளவிலேயே பறித்தான். மூர்த்தி நாயனாரையே அந்நாட்டிற்கு மன்னனாக ஆக்கி நாடாளும்படி செய்தனன். துன்புறுத்திய மன்னன் அழிந்தான்; துன்புறுத்தப்பெற்ற நாயனார் மன்னனானார்.[1] மறம் தோற்று அறம் வென்றது.

இத்தகைய அறக்கருத்துக்களைச் சேக்கிழார், தம்முடைய, அனுபவத்தினின்றும் அவர் கூறிய காவிய மாந்தர்களின் வாழ்க்கைப் பிழிவினின்றும் வழங்கினர். இங்கே கண்டன சில; காணாதன பல.

மக்கள் வாழ்க்கையினிடையே அறக்கோடு ஒன்றுள்ளது. அஃது இறைவன் அமைத்தது. அக்கோட்டிற்குள்ளே வாழ்கின்றவர் உயர்வு பெறுகின்றனர். கோட்டைத் தாண்டுகின்றவர் தண்டனை பெறுகின்றனர். இதைப் புராணத்துள் கண்டோம்; வாழ்க்கையில் காணுகின்றோம்.

அறம் முதலில் தோல்வியுறுவதாக இருந்தாலும் இறுதியில் அறமே வெல்லும். இதனையே பாரதியார்.

"தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்
தருமம் மறுபடி வெல்லும்''[2]

என்றார்.

*

1. மூர்த்தி நாயனார் புராணம் - 46.
2. பாஞ்சாலி சபதம் - பாரதியார் கவிதைகள்: பக் - 388.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பகுதி 7

யாப்பு முறை

✲

''எழுத்தசை சீர்தளை யடிதொடை தூக்கோ
டிழுக்கா நடைய தியாப்பெனப் படுமே''
— யாப்பருங்கல விருத்தி.
நூற்பா-1.

''இமிழ்கடல் வரைப்பி னெல்லையின் வழாஅத்
தமிழியல் வரைப்பிற் றாமினிது விளங்க
யாப்பிய றானே யாப்புற விரிப்பி
னெழுத்தசை சீர்தளை யடிதொடை தூக்கோ
டிழுக்கா மரபி னிவற்றொடு பிறவு
மொழுக்கல் வேண்டு முணர்ந்திசி னோரே''.
— பல்காயனார், யாப்பருங்கல விருத்தி,
பக். 18.

✲

''ஒலிநயத்தோடு கூடிய அசைவகைகளின்
பிணைப்பே யாப்பு''.
— பேராசிரியர் செயின்ட்ஸ்பரி
Advanced Studies in Tamil Prosody. P. 11.
(Dr. A. Chidambaranathan Chettiar.)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யாப்பு முறை

உரைநடை வேறு; செய்யுள் வேறு. உரைநடையில் சொற்கள், சொற்களின் வேகம், ஒலிநயம், சொற்களின் பிணைப்பு ஆகிய வற்றைப் பற்றிக் கவலை கொள்ளுவதில்லை, கருத்துத்தான் முக்கியம். செய்யுள் அங்ஙனம் இல்லை. பொருளோடு மற்றவையும் முக்கியம். செய்யப்படுவது, கட்டப்படுவது, யாக்கப்படுவது செய்யுளாகும். தொன்றுதொட்டு வருகின்ற ஒரு சீரான முறையில் குறிப்பிட்ட சில உறுப்புக்களினால் உரிய பண்புகளைக் கொண்டு செய்யுளை யாக்கின்றோம். இங்ஙனம் உறுப்புக்களால் செய்யுளை யாக்கின்ற முறைக்கு யாப்பு முறை என்று பெயர்.

''கவிதைக்கு ஒலிநயமே அடிப்படையாக உள்ளது. ஒலிகள் அளவாலும் தன்மையாலும் முயற்சியாலும் வேறுபட்டு ஒழுங்காக அமைந்து. வந்த அமைப்பே திரும்பத் திரும்ப வந்து செவிக்கு இனிமை பயப்பதே ஒலிநயமாகும்'' என்றார் ந. சுப்புரெட்டியார்.[1]

உணர்ச்சிக்கு வடிவமாக ஒலிநயமும், ஒலிநயத்திற்கு வடிவமாக உணர்ச்சியும் விளங்குவது கவிதைக் கலை. இத்தகைய ஒலிநயம் அமைந்த பாட்டின் அடியைச் சீர்கள் என்றும், அசைகள் என்றும், சீர்களின் பிணைப்பைத் தொடை என்றும் இன்னும் பலவிதமாகவும் பாகுபாடு செய்துள்ளனர். அவற்றை நினைவில் வைத்துக் கொள்ளவும் வாய்பாடுகள் அமைத்தனர். இவ்வாறு வரையறுத்த வாய்பாடுகளே யாப்பு முறை எனப்படும். இக்கருத்தினை ஒட்டி, ''ஒலிநயத்தோடு கூடிய அசைவகைகளின் பிணைப்பே யாப்பு'' என்று பேராசிரியர் செயின்ட்ஸ்பரி கூறிய கருத்தினை மேற்கோளாக டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார் தம் நூலுள் கையாண்டுள்ளார்.[2]

---

1. கவிதையனுபவம் - பக். 186; ந. சுப்புரெட்டியார்.
2. Advanced Studies in Tamil Prosody. Page-11 Dr. A. Chidambaranathan Chettiar.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செய்யுட்குரிய உறுப்புக்களாகத் தொல்காப்பியர் முப்பத்து நான்கு வகைகளைக் கூறினர்.[1] நான்கு வகைப் பாக்களை எடுத்துரைத்தார்.[2] அவையே ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலி என்பனவாம். இப்பெரும் பிரிவுகளோடு மருட்பா, பரிபாடல் ஆகிய இரண்டையும் சேர்த்தனர்.[3]

யாப்பு வளர்ச்சி

தொல்காப்பியர் காலத்திற்கு முன்னும், தொல்காப்பியர் காலத்திற்குப் பின்னும், சங்க காலம் வரை இத்தகைய பாடல்களே வழக்கில் இருந்தன. சான்றாக அப்பாடல்களும் உள. வேறு அமைப்புக் கொண்ட பாடல்கள் தோன்றவில்லை. கி.பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்து பதினொன்றாம் நூற்றாண்டு வரை ஆகிய காலத்தின் இடையில் சைவ நாயன்மார், வைணவ ஆழ்வார் ஆகியவர்களின் காலத்திலேதான் வேறு வகையான பாவினங்கள் தோன்றின. ''சிலப்பதிகார காலத்திலேயே இத்தகைய பாவினங்களின் பிறப்பைக் காண முடிகின்றது'' என்றனர் அறிஞர் பெருமக்கள்.[4] ''இவற்றின் அமைப்புக்கேற்ப காக்கைபாடினியார், அவிநயனார், முதலிய ஆசிரியர்களும் யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை ஆசிரியர்களும் இலக்கணம் வகுத்தனர்''[5] என்றார் டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார். தாழிசை, துறை, விருத்தம் ஆகியவையே இப்பாவினங்கள்.

பழைய பாக்களாகிய வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா வஞ்சிப்பா ஆகியவற்றுள் கலிப்பா ஓசைநயம் மிக்கது. ஒரு காலத்தில் கலிப்பாட்டும், பரிபாடலும் மிகுந்த செல்வாக்குடன் இருந்தன என்பதைத் தொல்காப்பியரே ஒத்துக் கொண்டுள்ளார்.[6] இரண்டும்

---

1. தொல்காப்பியம் - செய்யுளியல் - நூற்பா : 1.
2. தொல்காப்பியம் - செய்யுளியல் - நூற்பா : 105.
3. தொல்காப்பியம் - செய்யுளியல் - நூற்பா : 119, 120.

4அ. Advanced Studies in Tamil Prosody. Page - 150.
Dr. A. Chidambaranathan Chettiar.

ஆ. தமிழ் வரலாறு - பக். 29; கே. சீனிவாச பிள்ளை.

5. Advanced Studies in Tamil Prosody. Page. - 129.
Dr. A. Chidambaranathan Chettiar.

6. தொல் - பொருள் - அகத்திணை - நூற்பா : 59.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உணர்ச்சிக்கேற்ற ஓசைகளை அமைக்க வல்லவை. வெண்பாவும், ஆசிரியப்பாவும் நுண்ணிய ஒலி வேறுபாடுகள் கொண்டமையின், புலவர்கள் அவற்றை விரும்பவில்லை. தூங்கல் ஓசையைக் கொண்ட வஞ்சிப்பாவும் செல்வாக்குப் பெறவில்லை.

ஒரு காலத்தில் செல்வாக்கிழந்த ஆசிரியப்பாவும், வெண்பாவும் பின்னொரு காலத்தில் செல்வாக்குப் பெற்றுப் புலவர் நாவில் புகுந்து வெளிவந்தன. சங்க இலக்கியத்துள் ஆசிரியப்பாவின் ஏற்றத்தினைக் காணலாம். ஆசிரியப்பாவால் பாடப்பெற்ற சிலப்பதிகாரத்துள் அங்கொன்றும் இங்கொன்றுமாக வெண்பா அமைப்பினைக் காணலாம். நாளடைவில் இவையும் சிறப்பினை இழந்தன. இவை ஏன் சிறப்பினை இழந்தன என்பதற்கு ''இவற்றை மட்டுமே கொண்டு காவியங்களும் தனிப்பாட்டுக்களும் பாடியவர்கள், உணர்ச்சிகளுக்கு ஏற்றவாறு பாட்டின் ஓசைகளை வேறுபடுத்திக் காட்டுவதில் பெரிதும் வெற்றி பெறவில்லை'' என்று டாக்டர் மு.வரதராசனார் காரணம் காட்டினர். ந.சுப்புரெட்டியாரும் இதே கருத்தைக் கூறினர்.[1] அப்பாக்களின் யாப்பு முறைகளும் அதற்குப் போதுமானவையாக இல்லை. அகவல் யாப்பு முறையில் சினம், மகிழ்ச்சி போன்ற உணர்ச்சிகளைச் சரியான முறையில் புலப்படுத்த முடியவில்லை.

பின்னர் தோன்றிய தாழிசை, துறை, விருத்த யாப்பு அமைப்புக்களில்தாம் புலவர்கள் தாம் விரும்பிய பல்வேறு உணர்ச்சிகளை ஒலிநயத்தோடு காட்ட முடிந்தது. அவையும் இடம் தந்தன. பெரிதும் செல்வாக்குப் பெற ஆரம்பித்தன. நாயன்மார்களும், ஆழ்வார்களும் இவ்விருத்த வகைப் பாக்களையே மேற்கொண்டு பத்திப் பாடல்களைப் பாடினர். விருத்த யாப்பில் முதன் முதல் அமைந்த சீவக சிந்தாமணி எனும் பெருங்காவியம் மக்களிடையே பெரிதும் செல்வாக்குப் பெற்றது. இவ்விருத்த அமைப்பை மேற்கொண்டு வெற்றி பெற்ற கம்பனும்,

''விருத்தமெனும் ஒண்பாவிற்கு உயர்கம்பன்''

எனப் புகழ் பெற்றான்.

---

1. இலக்கியத் திறன் - பக். 204; டாக்டர் மு.வரதராசனார். கவிதையனுபவம் - பக். 198; ந. சுப்புரெட்டியார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சேக்கிழார் கையாண்ட யாப்பு முறை

சேக்கிழார் பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவராதலின் அக்காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த விருத்த யாப்பு வகையினையே சேக்கிழார் தம் காவியத்துள் பயன்படுத்தினார். இவர் மட்டுமின்றி இவருடைய நூற்றாண்டைச் சார்ந்த கம்பர், ஒட்டக்கூத்தர் ஆகியோரும் இவ்விருத்தப்பா அமைப்பினையே தம் நூலுள் கையாண்டு வெற்றி பெற்றனர். தேவாரப் பாடல்களின் கருத்துக்களை ஒட்டியே சேக்கிழார் பெரியபுராணம் பாடினமையின், அத்தேவாரப் பாடல்களின் யாப்பு முறையினையே இவரும் கையாண்டார்.

ஒருவருடைய வரலாறு அல்லாது அறுபத்து மூன்று நாயன்மார், ஒன்பது தொகையடியாரைக் கொண்ட, பரந்துபட்ட வரலாற்றினைக் கூறுவதற்குப் பலவிதங்களில் இடங்கொடுக்கும் விருத்த யாப்பு வகையே அவருக்குப் பெரிதும் துணை செய்தது; வெற்றியும் பெற்றார்.

பெரியபுராணத்துள் வந்துள்ள மொத்த பாடல்கள் 4286. இவை அத்தனையும் விருத்தமே.

பெரியபுராணத்துள் வந்துள்ள பாடல்களின் வகைதொகை விவரங்கள்

	பாவகை	மொத்த எண்
1.	அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்	1792
2.	எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்	76
3.	எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்	280
4.	தரவுகொச்சகக் கலிப்பா	1219
5.	கலித்துறை	545
6.	கலிவிருத்தம்	368
7.	வஞ்சி விருத்தம்	6
	ஆக மொத்த விருத்த பாடல்கள்	4286

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆசிரிய விருத்தம்: கழிநெடிலடி நான்காய்த் தம்முள் அளவொத்து முடியின், அஃது ஆசிரிய விருத்தமெனப்படும்.[1]

(1) அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தங்கள்

வரும் இடங்கள்	பாடல் எண்கள்
பாயிரம்	10வது பாடல்
திருநாட்டுச் சிறப்பு	21 முதல் 35 வரை
திருநகரச் சிறப்பு	17 முதல் 33 வரை
தடுத்தாட்கொண்ட புராணம்	1 முதல் 27 வரை
தடுத்தாட்கொண்ட புராணம்	40 முதல் 73 வரை
தடுத்தாட்கொண்ட புராணம்	124 முதல் 139 வரை
தடுத்தாட்கொண்ட புராணம்	169 முதல் 174 வரை
தடுத்தாட்கொண்ட புராணம்	183 முதல் 190 வரை
தடுத்தரட்கொண்ட புராணம்	195 முதல் 198 வரை
தில்லைவாழந்தணர் புராணம்	1 முதல் 10 வரை
திருநீலகண்ட நாயனார் புராணம்	1 முதல் 10 வரை
திருநீலகண்ட நாயவரர் புராணம்	19 முதல் 28 வரை
திருநீலகண்ட நரயனரர் புராணம்	35 முதல் 44 வரை
இயற்பகை நாயனார் புரரணம்	11 முதல் 36 வரை
இளையான்குடிமாற நரயனார் புராணம்	19 முதல் 27 வரை
மெய்ப்பொருள் நாயனார் புராணம் (முழுவதும்)	1 முதல் 24 வரை
விறன்மிண்ட நாயனார் புராணம் (முழுவதும்)	1 முதல் 11 வரை
அமர்நீதி நாயனார் புராணம் (சுந்தரர் துதி மட்டும்)	49 ஆம் பாடல்
எறிபத்த நாயனார் புராணம்	1 முதல் 15 வரை
எறிபத்த நாயனார் புராணம்	20 முதல் 57 வரை
ஏனாதிநாத நாயனார் புராணம்	15 முதல் 24 வரை
கண்ணப்ப நாயனார் புரானம்	1 முதல் 42 வரை
கண்ணப்ப நரயனரர் புரரணம்	92 முதல் 133 வரை
கண்ணப்ப நாயனார் புராணம்	166 முதல் 186 வரை

1. யாப்பருங்கலம் - நூற்பா: 77.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வரும் இடங்கள்	பாடல் எண்கள்
குங்கிலியக்கலய நாயனார் புராணம் (முழுவதும்)	1 முதல் 35 வரை
மானக்கஞ்சாற நாயனார் புராணம்	37 ஆம் பாடல்
அரிவாட்ட நாயனார் புராணம்	11 முதல் 23 வரை
ஆனாய நாயனார் புராணம்	19 முதல் 42 வரை
மூர்த்தி நாயனார் புராணம்	29 முதல் 30 வரை
முருக நாயனார் புராணம் (முழுவதும்)	1 முதல் 14 வரை
சண்டேசுர நாயனார் புராணம் (முழுவதும்)	1 முதல் 60 வரை
திருநாவுக்கரசு நாயனார் புராணம்	70 முதல் 78 வரை
திருநாவுக்கரசு நாயனார் புராணம்	115 முதல் 125 வரை
திருநாவுக்கரசு நாயனார் புராணம்	169 முதல் 184 வரை
திருநாவுக்கரசு நாயனார் புராணம்	193 முதல் 194 வரை
திருநாவுக்கரசு நாயனார் புராணம்	224 முதல் 234 வரை
திருநாவுக்கரசு நாயனார் புராணம்	250 முதல் 323 வரை
திருநாவுக்கரசு நாயனார் புராணம்	384 முதல் 390 வரை
பெருமிழலைக் குறும்ப நாயனார் புராணம் (முழுவதும்)	1 முதல் 11 வரை
காரைக்காலம்மையார் புராணம்	31 முதல் 63 வரை
காரைக்காலம்மையார் புராணம்	66 மட்டும்
அப்பூதியடிகள் நாயனார் புராணம்	1 முதல் 3 வரை
அப்பூதியடிகள் நாயனார் புராணம்	22 முதல் 45 வரை
நமிநந்தியடிகள் நாயனார் புராணம் (முழுவதும்)	1 முதல் 33 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	94 முதல் 130 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	145 முதல் 161 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	174 முதல் 184 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	268 முதல் 317 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	343 முதல் 353 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	443 முதல் 465 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	467 முதல் 472 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	518 முதல் 521 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	525 முதல் 538 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	583 முதல் 613 வரை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வரும் இடங்கள்	பாடல் எண்கள்
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	631 முதல் 647 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	689 முதல் 697 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	717 முதல் 727 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	734 மட்டும்
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	736 முதல் 753 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	758 முதல் 772 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	791 முதல் 819 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	843 மட்டும்
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	846 முதல் 872 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	952 முதல் 985 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	1092 முதல் 1109 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	1199 முதல் 1249 வரை
ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்	16 முதல் 19 வரை
ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்	32 முதல் 80 வரை
ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்	93 முதல் 95 வரை
ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்	100 முதல் 116 வரை
ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்	122 மட்டும்
ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்	182 முதல் 242 வரை
ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்	309 முதல் 367 வரை
ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்	375 முதல் 409 வரை
தண்டியடிகள் புராணம் (முழுவதும்)	1 முதல் 26 வரை
மூர்க்க நாயனார் புராணம்	1 முதல் 7 வரை
சோமாசிமாற நாயனார் புராணம் (சுந்தரர் துதி மட்டும்)	6 ஆம் பாடல்
சாக்கிய நாயனார் புராணம்	7 முதல் 18 வரை
சிறப்புலி நாயனார் புராணம் (முழுவதும்)	1 முதல் 6 வரை
சிறுத்தொண்ட நாயனார் புராணம்	42 முதல் 88 வரை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வரும் இடங்கள்	பாடல் எண்கள்
கழறிற்றறிவார் நாயனார் புராணம்	1 முதல் 90 வரை
கழறிற்றறிவார் நாயனார் புராணம்	127 முதல் 129 வரை
கழறிற்றறிவார் நாயனார் புராணம்	132 முதல் 154 வரை
கணநாத நாயனார் புராணம் (முழுவதும்)	1 முதல் 7 வரை
கூற்றுவ நாயனார் புராணம் (முழுவதும்)	1 முதல் 9 வரை
கலிக்கம்ப நாயனார் புராணம் (முழுவதும்)	1 முதல் 10 வரை
முனையடுவார் நாயனார் புராணம் (முழுவதும்)	1 முதல் 7 வரை
கழற்சிங்க நாயனார் புராணம் (முழுவதும்)	1 முதல் 13 வரை
செருத்துணை நாயனார் புராணம் (முழுவதும்)	1 முதல் 7 வரை
பூசலார் நாயனார் புராணம் (முழுவதும்)	1 முதல் 18 வரை
நேச நாயனார் புராணம் (முழுவதும்)	1 முதல் 5 வரை
கோச்செங்கட்சோழ நாயனார் புராணம்	1 முதல் 6 வரை
கோச்செங்கட்சோழ நாயனார் புராணம்	9 முதல் 13 வரை
கோச்செங்கட்சோழ நாயனார் புராணம்	18 ஆம் பாடல்
திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் புராணம் (முழுவதும்)	1 முதல் 12 வரை
சடைய நாயனார் புராணம் (முழுவதும்)	1 மட்டும்
இசைஞானியார் நாயனார் புராணம் (முழுவதும்)	1 மட்டும்
வெள்ளானைச் சருக்கம்	1 முதல் 52 வரை

(2) எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தங்கள்

வரும் இடங்கள்	பாடல் எண்கள்
திருமலைச் சிறப்பு	8 முதல் 12 வரை
தடுத்தாட்கொண்ட புராணம்	104 முதல் 110 வரை
தடுத்தாட்கொண்ட புராணம்	123 மட்டும்
இளையான்குடிமாற நாயனார் புராணம்	1 முதல் 8 வரை
திருநாவுக்கரசு நாயனார் புராணம்	157 முதல் 168 வரை
திருநாவுக்கரசு நாயனார் புராணம்	348 முதல் 360 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	522 முதல் 524 வரை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வரும் இடங்கள்	பாடல் எண்கள்
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	654 முதல் 664 வரை
ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்	81 முதல் 92 வரை
ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்	96 முதல் 99 வரை

(3) எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தங்கள்

தடுத்தாட்கொண்ட புராணம்	92 முதல் 103 வரை
தடுத்தாட்கொண்ட புராணம்	175 முதல் 180 வரை
இயற்பகை நாயனார் புராணம்	1 முதல் 10 வரை
கண்ணப்ப நாயனார் புராணம்	43 முதல் 56 வரை
திருக்குறிப்புத்தொண்ட நாயனார் புராணம்	52 முதல் 103 வரை
திருநாவுக்கரசு நாயனார் புராணம்	185 முதல் 192 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	256 முதல் 267 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	318 முதல் 323 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	466 மட்டும்
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	473 முதல் 500 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	550 முதல் 582 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	614 முதல் 619 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	705 மட்டும்
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	715 முதல் 716 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	884 முதல் 926 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	1008 முதல் 1032 வரை
ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்	117 முதல் 121 வரை
ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்	276 முதல் 279 வரை
முப்போதும் திருமேனி தீண்டுவார் நாயனார் புராணம்	3 மட்டும்
முழுநீறு பூசிய முனிவர் நாயனார் புராணம் (முழுவதும்)	1 முதல் 6 வரை
அப்பாலும் அடிச்சார்ந்தார் நாயனார் புராணம் (முழுவதும்)	1 முதல் 2 வரை
மங்கையர்க்கரசியார் புராணம் (முழுவதும்)	1 முதல் 3 வரை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

(4) தரவு கொச்சகக் கலிப்பா

ஒரு தரவு வந்தும், இரண்டு தரவு வந்தும், தாழிசை சில வந்தும், தாழிசை பல வந்தும், தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும் ஆறுறுப்புந் தம்முள் மயங்கியும் வெண்பாவினோடும், ஆசிரியத்தினோடும் மயங்கியும் வருவனவெல்லாம் கொச்சகக் கலிப்பா என்று பெயரிட்டு வழங்கப்படும்.

ஒரு தரவு வந்தால் தரவு கொச்சகக் கலிப்பா என்று பெயர்.[1]

வரும் இடங்கள்	பாடல் எண்கள்
திருநாட்டுச் சிறப்பு	13 முதல் 17 வரை
திருநகரச் சிறப்பு	34 முதல் 50 வரை
தடுத்தாட்கொண்ட புராணம்	74 முதல் 91 வரை
தடுத்தாட்கொண்ட புராணம்	111 முதல் 122 வரை
தடுத்தாட்கொண்ட புராணம்	140 முதல் 151 வரை
தடுத்தாட்கொண்ட புராணம்	181 முதல் 182 வரை
தடுத்தாட்கொண்ட புராணம்	199 முதல் 203 வரை
திருநீலகண்ட நாயனார் புராணம்	29 முதல் 34 வரை
கண்ணப்ப நாயனார் புராணம்	68 முதல் 91 வரை
கண்ணப்ப நாயனார் புராணம்	134 முதல 165 வரை
மானக்கஞ்சாற நாயனார் புராணம்	1 முதல் 36 வரை
ஆனாய நாயனார் புராணம்	13 முதல் 18 வரை
ஆனாய நாயனார் புராணம்	20 முதல் 41 வரை
திருநாளைப்போவார் நாயனார் புராணம் (முழுவதும்)	1 முதல் 37 வரை
திருக்குறிப்புத்தொண்ட நாயனார் புராணம்	111 முதல் 128 வரை
திருநாவுக்கரசு நாயனார் புராணம்	1 முதல் 40 வரை
திருநாவுக்கரசு நாயனார் புராணம்	44 முதல் 69 வரை
திருநாவுக்கரசு நாயனார் புராணம்	86 முதல் 114 வரை
திருநாவுக்கரசு நாயனார் புராணம்	144 முதல் 156 வரை
திருநாவுக்கரசு நாயனார் புராணம்	195 முதல் 218 வரை
திருநாவுக்கரசு நாயனார் புராணம்	242 முதல் 249 வரை
திருநாவுக்கரசு நாயனார் புராணம்	324 முதல் 347 வரை

1. யாப்பருங்கலக்காரிகை - பக். 109; கழகப் பதிப்பு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வரும் இடங்கள்	பாடல் எண்கள்
திருநாவுக்கரசு நாயனார் புராணம்	391 முதல் 429 வரை
காரைக்காலம்மையார் புராணம்	1 முதல் 30 வரை
காரைக்காலம்மையார் புராணம்	64 முதல் 65 வரை
அப்பூதியடிகள் நாயனார் புராணம்	4 முதல் 21 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	1 முதல் 26 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	44 முதல் 81 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	131 முதல் 144 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	324 முதல் 334 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	361 முதல் 369 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	386 முதல் 416 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	620 முதல் 630 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	648 முதல் 653 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	728 முதல் 733 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	735 ஆம் பாடல்
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	754 முதல் 757 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	773 முதல் 778 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	873 முதல் 883 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	927 முதல் 940 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	986 முதல் 1007 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	1118 முதல் 1181 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	1250 முதல் 1256 வரை
ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்	9 முதல் 15 வரை
ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்	20 முதல் 31 வரை
ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்	123 முதல் 181 வரை
ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்	243 முதல் 275 வரை
ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்	280 முதல் 308 வரை
திருமூல நாயனார் புராணம் (முழுவதும்)	1 முதல் 28 வரை
மூர்க்க நாயனார் புராணம்	8 முதல் 12 வரை
சாக்கிய நாயனார் புராணம்	1 முதல் 6 வரை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வரும் இடங்கள்	பாடல் எண்கள்
சாக்கிய நாயனார் புராணம்	8 முதல் 17 வரை
சிறுத்தொண்ட நாயனார் புராணம்	1 முதல் 41 வரை
கழறிற்றறிவார் நாயனார் புராணம்	91 முதல் 126 வரை
கழறிற்றறிவார் நாயனார் புராணம்	130 முதல் 131 வரை
கழறிற்றறிவார் நாயனார் புராணம்	155 முதல் 175 வரை
பொய்யடிமையில்லாத புலவர் புராணம் (முழுவதும்)	1 முதல் 3 வரை
புகழ்ச்சோழ நாயனார் புராணம்	1 முதல் 19 வரை
புகழ்ச்சோழ நாயனார் புராணம்	34 முதல் 41 வரை
நரசிங்க முனையரையர் நாயனார் புராணம் (முழுவதும்)	1 முதல் 9 வரை
கலிய நாயனார் புராணம் (முழுவதும்)	1 முதல் 17 வரை
ஐயடிகள் காடவர்கோன் நாயனார் புராணம் (முழுவதும்)	1 முதல் 9 வரை
கணம்புல்ல நாயனார் புராணம் (முழுவதும்)	1 முதல் 9 வரை
காரியார் நாயனார் புராணம் (முழுவதும்)	1 முதல் 5 வரை
நின்றசீர் நெடுமாற நாயனார் புராணம் (முழுவதும்)	1 முதல் 10 வரை
இடங்கழி நாயனார் புராணம் (முழுவதும்)	1 முதல் 11 வரை
புகழ்த்துணை நாயனார் புராணம் (முழுவதும்)	1 முதல் 7 வரை
கோட்புலி நாயனார் புராணம் (முழுவதும்)	1 முதல் 13 வரை
பத்தராய்ப்பணிவார் நாயனார் புராணம் (முழுவதும்)	1 முதல் 8 வரை
பரமனையே பாடுவார் நாயனார் புராணம் (முழுவதும்)	1 முதல் 2 வரை
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார் நாயனார் புராணம் (முழுவதும்)	1 முதல் மட்டும்
திருவாரூர்ப் பிறந்தார் நாயனார் புராணம் (முழுவதும்)	1 முதல் 2 வரை
முப்போதும் திருமேனி தீண்டுவார் நாயனார் புராணம்	1 முதல் 2 வரை
கோச்செங்கட்சோழ நாயனார் புராணம்	7 முதல் 8 வரை
கோச்செங்கட்சோழ நாயனார் புராணம்	14 முதல் 17 வரை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

(5) கலித்துறை

"நெடிலடி நான்காய் நிகழ்வது கலித்துறை"[1].

ஐஞ்சீரடி நான்காய் நடப்பது கலித்துறை எனப்படும்.

வரும் இடங்கள்	பாடல் எண்கள்
தடுத்தாட்கொண்ட புராணம்	38 முதல் 39 வரை
அமர்நீதி நாயனார் புராணம் (சுந்தரர் துதி நீங்கலாக எஞ்சிய முழுவதும்)	1 முதல் 48 வரை
கண்ணப்ப நாயனார் புராணம்	57 முதல் 67 வரை
ஆனாய நாயனார் புராணம்	1 முதல் 12 வரை
மூர்த்தி நாயனார் புராணம்	1 முதல் 28 வரை
மூர்த்தி நாயனார் புராணம்	31 முதல் 49 வரை
உருத்திர பசுபதி நாயனார் புராணம் (முழுவதும்)	1 முதல் 10 வரை
திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணம்	1 முதல் 51 வரை
திருநாவுக்கரசு நாயனார் புராணம்	79 முதல் 85 வரை
திருநாவுக்கரசு நாயனார் புரர்ணம்	134 முதல் 143 வரை
திருநாவுக்கரசு நாயனார் புராணம்	219 முதல் 223 வரை
திருநாவுக்கரசு நாயனார் புராணம்	235 முதல் 241 வரை
திருநாவுக்கரசு நாயனார் புராணம்	361 முதல் 383 வரை
திருநீலநக்க நாயனார் புராணம் (முழுவதும்)	1 முதல் 38 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	82 முதல் 93 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	217 முதல் 235 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	335 முதல் 342 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	370 முதல் 385 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	417 முதல் 442 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	501 முதல் 517 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	665 முதல் 688 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	698 முதல் 704 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	706 முதல் 714 வரை

1. யாப்பருங்கலம் - நூற்பா : 88.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வரும் இடங்கள்	பாடல் எண்கள்
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	779 முதல் 790 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	836 மட்டும்
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	838 முதல் 842 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	844 முதல் 845 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	1033 முதல் 1091 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	1182 முதல் 1198 வரை
ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்	1 முதல் 8 வரை
ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்	368 முதல் 3.4 வரை
சோமாசிமாற நாயனார் புராணம் (சுந்தரர் துதி நீங்கலாக எஞ்சிய முழுவதும்)	1 முதல் 5 வரை
அதிபத்த நாயனார் புராணம் (முழுவதும்)	1 முதல் 20 வரை

(6) கலிவிருத்தம்

"அளவடி நான்கின கலிவிருத் தம்மே"[1]

நாற்சீராலாகிய நான்கடியுடையனவெல்லாங் கலிவிருத்தமெனப் படும்.

வரும் இடங்கள்	பாடல் எண்கள்
பாயிரம்	1 முதல் 9 வரை
திருமலைச் சிறப்பு	1 முதல் 7 வரை
திருமலைச் சிறப்பு	13 முதல் 40 வரை
திருநாட்டுச் சிறப்பு	1 முதல் 12 வரை
திருநாட்டுச் சிறப்பு	18 முதல் 20 வரை
திருநகரச் சிறப்பு	1 முதல் 16 வரை
திருக்கூட்டச் சிறப்பு	1 முதல் 11 வரை
தடுத்தாட்கொண்ட புராணம்	28 முதல் 37 வரை
தடுத்தாட்கொண்ட புராணம்	152 முதல் 168 வரை

1. யாப்பருங்கலம் - நூற்பா : 89.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வரும் இடங்கள்	பாடல் எண்கள்
தடுத்தாட்கொண்ட புராணம்	191 முதல் 194 வரை
திருநீலகண்ட நாயனார் புராணம்	11 முதல் 18 வரை
இளையான்குடிமாற நாயனார் புராணம்	9 முதல் 18 வரை
எறிபத்த நாயனார் புராணம்	16 முதல் 19 வரை
ஏனாதிநாத நாயனார் புராணம்	1 முதல் 14 வரை
ஏனாதிநாத நாயனார் புராணம்	25 முதல் 42 வரை
அரிவாட்ட நாயனார் புராணம்	1 முதல் 10 வரை
திருக்குறிப்புத்தொண்ட நாயனார் புராணம்	104 முதல் 110 வரை
திருநாவுக்கரசு நாயனார் புராணம்	41 முதல் 43 வரை
திருநாவுக்கரசு நாயனார் புராணம்	126 முதல் 133 வரை
குலச்சிறை நாயனார் புராணம் (முழுவதும்)	1 முதல் 11 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	27 முதல் 43 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	162 முதல் 173 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	185 முதல் 216 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	236 முதல் 255 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	354 முதல் 360 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	539 முதல் 549 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	820 முதல் 835 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	837 மட்டும்
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	941 முதல் 951 வரை
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	1110 முதல் 1117 வரை
புகழ்ச்சோழ நாயனார் புராணம்	26 முதல் 33 வரை
சத்தி நாயனார் புராணம் (முழுவதும்)	1 முதல் 7 வரை
வாயிலார் நாயனார் புராணம்	1 முதல் 7 வரை
வெள்ளானைச் சருக்கம்	53 மட்டும்

(7) வஞ்சி விருத்தம்

"சிந்தடி நான்காய் வருவது வஞ்சிய
தெஞ்சா விருத்த மென்மனார் புலவர்"[1]

முச்சீரடி நான்குடைத்தாய் வருஞ் செய்யுள் வஞ்சி விருத்தமாம்.

வரும் இடங்கள்	பாடல் எண்கள்
புகழ்ச்சோழ நாயனார் புராணம்	20 முதல் 25 வரை

1. யாப்பருங்கலம் - நூற்பா : 92,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சேக்கிழார் பல்வேறு வகை யாப்பினைக் கையாண்ட காரணம்

சேக்கிழார் ஒரே வகையான யாப்பு முறையைக் கையாளாமல், அறுசீர், எழுசீர், எண்சீர் விருத்தங்கள், தரவு கொச்சகக் கலிப்பா, கலித்துறை, கலிவிருத்தம், வஞ்சி விருத்தம் ஆகிய பல்வேறு வகை யாப்பு முறைகளைப் பயன்படுத்தினார். சில நாயன்மார்களின் வரலாற்றினைக் கூறுங்கால் ஒரே வகையான யாப்பு முறையைக் கையாண்டார்.

ஆசிரியர் தம் புராணத்தினைக் கலிவிருத்தத்திலேயே ஆரம்பித்துள்ளார். சாதாரண நிலையில், சாதாரண அளவான உணர்ச்சியில், ஒன்றனைப் பற்றிய செய்தியைக் கூறிய பொழுது கலிவிருத்த யாப்பினை மேற்கொண்டார். மலை, நாடு, நகரம் ஆகியவற்றின் வருணனைகள்,[1] அடியார் பெருமை[2], இறைவன் மறையவனாக வருகின்ற தோற்றம், நாயன்மார், இறைவனின் திருத்தலங்களைப் பார்க்கச் செல்லுதல்,[3] ஆகிய நிகழ்ச்சிகளைக் கலிவிருத்தத்தால் பாடினார்.

நாட்டு வளத்தினைக் கூறுங்கால் பயிர்வளத்தினையும் கூறினார். காவிரி நாட்டில் பயிர் நடப்பெற்ற நிகழ்ச்சியை ஈரசைச்சீர் கொண்ட நான்கு சீர்களாலான கலிவிருத்தத்தால் அமைத்தார்.[4] இப்பயிர் வளர்ந்து சுருள் விரிந்து அரும்புசூழ் கரும்பு என்று சொல்லக்கூடிய அளவுக்கு வளர்ந்து நின்ற காட்சியை மூவசைச் சீர்களாலான நான்கு சீர் அடிகளைக் கொண்ட கொச்சகப் பாவால் மொழிந்தார். பயிர் ஆரம்ப நிலையை ஈரசைச் சீர்களாலும். வளர்ந்த நிலையை மூவசைச் சீர்களாலும், விளைந்து கதிர் தோன்றிய நிலையை அறுசீர்களாலும் அமைத்துப்பாடினார். பயிர் விளைந்து கதிர் முற்றிச் சாய்ந்த நிலையை அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தால் விளம்பினார்.[5] பயிர் வளர்ந்த வளர்ச்சிக்குத்

---

1. திருமலைச் சிறப்பு, திருநாட்டுச் சிறப்பு, திருநகரச் சிறப்பு
2. திருக்கூட்டச் சிறப்பு.
3. தடுத்தாட் கொண்ட புராணம் - 28 - 35.
   திருநீலகண்ட நாயனார் புராணம் - 11 - 18.
   திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 185 - 216.
4. திருநாட்டுச் சிறப்பு - 12.
5. திருநாட்டுச் சிறப்பு - 13 - 17, 21.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தக்கவாறு யாப்பமைப்பையும் மாற்றிப் பாடின சேக்கிழாரின் இலக்கியத் திறன் அழகுடைத்தாம்.

திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவரும் தில்லைக்குச் சென்று கண்ணுதல் கடவுளை வழிபட்டனர். இவர்கள் மூவரும் தில்லையைச் சார்ந்த நிகழ்ச்சிகளை எழுசீர், எண்சீர் விருத்தங்களால் பாடினார்.

திருநாவுக்கரசு நாயனார் வரலாற்றில், கொச்சகக் கலிப்பா வாகிய நாற்சீர்ச் செய்யுளால் யாத்துச் சரிதம் சொல்லிப் போந்த ஆசிரியர், தில்லையில் திரு முன்பு அடைந்து நீங்கும் செலவு வரை கூறப்பெற்ற பகுதியைச் சந்த விருத்தமாய் எழுசீர்க்கழிநெடில் விருத்தத்தில் அமைத்துள்ளார்.[1] இதுபோலவே ஆளுடைய நம்பி யினதும்[2] ஆளுடைய பிள்ளையாரதும்[3] தில்லைவழிச் செலவினை, முன் சொல்லிவந்த கொச்சகக் கலிப்பாவினின்றும் மாற்றி எண்சீர், எழுசீர், அறுசீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தங்களாலும் யாத் துள்ளார்.

தில்லை நிகழ்ச்சிகளை அறுசீர், எழுசீர், எண்சீர் விருத்தங் களால் பாடியதுபோன்றே, ஆசிரியர் திருக்கயிலைமலையின் பெருமையினைக் கூறுங்கால் எழுசீர் விருத்தத்தால் பாடினர்.[4]

சைவத் திருத்தலங்களுள் தில்லை, திருக்கயிலை ஆகிய இரண்டு தலங்களும் தனிச்சிறப்புடையன, சைவ நெறியின் உச்சிக்குச் சென்றார், இத்திருத்தலங்களைக் காண விழைந்தனர். சைவத் தலங்களில் உயர்ந்து விளங்கிய இத்திருத்தலங்களை நாயன்மார் கண்டு வணங்கிய காட்சிகளையும் உயர்ந்த சீரான் விளங்கிய அறுசீர், எழுசீர், எண்சீர் விருத்தங்களால் ஆசிரியர் பாடியது பொருத்தமும் அழகும் உடையதாகும். சைவ நெறியில் உச்சியில் கருதப்பெற்ற திருத்தலங்கள், யாப்பு நிலையில் உச்சியில் கருதப் பட்ட இச்சீர்களால் பாடப்பெற்றன சிறப்பும் தகுதியும் உடைத் தாம். இக்கருத்துக்கு அரண் செய்யுமுகத்தான் ''சைவத் திருமரபில்,

1. திருநாவுக்கரசு நாயனார் புராணம் - 157-168
2. தடுத்தாட்கொண்ட புராணம் - 92-110.
3. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 145-161.
4. திருமலைச் சிறப்பு - 8-12.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தில்லையிற் சென்று சேர்தல் தனிச்சிறப்புடையது என நாம் காண ஆசிரியர் வேறு யாப்பினால் யாத்தார். சரியையாதி நாற்சீரினின் றொழுகினோர் ஞானங்கடந்து மோனமும் கடந்து நிற்கும் நிலையில் மேல் எழுகின்றனரன்றோ!''[1] என உரையாசிரியர் உரைத்தனர்.

கங்கையும் மதியும் பாம்பும் கடுக்கையும் முடிமேல் வைத்த அங்கணரைக் கண்டு மகிழ்வதற்காக ஆளுடைய அரசு வடநாட்டுக் கயிலை யாத்திரையை மேற்கொண்டார். தொண்டை நாடு, கண்ணப்பர் கண்டு வணங்கிய காளத்தி மலை ஆகிய இடங்களில் இவர் சென்ற செலவினைக் குறைந்த நாற்சீர் கொச்சகத்தால் கூறி வந்த சேக்கிழார், தெலுங்கு, கன்னடம், மாளவம், மத்திய நாடு, காசி இவற்றைக் கடந்து திருக்கயிலைக்கு மேல் நோக்கிச் சென்ற காட்சியினை மேலான எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தான் கூறினார்.[2]

> ''*வடநாட்டுக் கயிலை யாத்திரை வழியின் ஏற்ற இழிவுகளும்,*
> *வழிச்செலவில் அங்கங்குத் தங்கிச் செல்லவும், முடுகிச் செல்லவும் உள்ள சிரமங்களும் தீவிர உணர்ச்சிகளும் குறிக்கச்*
> *சொல்லும் பொருளும் ஒத்தியலும்படி இப்பகுதியைத் தங்குதல்*
> *நீளுதல் பொருந்திய சந்த யாப்பினால் எழுசீர் விருத்தத்தை*
> *அமைத்தார் எனலாம்''.*[3]

கண்ணுதல் இறைவன் தன் திருக்கோலத்தைக் கயிலையில் காட்டாமல் அங்கிருந்த அம்முறைமையினைத் திருவையாற்றில் காணுமாறு அரசினைப் பணித்தார். இக்காட்சிகளைச் சேக்கிழார் ஐஞ்சீர்க்கலித்துறையான் பாடினர். ஐந்தெழுத்தருள்நிலை, ஐயன்

---

1. திருத்தொண்டர் புராண உரை-மூன்றாம் பகுதி-பக் 219; சி. கே சுப்பிரமணிய முதலியார்.
2. திருநாவுக்கரசு நாயனார் புராணம் - 348-360.
3. திருத்தொண்டர் புராண உரை - மூன்றாம் பகுதி-பக். 587; சி. கே சுப்பிரமணிய முதலியார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருக்கயிலைக் காட்சியை, ஐயாற்றிற் கண்ட சரிதப் பகுதியை ஐந்து சீருடை கலித்துறையான் சேக்கிழார் பாடியிருத்தல் பொருத்தமேயாம்.

திருநீலநக்க நாயனார் இறைவனின் திருஐந்தெழுத்தினையே அன்பு செய்தும், கேட்டும், உரைத்தும் வாழ்ந்து வந்தார். அவ்வைந் தெழுத்தினை நினைந்தே பரமன் திருவடி சேர்ந்தார். இவருடைய சரிதப் பகுதி முழுமையையுமே ஐந்தெழுத்திற்குப் பொருத்தமாக ஐந்து சீருடைய கலித்துறை ஒன்றினாலேயே ஆசிரியர் யாத்த கவித் திறம் கண்டு மகிழற்பாலது.

ஆறுவகை மலர்களைக் கூறி, அவற்றை ஆறுவகைப் பூந்தொடையல்களாகப் பின்னி, அததற்குரிய சாற்றப் பெறுகின்ற ஆறு காலங்களிலும் சாற்றி வழிபட்ட முருக நாயனாரின் வரலாற்றினைப் பொருத்தமாக அறுசீர் விருத்தங்களால் முழுவதும் கூறி அமைத்தார் சேக்கிழார்.

திருக்குறிப்புத் தொண்ட நாயனார் வரலாறு கலித்துறை,[1] எண்சீர் விருத்தம்,[2] கலிவிருத்தம்,[3] கொச்சகக் கலிப்பா,[4] ஆகிய நான்குவகை யாப்புக்களால் பாடப்பெற்றது. இதற்குக் காரணம் கூறவந்த சி. கே. சுப்பிரமணிய முதலியாரவர்கள்' ''இதனுள் ஆகமத் திறனெலாம் தெரிய எடுத்துக் கூறிச் சிவபூசையில் முயற்சி யெழுவிக்கும் இப்பகுதியை ஐஞ்சீருடைய கலிநிலைத்துறையாலும், அதன்மேல் எண்குணனாகிய அட்ட மூர்த்தியினைப் பூசை செய் தடையும் பகுதியை எண்சீர் விருத்தத்தாலும், சரியையாதி நாற்பாத நெறியில் நின்று பிறவி மாசு போக்கும் சரிதத்தை நாற்சீர் விருத்த மாகிய கலிவிருத்தம், கொச்சகக் கலிப்பாவினாலும் ஆசிரியர் யாத்த திறம் போற்றற்குரியது''[5] என விளக்கம் கூறினர்.

மற்ற நாயன்மார் வரலாற்றினைக் கூறிய சேக்கிழார், ஒரே வகையான யரப்பினைப் பயன்படுத்தாமல் கூறப்பெற்ற ஏழுவகை

1. திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணம் - 1-51.
2. திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணம் - 52-103.
3. திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணம் - 104-110.
4. திருத்தொண்டர் புராண உரை - இரண்டாம் பகுதி - பக். 1401; சி. கே. சுப்பிரமணிய முதலியார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யாப்புக்களுள் சிலவற்றை மாறிமாறிப் பயன்படுத்தினார். ஒரு நாயனார் சரிதத்தை ஒருவகை யாப்பில் கூறிவந்த சேக்கிழார் உடனே வேறு யாப்பில் கூற முற்பட்ட திறம் ஆராய்தற்குரித்து.

தடுத்தாட்கொண்ட புராணத்தில் சுந்தரருக்கும், சடங்கவி சிவாச்சாரியார் மகளுக்கும் நடைபெற இருந்த திருமணத்தை அறுசீர் விருத்தத்தால்[1] கூறிவந்த சேக்கிழார், சுந்தரரைத் தடுத்தாட்கொள்ள வந்த இறைவன் தள்ளுநடை வேதியனாக வந்த தோற்றத்தினைக் கலிவிருத்தத்தால்[2] கட்டுரைத்தார். இருவருக்கும் நடைபெற்ற உரையாடல்களைக் கலிவிருத்தத்தாலும் கலித்துறை யாலும் அறுசீர் விருத்தத்தாலும்[3] அமைத்தார்.

கண்ணப்ப நாயனார் புராணத்தில் வேடர்களைப் பற்றியும், வேடர் தலைவனுக்குத் திண்ணன் பிறந்து வளர்ந்ததைப் பற்றியும் சேக்கிழார் கூறுங்கால் அறுசீர் விருத்தத்தைப் பயன்படுத்தினார்.[4] இதற்குப் பின்னர் கலைவளர் திங்களே போல் எண்ணிரண்டாண்டு செவ்வி எய்திய திண்ணனை வேடர்களுக்குத் தலைவனாக ஆக்கிய செய்தியை எண்சீர் விருத்தத்தால் இயம்பினார்.[5] மேற்கொண்டு திண்ணன் வேட்டைக்குத் தயாரான நிகழ்ச்சியைக் கலித்துறை யாலும்[6] வேட்டையாடிய செய்தியினைக் கொச்சகக் கலிப்பாவி னாலும்[7] ஆசிரியர் மாறிமாறிக் கூறிச் சென்றார். இங்ஙனம் சிலருடைய வரலாற்றில் யாப்பு வகையை மாற்றி மாற்றி அமைத்த திறம் காணற்பாலது.[8] பெரும்பாலும் ஒரு நிகழ்ச்சியைப் பற்றிக் கூறி முடித்ததும் அடுத்த நிகழ்ச்சியைப் பற்றிக் கூற ஆரம்பித்த பொழுது, கூறிய யாப்பு முறையை மாற்றி வேறு யாப்பு முறையைப் பின்பற்றியுள்ளார்.

---

1. தடுத்தாட்கொண்ட புராணம் - 1-27.
2. தடுத்தாட்கொண்ட புராணம் - 28-32.
3. தடுத்தாட்கொண்ட புராணம் - 33-73.
4. கண்ணப்ப நாயனார் புராணம் - 1-42.
5. கண்ணப்ப நாயனார் புராணம் - 43-56.
6. கண்ணப்ப நாயனார் புராணம் - 57-67.
7. கண்ணப்ப நாயனார் புராணம் - 68-91.
8. தடுத்தாட்கொண்ட புராணம் - சுந்தரமூர்த்தி நாயனார், கண்ணப்ப நாயனார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இத்தகைய முறை எல்லா நாயன்மார் வரலாறுகளிலும் கையாளப் பெற்றனவா என்றால் இல்லை. வேறுபடுகின்றது. சில நாயன்மார் வாலாற்றில் ஒரே வகையான யாப்பினை ஆரம்பத்தி லிருந்து இறுதிவரை சேக்கிழார் அமைத்துள்ளார். இதுவரை கூறப் பெற்ற யாப்பு வகைகளில், ஒரே வகையான யாப்பு முறை வரும் இடங்களை ஈண்டுத் தொகுத்துக் காண்போம்.

அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்த யாப்பு முறை வரும் இடங்கள்

1. தில்லைவாழந்தணர் புராணம்
2. மெய்ப்பொருள் நாயனார் புராணம்
3. விறன்மிண்ட நாயனார் புராணம்
4. குங்குலியக் கலய நாயனார் புராணம்
5. முருக நாயனார் புராணம்
6. சண்டேசுர நாயனார் புராணம்
7. பெருமிழலைக் குறும்ப நாயனார் புராணம்
8. நமிநந்தியடிகள் நாயனார் புராணம்
9. தண்டியடிகள் நாயனார் புராணம்
10. சிறப்புலி நாயனார் புராணம்
11. கணநாத நாயனார் புராணம்
12. கூற்றுவ நாயனார் புராணம்
13. கலிக்கம்ப நாயனார் புராணம்
14. முனையடுவார் நாயனார் புராணம்
15. கழற்சிங்க நாயனார் புராணம்
16. செருத்துணை நாயனார் புராணம்
17. பூசலார் நாயனார் புராணம்
18. நேச நாயனார் புராணம்
19. திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் புராணம்
20. சடைய நாயனார் புராணம்
21. இசைஞானியார் புராணம்
22. வெள்ளானைச் சருக்கம் - இறுதிப்பாடல் நீங்கலாக.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்த யாப்பு முறை வரும் இடங்கள்

ஒன்றும் இல்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்த யாப்பு முறை வரும் இடங்கள்

1. முழுநீறு பூசிய முனிவர் புராணம்
2. அப்பாலும் அடிச்சார்ந்தார் புராணம்
3. மங்கையர்க்கரசியார் புராணம்

தரவு கொச்சகக் கலிப்பா யாப்பு முறை வரும் இடங்கள்

1. மானக்கஞ்சாற நாயனார் புராணம் - இறுதிப்பாடல் நீங்கலாக
2. திருநாளைப் போவார் நாயனார் புராணம்
3. திருமூல நாயனார் புராணம்
4. பொய்யடிமையில்லாத புலவர் புராணம்
5. நரசிங்க முனையரைய நாயனார் புராணம்
6. கலிய நாயனார் புராணம்
7. ஐயடிகள் காடவர்கோன் நாயனார் புராணம்
8. கணம்புல்ல நாயனார் புராணம்
9. காரி நாயனார் புராணம்
10. நின்றசீர் நெடுமாற நாயனார் புராணம்
11. இடங்கழி நாயனார் புராணம்
12. புகழ்த்துணை நாயனார் புராணம்
13. கோட்புலி நாயனார் புராணம்
14. பத்தராய்ப் பணிவார் புராணம்
15. பரமனையே பாடுவார் புராணம்
16. சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார் புராணம்
17. திருவாரூர்ப் பிறந்தார் புராணம்

கலித்துறை யாப்பு முறையைக் கொண்ட நாயன்மார் வரலாறுகள்

1. அமர்நீதி நாயனார் புராணம்
2. உருத்திர பசுபதி நாயனார் புராணம்
3. திருநீலநக்க நாயனார் புராணம்
4. சோமாசிமாற நாயனார் புராணம் - சுந்தரர் துதி நீங்கலாக
5. அதிபத்த நாயனார் புராணம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கலிவிருத்தம் யாப்பு முறையைக் கொண்ட நாயன்மார் வரலாறுகள்

1. குலச்சிறை நாயனார் புராணம்
2. சத்தி நாயனார் புராணம்

ஒரே நாயன்மார் வரலாற்றில் நிகழ்ச்சிகள் பல இருந்ததின் காரணமாக நிகழ்ச்சிகளுக்குத் தகுந்தவாறு யாப்பு முறையையும் மாறி மாறி வைத்தார். ஆனால் சில நாயன்மார் வரலாறுகளில் நிகழ்ச்சிகள் மாறி மாறி வந்தபோதிலும் ஒரே யாப்பு முறையால் கூறிச்சென்றுள்ளார். இதனை நாம் கண்டோம் எனவே சேக்கிழார் நாயன்மார் வரலாற்றினைப் பாடியபொழுது ஒரேவித முறையைப் பின்பற்றாமல் தம் விருப்பம் போல் பாடினர் என்பது தெரிகின்றது. சிலவிடங்களில் மட்டும் காட்சி இடம், பொருள் ஆகியவற்றிற்குத் தகுந்தவாறு பொருத்தமான யாப்பும் அமைந்துள்ளதைக் கண்டோம், அவற்றை மட்டும் சேக்கிழார் பொருத்தமுறப் பாடியுள்ளார். எனவே மேற்கண்டவற்றை நோக்கும்பொழுது, இடம், காட்சி. இவற்றின் பொருத்தத்திற்கு முக்கியத்துவம் கொடுத்த சேக்கிழார் மாறி மாறி வந்த நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்பது தெரிகின்றது.

சுந்தரர் துதி பாடப்பெற்ற யாப்பு முறை

பெரியபுராணத்துள் ஒவ்வொரு சருக்கத்தின் இறுதியிலும் சுந்தரர் துதி வந்துள்ளது. பத்து இடங்களில் சேக்கிழார் இதனை அமைத்துள்ளார். தில்லைவாழ் அந்தணர் சருக்கம், இலை மலிந்த சருக்கம், மும்மையால் உலகாண்ட சருக்கம், திருநின்ற சருக்கம்' வம்பறாவரி வண்டுச் சருக்கம், வார்கொண்ட வன முலையாள் சருக்கம், கறைக்கண்டன் சருக்கம் ஆகிய ஏழும் அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தத்தானும், பத்தராய்ப் பணிவார் சருக்கம் ஒன்று மட்டும் எண்சீர் விருத்தத்தாலும், பொய்யடிமை இல்லாத புலவர் சருக்கம், கடல் சூழ்ந்த சருக்கம் ஆகிய இரண்டும் நான்கு சீர் கொண்ட கொச்சகக் கலிப்பாவானும் சுந்தரர் துதிகள் அமைந்துள்ளன.

சுந்தரர் துதியை அமைத்தபொழுது இத்தனை சீர்கள் கொண்ட இன்ன யரப்பால்தான் அமைக்க வேண்டும் என்ற நெறிமுறையைச்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சேக்கிழார் பின்பற்றவில்லை. சருக்கம் அறுசீர் விருத்தத்தில் முடிந்த பொழுது சுந்தரர் துதியினையும் அவ்வறுசீர் விருத்தத்திலேயே பாடினார்.[1] சருக்கம் எண்சீர் விருத்தத்தில் முடிந்தால் துதியை அவ்வெண்சீரிலேயே அமைத்துள்ளார்.[2] நான்கு சீர் கொச்சகக் கலிப்பாவில் முடிந்தால் துதியையும் அக்கொச்சகக் கலிப்பாவிலேயே அமைத்துள்ளார்.[3] இங்ஙனம் முறையோடு பாடியபோதிலும் சில வற்றை மாற்றியும் பாடினார். சருக்கம் கலித்துறை யாப்பில் முடிந்தால் துதியை அறுசீர் விருத்தத்தில் பாடியுள்ளார்.[4] சருக்கம் எந்த யாப்பில் முடிவுற்றதோ அதே யாப்பில் சுந்தரர் துதியைப் பாடாமல், ஒரே முறையைப் பின்பற்றாமல் தம் விருப்பம்போல் வேறு வேறு யாப்பில் சேக்கிழார் பாடியுள்ளார். சுந்தரர் துதிகளும் ஒரே வகை யாப்பில் அமையவில்லை.

தொடை நயங்கள்

''பாட்டில் ஓசைக்கு நிலைக்களமாக அமைவது, அடிகளிலும் சீர்களிலும் உள்ள எழுத்துச் சொல் ஆகியவற்றின் ஒத்த அமைப்பு நிலையாகும். முக்கியமாக மோனை, எதுகை அமைப்பில் பாவின் கட்டுக்கோப்புப் பொருந்திவரும். இந்த அமைப்பினைத் 'தொடை நயம்' என்பர்''.[5]

பாவில் இரண்டு அடிகள் இயைந்து வரும்போது தோன்றுவது தொடையாகும். இதனை, ''தொடையே அடியிரண் டியையத் தோன்றும்''[6] என்றார் அமிர்தசாகரர். இதனையே காக்கைபாடினி யார் சற்று விளக்கி,

---

1. (அ) மும்மையால் உலகாண்ட சருக்கம்
   (ஆ) திருநின்ற சருக்கம்
   (இ) வார்கொண்ட வன முலையாள் சருக்கம்
   (ஈ) கறைக்கண்டன் சருக்கம்.
2. பத்தராய்ப் பணிவார் சருக்கம்.
3. (அ) பொய்யடிமை இல்லாத புலவர் சருக்கம்
   (ஆ) கடல் சூழ்ந்த சருக்கம்.
4. (அ) தில்லைவாழந்தணர் சருக்கம்
   (ஆ) வம்பறாவரி வண்டுச் சருக்கம்.
5. திருக்குறள் யாப்பமைதியும் பாடவேறுபாடும் - பக். 15; மு. சண்முகம் பிள்ளை.
6. யாப்பருங்கல விருத்தி - சூத். 33.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''தொடையெனப் படுவது அடைவகை தெரியின்
எழுத்தொடு சொற்பொருள் என்றிவை மூன்றின்
நிரல்பட வந்த நெறிமைத் தாகி
அடியோடு அடியிடை யாப்புற நிற்கும்
முடிவினது என்ப முழுதுணர்ந் தோரே''[1]

எனக் கூறியுள்ளார்.

பொருளுக்கும், இடத்திற்கும் தக்கவாறு ஒத்திசை கூட்டிய ஓசைகளைப் பொருத்தமான எழுத்துக்களைக் கொண்டு அமைந்த சொற்களால் கவிஞர் அமைப்பர். இதைத் தொடை என்பர்.

தொடையின் வகைகள்

தொடைகள் அடிகளில் ஐந்து வகைப்பட அமையும். அமையும் இடங்களை நோக்க அவை எட்டு வகைப்படும். இதனை,

''மோனை யெதுகை முரணியை பளபெடை
பாத மினையே பொழிப்போ டொரூஉத்தொடை
கூழை கதுவாய் மிசையதூஉங் கீழதூஉம்
சீரிய முற்றொடு சிவணுமா ரவையே''[2]

என்பர் யாப்பருங்கல நூலாசிரியர். இதற்கு உரையாசிரியர், ''மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை என்றிவை ஐந்தும், அடி, இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று என இவற்றொடு பொருந்தி அவையொரோ வொன்று எட்டெட்டுப் பாகுபாடுடையவாமென்றவாறு'' என உரையெழுதினர்.[3]

அடியும் சீரும் உறழத் தொடை நாற்பதாகும். இவற்றைத் தவிர செந்தொடை, இரட்டைத் தொடை, அந்தாதித் தொடை என்னும் தொடைகளும் இலக்கண நூல்களில் விவரிக்கப்பட்டுள்ளன. இவை, ''நாற்சீர் கொண்ட அடிகளில்தான் சிறப்பாக அமையும்.

1. யாப்பருங்கல விருத்தி - சூத். 33 - உரை.
2. யாப்பருங்கல விருத்தி - சூத். 34.
3. யாப்பருங்கல விருத்தி - சூத். 34 - உரை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவ்வாறு வரும் தொடை, தொடை விகற்பங்கள் நாற்சீரடிகளில் தான் நன்கு அமைந்து காணப்படும்'' என்று விளக்கிப் பேசினர் மு. சண்முகம் பிள்ளை அவர்கள்.[1]

அடிதோறும் முதலெழுத்து ஒன்றி வருவது அடிமோனை; முதலெழுத்து அளவால் ஒத்து நிற்க இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது அடியெதுகை; சொல்லும் பொருளும் மறுதலைப்படத் தொடுப்பது அடிமுரண்; இறுதிக்கண் எழுத்தாலும் அசையானும், சொல்லானும் ஒன்றிவரத் தொடுப்பது அடிஇயைபு; அடிதோறும் முதற்சீர்க்கண் அளபெடுத் தொன்றி வருவது அடிஅளபெடை எனத் தொடை அடிவகையால் ஐவகைப்படும்.

ஓரடியில், முதற்சீர் இரண்டும் ஒன்றிவரல் இணை; முதலும் மூன்றும் ஒன்றிவரல் பொழிப்பு; முதலும் நான்கும் ஒன்றிவரல் ஒரூஉ; முதலும் இரண்டும் மூன்றும் ஒன்றிவரல் கூழை; முதலும் மூன்றும் நான்கும் ஒன்றிவரல் மேற்கதுவாய்; முதலும் இரண்டும் நான்கும் ஒன்றிவரல் கீழ்க்கதுவாய்; நான்கும் ஒன்றிவரல் முற்று எனச் சீர்வகையால் எட்டு வகைப்படும். இவ்வாறு இலக்கண நூலார் தொடை, தொடை விகற்பங்களைக் கூறிச் சென்றனர்.

இவ்வமைப்புகளோடு பாடல்களைப் பாடின், அவை தனியழகு பெற்று விளங்கும். ஒரே பாடலில் இவையெல்லாம் அமைந்து வருவதும் உண்டு. அவை புலவனின் திறனைப் பொருத்து அமையும். இவையெல்லாம் ஒருசேரப் பாடலில் அமையவில்லை யெனினும் இவற்றுள் சில அமையினும் அழகு செய்யும். பெரிய புராணப் பாடல்களிலும் இத்தகைய அமைப்புகள் உண்டு.

அடிமோனை

''அளவி லாத பெருமைய ராகிய
அளவி லாஅடி யார்புகழ் கூறுகேன்
அளவு கூட உரைப்பரி தாயினும்
அளவி லாசை துரப்ப அறைகுவேன்''[2]

---

1. திருக்குறள் யாப்பமைதியும் பாடவேறுபாடும் - பக். 19, 45; - மு. சண்முகம் பிள்ளை.
2. பெரியபுராணம் - பாயிரம்: 5.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''அகில காரணர் தாள்பணி வார்கள்தாம்
அகில லோகமும் ஆளற் சூரியர்என்(று)
அகில லோகத்து ளார்கள் அடைதலின்
அகில லோகமும் போல்வ ததனிடை''[1]

இவற்றுள் அடிதோறும் முதலெழுத்து ஒன்றி அடிமோனை அமைந்துளது.

அடி எதுகை

''பஞ்சின் மெல்லடிப் பாவையர் உள்ளமும்
வஞ்ச மாக்கள்தம் வல்வினை யும்அரன்
அஞ்செ ழுத்தும் உணரா அறிவிலோர்
நெஞ்சும் என்ன இருண்டது நீண்டவான்''[2]

''செல்வமலி திருவாரூர்த் தேவரொடு முனிவர்களும்
மல்குதிருக் கோபுரத்து வந்திறைஞ்சி உள்புக்கங்(கு)
எல்லையிலாக் காதல்மிக எடுத்தமலர்க் கைகுவித்துப்
பல்குதிருத் தொண்டருடன் பரமர்திரு முன்அணைந்தார்''[3]

இவற்றுள் அடிதோறும் முதலெழுத்து அளவால் ஒத்து நிற்க இரண்டாம் எழுத்து ஒன்றி வந்தமை அடி எதுகையாகும். மேற் காட்டிய பாடல்களிலும் இவ்வாறு அமைந்துளது.

புராணத்துள் பெரும்பாலும் விருத்தப்பாக்கள் யாவுமே அடி எதுகையோடு அமைந்திருத்தலைக் காணலாம்.

அடி முரண்

''தாழ்ந்த வேணியர் சைவர் தபோதனர்
வாழ்ந்த சிந்தை முனிவர் மறையவர்
வீழ்ந்த இன்பத் துறையுள் விரவுவார்
சூழ்ந்த பல்வே றிடத்தத் தொல்நகர்''[4]

---

1. திருக்கூட்டச் சிறப்பு - 4.
2. தடுத்தாட்கொண்ட புராணம் - 159.
3. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 124.
4. திருநகரச் சிறப்பு - 11.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''இப்பந்தர் இப்பெயரிட் டிங்கமைத்தார் யார்
என்றார்க்(கு)
அப்பந்தர் அறிந்தார்கள் ''ஆண்டஅர செனும் பெயரால்
செப்பருஞ்சீர் அப்பூதி அடிகளார் செய்தமைத்தார்
தப்பின்றி எங்குமுள சாலைகுளங் கா'' என்றார்.''[1]

''தாழக் கதிர்ச்சாலி தானோங்குந் தன்மையதாய்
வாழக் குடிதழைத்து மன்னியஅப் பொற்பதியில்''[2]

''வெங்கட் புலிகிடந்த வெம்முழையிற் சென்றழைக்கும்
பைங்கட் குறுநரியே போல்வான்''[3]

''செம்மைபுரி திருநாவுக் கரசர்திருப் பெயர்எழுத
வெம்மைமொழி யான்கேட்க விளம்பினீர்'' எனவிளம்பி[4]

இரண்டாம் பாடலின் முதல் இரண்டடிகளிலும் சொல் முரண் அமைந்துளது; பின் இரண்டிடிகளிலும் மற்றப் பாடல்களிலும் பொருள் முரண் அமைந்துளது.

அடியியைபு

''களியா னையின்ஈர் உரியாய் சிவதா!
எளியார் வலியாம் இறைவா சிவதா!
அளியார் அடியார் அறிவே சிவதா!
தெளிவார் அமுதே சிவதா: சிவதா![5]

''மங்கல வினைகள் எங்கும் மணஞ்செய்கம் பலைகள்
எங்கும்
பங்கய வதனம் எங்கும் பண்களின் மழலை எங்கும்
பொங்கொளிக் கலன்கள் எங்கும் புதுமலர்ப் பந்தர்
எங்கும்
செங்கயல் பழனம் எங்கும் திருமகள் உறையுள் எங்கும்[6]

---

1. அப்பூதியடிகள் நாயனார் புராணம் - 7.
2. ஏனாதிநாத நாயனார் புராணம் - 2.
3. ஏனாதிநாத நாயனார் புராணம் 10.
4. அப்பூதியடிகள் நாயனார் புராணம் - 14.
5. எறிபத்த நாயனார் புராணம் - 16.
6. திருநாட்டுச் சிறப்பு - 30.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அடிதோறும் இறுதிச்சீர் ஒன்றி வந்தமை அடியியையுத் தொடையாகும். இரண்டாம் பாடல் கழிநெடிலடி.

அடி அளபெடை

வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய பாடல்களில் அளபெடை அமைந்தது போல் பிற்காலத்துத் தோன்றிய விருத்தப் பாடல்களில் அளபெடை அமைக்கும் மரபு குன்றிற்று போலும். அதனால் தான் இசை தட்டுப்படும் என்பதால் அளபெடையை நீக்கினர் போலும். விருத்தப் பாக்களால் அமைந்த பெரியபுராணத்திலும் யாண்டும் அளபெடைத் தொடை காணப்படவில்லை.

தொடை விகற்பங்கள்

இனித் தொடை விகற்பங்களைக் காண்போம்.

இணை மோனை (1-2)

"நேரடி கோடி குறட்சிறு பூதங்கள்"[1]
"கண்ணிடை கரந்தகதிர் வெண்படம் எனச்சூழ்"[2]

ஓரடியில் முதலிரு சீர்க்கண் முதலெழுத்து ஒன்றி வந்தமை இணைமோனை.

பொழிப்பு மோனை (1-3)

"ஆராத அன்புபெற ஆதரித்த அம்மடவார்"[3]
"கருத்தொன்று காதலினாற் கனகமதில் திருவாரூர்"[4]

ஓரடியில் ஒன்றுவிட்ட சீர்களில் முதலெழுத்து ஒன்றி வந்தமை பொழிப்பு மோனை.

1. திருமலைச் சிறப்பு - 6/3.
2. தடுத்தாட்கொண்ட புராணம் - 29/1.
3. திருநாவுக்கரசு நாயனார் புராணம்-42/2.
4. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்-9/2.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒரூஉ மோனை (1-4)

"உளமகிழக் கும்பிட்டங் குறையுநாள் உதியருடன்"[1]
"அந்நாளில் ஆளுடைய பிள்ளையார் அருளாலே"[2]

ஓரடியில் இருசீர் இடையிட்டு முதலெழுத்து ஒன்றி வந்தமை ஒரூஉ மோனை.

கூழை மோனை (1-2-3)

"மருள்கொண்ட மன்னவனும் மந்திரிகள் தமைநோக்கி"[3]
"அந்தணர்கள் அதிசயித்தார்; அருமுனிவர்
துதிசெய்தார்"[4]

ஓரடியில் இறுதிச்சீர் ஒழிந்த மற்ற சீர்களில் முதலெழுத்து ஒன்றி வந்தமை கூழை மோனை.

மேற்கதுவாய் மோனை (1-3-4)

"தொன்று சீர்த்திருத் தொண்டத் தொகைவிரி"[5]
"படியின்மிசை மிக்குளவாம் பரன்கோயில்
பணிந்தேத்தி"[6]
"அந்தணரின் மேம்பட்ட அப்பூதி அடிகளார்"[7]

ஓரடியில் முதல் அயற்சீர் ஒழிய ஏனைய சீர்களில் முதலெழுத்து ஒன்றிவந்தமை மேற்கதுவாய் மோனை.

---

1. கழறிற்றறிவார் நாயனார் புராணம்-96/1.
2. நின்றசீர் நெடுமாற நாயனார் புராணம்-2/1.
3. திருநாவுக்கரசு நாயனார் புராணம்-90/2.
4. திருநாளைப்போவார் நாயனார் புராணம்-36/1.
5. திருமலைச் சிறப்பு-37/3.
6. திருஞானசம்பந்த நாயனார் புராணம்-875/3.
7. திருநாவுக்கரசு நாயனார் புராணம்-201/1.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கீழ்க்கதுவாய் மோனை (1-2-4)

"இவ்விடத்தில் இவன்பிழைக்கில் எமக்கெல்லாம்
இறுதிஎனத்"[1]
"அந்நிலைமை அம்பலத்துள் ஆடுவார் அறிந்தருளி"[2]
"அன்னம் அன்னவள் செய்கை அறைகுவாம்"[3]

ஓரடியில் ஈற்றயல் ஒழிந்த சீர்களில் முதலெழுத்து ஒன்றி வந்தமை கீழ்க்கதுவாய் மோனை

முற்று மோனை (1-2-3-4)

"அங்கண் அமர்வார் அரனார் அடியிணைக்கீழ்"[4]
"அன்னம் அனையார்க்கும் அமைச்சர்க்கும்
அன்பருளி"[5]
"அப்பதியில் அன்பருடன் அமர்ந்தகல்வார்
அகலிடத்தில்"[6]

ஓரடியில் எல்லாச் சீர்களிலும் முதலெழுத்து ஒன்றி வந்தமை முற்று மோனை. கீழ்க்கண்டவற்றையும் முற்று மோனையாகக் கொள்ளலாம் என்றனர்.[7]

"கண்பெருகுங் களிகொள்ளக் கண்டிறைஞ்சுங்
காதலினால்"[8]
"கங்கைசடைக் கரந்தவர்கள் கழல்வணங்கிக்
காதலினால்"[9]

---

1. திருநாவுக்கரசு நாயனார் புராணம்-106/3.
2. திருநாளைப்போவார் நாயனார் புராணம்-27/2.
3. தடுத்தாட்கொண்ட புராணம்-168/4.
4. திருஞானசம்பந்த நாயனார் புராணம்-548/1.
5. திருஞானசம்பந்த நாயனார் புராணம்-944/2.
6. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்-151/1.
7. திருத்தொண்டர்புராண உரை, மூன்றாம் பகுதி-முதற் பாகம்-பக். 675; -சி.கே.சுப்பிரமணிய முதலியார்.
8. திருநாவுக்கரசு நாயனார் புராணம்-393/3.
9. திருஞானசம்பந்த நாயனார் புராணம்-404/3.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இணை எதுகை

"கோடி கோடி குறட்சிறு பூதங்கள்"[1]
"அன்னம் அன்னவள் செய்கை அறைகுவாம்"[2]
"சங்கபட கங்கருவி தாரைமுத லான"[3]

பொழிப்பு எதுகை

"செல்வம் பிறிவறியாத் தில்லைவாழ் அந்தணரும்"[4]
"என்றதுவே தொண்டாக என்றும்அது
செயநினைந்தார்"[5]
"மன்னவனார் அதுமொழிய வன்றொண்டர்
எதிர்மொழிவார்[6]

ஒரூஉ எதுகை

"முன்மால் அயன்அறியா மூர்த்தியார் முன்னின்று"[7]
"பற்றறுத்த உபதேசப் பரமர்பதம் பெற்றார்போல்"[8]
"இன்னனஎண் ணிலகவர்ந்தே இகலரசன் முன்
கொணர்ந்தார்"[9]

கூழை எதுகை

"இன்ன தன்மைய பின்னும் இயம்புவான்"[10]
"இன்ன தன்மையன் என்றறி யாச்சிவன்"[11]
"என்னிடையும் நின்னிடையும் நின்றஇசை வால்யான்"[12]

---

1. திருமலைச் சிறப்பு-6/3.
2. தடுத்தாட்கொண்ட புராணம்-168/4.
3. திருஞானசம்பந்த நாயனார் புராணம்-33/2.
4. திருஞானசம்பந்த நாயனார் புராணம்-171/1.
5. சாக்கிய நாயனார் புராணம்-11/4.
6. கழறிற்றறிவார் நாயனார் புராணம்-160/1.
7. திருஞானசம்பந்த நாயனார் புராணம்-164/1.
8. திருமூல நாயனார் புராணம்-21/1.
9. சிறுத்தொண்ட நாயனார் புராணம்-6/4.
10. தடுத்தாட்கொண்ட புராணம்-168/1.
11. திருமலைச் சிறப்பு-13/2.
12. தடுத்தாட்கொண்ட புராணம்-35/2.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மேற்கதுவாய் எதுகை

''அருஞானச் செந்தமிழின் திருப்பதிகம் அருள்செய்து''[1]
''மன்னுபூ சனைமகிழ்ந்த மன்னர்கோயில் முன்னினார்''[2]

கீழ்க்கதுவாய் எதுகை

''அன்ன தன் திருத் தாழ்வரை யின் இடத்(து)''[3]
''பெற்ற நற்பதி கம்தொழப் பெற்றதாம்''[4]
''நன்மைக்கண் நின்ற நலம்என்றுங் குன்றாதார்''
''பெருகொளிய திருநீற்றுத் தொண்டர்குழாம்
பெருகிவர''[6]
''நின்றநலுங் கொன்றையினை நேர்நோக்கி
நின்றுருகி''[7]

இணை முரண்

''ஆதி அந்தம் இலாமை அடைந்தவன்''[8]
''நஞ்சும்அமு தாம்எங்கள் நாதன்அடி யார்க்கென்று''[9]
''போக்கும் வரவும் வினவப் புகுந்ததெல்லாம்''[10]

பொழிப்பு முரண்

''செங்குவளை பறித்தணிவார் கருங்குழல்மேல்
சிறைவண்டை''[11]
ஆவ தாகி அழியவும் அன்பினால்''[12]
''மேலுற எழுந்துமிகு கீழுற அகழ்ந்து''[13]

---

1. திருஞான சம்பந்த நாயனார் புராணம்-411/3.
2. திருஞான சம்பந்த நாயனார் புராணம்-992/4.
3. திருமலைச் சிறப்பு-13/1.
4. திருமலைச் சிறப்பு-38/4.
5. ஏனாதிநாத நாயனார் புராணம்-3/2.
6. திருஞானசம்பந்த நாயனார் புராணம்- 648/3.
7. ஆனாய நாயனார் புராணம்-21/3.
8. திருமலைச் சிறப்பு - 14/4.
9. திருநாவுக்கரசு நாயனார் புராணம்-104/1.
10. திருஞானசம்பந்த நாயனார் புராணம்-941/2.
11. திருநாட்டுச் சிறப்பு-14/1.
12. அரிவாட்ட நாயனார் புராணம்-8/2.
13. தடுத்தாட்கொண்ட புராணம்-28 3.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒரூஉ முரண்

"மேவார்தம் புரஞ்செற்றார் குருகாவூர் மேவுவார்"[1]
"புலிவாயின் மருங்கணையும் புல்வாய புல்வாயும்"[2]

கூழை முரண்

"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்"[3]
"எந்தையும்எம் அனையும்அவர்க் கெனைக்கொடுக்க
இசைந்தார்கள்"[4]

மேற்கதுவாய் முரண்

"வானவர்கள் மலர்மாரி மண்ணிறைய
விண்ணுலகின்"[5]

கீழ்க்கதுவாய் முரண்

"மாலை யாமம் புலர்வுறும் வைகறை"[6]

முற்று முரண்

"நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும்
நடந்தாலும்"[7]
"புல்லோடும் கல்லோடும் பொன்னோடும்
மணியோடும்"[8]

---

1. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்-155/4.
2. ஆனாய நாயனார் புராணம்-34/4.
3 திருக்கூட்டச் சிறப்பு-8/1.
4 திருநாவுக்கரசு நாயனார் புராணம்-32/1.
5. திருநாவுக்கரசு நாயனார் புராணம்-425/1.
6. திருஞானசம்பந்த நாயனார் புராணம்-208/1.
7. பத்தராய்ப் பணிவார் புராணம்-418/1.
8. திருநாவுக்கரசர் நாயனார் புராணம்-418/1.
(இத்தொடர் முற்றியைபிற்கும் சான்றாக வந்துள்ளது.)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இணை இயைபு (2-1)

2 1
''காலாறு வயற்கரும்பின் கமழ்சாறார் சஞ்சாறூர்''[1]

2
''தெய்வநெறிச் சிவம்பெருக்குந் திருவாமூர் 1
2 திருவாமூர்''[2]
''ஒக்கல்வளர் பெருஞ்சிறப்பின் உளராணார் 1
உளராணார்''[3]

(சொல்லியைபு)

பொழிப்பியைபு (3-1)

3 1
''பேசில் அத்திசை ஒவ்வா பிறதிசை''[4]

3 1
''கரும்பல்ல நெல்லென்ன கமுகல்ல கரும்பென்ன''[5]

(சொல்லியைபு)

3 1
''தன்னேரில் மாரனோ? தார்மார்பின் விஞ்சையனோ''[6]

(எழுத்தியைபு)

ஒரூஉ இயைபு (4-1)

4 1
''ஆர்பரவை அணிதிகழும் மணிமுறுவல் அரும்பரவை''[7]

4 1
''வந்ததுளை நிரையாக்கி வாயுமுதல் வழங்குதுளை''[8]

(எழுத்தியைபு)

கூழை இயைபு (3-2-1)

3 2 1
''சீர்பெருகு நிலநக்கர் திருமுருகர் முதற்றொண்டர்''[9]

3 2
''பெருவான வரம்பனார் பிரிவாற்றார் 1
பின்செல்வார்''[10]

(அசையியைபு)

---

1. மானக்கஞ்சாற நாயனார் புராணம்-1/4.
2. திருநாவுக்கரசு நாயனார் புராணம்-12/4.
3. திருநாவுக்கரசு நாயனார் புராணம்-16/3.
4. திருமலைச் சிறப்பு-36/4.
5. திருநாட்டுச் சிறப்பு-15/1.
6. தடுத்தாட்கொண்ட புராணம்-144/2.
7. தடுத்தாட்கொண்ட புராணம்-148/2.
8. ஆனாய நாயனார் புராணம்-13/3.
9. திருஞானசம்பந்த நாயனார் புராணம்-1250/1.
10. கழறிற்றறிவார் நாயனார் புராணம்-157/4.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மேற்கதுவாய் இயைபு (4-3-1)

4 3
''முன்றில்தொறும் வீதிதொறும் முகநெடுவாயில்கள்
1
தொறும்''[1]

4 3 (சொல்லியைபு)
''எயிலணையும் முகில்முழக்கும் எறிதிரைவேலையின்
1
4 2 முழக்கும்''[2]
''செம்பொன்னும் நவமணியும் சேண்விளங்க 1
ஆங்கெவையும்''[3]
(அசையியைபு)

கீழ்க்கதுவாய் இயைபு (4-2-1)

4 2 1
''சூழவரும் பெருஞ்சுற்றத் தோகையரும் தாதியரும்''[4]
4 2 1
தேடினார் இருவருக்குந் தெரிவரியார் திருமகனார்''[5]
(அசையியைபு)

முற்றியையு (4-3-2-1)

4 3 2 1
''புல்லோடும் கல்லோடும் பொன்னோடும் மணியோடும்''[6]
(அசையியைபு)

இங்ஙனம் தொடை விகற்பங்களைச் சேக்கிழார் அமைத்திருப்பது இலக்கியத்திற்கு அழகினை நல்குகின்றது.

சந்தப் பாடல்கள்

சேக்கிழார் தம் புராணத்துள் பல்வகைச் சீர்களைக் கொண்டு பல்வகைச் சந்தப் பாடல்களைப் பாடியுள்ளார். பாடல்கள் முழுதும் ஈரசைச்சீர்களினாலும், மூவசைச் சீர்களினாலும் நான்கடிகளைக் கொண்டு அமைந்துள்ளன. இத்தகைய அமைப்பு வந்துள்ள பாடல்களில் சிலவற்றைக் காணலாம்.

---

1. திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 1175/2.
2. கலிய நாயனார் புராணம் - 5/1.
3. திருநாவுக்கரசு நாயனார் புராணம் - 4171.
4. திருஞானசம்பந்த நாயனார் புராணம்-48/1.
5. திருஞானசம்பந்த நாயனார் புராணம்-996/4.
6. திருஞானசம்பந்த நாயனார் புராணம்-418/1.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சான்றுக்குச் சில

ஈரசைச்சீர் பாடல்கள்

வந்த இடங்கள்	பாடல் எண்கள்
பாயிரம் (வாழ்த்து)	1.
திருமலைச் சிறப்பு	12.
திருநாட்டுச் சிறப்பு	22.
தடுத்தாட்கொண்ட புராணம்	163.
திருநீலகண்ட நாயனார் புராணம்	19.
கண்ணப்ப நாயனார் புராணம்	11.
ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்	122.
வெள்ளானைச் சருக்கம்	53.

மூவசைச்சீர் பாடல்கள்

திருநாட்டுச் சிறப்பு	13, 14, 15, 16, 17.
தடுத்தாட்கொண்ட புராணம்	80, 81, 82, 83.
திருநீலகண்ட நாயனார் புராணம்	29, 30.
கண்ணப்ப நாயனார் புராணம்	143, 144, 145, 146, 148, 150, 153, 154.
மானக்கஞ்சாற நாயனார் புராணம்	1, 2, 3, 4.
திருநாளைப்போவார் நாயனார் புராணம்	2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 12.
திருநாவுக்கரசு நாயனார் புராணம்	1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10.
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	1, 2, 3, 4, 5, 6, 7, 15.
ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்	290, 291, 293.
திருமூல நாயனார் புராணம்	1,2,7.
கழறிற்றறிவார் நாயனார் புராணம்	96,97,98.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நான்கு சீர்கள் கொண்ட கலிவிருத்தப் பாடல்களில் நேரசையில் ஆரம்பிக்கின்ற ஒவ்வோரடிக்கும் எழுத்துக்கள் பதினொன்றும், நிரையசையில் ஆரம்பிக்கின்ற ஒவ்வோரடிக்கும் எழுத்துக்கள் பன்னிரண்டுமாக விளங்குவது யாப்பு முறையில் தனிச் சிறப்பாம்.

ஓரடியில் பதினொரு எழுத்துக்கள் கொண்ட பாடல்கள்

வரும் இடங்கள்	பாடல் எண்கள்
பாயிரம்	2.
திருமலைச் சிறப்பு	1, 2, 13, 14, 15, 16, 18, 19, 20.
திருக்கூட்டச் சிறப்பு	1, 6, 7, 8, 9, 10.
தடுத்தாட்கொண்ட புராணம்	162, 163, 164.
இளையான்குடிமாற நாயனார் புராணம்	9, 10, 12, 13, 14, 16,
எறிபத்த நாயனார் புராணம்	17, 18.
அரிவாட்டாய நாயனார் புராணம்	2,4,5,6,7,8,9,10.
திருக்குறிப்புத்தொண்ட நாயனார் புராணம்	104, 105, 106, 107, 108, 109.
குலச்சிறை நாயனார் புராணம்	1, 2, 5, 6, 7, 8, 9, 10, 11.
திருஞானசம்பந்த நாயனார் புராணம்	186, 187, 189, 190, 191, 192.
புகழ்ச்சோழ நாயனார் புராணம்	28, 29, 31, 32, 33.
சத்தி நாயனார் புராணம்	3, 4, 5, 6, 7,
வாயிலார் நாயனார் புராணம்	1,2,5,6,7,
வெள்ளானைச் சருக்கம்	53.

பெரும்பாலும் நேரில் ஆரம்பிக்கின்ற கலிவிருத்தப் பாடல்கள் பதினொரு எழுத்துக்களைக் கொண்டே முடிகின்றன. சில பதின்மூன்று, பதினான்கு எழுத்துக்களிலும் முடிகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஓரடியில் பன்னிரண்டு எழுத்துக்களைக் கொண்ட பாடல்கள்

வரும் இடங்கள்	பாடல் எண்கள்
பாயிரம்	1, 3, 5, 9.
திருமலைச் சிறப்பு	3, 5, 31, 40.
திருநாட்டுச் சிறப்பு	12.
திருக்கூட்டச் சிறப்பு	3, 4.
தடுத்தாட்கொண்ட புராணம்	161, 166, 167.
இளையான்குடிமாற நாயனார் புராணம்	11, 15.
எறிபத்த நாயனார் புராணம்	16, 19.
அரிவாட்டாய நாயனார் புராணம்	1, 3.
திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணம்	110.
குலச்சிறை நாயனார் புராணம்	4, 5.
திஞானசம்பந்த நாயனார் புராணம்	185, 188, 215.
புகழ்ச்சோழ நாயனார் புராணம்	26, 27, 30.
சத்தி நாயனார் புராணம்	1, 2.
வாயிலார் நாயனார் புராணம்	3, 4.

பெரும்பாலும் நிரையில் ஆரம்பிக்கின்ற கலிவிருத்தப் பாடல்கள் பன்னிரண்டு எழுத்துக்களைக் கொண்டே முடிகின்றன. சில, இவற்றிற்கு மேற்பட்ட எழுத்துக்களிலும் முடிகின்றன.

இங்ஙனம் பெரியபுராணத்துள் யாப்பு முறை சிறந்து அமைந்ததோடு இன்னொரு அழகும் புராணத்திற்குச் சேர்ந்துள்ளது. பெரிய புராணமெனும் திருத்தொண்டர் புராணம் இறைவன் எடுத்துக் கொடுக்க, ''உலகெலாம்'' என்று ஆரம்பித்து, ''உலகெலாம்'' என்று முடிந்தது போன்றே, இறைவன் எடுத்துக் கொடுத்த அவ்வடியினைக் கொண்ட பாடலினைக் கலிவிருத்தத் தான் புராணம் ஆரம்பித்து அக்கலிவிருத்தத்தானேயே அப்புராணம் முடிந்துளது. இங்ஙனம் முதலும் முடிவும் கலிவிருத்த யாப்பில் அமைந்துள்ளது எண்ணி மகிழ்தற்குரியது.

பெரியபுராணம் பெற்றுள்ள எண்ணிறந்த அழகுகளுள், அமைந்த சிறப்புக்களுள் யாப்பு முறையில் பெற்ற இஃதும் ஒன்றாகும்.

*

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழ்வாணர்களின் பார்வையில்
சேக்கிழார்

''ஒல்லையவர் புராணகதை உலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழா ரடிபோற்றி.''

—உமாபதி சிவாச்சாரியார்,
சேக்கிழார் புராணம் - 7.

*

''தூக்கு சீர்த்திருத் தொண்டத் தொகைவிரி
வாக்கி னாற்சொல்ல வல்லபிரான்''

—சிவஞான முனிவார்,
காஞ்சிப் புராணம், கடவுள் வாழ்த்து-16.

*

''பத்திச் சுவைநனி சொட்டச் சொட்டப் பாடிய
கலிவலவ!''.

—மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை,
சேக்கிழார் பிள்ளைத்தமிழ்.
தாலப்பருவம். 8.

*

''பதினொன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஒரு தமிழ்ப் புலவர் தோன்றினார். அவருடைய செல்வாக்கு தென்னாடு முழுவதும் பரவியிருந்தது; வளர்ந்து கொண்டும் இருந்தது. குன்றத்தூர் என்ற கிராமத்தில் அவதரித்தார்.''

—டாக்டர் ஜி. யு. போப்பு,
மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம்,
பக். XCIV

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழ்வாணர்களின் பார்வையில் சேக்கிழார்

பல்வகைச் சிறப்புக்கள் கொண்ட பெரியபுராணத்துள் ஈடுபாடு கொண்ட ஒவ்வொருவரும் கண்டு ஆழ்ந்து அனுபவித்து மகிழ்ந்தவற்றை நூல் வடிவமாக, பாடல் மூலமாக, வாழ்த்து வழியாகக் கூறியுள்ளனர். நாம் இப்புராணத்தைக் கற்று மகிழ்ந்த மகிழ்ச்சியின் அனுபவத்தோடு, இவர்களின் அனுபவத்தை ஒப்பிட்டுக் காணும்போது சுவை இன்னும் கூடுகின்றது இச்செந்தமிழ் வாணர்கள் சேக்கிழாரைப் பற்றிக் கூறியவற்றை இனிக் காண்போம்.

உமாபதி சிவாச்சாரியார்

இவரைப் பற்றி, சி.கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள், ''உமாபதி சிவாச்சாரியார் சைவத்தின்பால் மிக்க ஈடுபாடு கொண்டவர்; தில்லைவாழந்தணர்களிலே சிறந்தவர்; சைவ சித்தாந்த சாத்திரம் பதினான்கனுள் எட்டுச் சாத்திரங்கள் செய்து அருளியவர்; சிதம்பரத்தினை அடுத்த கொற்றவன்குடி என்னும் திருத்தலத்திலே சைவ மெய்யன்பராய் வாழ்ந்தவர்; தில்லை நடராசப் பெருமானின் திருவருளைப்பெற்றவர்; சேக்கிழார் காலத்திற்குப் பின்னால் இருநூறு ஆண்டுகள் கழித்துத் தோன்றியவர்'' என்று தம் நூலுள் குறிப்பிட்டுள்ளார்.[1]

இவர்தான் சேக்கிழார் பெருமானின் வரலாற்றைப் பற்றியும், திருத்தொண்டர் புராணத்தின் தோற்றம், அமைப்பு, அரங்கேறிய முறை ஆகியவற்றைப் பற்றியும் முதன்முதலாக எடுத்துக் கூறியவர்.

1. சேக்கிழார் - பக். 199, 200; சி. கே. சுப்பிரமணிய முதலியார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நூற்று மூன்று (103) திருப்பாடல்கள் கொண்ட அத்தொகுப்புக்குத்[1] ''திருத்தொண்டர் புராண வரலாறு என்னும் சேக்கிழார் சுவாமிகள் புராணம்'' எனப் பெயர் கொடுத்தார். நூல் கூறிய செய்திகளின் அடிப்படையிலேயே இப்பெயரை இந்நூலுக்கு இட்டார் என்பது கவனிக்கத்தக்கது. இந்நூலுள் உமாபதி சிவாச்சாரியார், திருத்தொண்டர் புராணத்துள் கூறப்பெற்ற திருத்தொண்டர்களைப் பற்றியெல்லாம் இயம்பிய பின் சேக்கிழாரின் திறனைப் பற்றியுங் கூறினர்.

சேக்கிழாரின் இலக்கியத்திறன்

சேக்கிழார் தம் இலக்கியத்தைப் படைத்த திறனுக்காக அவரை யானை மீது ஏற்றி, அரசனுங் கூட ஏறி, முறைமையினால் இணைக்கவரி வீச, மறை முழங்க விண்ணவர்கள் கற்பகப்பூ மாரி மழை பொழியத் திருத்தில்லையில் திருவீதி வலம் வரச் செய்தனர்; மாமறையோர் எதிர்கொண்டு வாழ்த்தினர்; அரம்பையர்கள் வாழ்த்தெடுத்தனர்;[2] அன்பர்கள் உருகிய நெஞ்சொடு கண்மழை பொழிந்தனர் எனக் கூறினார் உமாபதி சிவாச்சாரியார்,[3] இன்னும் இவருடைய திறனை வியந்து பாராட்டினார்.

இராமாயணத்தைப் பாடிய வான்மீகி, பாரதம் இயற்றிய வேதவியாசன், நுண்மாண் நுழைபுலத்தில் விண்ணனைய பொதிய மலைக்குறுமுனிவர் ஆகியவர்தாம் மற்றவரினும் புலமை மிக்கவர் என்று உலகம் அறியும். ஆனால் உமாபதி சிவாச்சாரியார், இவரினும் அறிவுத்திறன் கொண்டார் குன்றைமுனிச் சேக்கிழார் என்று புகழ் பாடினர். மேலும் ஆயிர நாக்கள் கொண்ட ஆதி சேடனும் ஒப்பாகான் என்றார். அவர்கள் இவருக்கு எவ்வகையினும் ஒப்பாகார் என்று உறுதி கூறினார்.[4]

மேலும் இவருடைய இலக்கியத் திறனை வியந்து போற்றினார். கலைகளின் இருப்பிடமானவள் கலைமகள். இவள், தான் வாழ்

1. சேக்கிழார் புராணம் - திருத்தொண்டர் புராணத்தோடு பின்னிணைப்பு; பக். 684-703; காசிமடத்து வெளியீடு.
2. சேக்கிழார் புராணம்-87, 88.
3. சேக்கிழார் புராணம்-90.
4. சேக்கிழார் புராணம்-91.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கின்ற பூவை மறந்து பதுமத்தோன் நாவைத்துறந்து பொதியமலைக் கோவை நீங்கிப் பத்தி மலையெனத் திகழ்ந்த பாவலர் காவலனார் சேக்கிழார் திருநாவில் குடிகொண்டாளாம்[1]. கலைமகள், நாவில் வீற்ற பின்பு பாடும் திறன் கொண்டார் மற்றவர். இலக்கியம் பாடும் திறன் இயற்கையாக அமைந்த சேக்கிழாரின் கவிச்சுவையைச் சுவைப்பதற்கு அவர் நாவிலேயே கலைமகள் வீற்றிருந்தாள். கலைமகளே சேக்கிழாரை வியந்ததாக உமாபதி சிவம் கூறினார்.

புராணத்தின் சிறப்பு

இந்நூலின்கண் பல உலகங்கள், பல திசைகள், பல பதிகள், பல மரபுகள், பல பெயர்கள், பல காலங்கள் பேசப்பட்டுள்ளன. காலத்தான், இடத்தான் இவற்றிற்குள் தொடர்பில்லாவிடினும் இவற்றினுள் ஒருமைப்பாட்டுணர்வினைத் தெள்ளத் தெளியக் காண்கின்றோம். ''உலகெலாம் உணர்ந்தோதற்கரியவன்'' என்றடி யெடுத்துக் கொடுத்த அவனையே தலைவனாகக் கொண்டு வாழ்ந்த தொண்டர்தம் கதையைப் பலவாறாகப் பாடி முடித்தனர் தொண்டர்சீர் பரவவல்லார்.[2] இன்னும் இப்புராணத்தின் சிறப்பைக் கூறுங்கால்,

''கருங்கடலைக் கைநீத்துக் கொளளளிது; முந்நீர்க்
கடற்கரையின் நொய்மணலை எண்ணிஅள விடலாம்;
பெருங்கடல்மேல் வருந்திரையை ஒன்றிரண்டென் றெண்ணிப்
பிரித்தெ பதிக் கடையிலக்கம் பிரித்துவிட லாகும்;
தருங்கடலின் மீனைஅள விடலாகும்; வானத்
தாரகையை அளவிடலாம்; சங்கரன்தாள் தமது
சிரங்கொள்திருத் தொண்டர்புரா ணத்தைஅள விடநஞ்
சேக்கிழார்க் கெளிதலது தேவர்க்கும் அரிதே''[3]

என்றுரைத்தார். இவற்றையெல்லாம் செய்து முடிக்க கடினம் என்பதன்று; எவராலும் எக்காலத்தும் முடியாது. எவராலும் செய்ய முடியா இவற்றைக்கூட செய்து விடலாம்; எளிதே என்றார்.

---

1. சேக்கிழார் புராணம்-93.
2. சேக்கிழார் புராணம் - 50.
3. சேக்கிழார் புராணம் - 51.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆனால் திருத்தொண்டர் புராணத்தைப் பாடி முடித்து அதனை அளவிட நம் சேக்கிழார்க்கன்றி மற்ற எவராலும் முடியாது; தேவர்க்கும் அரிய செயலாம். இத்தகு சிறப்பு வாய்ந்தது பெரிய புராணம் என்று விளக்கஞ் செய்தார்.

சேக்கிழார் செய்த பெருந்தவம்

இத்தகு சிறப்பு வாய்ந்த தொண்டர்சீர் பரவுகின்ற பெரிய புராணத்தினைப் பதினொரு திருமுறைகளோடு இணைத்து வரிசைப் படி பன்னிரண்டாந் திருமுறை என வகுத்து, ''தோடு செய்ததிரு நெறிய செந்தமிழோ டொக்கும்'' என்றுரை தொடர்ந்து செப்பேடு செய்து தில்லைத் திருத்தாண்டவர் நடராசர் சந்நிதியில் ஏற்றினார் கள்.[1] ''தோடுடைய'' என ஆரம்பிக்கின்ற திருஞானசம்பந்தரின் திருமுறைகளோடு இஃது ஒக்கும். இத்தகைய சிறப்பிற்கெல்லாம் காரணம் பாலாறு சூழ்ந்த நாடும், குன்றத்தூர் நகரும், சேக்கிழார் செய்த பெருந்தவமும் ஆகும் என்றனர்.[2]

சபாபதி நாவலர்

இவர் யாழ்ப்பாணம் கோப்பாய் எனும் இடத்தவர். சைவ வேளாளர். தமிழ் இலக்கிய இலக்கணங்களில் வல்லவர். திருவாவடு துறையாதீன வித்துவானாயிருந்தவர். இவர் சேக்கிழாரின் புலமைத்திறத்தினைப் புகழ்ந்தார். ''அநபாய சோழன் இவர்தம் புலமைத் திறத்தைக் கேட்டு அவர்தம் தகுதியை அறிய அவரை ஞாலம், மலை, கடல் இம்மூன்றிலும் பெரியவை எவை எனக் கேட்க, அவர் திருக்குறளையே பதிலாக இறுத்துத் தம் புலமை யைக் காட்டிய இன்தமிழ்க் கவிஞர் ஆவார். இந்தகையவர் தம் வாலறிவாற்றிருத்தொண்டர் புகழ் விரித்தார்[3]''

சிவஞான முனிவர்

இவர் சற்றேறக் குறைய இருநூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர். திருவாவடுதுறை ஆதீனத்தில் இருந்துகொண்டு தமிழ்த்தொண்டு ஆற்றியவர். சேக்கிழாரின் வாக்கினை வியந்து,

---

1. சேக்கிழார் புராணம் - 96, 97.
2. சேக்கிழார் புராணம் - 97.
3. சிதம்பர சபாநாத புராணம்-கடவுள்-வாழ்த்து - 15.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''தூக்கு சீர்த்திருத் தொண்டத் தொகைவிரி
வாக்கி னாற்சொல்ல வல்லபிரான்''[1]

எனப் போற்றினார்.

இவருடைய காஞ்சிப் புராணத்தில் தொண்டை நாட்டை வருணித்தபொழுது தாம் சேக்கிழார் போல் வருணிக்க முடியாமையை எண்ணி,

''திருத்தொண்டை நன்னாட்டு நானிலத்தைந்
திணைவளமுந் தெரித்துக் காட்ட
மருத்தொண்டை வாய்ச்சியர்சூழ் குன்றைநகர்க்
குலக்கவியே வல்ல னல்லாற்
கருத்தொண்ட ரெம்போல்வா ரெவ்வாறு
தெரிந்துரைப்பார்''[2]

எனச் செப்பினார். திருத்தொண்டர் புராணத்தில் சேக்கிழார், தாம் பிறந்த தொண்டை நாட்டினை எந்த அளவிற்கு உயர்வாக வருணித்தார் என்பதை நோக்கும்பொழுது சிவஞான முனிவர் கூறியது முற்றிலும் உண்மை என்பது புலப்படும்.

திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை

இவர் அண்மைக் காலத்தில் வாழ்ந்து மறைந்தவர். டாக்டர் உ. வே. சாமிநாதையர்தம் நல்லாசிரியர். பெரியபுராணத்தை ஆழ்ந்து படித்து அதன் பத்திச் சுவையில் ஈடுபட்டுத் திளைத்தவர். சேக்கிழார் மீது பாடப்பெற்ற முழுமையான ஒரே நூல் அவரால் பாடப்பெற்ற சேக்கிழார் பிள்ளைத்தமிழாகும். இதன்கண் சேக்கிழாரின் பல்வேறு திறன்களையெல்லாம் வியந்து போற்றியுள்ளார்.

சேக்கிழாரின் கவிச்சுவை

சேக்கிழாரைக் குழந்தையாக வைத்துப் பாடுங்கால் அக்குழந்தையின் செங்கீரைப் பருவத்தினைக் கூறினர். ஒரு காலைப்

---

1. காஞ்சிப் புராணம் - கடவுள் வாழ்த்து - 16.
2. காஞ்சிப் புராணம் - நாட்டுப் படலம் - 128.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பதித்து ஒரு காலைத் தூக்கி இருபுறத்தும் தலையசைத்துக் கிளி சாய்ந்தாடுவது போலக் குழந்தை ஆடிவருங்கால் வாயினின்றும் சொள்ளுநீர் பெருக்கெடுக்கின்றது. இதை மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்,

> "வண்கொண்ட வொருதாள் மடித்தூன்றி யொருதாள்
> வயங்குற வெடுத்தூன்றியொண்
> வாய்கவிச் சுவையொழுக் கறிவிப்ப தெனவமுத
> மாட்சிமை யொழுக்கெடுப்ப
> வெண்கொண்ட நெற்றிநீ றிளநிலவு மொண்கா
> திருங்குழை யிளங்கதிரும்விட்
> டெறிப்பவிள முறுவலுந் தோன்றமலர் திருமுக
> மெடுத்துவா னளவுநொச்சித்
> திண்கொண்ட குன்றையம் பதியருண் மொழித்தேவ
> செங்கீரை யாடியருளே"[1]

எனக் கூறினர். பின்னர் வருஞ் சேக்கிழாரின் கவிச்சுவை யொழுக்கை இவ்வாயமுதம் முற்கூட்டியறிவிக்கின்றது எனத் தற் குறிப்பேற்றவணியாக அறிவித்தார் ஆசிரியர்.

பத்திச்சுவை

மேலும் பெரியபுராணத்தைப் பத்தி மணம் கமழ அமைத் துள்ளார் என்பதைப் பிள்ளைத் தமிழில்,

> "என்றும் பத்தி ரசங்கனி கனியே"[2]
> "பத்திச் சுவைநனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ"[3]
> "புலஞ்சார் பத்தி விளைநிலமே"[4]
> "ஒழியாப் பத்திக் கடல்வருக"[5]

எனப் பாராட்டிப் பேசினர்.

---

1. சேக்கிழார் பிள்ளைத்தமிழ் - செங்கீரைப் பருவம் - 1.
2. சேக்கிழார் பிள்ளைத்தமிழ் - செங்கீரைப் பருவம் - 7.
3. சேக்கிழார் பிள்ளைத்தமிழ் - தாலப் பருவம் - 8.
4. சேக்கிழார் பிள்ளைத்தமிழ் - முத்தப் பருவம் - 5.
5. சேக்கிழார் பிள்ளைத்தமிழ் - வாரானைப் பருவம் - 10.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சொற்றிறன்

சேக்கிழார், சொற்றிறன் கொண்டு பாடவல்லவர் என்பதை,

"*தமிழ்நா வலரேறே*"[1]
"*வண்சுவை யமுத வொழுக்கென வார்த்தை*
வழங்கத் தெரிகுநரார்"[2]
"*கனியக் கனியக் கண்ணீர் வாரக்*
கவிபா டியவிறைவ"[3]

என்ற தொடர்களால் அறியலாம்.

கவியின்பச் சுவை

சேக்கிழாருடைய கவிதைகள் எத்தகைய சுவையுடையன என்பதை விளக்கிக் கூறினார். இவை "திரியாத பால், சுவைத் தேன், சருக்கரை, கற்கண்டு இவற்றின் சுவையோடு முக்கனி, திராட்சைப் பிழிவையும் ஒன்று சேர்த்துத் தேவாமுதத்தையுள்ளே பதித்துக் குழல் வீணையிசையொலியின்பத்தைப் புக வைத்துச் சிவமணம் அகலாதே கமழச் சொற்சுவை பொருட்சுவைகள் முதிர அமைந்த அருட்கவிகள்" என்றார். ஒன்றே சுவையுடையது. சுவையுடைய அத்தனைப் பொருட்களும் சேர்ந்து அமைந்த சுவை சேக்கிழார் கவிதைச் சுவையாம். இத்தகைய சுவை மிகுந்த பாடல்கள் பாடிய புலவன் எனப் பாராட்டினர்.[4] இத்தகைய கவிதைகள் சுவை ஒன்றனை மட்டும் பயவாது வேறு நன்மைகள் பல பயக்கும். இவை ஆத்திகம் ஆக்கும்; புத்தி, சித்தி, சுத்தி, பத்தி, முத்தி ஆகிய இவையனைத்தையும் ஒருங்கே அளிக்கும் என்றார்.[5]

இத்தகைய கவிதைகள் படைக்கும் இவரைப் பல்கலை ஆசிரியன் என்று கூறுவது சாலப் பொருத்தமாகும்.[6]

---

1. சேக்கிழார் பிள்ளைத்தமிழ் - செங்கீரைப் பருவம் - 7.
2. சேக்கிழார் பிள்ளைத்தமிழ் - தாலப் பருவம் - 10.
3. சேக்கிழார் பிள்ளைத்தமிழ் - சப்பாணிப் பருவம் - 8.
4. சேக்கிழார் பிள்ளைத்தமிழ் - சிறுபறைப் பருவம் - 6.
5. சேக்கிழார் பிள்ளைத்தமிழ் - சிறுபறைப் பருவம் - 7.
6. சேக்கிழார் பிள்ளைத்தமிழ் - சப்பாணிப் பருவம் - 9.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெரியபுராணத்தின் சிறப்பு

ஆசிரியர் சேக்கிழாரின் பல்கலைப் புலமையைப் பாராட்டிய தோடு பெரியபுராணத்தின் அமைப்பினையும், ''ஒப்பரிய தொண்டர்தம் அருமை, பெருமை, உவந்து பாராட்டப் பெறுகின்ற அவர்தம் செய்கை, உம்பர்கோன் அருட்டன்மை ஆகியவை இதனுள் விரிக்கப்பெற்றுள. தவறில்லாத செந்தமிழ்த் தொடை நடையும், ஏற்ற அடைமொழிகளோடு பொருள்நனிச் சிறப்பும், இதன்கண் உள. தமிழ்மறையே இதன்கண் அமைந்திருப்பது வெள்ளிடை மலையாம்'' எனப் பாராட்டிக் கூறினர்.[1]

இத்தகைய கவித்துவம் வாய்ந்த சொல்லரசரை,

''கலைமலி பெரும்புலவர் கைகுவிக் கக்கலைக்
கன்னிநின் றேவல் கேட்கக்
கனகசபை யார்முத லளித்தருள''[2]

பெருமை செய்தனர்.

இத்தகைய திறன் படைத்த ஆசிரியர்க்கு ஒருவர் அடியெடுத்துக் கொடுக்க வேண்டுமா? தொண்டர்தம் புராணத்துள் குன்றைமுனிச் சேக்கிழார் வாக்கிற்கிடையே தன் வாக்கும் தன் பங்கிற்கு இருக் கட்டும் எனக் கருதியும், சேக்கிழார் பாட ஆரம்பித்து விட்டால் தான் விரும்பிச் சொல்லுவதை இடையில் கேளார் என்று இறைவன் முந்திக்கொண்டு சேக்கிழாருக்குத் தன் வாக்கினை அவர் பாட ஆரம்பித்தற்கு முன்னாலேயே முதலடியாக எடுத்துக் கொடுத்தான் போலும் :

சொற்சுவை, பொருட்சுவை, அணிநலன், கற்பனை இவற்றை அமைத்து நயம்பட மொழியுந்திறன், வருணனைத் திறன், ஒன்பான் சுவைகளை அமைக்குந்திறன் ஆகிய இவை, சேக்கிழார் செந்தமிழ்க் கடலுள் மூழ்கிக் கசடறக் கற்றதான் ஏற்பட்டவை என்பதோடு அவர் தோன்றிய குலமும் காரணமாகும். இதனால் செம்பொருள் கொண்ட செழுந்தமிழ்த் தீஞ்சொற்கள் அவர் வாயினின்றும் வெளிவந்தன.

---

1. சேக்கிழார் பிள்ளைத்தமிழ் - செங்கீரைப் பருவம் : 3.
2. சேக்கிழார் பிள்ளைத்தமிழ் - காப்புப் பருவம் : 2.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவருடைய குலத்தைக் குறிப்பிடுங்கால் ''நீலியைக் கண்டு நடுங்கி நின்றவணிகனின் உயிருக்குத் தீங்கு நேருமாயின் நெருப்பினில் மூழ்கி அத்தனை பேரும் உயிர் துறப்பதாகக் கூறித் தாம் கூறியது தவறியவிடத்து, உயிர் துறந்து சொல் தவறா எழுபதின்மர் தோன்றிய வேளாளர் குலத்தைச் சார்ந்தவர் சேக்கிழார்'' என்று உயர்வாகக் குறிப்பிட்டார் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்[1]. சொல் தவறா எழுபதின்மர் தோன்றிய குலத்தில் உதித்த சேக்கிழாரின் சொல்லும் தவறாது. இதையே திருவள்ளுவரும்,

> *''நிலத்திற் கிடந்தமை கால்காட்டும் காட்டும்*
> *குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்''[2]*

என்றார்.

மேலும் இவர், அடியார் மேன்மையைப் பாடிய சேக்கிழாரைத் ''திருப்பெருந்துறைப் புராணத்திலும்''[3] ''திருஅம்பர்ப் புராணத்திலும்''[4] பாராட்டினர். ஸ்ரீ கச்சியப்ப சுவாமிகள் திருவானைக்காப் புராணத்தில்[5] இவரைப் புகழ்ந்தார்.

டாக்டர் ஜி. யு. போப்பு அவர்களின் கருத்துக்கள்

நம் நாட்டவரேயன்றித் தம் சமயம் பரப்ப வந்த மேலைநாட்டவரும் இச்சமய நூலைப் பாராட்டிக் கூறிய திறன் எண்ணிக் காணத்தக்கது.

டாக்டர் ஜி. யு. போப்பு அவர்கள் திருக்குறள், நாலடியார், திருவாசகம் ஆகியவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்ததோடு பெரியபுராணத்தையும் நன்கு கற்றுள்ளார் என்பது தெரிகின்றது.

இவருடைய திருவாசக மொழிபெயர்ப்பிலே பெரியபுராணத்தைப் பற்றிப் பின்வருமாறு கூறினார்.

---

1. சேக்கிழார் பிள்ளைத்தமிழ் - வாரானைப் பருவம் : 6.
2. திருக்குறள் - 959.
3. திருப்பெருந்துறைப் புராணம் - கடவுள் வாழ்த்து : 19.
4. திருஅம்பர்ப் புராணம் - கடவுள் வாழ்த்து : 23.
5. திருவானைக்காப் புராணம் - கடவுள் வாழ்த்து : 19.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''பெரியபுராணம் (The Great Legend) பாடலோடு உரையுஞ் சேர்ந்து இது பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது (1885). ஆறுமுக நாவலரால் எழுதப்பெற்ற உரைநடைச் சுருக்கம் ஒன்றிருக்கின்றது (1881)''.

''சேக்கிழாரும் பெரியபுராணமும் அல்லது பெரியபுராண வரலாறு. பதினொன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஒரு தமிழ்ப் புலவர் தோன்றினார். அவருடைய செல்வாக்கு தென்னாடு முழுவதும் பரவியிருந்தது; வளர்ந்து கொண்டு இருந்தது. குன்றத்தூர் என்ற கிராமத்தில் அவதரித்தார். அருண்மொழித் தேவர் என அழைக்கப்பெற்றார். இவருடன் பிறந்தாரைப் பாலறாவாயர் எனவழைத்தனர். அந்நாளில் வாழ்ந்த சோழ மன்னன் சமணக் காப்பியமாகிய சீவகசிந்தாமணியைக் கற்பதில் ஈடுபட்டான். அவனுடைய காலம் கி.பி. 1063-1112 ஆகும்''[1] என்று விளம்பினார்.

பெரியபுராணம் பதினொன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று சிலர் கூறியது போன்றே போப்பும் கூறினார்.

மேலும் உமாபதி சிவாச்சாரியார் தம் சேக்கிழார் புராணத்தில் கூறிய செய்திகளையே போப்பும் கூறினர்.

ஆறுமுக நாவலரின் பெரியபுராண உரைநடைச் சுருக்கத்தைப் போப்பு அவர்கள் குறிப்பிட்டமையின் அவர் பெரியபுராண மூல மட்டுமன்றி உரைநடையையும் படித்துள்ளார் என்பது தெரிகின்றது.

டாக்டர் ஜி. யு. போப்பு அவர்கள் திருஞானசம்பந்த நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், சண்டேசுர நாயனார் ஆகியோரின் வரலாற்றினைச் சேக்கிழார் கூறியவழி ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்[2]. இவற்றிலிருந்து போப்பு அவர்கள் பெரியபுராணத்தின் மீது எத்தகைய ஈடுபாடு கொண்டிருந்தார் என்பது தெரிகின்றது.

---

1. ''மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம்'' - டாக்டர் ஜி. யு. போப்பு பக். XCIV
2. St. Sekkilar's Periapuranam. Pages-166-215. J. M. Nallaswamy Pillai.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இங்ஙனம் சேக்கிழாரைப் பற்றியும், அவர்தம் புராணத்தைப் பற்றியும் பின்னர் வந்த தமிழ்வாணர்கள் பொருத்தமுறப் பற்பல விதத்தில் புகழ்ந்து ஏற்றிப் போற்றியுள்ளனர்.

இறைவனால் அடியெடுத்துக் கொடுக்கப்பெற்று, ஒப்பற்ற தெய்வத் திருத்தொண்டர்களைப் பற்றிப் புராணம் பாடினமையின் இவரைத் தெய்வச் சேக்கிழார் என்றே கூறுவாராயினர். அறுபத்து மூன்று நாயன்மார்களைப் பாடிய இவரையும் பின்னர் வந்தோர் ஒரு நாயன்மாராகக் கொண்டனர். அறுபத்து மூன்று நாயன்மார் களைக் கோயில்களில் சிலைகளாக வைத்து வழிபடுவதைப் போன்று இவரையும் அவர்களுள் ஒருவராகச் சிலை வைத்து வழிபட்டு வருகின்றனர். திருநாகேசுவரத்தில் சேக்கிழார், தாயார், தம்பி பாலறாவாயர் ஆகியோர்க்குச் சிலைகள் வைக்கப் பெற்றுள்ளன. இன்னுஞ் சில ஊர்களில் சேக்கிழாருக்கென்றே தனிக் கோயில்கள் உள்ளன. சேக்கிழார் அவதரித்த குன்றத்தூரின்கண் அமைந்த கோயிலைச் சேக்கிழார் கோயில் என்றே அனைவரும் கூறுகின்றனர்.

பின்னர்த் தோன்றிய புராணங்கள் சிலவற்றில்[1], திருநாவுக் கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர், நம்பியாண்டார் நம்பி ஆகிய வர்க்குத் துதிபாடப் பெற்றதைப் போன்று சேக்கிழாருக்கும் தனி யாகத் துதி பாடப்பெற்றிருக்கின்றது.

அருண்மொழித் தேவராக அவதரித்து அநபாய சோழனின் அவைக்களத்தில் அமைச்சராக வீற்றிருந்து அடியார் பெருமையைப் பாடி அம்பலவாணரின் திருவடியில் சேர்ந்து, ஆண்டவன் நிலைக்கு உயர்ந்தனர் நம் குன்றைமுனிச் சேக்கிழார்.

---

1. காஞ்சிப் புராணம்; சிதம்பரசபாநாத புராணம்; திருவானைக்காப் புராணம்; திருப்பெருந்துறைப் புராணம்; திருஅம்பர்ப் புராணம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முடிவுரை

இதுகாறும் ஆய்ந்தவற்றால் பழைய செய்திகளைக் கூறுகின்ற பெரியபுராணம் சிறந்த இலக்கியத்திற்குத் தேவையான பொருள், கற்பனை, உணர்ச்சி, வடிவம், நடை, சொல்லாட்சிச் சிறப்பு, சிறந்த சொற்றொடர் அமைப்பு, உயர்ந்த கவிதை ஆக்கம் ஆகிய வற்றைக் கொண்ட சிறந்த இலக்கியம் என்பதைக் கண்டோம்.

இலக்கியச் சான்றுகள், கல்வெட்டுக்கள், சிற்பங்கள், திருமுறை கள், கர்ணபரம்பரைக் கதைகள் இன்னோரன்ன பல்வேறு உண்மை யான மூலங்களைக் கொண்டு சுந்தரர் திருத்தொண்டத்தொகை, நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதி ஆகிய வற்றை அடிப்படையாக வைத்துக் காண்டங்கள், சருக்கங்கள் ஆகிய பகுதிகள் அமைந்து சுந்தரரே காவியத் தலைவன் என்னுஞ் செய்தி யோடு பெருங்காப்பிய இலக்கணங்களெல்லாம் பொருந்தப் பெற்ற ஒரு விரிநூல் பெரியபுராணம் என்பதை அறிந்தோம்.

கற்பனை வகைகளையும், பலவகை அணிகளையும் கொண்டு உள்ளுறை, வருணனை, திணை மயக்கம் ஆகிய அணிநலன்களை யெல்லாம் நூலுள் பார்த்தோம், தொல்காப்பியர் வகுத்துச் சென்ற எண்சுவைகளோடு சேக்கிழார் அமைத்த பத்திச் சுவையையும் சேர்த்து ஒன்பான் சுவைகளமைந்த பத்திப் பெருங்காவியம் இஃது என்பதைத் தெளிந்தோம்.

அடுத்து, இலக்கியத்துள் இன்பந் தரும் பகுதிகளாகச் சொற் சுவை, பொருட்சுவை. கவிதைச் சுவை, கவிதையமைப்பு. சொல் லாட்சிச் சான்றுகள், சேக்கிழார் கூறுந்திறன், உரையாடல் அமைக்குந்திறன், சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் ஆகிய இலக்கிய நயங்களைத் துய்த்தோம்.

அரசியல் வாழ்க்கை, பொது வாழ்க்கை, இல்லற வாழ்க்கை ஆகியவற்றில் கடைப்பிடிக்கும் அறநெறிகள்; தம்மை நம்பினோர்க்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஊறு ஏற்படின் தாம் இறக்க முனைதல்: அறநெறியை மீறினால் தண்டனை உண்டு; பிறருக்கு இழைத்த துன்பம் தமக்கே வரும்; நன்மை செய்தால் நன்மையும், தீமை செய்தால் தீமையும் வந்தடையும்; ஊழ்வினை உருத்து வந்தூட்டும்; இறுதியில் அறமே வெல்லும் ஆகிய அறக்கருத்துக்களை வாழ்க்கையின் முடிந்த உண்மைகளாகத் தெளிந்தோம்.

இலக்கியக் கருத்துக்களை எடுத்துக்கூற வடிவமாக இருப்பன பாக்கள். அப்பாவின் வகைகள், இனங்கள், இவற்றின் இயல்புகள், சேக்கிழார் கையாண்ட யாப்பு முறை, புராணத்துள் வந்துள்ள விருத்தப் பாடல்களின் வகைகள், அவற்றின் எண்ணிக்கைகள், அவற்றைச் சேக்கிழார் இடத்திற்குத் தக்கவாறு கையாண்ட முறை, புராணத்தில் அமைந்துள்ள தொடை நயங்கள் ஆகியவற்றைக் கூறும் யாப்பு முறையை ஆய்ந்தோம்.

இத்தகைய திறங்கள் பெற்ற பெரியபுராணத்தைப் பாடிய சேக்கிழாரின் இலக்கியத் திறனை எண்ணி வியந்து, உமாபதி சிவாச்சாரியார், சபாபதி நாவலர், சிவஞான முனிவர், ஸ்ரீகச்சியப்ப சுவாமிகள், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, டாக்டர் ஜி. யு. போப்பு ஆகியோர் சேக்கிழாரையும் அவர் யாத்த இலக்கியத்தையும் பாராட்டிய முறையைப் பாராட்டினோம்.

இங்ஙனம் சீரும் சிறப்புமாக விளங்கி இலக்கிய நயங்கள் மலிந்து புலமையுடைய எல்லோராலும் பாராட்டப்பெற்ற இப்பெரியபுராணம் இன்று இருக்கும் நிலையைக் காணின் வருந்தத் தக்க நிலையில் இருக்கின்றது. மற்ற நூல்களைப் போன்று பெரியபுராணத்தைக் கற்பார் அதிகம் இல்லை; கேட்பார் தொகையும் மிகக் குறைவு. காரணம் என்னவெனின் இது ஒரு குறிப்பிட்ட சமயத்தைச் சார்ந்திருப்பதேயாம். சைவ சமயத்தைப் பரப்பத் தோன்றிய பெருநூலாயினமையின் சமயக் காழ்ப்புக் காரணமாகப் பிற சமயத்தினர் இதைக்கற்க முன்வருவதில்லை. இலக்கியச் செறிவிற்காகவும், அதைத் துய்த்தற்காகவும் படிக்கலாமெனின் சைவ பத்தி நெறிகள், சிவனடியார் வாழ்க்கை ஆகியவை இதனுள் மேலோங்கி நிற்கின்றமையின் இவற்றுள் இலக்கிய நெறிகள், பண்புகள் ஆகியவை அமிழ்ந்து விடுகின்றன. பிற மதத்தினர் கண்களுக்கு மேலோங்கி நிற்கின்ற சிவத்தன்மைகள்தாம் தெரிகின்றனவே அன்றி இலக்கியத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தன்மைகள் அவர்களுக்குத் தெரிவதில்லை. சமயக் கருத்துக்களைக் கூறிய நோக்கத்தில் இலக்கியப் பண்புகளை எடுத்துக் கூறும் திறனை அஃது இழந்து விடுகின்றது. எனவே பெரியபுராணத்தை இலக்கிய அடிப்படையில் ஏற்றுக் கொள்ளாமல் சமய அடிப்படையில் எடுத்துக் கொண்டு முழுவதையும் ஒதுக்கி விடுகின்றனர்.

சைவர்களாவது இதை நன்முறையில் படித்துப் பரப்புகின்றராவெனின் அதுவுமன்று. எங்கேனும் கோயில்களில் எப்பொழுதாவது பெரியபுராணச் சொற்பொழிவுகள் நடைபெறுகின்றன. அதுவும் சமயச் சொற்பொழிவுகளாக நடைபெறுகின்றனவேயன்றி இலக்கியச் சொற்பொழிவுகளாக நடைபெறுவதில்லை. சிலப்பதிகாரம், இராமாயணம், பாரதம் போன்ற காப்பியங்களின் பெருமைகளை இலக்கியச் சொற்பொழிவுகளாகப்புலமையுடையோர் நிகழ்த்துகின்றனர். அதனால் பொதுமக்களிடையே அவை பரவுகின்றன. கருத்துக்களை எடுத்துக்கூற வழிகளாக அமைந்த பட்டி மண்டபங்கள், வழக்காடு மன்றங்கள், கருத்தரங்குகள், இலக்கியக் கூட்டங்கள் ஆகிய இவற்றில் இவற்றைப் பொருளாகக் கொண்டு வாதாடுகின்றனர்; உரையாடுகின்றனர். ஆனால் பெரியபுரணச் சிறப்புக்களை இத்தகைய மன்றங்களில் கேட்பது அரிதாக இருக்கின்றது. எனவே பொதுமக்களிடையே இஃது அதிகம் பரவ முடியாமல் போய்விட்டது. இந்நூலையொட்டி எழுதப்பெற்ற ஆய்வு நூற்களும் மிகக் குறைவே. சிறந்த இலக்கியச் செறிவு கொண்ட பெரிய புராணத்திற்கு எண்ணிலா ஆய்வு நூற்கள், விளக்க நூற்கள் தோன்றியிருக்க வேண்டும், அங்ஙனம் தோன்றாமை ஒரு பெருங் குறையே.

இனியாகிலும் பெரியபுராணத்தின் பெருமைகளைப் பரப்ப முயற்சி செய்தல் வேண்டும். பிற சமயத்தினர் இதைச் சமயநூலாகப் படிப்பதை விடுத்தனர் எனினும் இலக்கிய நூலாகவாவது படிக்குமாறு சைவப் பெருமக்கள் அவர்களைத் தூண்ட வேண்டும். குழந்தைகளுக்கும், மற்ற பொருட்களுக்கும் அப்பூதியடிகள் அடியார்களின் பெயர்களை இட்டுச் சமயத்தை வளர்த்ததைப் போன்று அடியார்களின் பெயர்களையும் புராணத்துள் வருகின்ற பிற மாந்தர்களின் பெயர்களையும் குழந்தைகளுக்கும் மற்ற பொருட்களுக்கும் இடும் வழக்கத்தை மக்கள் மேற்கொள்ள வேண்டும். பட்டி மண்டபங்கள், கருத்தரங்குகள், கலைதெரி கழகங்கள் இவற்றில் எல்லாம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெரியபுராணத்தைப் பொருளாக வைத்து ஆய்வு செய்ய வழிகள் அமைக்க வேண்டும்.

இவற்றினும் மேலாக, அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய சைவச் சான்றோர் அந்நாளில் ஊர் ஊராகச் சென்று சைவத்தின் மேன்மையையும் அதை ஒட்டித் தோன்றிய பெரியபுராணத்தின் பெருமைகளையும் மக்களுக்கு எடுத்துக் கூறல் வேண்டும். அன்று திருவொற்றியூர், திருவதிகை முதலிய தலங்களில் இருந்த கன்னிமாடங்களில் பெண்டிர் இருந்துகொண்டு சைவத்தொண்டு புரிந்து சைவத்தைப் பரப்பினர். இத்தகைய தொண்டு செய்தாருள் சங்கிலியார், திலகவதியார் முதலியோர் குறிப்பிடத் தக்கவர் ஆவர். இன்றும் சைவத்தைப் பரப்ப அவை போன்ற கன்னிமாடங்கள் ஆங்காங்கமைந்து சைவப் பெண்டிர் ஆங்குறைந்து சைவத்திற்கே தம்மை அர்ப்பணித்துப் பெரியபுராணத்தின் பெருமைகளைப் பரப்ப, சைவத்தை வளர்க்க முன்வருவார்களாக: மங்கையர்க்கரசியாரைப் போன்று தனிப்பட்ட முறையிலும் தொண்டு செய்யப் பெண்கள் ஊக்கம் கொள்வார்களாக: பெரியபுராணத்தினைச் சமய நூலாகப் படிப்பதோடு மட்டுமன்றிச் சேக்கிழாரின் இலக்கியத் திறனை அனுபவிப்பதோடும் மக்கள் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு இதைக் கற்பார்களாக:

சேக்கிழார் புகழ் ஓங்குக :

பெரியபுராணப் பெருமைகள் பரவுக :

உலகம் வாழ்க :

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆய்விற்குப் பயன்பட்ட நூல்கள்

அமிர்தசாகரனார்

யாப்பருங்கல விருத்தி, பவானந்தம் பிள்ளை பதிப்பு, 1916.

யாப்பருங்கலக் காரிகை, க. ர. கோவிந்தராஜ முதலியார் பதிப்பித்தது, 1940.

அருணாசலம், மு.

தமிழ் இலக்கிய வரலாறு, (12-ஆம் நூற்றாண்டு) காந்தி வித்தியாலயம், திருச்சிற்றம்பலம், மாயூரம், தஞ்சை மாவட்டம், 1973.

இராசமாணிக்கனார், மா.

பெரியபுராண ஆராய்ச்சி, மாடல் பப்ளிகேஷன்ஸ், 50, பத்தரையன் தெரு, சென்னை-1, 1948.

இராமலிங்க அடிகள்

திருவருட்பா, அருட்பெருஞ்சோதி நிலையம், 7/99, அம்மன் கோயில் தெரு, சென்னை-1 சித்திரபானு ஆண்டு, புரட்டாசித் திங்கள் (இரண்டாம் பதிப்பு).

உமாபதி சிவாச்சாரியார்

சேக்கிழார் புராணம் (பெரியபுராணத் தோடு பின்னிணைப்பு) திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து வெளியீடு, 1 70.

ஸ்ரீ கச்சியப்ப சுவாமிகள்

திருவானைக்காப் புராணம், மகாவித்துவான் காஞ்சிபுரம் இராமசாமி நாயுடு அவர்களால் பார்வையிடப்பட்டு சென்னை இட்டாபார்த்தசாரதி நாயுடு அவர்களால் பதிப்பிக்கப் பெற்றது, 1908.

கம்பர்

கம்பராமாயணம் (பாலகாண்டம்), வை. மு கோபாலகிருஷ்ண மாச்சாரியார் பதிப்பு, (1973).

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திரு. வி. கலியாணசுந்தரனார்

திருத்தொண்டர் புராண உரை, முருகவேள் புத்தக சாலை, இராயப்பேட்டை, சென்னை, 1934.

கோதண்டராமன், பி.

இலக்கியமும் விமரிசனமும், மணிவாசகர் நூலகம், மேலசன்னதி, சிதம்பரம், ஜூலை 1962 (முதற் பதிப்பு).

சதாசிவ பண்டாரத்தார், டி. வி.

பிற்காலச் சோழர் வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1974.

சங்கரி, அ.

பெரியபுராணத்தில் உவமைகள், ஜெயகுமாரி ஸ்டோர்ஸ், கோர்ட்டு ரோடு, நாகர்கோவில், செப்டம்பர் 1975.

சத்தியமூர்த்தி, சி.

சிவலிங்க வழிபாடு, ஜெயகுமாரி ஸ்டோர்ஸ், கோர்ட்டு ரோடு, நாகர்கோவில், 1969.

சண்முகம் பிள்ளை, மு.

திருக்குறள் யாப்பமைதியும் பாடவேறுபாடும், சென்னைப் பல்கலைக்கழகம், 1971.

சபாபதி நாவலர்

(கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறையாதீன வித்துவான்) சிதம்பரநாத புராணம். இஃது திருவிடைக்கழி ஆறுமுகம் பிள்ளையவர்கள் வேண்டுகோளின்படி விழுப்புரம் இராம சாமிப் பிள்ளையவர்களால அச்சிற் பதிப்பிக்கப்பட்டது. பார்த்திப வருஷம், வைகாசி மீ.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சாமிநாதையர் டாக்டர், உ. வே.

சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும், ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு, எட்டாம் பதிப்பு, 1968.

சிவஞான முனிவர்

காஞ்சிப் புராணம், வண்ணக் களஞ்சியம், காஞ்சி நாகலிங்க முதலியாரவர்களால் பல பிரதி ரூபங்களைக் கொண்டு பரிசோதித்துப் பெரியமேட்டு வேங்கடாசலஞ் செட்டியா ரவர்கள் குமாரர் ஆதிமூலஞ் செட்டியாரால் பதிப்பிக்கப் பெற்றது. சாதாரண வருசம் வைகாசி மீ", 1910.

சுப்பிரமணியன், ச.வே.

தமிழ் இலக்கியக் கொள்கை (முதல் பகுதி), உலகத் தமிழா ராய்ச்சி நிறுவனம், அடையாறு, சென்னை-20, 1975.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

ஸ்ரீ குமரகுருபரன் சங்கம், ஸ்ரீவைகுண்டம், 1971.

சுப்பு ரெட்டியார், ந.

கவிதையனுபவம், கழகப் பதிப்பு, 1961.

சுப்பிரமணிய முதலியார், சி.கே.

சேக்கிழார், கோவை தமிழ்ச் சங்கம், (மூன்றாம் பதிப்பு) 1952.

திருத்தொண்டர் புராண உரை முதற்பகுதி 1960.

திருத்தொண்டர் புராண உரை இரண்டாம் பகுதி 1940.

திருத்தொண்டர் புராண உரை மூன்றாம் பகுதி 1943.

திருத்தொண்டர் புராண உரை நான்காம் பகுதி 1949.

திருத்தொண்டர் புராண உரை ஐந்தாம் பகுதி 1950.

திருத்தொண்டர் புராண உரை ஆறாம் பகுதி 1953.

திருத்தொண்டர் புராண உரை ஏழாம் பகுதி 1954.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஞானசம்பந்தன், அ.ச.

இலக்கியக்கலை, கழகப் பதிப்பு, 1976.

தண்டி

தண்டியலங்காரம், கழகப் பதிப்பு, பிப்ரவரி 1943.

தாசன், ஜெ.ஜி.என்.

சிலம்பில் மெய்ப்பாடுகள், ஜெயகுமாரி ஸ்டோர்ஸ், கோர்ட்டு ரோடு, நாகர்கோவில்-1, முதற் பதிப்பு-1973.

திருநாவுக்கரசு, க.த.

திருக்குறளில் கற்பனைத்திறனும் நாடக நலனும், சென்னைப் பல்கலைக்கழகம், 1973.

திருவள்ளுவர்

திருக்குறள் (பரிமேலழகர் உரை), கழகப் பதிப்பு, பிப்ரவரி 1953.

திருஞானசம்பந்தர் தேவாரம்

ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் மடம், ஸ்ரீவைகுண்டம், 1971

தொல்காப்பியர்

தொல்காப்பியம் - பொருளதிகாரம், பேராசிரியர் உரை, கழகப் பதிப்பு, 1969.

இளம்பூரணர் உரை, கழகப் பதிப்பு, 1969.

புலவர் குழந்தை உரை, வேலா பதிப்பகம், ஈரோடு-1. பிப்ரவரி, 1968.

நம்பியாண்டார் நம்பி

திருத்தொண்டர் திருவந்தாதி (பெரியபுராணத்தோடு முன்னிணைப்பு) ஆறுமுக நாவலர் பதிப்பு, 1951 (8ம்-பதிப்பு)

பட்டுச்சாமி ஓதுவார், தி. (வித்துவான்)

திருத்தொண்டர் புராணம் (உரைநடை) திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து வெளியீடு, செப்டம்பர் 1954.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பன்னிருவர் (சொற்பொழிவாளர்கள்)

பெரியபுராணச் சொற்பொழிவுகள், கழகப் பதிப்பு, 1970.

பாரதியார் கவிதைகள்

பூம்புகார் பிரசுரம், 109, மன்னார்சாமி கோயில் தெரு, சென்னை-13, 1976 (இரண்டாம் பதிப்பு).

போப்பு, ஜி.யு. டாக்டர்

மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம், சென்னைப் பல்கலைக் கழகம், 1970.

மகாதேவ முதலியார், வா.

பெரியபுராண ஆராய்ச்சி, கழகப் பதிப்பு, 1970 (இரண்டாம் பதிப்பு).

மகாத்மா காந்தியடிகள்

சத்தியசோதனை, தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, காந்தி நிலையம், மதுரை-13. அக்டோபர் 1959.

மீனாட்சிசுந்தரம் பிள்ளை, (மகாவித்துவான்)

திருஅம்பர்ப் புராணம், டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், திருவான்மியூர், சென்னை-41, 1965.

சேக்கிழார் பிள்ளைத்தமிழ், டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், அடையாறு, சென்னை-20, 1962.

திருப்பெருந்துறைப் புராணம், உத்தமதானபுரம் வே. சாமிநாதையரால் பதிப்பிக்கப் பெற்றது. பிரமாதீச வருஷம் ஆனி மீ 1913.

வரதராசனார், மு.

இலக்கிய ஆராய்ச்சி, பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-1. 1967.

இலக்கியத் திறன், பாரி நிலையம், சென்னை-1, 1965.

இலக்கிய மரபு, பாரி நிலையம், (இரண்டாம் பதிப்பு), சென்னை-1, 1968.

20

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வையாபுரிப்பிள்ளை, எஸ்.

தமிழ் இலக்கிய சரிதத்தில் காவிய காலம், தமிழ்ப் புத்தகாலயம், திருவல்லிக்கேணி, சென்னை-5, முதற் பதிப்பு, ஜனவரி 1957.

இலக்கியச் சிந்தனைகள், நவபாரதி பிரசுராலயம் லிமிடெட், திருநெல்வேலி, சென்னை, 1947,

ஜகன்னாதன், கி.வா.

தமிழ்க்காப்பியங்கள், அமுத நிலையம் லிமிடெட், தேனாம் பேட்டை, சென்னை-18, டிசம்பர் 1955.

சீனிவாச பிள்ளை, கே.எஸ்.

தமிழ் வரலாறு, ஸ்ரீ காமாட்சி அம்மன் பிரஸ், கும்பகோணம், 1924.

துரைசாமிப் பிள்ளை, ஔவை, சு.

புறநானூறு உரை, கழகம், 1967.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெரியபுராண மூலநூல்கள்

ஆறுமுக நாவலர் பதிப்பு, எட்டாம் பதிப்பு, 1951.

சைவ சித்தாந்த மகாசமாஜப் பதிப்பு-இரண்டாம் பதிப்பு-1937.
மூன்றாம் பதிப்பு-1950.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துப் பதிப்பு, 1970.

தொகுப்பு, மலர்கள், இதழ்கள்

தொகுப்பு

கலைக்களஞ்சியம், தொகுதி-3, தமிழ் வளர்ச்சிக் கழகம், முதற் பதிப்பு-1956

கலைக்களஞ்சியம், தொகுதி-5, தமிழ் வளர்ச்சிக் கழகம், முதற் பதிப்பு-1958.

கலைக்களஞ்சியம், தொகுதி-7, தமிழ் வளர்ச்சிக் கழகம், முதற் பதிப்பு-1960.

மலர்கள்

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் கனகாபிஷேக விழா மலர், தருமையாதீனம், 1961.

தில்லித் தமிழ்ச் சங்கம் வெள்ளி விழா மலர், தில்லித் தமிழ்ச் சங்கம் (ஆசிரியர் : டாக்டர் சாலை இளந்திரையன்), 1971.

இதழ்

தினமணி சுடர் 5-3-1978.

✻

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

BOOKS - ENGLISH

ABER CROMBIE

Principles of Literary Criticism, London Victor Gollancz Ltd., 14, Henrietta Street Convent Graden, Second Edition, May 1935.

BLISS PERRY

A Study of Poetry, Houghton Mifflin Company, The riverside press, Cambridge, 1920.

CHIDAMBARANATHAN CHETTIAR, Dr. A.

Advanced Studies in Tamil Prosody, Annamalai University, Annamalai Nagar, 1957.

HENRY DAVIDOFF

The Pocket Book of Quotations, Pocket Books Distributing Company, Bombay, 1963.

LYON P.H.B. (M.C.M.A.).

The discovery of Poetry, London Edward Arnold & Co., 1941.

LOWES, J.L.

Convention and Revolt in Poetry, London, Constable & Co. Ltd., 1930.

MIDDLETON MURRAY, J.

The Problem of Style, Oxford University Press, London Humphrey: Milford, 1930.

NALLASWAMY PILLAI, J.M.

St. Sekkilar's Periapuranam, Publisher J.N. Ramanathan, 1955.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

PAINTER, F.V.N. (A.M.D.D.)

Elementary guide to Literary Criticism, Gim and Company 1903.

RIDDLEY, M.R. (M.A.)

Poetry and the ordinary reader, London, G. Bill and Sons Ltd., 1930.

RICHARDS, I.A.

Principles of Literary Criticism, London: Routledge & Kegan Paul Ltd., Broadway House, 68.74 Carter Lane, E.C. 4., Fourteenth Impression 1955.

RAYMAND MACDONALD ALDEN, Ph.D.

An Introduction to Poetry, London: George Bue and Sons Newyork: Henry Holt and Company, 1909.

RAGHAVAN, Dr. V.

The number of Rasas, The Adyar Library, Adyar, 1940.

THIRUGNANASAMBANDAM

The concept of Bakti (Professor L. Venkatarathinam Endowment Lectures 1969-70) University of Madras.

WILLIAM HENRY HUDSON

An Introduction to the Study of Literature, George G. Harrap & Co. Ltd., January, 1957.

WINCHESTER, C.T.

Some Principles of Literary Criticism, Newyork: The Macmillan Company, London: Macmillan & Co., Ltd., Fourth Printing, 1950.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்.

—வெள்ளானைச் சருக்கம் - 53.

007487

வைய நீடுக; மாமழை மன்னுக;
மெய்வி ரும்பிய அன்பர் விளங்குக;
சைவ நன்னெறி தாந்தழைத் தோங்குக;
தெய்வ வெண்டிரு நீறு சிறக்கவே.

—பெரியபுராண இறுதிப்பாடல் - 4287.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Forwarded free of Cost, and with the Compliments of the Department of Education, Government of India, New Delhi.

पुस्तकालय
पुस्तकालय
गुरुकुल कांगड़ी विश्वविद्यालय

GURUKUL KANGRI LIBRARY
Acces on
Class on
Cat on
Tag etc.
Checked
Any Other

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar